ஆரம்ப அரசியல் நூல்

(Elements of Political Science)

*

எழுதியவர்கள் :

என். ஆர். சுப்பையர், M.A., L.T.

வித்துவான் கி. வா. ஜகந்நாதன், B.O.L.

உலகளாவிய பொதுக் கள உரிமம் (CC0 1.0)

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

பதிப்புரிமை அற்றது

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✸✸✸

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் (https://ta.wikisource.org), தமிழ் இணையக் கல்விக் கழகமும் (http://tamilvu.org) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

No Copyright

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✸✸✸

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community (https://ta.wikisource.org) and Tamil Virtual Academy (http://tamilvu.org). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

ஆரம்ப அரசியல் நூல்

ஆசிரியர்கள் :

ந. ரா. சுப்பையர், M. A., L. T.

வித்துவான் கி. வா. ஜகந்நாதன், B. O. L.

ந. ரா. சுப்பையர்

புது டபீர் தெரு, கும்பகோணம்

இரண்டாம் பதிப்பு
மார்ச் 1943.

உள்ளுறை

பதிப்புரை iv

முன்னுரை vi

முகவுரை ix

அத்தியாயம்

1. அரசின் உற்பத்தி ... 1
2. அரசின் வளர்ச்சி வரலாறு ... 13
3. தற்கால அரசின் சிறப்பியல்புகள் ... 21
4. அரசின் சர்வாதிகாரம் ... 29
5. பிரஜைகளின் உரிமைகள் ... 34
6. சுயேச்சையும் சமத்துவமும் ... 39
7. அரசின் நோக்கங்களும் செய்கைகளும் ... 44
8. அரசாங்கத்தின் வகைகள் ... 50
9. அரசியல் திட்டங்களின் வகை ... 57
10. அரசாங்க அமைப்பு—I நிர்வாகம் ... 63
11. அரசாங்க அமைப்பு—II சட்டசபை ... 73
12. அரசாங்க அமைப்பு—III நீதி ஸ்தாபனம் ... 85
13. பொது நிர்வாக வேலையும் சிவில் ஸர்விஸும் ... 95
14. ஸ்தல ஸ்தாபன ஆட்சி ... 100
15. பொது மக்களின் பொறுப்பு—I பொது ஜன அபிப்பிராயம் ... 108
16. பொது மக்களின் பொறுப்பு—II வாக்குரிமை ... 113
17. பொது மக்களின் பொறுப்பு—III பிரதிநிதித்துவம் ... 118
18. அரசியற் கட்சிகள் ... 131
19. சர்வதேச நேசமும் உலக அரசும் ... 141

அரசியற் சொற்கள் ... 149

Glossary ... 154

பதிப்புரை

(முதற் பதிப்பு).

வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட ஒவ்வொரு துறையிலும் ஓரளவு அறிவு பெறவேண்டியது பொது மக்களுக்கு அவசியமாகும். பெரிய ஆராய்ச்சிகளின் நுணுகிய போக்கிலே அவர்கள் யாவரும் ஈடுபடா விட்டாலும் தினந்தோறும் பழகிவரும் பொருள்களைப் பற்றியும், ஒவ்வொரு நாளும் கேள்வியுறும் விஷயங்களைப்பற்றியும் அறிந்தால் அவர்கள் வாழ்க்கையில் மேலும் மேலும் இன்பமும் திறமையும் உண்டாகும். இந்த அடிப்படையான அறிவை வளர்க்கப் பாடுபடுவதை முக்கிய நோக்கமாகக் கொண்டது சென்னைப் புஸ்தகாலயப் பிரசார சங்கம்.

சாதாரண ஜனங்களுக்கும் விளங்கும்படியான முறையில் விஞ்ஞான சாஸ்திர விஷயங்களையும் அரசியல் நூற் செய்திகளையும் உணர்த்தும் புஸ்தகங்களை இச்சங்கம் வெளிப்படுத்தியிருக்கின்றது. விடிந்தெழுந்தால் மந்திரிசபைகளின் மாற்றங்களையும் அரசாங்க மாறுபாடுகளையும் பற்றிய புதிய புதிய செய்திகள் காதில்விழும் இக்காலத்தில் அரசியலைப் பற்றி அறிந்து கொள்வதற்குரிய புஸ்தகங்கள் பல வேண்டும். இதற்குமுன் 'முக்கிய அரசியல்-திட்டங்கள்' என்ற நூல் இச்சங்கத்தின் ஆதரவில் வெளிவந்தது. அந்தப் புஸ்தகத்தை எழுதியவராகிய ஸ்ரீ ந. ரா. சுப்பையர் எம். ஏ., எல். டி. அவர்களும், ஸ்ரீ வித்துவான் கி. வா. ஜகந்நாதன் B. O. L. அவர்களும் சேர்ந்து இந்நூலை எழுதியிருக்கிறார்கள். புஸ்தகாலயப் பிரசார சங்கத்தின் நோக்கத்திற்கு இணங்க அமைந்த இதனை வெளியிட இச்சங்கம் ஏற்றுக்கொண்டது.

இதனை எழுதிய ஸ்ரீ ந. ரா. சுப்பையரவர்களுக்கும் ஸ்ரீ கி. வா. ஜகந்நாதனவர்களுக்கும் இதற்கு ஒரு முன்னுரை எழுதியுதவிய, சுதேசமித்திரன் ஆசிரியர் ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீநிவாஸனவர்களுக்கும் இச்சங்கம் தன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

இத்தகைய புஸ்தகங்களைத் தமிழ்நாட்டு மக்கள் வாங்கிப் படித்து இச்சங்கத்துக்கு ஊக்கமளிப்பார்களாயின் மேலும் மேலும் இத்துறையில் முயன்று பல புஸ்தகங்களைத் தமிழுலகுக்கு அளிக்கும் முயற்சியில் சங்கம் ஈடுபடும் வாய்ப்பு உண்டாகும்.

சென்னைப் புஸ்தகாலயப் பிரசார சங்கத்தார்.

முன்னுரை

இப்புத்தகத்திற்கு முன்னுரை எழுத வேண்டுமென்று என்னைக் கேட்டுக்கொண்டனர். எதற்காக என்னை வரித்தனர் என்று எனக்குப் புரியவில்லை. ஆனால் தாக்ஷிண்யம் தட்ட முடியவில்லை; ஒப்புக்கொண்டேன். புத்தகத்தின் பிரதி கிடைத்ததும் புரட்டிப் பார்த்தேன். கேட்டுக்கொண்ட காரணம் தானாகவே விளங்கிற்று. நாள் தவறாமல் ராஜீயத் துறையில் உழைப்பவருக்கு இப்புத்தகத்தின் அவசியமும் அருமையும் எளிதில் புலப்படும். அதை எதிர்பார்த்தே என்னை வேண்டிக் கொண்டனர் என்று அறிந்தேன்.

சமூதாய வாழ்விற்கு அரசியல் அறிவு இன்றியமையாத சாதனம். வாழ்வின் தரம் இந்த அறிவின் அளவைத் தாங்கியது. வாழ்விலே காணும் குறைகள் நீங்க இந்த அறிவு தேவை; வாழ்விலே காணும் குணங்கள் ஓங்க இந்த அறிவு தேவை; இந்தியாவின் நிலைமை இதற்குப் பிரத்தியக்ஷப் பிரமாணம். நாட்டிலே இன்று காணும் ராஜீயக்கிளர்ச்சி இந்த அறிவை வளர்க்கவே உத்தேசிக்கப்பட்டது. ஏழை எளியோரிடையே இந்த அறிவைப் பரப்ப முயன்றதே காந்தியடிகளது சேவையின் சிறப்பு. ஏனைய மக்களும் தங்கள் கடமைகளையும் உரிமைகளையும் அறிவார்களானால் அவர்கள் கோரும் சுயராஜ்யத்தை யாரும் மறுப்பதற்கில்லை.

'ராமன் ஆண்டால் என்ன, ராவணன் ஆண்டால் என்ன' என்று நாடோடியாய்ச் சொல்லுகிறார்கள். அறியாமை உறைகட்டியதையே இது காட்டுகிறது. ஆட்சியில் மக்களுக்குப் பங்கும் பொறுப்பும் உண்டென்பதை அவர்கள் அறிய வேண்டும். பிரஜைகளுக்காக அரசு ஏற்பட்டதே யொழிய அரசுக்காகப் பிரஜைகள் ஏற்படவில்லை. ராமன் ஆட்சி ஏற்படுவதும் ராவணன் ஆட்சி ஏற்படுவதும் மக்கள் கையில் இருக்கின்றன. கண் கொட்டாமல் காத்தால்தான் சுவாதீனம் நிலைக்கும். இது அநுபவம்; சரித்திர சித்தாந்தம். சுவாதீனமே சுகவாழ்விற்குத் தாரகம்.

சார்பு நாட்டுக்கு அரசியல் அறிவு தேவையில்லை என்று ஒரு பேராசிரியர் கூறத்துணிந்தார். பரந்த அறிவுக்கு இது அடையாளமல்ல. சுவாதீன நாட்டைவிடச் சார்பு நாடுதான் குறைகளை நன்முய் அறியக்கூடிய நிலைமையில் இருக்கிறது. எந்த முயற்சியும் பயன்படும் பக்குவம் பெறும்போது பராதீன பந்தம் வழி மறிக்கிறது. பல மறியாத பேதைகளே படிந்து கிடப்பர். ஞானவொளி இருட்டை வெருட்டும்; பயத்தைப் பறக்கடிக்கும். ஹனு மான் தன் பலத்தை யறியப் பிறர் ஞாபகப்படுத்த வேண்டி யிருந்ததாகக் கதை சொல்லுகிறார்கள். மக்களின் பலமும் அத்தன்மையுடையது. அறிவைப் பெருக்கி அவர்களுக்கு ஞாபகமூட்ட வேண்டும்.

அநுபவத்தைத் தழுவிச் சாஸ்திர பக்குவம் பெற்றது அரசியல். அடிப்படையான தர்மங்களை விவரிக்க இயலுமே யொழிய நிலையான ஸ்வரூபத்தை இன்றைக்கும் விதிப்பதற் கில்லை. ஜனநாயகம் என்கிறார்கள்; அதாவது ஜனங்களே நாயகர்கள். அதிகாரத்தின் அஸ்திவாரத்தைக் குறிப்பிடு கிறது. பலருடைய நன்மைக்காகச் சிலருடைய கையில் இந்த அதிகாரம் ஒப்படைக்கப் படுகிறது. சிலர் கையில் தேங்கும் அதிகாரம் சீர் அழிவது சுலபம். சரித்திரம் இதையே மெய்ப்பிக்கிறது. இந்தக் குறையைக் களையவே அரசியல் நூல் வழிகாட்டுகிறது.

நிர்வாகத்தைத் திறம்பட நடத்த அரசியல் அங்கங்கள் பல காலக்கிரமத்தில் உருப்பெற்றிருக்கின்றன. பிரதிநிதிக் கும் வாக்காளருக்கும் உள்ள தொடர்பு, தனித்தொகுதிக்கும் பொதுத்தொகுதிக்கும் உள்ள லக்ஷணங்கள், ஒற்றை ஓட்டுக் கும் மாற்று ஓட்டுக்கும் உள்ள குணங்கள், மேல் சபைக்கும் கீழ் சபைக்கும் உள்ள அதிகார எல்லைகள், சட்டசபைக்கும் நிர்வாக சபைக்கும் உள்ள பிணைப்பு, அதிகார துஷ்பிரயோ கத்தை அடக்க வழிகள் இவையனைத்தும் இப்புத்தகத்தில் விளக்கப்பட் டிருக்கின்றன. அரசியல் ஆரம்ப நூல் என்று புத்தகத்தின்பெயர் இருந்தாலும் பள்ளிச் சிறுவர் களுக்கு மாத்திரம் பயன்படக்கூடியதல்ல; நல்வாழ்வுக்கும் சுகவாழ்வுக்கும் வழி காட்டும் நூல்; வாழ்நாள் முழுவதும் உதவும்.

இந்திய மக்களுக்கு இது சமயோசிதமான நூல் என்றும் சொல்லலாம். சார்பு நாட்டின் குறைகள் உறுத்துகின்றன; சுவாதீனம் கோருகின்றனர். ஆற்றல் இருந்தால் போதாது; அறிவும் வேண்டும். அறிவை வளர்க்கும் சாதனங்கள் தேவை. அறிவை வளர்க்க இப்புத்தகம் உதவும்; வரவேற்கிறேன்.

12-10-1941 எஸ். ஆர். ஸ்ரீநிவாசன்.

முகவுரை

உலகிலுள்ள நாடுகளில் ஒவ்வொன்றிலும் ஜன சமூதாயத்தினர் ஒவ்வோர் அரசுக்கு உட்பட்டு வாழ்கிறார்கள். அவ்வரசுகளின் செயல்களும் கட்டுப்பாடுகளும் வெவ்வேறு வகையாக இருக்கின்றன. மிகப் பெரிய வல்லரசுகளில் ஒரு மனிதனே அரசாங்கத்தை நிர்வகித்து வருகிறதாகத் தோற்றுகிறது. ஆனால், அப்படித் தலைமை பூணும் மனிதர்களுக்குள் எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது. ருஷ்ய தேசத் தலைவர் ஒருவரே; அமெரிக்க ஐக்கிய நாட்டுக்கும் தலைவர் ஒருவரே; ஆனால், இவ்விரண்டு தலைவர்களின் நிலைக்கும், அதிகாரங்களுக்கும் அரசாங்கத்தில் அவர்களுடைய தொடர்புக்கும் பலவகையில் வேறுபாடுகள் இருக்கின்றன. இப்படியே வேறு நாட்டுத் தலைவர்களுக்கு மிடையே வேற்றுமை உண்டு.

பிரஜைகளுக்கும், அரசியல் தலைவருக்கும், அரசாங்கத்துக்கும் எவ்வகையான தொடர்பு இருக்கிறது? ஒவ்வொரு தேசத்திலும் குடிமக்களுக்கு அரசியலில் எத்தகைய செல்வாக்கு இருக்கிறது?—இத்தகைய விஷயங்களை ஒவ்வொரு பிரஜையும் அறிந்துகொள்வது நலம்.

நம் நாட்டில் இப்போது அரசியலில் மக்களுக்கு மிக்க ஊக்கம் உண்டாகியிருக்கிறது. அரசியல் சம்பந்தமான விஷயங்களை அறிந்தோ, அறியாமலோ அரசியலின் சம்பந்தம் வேண்டுமென்ற உற்சாகம் பலருக்கு இருந்து வருகிறது. ஜனநாயகம் ப்ரவிவரும் இக்காலத்தில் ஒவ்வொரு பிரஜையும் ஜனநாயக அரசின் இன்றியமையாத உறுப்பினன் ஆவான். தன் நிலையையும் உரிமையையும் அவன் உணர்ந்து கொண்டால், அரசியல் சம்பந்தமாக அவன் செய்யவேண்டியவற்றைச் சரிவரச் செய்து வாழ முடியும். அதனால் நாடு முழுவதும் இன்ப வாழ்வு பெற ஏதுவாகும்.

ஆகவே இப்போது அரசு, அரசாங்கம், பிரஜைத் தன்மை முதலியவற்றைப்பற்றிய செய்திகளை அரசியலில் பங்கு கொண்டவர்களும், நிர்வாக அதிகாரிகளும் நன்முகத்

தெரிந்துகொள்ள வேண்டும்; கல்வியறிவு உள்ளவர் யாவரும் தெரிந்துகொள்ள முயலவேண்டும். அங்ஙனம் முயல்பவர்களுக்கு ஓரளவு உதவியளிக்கத்தக்க முறையில் இந்த "**ஆரம்ப அரசியல் நூல்**" எழுதப்பெற்றுள்ளது. ஸிட்ஜ்விக், லாஸ்கி, மாக்கைவர், கெட்டல், ரத்னஸாமி, ஆசீர்வாதம் முதலிய சிறந்த அரசியல் சாஸ்திர ஆசிரியர்களின் நூல்களிலிருந்து பல அரிய கருத்துக்களும் செய்திகளும் இப் புத்தகத்தில் அடங்கியுள்ளன.

இதனைத் தங்கள் சங்கப் பிரசுரமாக வெளியிட்டுதவிய சென்னைப் புத்தகாலயப் பிரசார சங்கத்தினர்பால் மிக்க நன்றி பாராட்டுகிறோம்.

ஆசிரியர்கள்.

இவ்விரண்டாம் பதிப்பில் சில அச்சுப் பிழைகள் திருத்தப்பட்டுள்ளன. வேறு மாறுபாடுகள் இல்லை.

ந. ரா. சு.

ஆரம்ப அரசியல் நூல்

அத்தியாயம் 1

அரசின் உற்பத்தி

அரசியல் நூல் என்பது அரசைப் பற்றியும், அரசாங்கத்தைப் பற்றியும் சொல்லுவது. அதில் அடங்கிய விஷயங்கள் பலவகைப்பட்டன வாதலால் எல்லாப் பொருள்களையும் உள்ளடக்கிய ஒரு பெயரை அதற்கு இடுவது அரிது. அப்பொருள்களில் பல நாளடைவில் வளர்ந்து தனித்தனியான சாஸ்திரங்களாகப் பரிணமித்திருக்கின்றன. ஆகவே, அரசியல் நூலானது பொருள் நூலாகிய அரசியற் பொருளாதார சாஸ்திரத்தோடும், ஒழுக்க நூலாகிய நீதி தர்மத்தோடும், சரித்திரம் சட்டம் என்பவற்றோடும் நெருங்கிய சம்பந்தம் உடையதாகின்றது.

இலக்கணமும் அடங்கிய விஷயங்களும்

அரசியல் நூலின் அடிப்படையான விஷயங்களுள் முதலில் அரசின் உற்பத்தியையும் வளர்ச்சியையும் பற்றிய வரலாறு உள்ளது. அடுத்தபடியாக அரசின் இயல்பு, சார்பு, பயன்கள் என்பவற்றின் ஆராய்ச்சியும் அரசியல் அமைப்பின் கொள்கையைப் பற்றிய ஆராய்ச்சியும் உள்ளன. இறுதியாக அரசியல் வளர்ச்சிக்குரிய சட்டங்களின் அமைப்புக் கூறப்படும். சுருங்கச் சொன்னால், இறந்த காலத்தில் அரசு எப்படி இருந்தது என்பதைப் பற்றிய சரித்திர பூர்வமான ஆராய்ச்சி, நிகழ்காலத்தில் எப்படி இருக்கிறது என்று பகுத்து அறியும் ஆராய்ச்சி, எதிர் காலத்தில் எப்படி இருக்க

வேண்டும் என்று அரசியலோடும் அறவியலோடும் பொருந்தச்செய்யும் விமரிசனம் ஆகிய இவைகள் சேர்ந்ததே அரசியல் நூலாகும்.

அரசையும் அதன் விஷயங்களையும் பற்றி முதல் முதலாகச் சிந்தித்தவர்கள் கிழைத் தேச மக்களே. ஆனல், அவர்கள் தாம் ஆலோசித்துணர்ந்த முடிவுகளை ஒழுங்கு படுத்திக் கொள்ளவில்லை. அன்றியும், அரசியலையும் மதத்தையும் அவர்கள் ஒன்றேடொன்று கலந்தார்கள். தென் கிழக்கு ஐரோப்பாவிலுள்ள கிரேக்கர்களே அரசியல் நூலைத் தனியாகவும் ஒழுங்காகவும் அபிவிருத்தி செய்தார்கள்; மதம், மூட நம்பிக்கை, புராணக் கொள்கை முதலியவற்றிலிருந்து அதனை வேறு பிரித்தார்கள். பிற்காலத்தில் அரசியல் வளர்ச்சி வரவர விரிவடைந்தது. இக்காலத்திலோ, தினந்தோறும் ஏதாவது ஓர் அரசியற் சிக்கலைப் பற்றிக் கேள்விப் படுகிறோம்; உடனே நிவர்த்தி செய்யவேண்டிய விஷயமாயிருக்கும் அது. நம் நாட்டில் ஜனங்களிடத்தில் விசேஷமான அரசியல் விழிப்பு ஏற்பட்டுள்ளது; அரசியல் பிரச்னைகளில் யாவருக்கும் சிரத்தை உண்டாகியிருக்கிறது. இதனல், இளைஞர்களுக்கும் அரசியல் எழுத்தாளருக்கும் முறையான அரசியல் சாஸ்திர ஆராய்ச்சி அவசியம் என்ற நிலை வந்திருக்கிறது.

அரசின் தோற்றம்

மனிதர்கள் அமைத்துக்கொண்ட சங்கங்கள் எல்லாவற்றிலும் மிக முக்கியமானது அரசு. ஆதிகால மனிதர்கள் முதல்முதலாக ஏதோ ஓர் அரசியல் அமைப்பைக் கொண்டிருக்க வேண்டு மல்லவா? அது எத்தகைய சந்தர்ப்பங்களில் உண்டாயிற்று, என்ன நிலைகளில் பிறந்தது என்பதைச் சரியாகத் தெரிவிப்பதற்குரிய ஆதாரங்கள் சரித்திரத்தில் காணப்படவில்லை. சரித்திரக் குறிப்புக்கள் கிடைக்கும் காலத்திற்கு முன்பே, ஆதி மனித இனம் வளர்ந்து வந்த காலத்திலேயே ஆதி அரசியல் வாழ்க்கை தோன்றிவிட்டது என்பதுதான் இதற்குக் காரணம். ஆகவே ஆதார பூர்வமான சரித்திரம் இந்த விஷயத்தில் ஒரு தெளிவையும் உண்டாக்கவில்லை. சமூக சாஸ்

திரம், ஆதி மனித ஆராய்ச்சி நூல் என்னும் புதிய சாஸ்திரங்களின் உதவியைக் கொண்டுதான் இந்த மூடு மந்திரத்தைத் தெளிந்து கொள்ள வேண்டும்.

அரசின் ஆரம்பம், இயல்பு என்பவற்றைப் பற்றிச் சரித்திர பூர்வமாகத் திருப்திகரமான விளக்கம் கிடைக்கவில்லை. ஆதலின் அரசியல் நூல் வல்லார் ஊகித்துப் பல கொள்கைகளை வெளிப்படுத்தி யிருக்கிறார்கள். அவற்றுள் மூன்று மிக முக்கியமானவை. அவையாவன :—(1) தெய்வ சிருஷ்டிக் கொள்கை, (2) வலிமைக் கொள்கை, (3) சமூக ஒப்பந்தக் கொள்கை என்பன.

மூவகை முக்கியமான கொள்கைகள்

இப்போது யாவரும் இவற்றை நிராகரித்தாலும் இவற்றைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். எப்படி எதற்காக அரசு உண்டாயிற்று என்ற அடிப்படையான வினாவிற்குரிய விடையைக் கண்டுபிடிக்க வேண்டும் என்னும் முயற்சிகள் முன்பு இருந்தன என்பதை இக்கொள்கைகள் புலப்படுத்துகின்றன. ஒவ்வொரு கொள்கையிலும் முக்கியமான சில செய்திகள் உண்டு. இரண்டாவதாகக் கவனித்தற்குரியது :—இந்தக் கொள்கைகளில் ஒவ்வொன்றும் அரசியல் நடைமுறையில் மிகப் பயன்பட்டிருக்கிறது. இக்காலத்திலுள்ள பல அரசியல் ஸ்தாபனங்களைப் பற்றிச் சரியான்படி தெரிந்துகொள்ள வேண்டுமானால் அவற்றின் தோற்றுவாய்க் காலத்தில் இருந்த கொள்கைகளையும் நினைவில் வைத்துக்கொண்டு ஆராய வேண்டும். அரசியற் கொள்கையும், நடைமுறையும் ஒன்றோடொன்று நெருங்கிய சம்பந்த முடையன். சில காலங்களில் அரசியற் கொள்கைகள் நிச்சயமாகப் பழைய ஸ்தாபனங்களில் மாற்றமோ புதிய ஸ்தாபனங்களோ உண்டாகக் காரணமாகின்றன. அரசியற் கொள்கையுடையவர் முதலில் அக் கொள்கையை வெளியிடுகின்றனர். காரிய சாத்தியமாக்கும் சீர்திருத்த வாதிகள் எதுவிரும்பத்தக்கதோ அதை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வருகிறார்கள்.

இக் கொள்கைகளின் பிரயோஜனம்

உதாரணமாக :—மனிதர்களின் உரிமைகள், ஜன சமூகத்தின் அரசுரிமை என்பவற்றைப் பற்றிப் பரவின கொள்கைகள் 1789-ஆம் வருஷத்துப் பிரெஞ்சுப் புரட்சியை உண்டாக்குவதற்குக் காரணமாயின என்பதில் சந்தேகமே இல்லை. முன்னே சொன்னதற்கு மாறுகச் சில சமயங்களில் நிகழ்வது மூண்டு. அரசியல் மாற்றங்கள், முக்கியமாகத் திடீரென்று நேரும் மாற்றங்கள், தக்க காரணமின்றியே நேருகின்றன. அத்தகைய காலங்களில் உண்மையான சம்பவங்களுக்குப் பின் கொள்கைகள் தோன்றுகின்றன. 1668-ஆம் வருஷத்தில் இங்கிலாந்தில் மீண்டும் முடியாட்சி வந்த பிறகு இங்கிலீஷ் தத்துவ அறிஞராகிய ஹாப்ஸ் என்பவர் வரையறையற்ற முடியாட்சியை ஆதரித்து எழுதினர். லாக் என்னும் மற்றொரு தத்துவ சாஸ்திரியோ 1688-ல் நிகழ்ந்த புரட்சிக்குப் பிறகு எழுதுகையில் வரையறுக்கப்பட்ட முடியாட்சியையும், பார்லிமெண்ட் ஆட்சியையும் ஆதரித்து எழுதினர். இவை பின்னுல் சொல்லப்பட்ட நிகழ்ச்சிக்கு உதாரணங்களாம்.

அரசின் உற்பத்தியைப் பற்றிய மூன்று கொள்கைகளுள் மிகப் பழமையானது தெய்வ சிருஷ்டிக் கொள்கை. நேர்முகமாகவோ மறைமுகமாகவோ தெய்வத்தால் சிருஷ்டிக்கப்பட்ட ஸ்தாபனமே அரசு என்று கூறுவது அது. பூலோகத்தில் தெய்வீக சக்திபெற்ற அவதார புருஷர்களுக்கு நேராகவோ மறைமுகமாகவோ தெய்வத்தின் திருவுள்ளமானது ஞானேதய மூலம் புலப்பட்டது; அவர்கள் மூலமாக அது ஜனங்களுக்கு அறிவிக்கப்பட்டது; அதற்குப் பணிந்தொழுகுதலே மக்களின் சமய சமூகக் கடமை.—இதுவே தெய்வ சிருஷ்டிக் கொள்கையாகும். பழங் காலத்திலும் மத்திய காலங்களிலும் இந்தக் கொள்கையில் மிகவும் அழுத்தமான நம்பிக்கை இருந்தது. பண்டைக் காலத்தில் ஆசியாவில் பரந்திருந்த முடியரசு எல்லாவற்றிலும் ஜனங்களை ஆளும் தெய்வீக உரிமை தமக்கு உண்டென்று அரசர்கள் எண்ணினர். பூதர்கள், அரசு கடவுளால் நேரே சிருஷ்டிக்

1. தெய்வ சிருஷ்டிக் கொள்கை

கப்பட்டுப் பாதுகாக்கப் பெறுவது என்று நம்பினர். கிரேக்கர்களும் ரோமர்களும் அரசு கடவுளின் மறைமுகமான சிருஷ்டியென்று கருதினர்கள். இந்தக் கொள்கை நவீன காலம் வரையிலுங்கூட இருந்து வந்தது. மத்திய காலத்திலும் அதைத் தொடர்ந்த பிற்காலத்திலும் அரசர்களின் தெய்விக உரிமைக்கு ஆதரவாக இக்கொள்கை பயன்பட்டு வந்தது. இப்பொழுதோ இதை மதிப்பார் இல்லை. எனினும் சில விஷயங்களில் இது மதித்தற்குரியது. ஒரு விஷயம் வருமாறு: மக்கள் நாகரிகம் முதிர்ந்தும் முதிராமலும் இருந்த ஒரு காலத்தில், ஓர் அதிகாரத்துக்கேனும் தாமாக வரையறுத்த சட்டத்துக்கேனும் பணியும் வழக்கமே அறியாத நிலையில், தெய்வ சிருஷ்டிக் கொள்கையானது ஒழுங்கை நிலை நிறுத்துவதற்குச் சக்தியுள்ள கருவியாக இருந்திருக்க வேண்டும். குழப்பம் ஏற்படாமல் பாதுகாத்து உடல், பொருள், அரசாங்கம் என்பவற்றின்பால் உள்ள மரியாதை பலப்படுவதற்கு மிக உதவியது.

மற்றொரு விஷயம் வருமாறு: ஆளப்படும் குடிமக்களின் நன்மைக்காகவே அரசாங்கம் இருக்கிறதுஎன்ற உண்மையை அது வற்புறுத்துகிறது. வரையறையற்ற அதிகாரம்பெற்ற அரசனுக இருந்தாலும் தன் அதிகாரத்தைச் செலுத்தும் விஷயத்தில் தெய்வத்துக்குப் பயந்து அறத்தோடு பொருந்த ஒழுக வேண்டும். இவ்விரண்டு விஷயங்களோடு மிக முக்கியமான மற்றொன்று உண்டு. அரசியலில் ஒழுங்கு அமைய வேண்டியது தர்மமென்பதை அது குறிப்பாக வற்புறுத்துகிறது. இந்தச் செய்தி எல்லாவற்றிலும் உயர்ந்த மதிப்புடையது.

2. வலிமைக் கோள்கை

வலிமைக்கொள்கை யென்பது வல்லார் வகுத்ததே அரசு என்று கூறுவது. பலமில்லாதவர்களை வலிமையுள்ளவர்கள் அடக்கி ஆள்வதனால் உண்டானது அரசியல் ஸ்தாபனம் என்பது இக்கொள்கை. 'மக்களை அடக்கி ஆள்வதன் விளைவே அரசாங்கம். மனிதன் மனிதனை அடிமைப்படுத்தும் வழக்கத்தினாலும், வலியற்ற குழுவினரை வலியுள்ளோர் வென்று

அடிப்படுத்தியதாலும், மிக்க தேகபலத்தால் கிடைத்த விறலி னாலுமே அரசுவாழ்க்கை ஆரம்பமாயிற்று' என்று கூறுவது. லௌகிக அதிகாரம் தாழ்ந்ததென்பதை வெளிப்படுத்த மத்தியகாலங்களில் இந்தக் கொள்கையைச் சமயவாதிகள் எடுத்துரைத்தனர். 19-ஆம் நூற்றாண்டில் அரசாங்கத்தின் முறையற்ற தலையீட்டைக் கண்டிப்பதற்காக ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் என்பவர் இந்தக் கொள்கையை எடுத்துரைத் தார். சில ஜர்மானிய அரசியல் நூலறிஞர்கள் அரசே பலம், வலிமையே நியாயத்தை உண்டுபண்ணுகிறது, அரசின் முக் கிய சாரமாவது அதனுடைய மேலான ஆணை என்ற கார ணங்களால் அரசு இருக்கவேண்டிய அவசியத்தை எடுத்துக் காட்டும்போது இந்தக் கொள்கையைக் கூறியுள்ளார்கள். வேறு சிலர் இதே கொள்கையை எடுத்துக் காட்டி அடக்கி யாளும் கொடுமை காரணமாக அரசைக் கண்டிக்கின்றனர்.

இந்தக் கொள்கை நீதிக்கு மிஞ்சிய மிருகபலத்தின் உப யோகத்திற்கு அநுகூலமாக இருக்கிறது. இது சரித்திரத்தின் ஆதரவு பெற்றது என்று உறுதியாகத் தெரிகிறது. அரசு களை ஸ்தாபிக்கும் விஷயத்தில் பெரும்பாலும் வன்மை உப யோகப்பட்டிருக்கிறது என்பதில் சந்தேகமே இல்லை. ஆனால் மிருகபலம் மாத்திரம் அரசுகளை உண்டாக்குதல் அரிது. அரசின் அதிகாரம் முறையானதே என்று நிறுவு வதற்கு இக்கொள்கை சிறிதும் உதவாது. குடிகள் பணிந் தொழுகப்பெறும் உரிமை அரசின் பலத்தினால் கிடைப்ப தன்று. பலமென்பது தேக வலிமையாலும் படை வலிமை யாலும் உண்டாவது. அதன் செயலால் தார்மிக சக்தி விளை யாது. எனவே வெறும் பலம் நியாயத்தை உண்டாக்க முடியாது. படைவலி அரசின் முக்கியமான லக்ஷணங்களுள் ஒன்று என்பதிலும், அது இல்லாமல் அரசு நடைபெறாது என்பதிலும் தடையில்லை. ஆனால் ஆட்சிபுரியும் உரிமை இத்தகைய வலிமையினால் அரசுக்குக் கிடைக்கிறதென்று கொள்ளுதல் கூடாது.

சமூக ஒப்பந்தக் கொள்கை என்பது, ஆதிகாலத்து மனி தர்கள் தமக்குள் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தத்திலிருந்து

அரசிய லதிகார ஸ்தாபனம் எழுந்தது என்று கூறுவதாகும். இந்தக் கொள்கை யின்படி மானிட ஜாதியின் பழைய சரித்திரத்தை இரண்டு காலப் பகுதிகளாகப் பிரிக்கலாம். முதலாவது, அரசியலதிகாரம் ஏற்படுவத்தற்கு முந்தியது. இந்தக் காலத்தில் மனிதரால் அமைக்கப்பட்ட சட்டத்தினுல் தடுக்கப்படாமல் இயற்கை விதிக்கே அடங்கிய இயற்கை நிலையில் மக்கள் வாழ்ந்தனர். இந்த இயற்கை நிலை நெடுங்காலம் நிலைத்து நிற்க முடியாதது; அசௌகரிய மானது; நீர்வகித்தற்கரியது. அதனுல் பூர்விக மனிதர்கள் தமக்குள் ஓர் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டார்கள். அதன்மூலமாக அவர்கள் இயற்கை நிலையை விடுத்துப் பரஸ்பர்ப் பாதுகாப்பின் பொருட்டு ஒரு சமுதாயத்தை அமைத்துக் கொண்டனர். இயற்கை விதிகள் போய் மனிதர் அமைத்துக்கொண்ட சட்டங்கள் வந்தன. சமூகக் கடமைகளுக்குப் பணிந்து நடப்பதனுல் மனிதன் சமூக உரிமைகளை நிரம்பப் பெற்றான். ஒரு குறிப்பிட்ட வகுப்பிலுள்ள மனிதர்களுக்குள் ஓர் அரசை ஸ்தாபிக்கும் பொருட்டு ஏற்பட்ட இந்த ஒப்பந்தத்தை ஆசிரியர்கள் அரசியல் ஒப்பந்தமென்று சொல்வார்கள். இதனேடு, ஆட்சி புரிவோருக்கும் குடிமக்களுக்கு மிடையே மற்றோர் ஒப்பந்தமும் அவசியமாயிருந்தது. அதன்படி ஆட்சிபுரியும் பொறுப்பைச் சில குறிப்பிட்ட மனிதர்களிடம் ஒப்பித்தனர். இவ்வாறுதான் அரசாங்கம் என்பது ஏற்பட்டது. இதற்கு அரசாங்க ஒப்பந்தமென்று பெயர் வழங்கும்.

3. சமூக ஒப்பந்தக் கொள்கை

மேலே சொன்ன அரசியல் ஒப்பந்தத்திற்கும் அரசாங்க ஒப்பந்தத்திற்கும் உள்ள வேறுபாடு அறிதற்குரியது. முன்னது, இயற்கை நிலையில் வாழ்ந்த மக்கள் ஒரு சமுதாயத்தை அமைத்துக்கொண்டு அரசியல் அமைப்பை உடையவராகிய செய்கையைத் தெரிவிப்பது; பின்னது, முன்பே அப்படி அமைக்கப்பட்ட சமுதாயத்தினர் ஒரு குறிப்பிட்ட அரசாங்கத்தை ஸ்தாபித்த செயலைக் குறிப்பது.

இந்த ஒப்பந்தக் கொள்கையின் சரித்திரத்தைப்பற்றி

இங்கே ஆராய்தல் அவசியம் அன்று. ஆனால் இந்தக் கொள்கை எத்தகையது என்பதைக் கவனிப்போம். சமூக ஒப்பந்தக் கொள்கைக்கு எதிராகச் சொல்லப்படும் காரணங்களுள் மறுக்க முடியாதது ஒன்று உண்டு. இது சரித்திர பூர்வமானதன்று என்பதே அக்காரணம். மனிதர் தமக்குள் அமைத்துக்கொண்ட ஒப்பந்தத்தினால் உண்மையில் ஓர் அரசு உண்டாயிற்று என்பதற்கு ஏற்ற உதாரணம் ஒன்று கூடச் சரித்திரத்தில் கிடையாது. இந்தக் கொள்கை சட்ட பூர்வமாகப் பொருந்தாது என்பது மற்றொரு தடை. பூர்விக மனிதர்களுக்குள் ஏற்பட்ட ஒப்பந்தம் சட்ட பலத்தைப் பெற்றிருக்க முடியாது. ஒப்பந்த உரிமைகளை நிர்ணயிப்பதற்கு ஏற்ற அரசியல் அதிகாரமோ, சமூகக் கட்டுப்பாடோ அக்காலத்தில் இல்லை. சட்ட பூர்வமாகக் கட்டுப்படுத்தும் வன்மை எப்போது இல்லையோ அப்போது அந்த ஒப்பந்தம் பின்பு வந்த சட்ட பூர்வமான உரிமைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் மூலமென்பது பொருந்தாது. மூன்றாவது தடை வருமாறு: இயற்கையாகவே உரிமைகள் உண்டு என்ற அபிப்பிராயத்தை இக்கொள்கை ஆதாரமாக உடையது. அந்த அபிப்பிராயமே பொய்யானது. இயல்பாக உள்ள உரிமையை அரசியல் உரிமையாகச் சொல்வது பொருந்தாது. சமுதாய அரசல்லாத இயற்கை உரிமை அரசிய லுரிமை ஆகமாட்டாது. அரசியலுரிமை யென்பதில் பிறர் கட்டுப்பட்டுச் செய்யும் உபகாரமும் அடங்கியிருக்கிறது. அது சமுதாய வாழ்க்கையில்தான் இருக்க முடியும். இயற்கை நிலையில் தனி மனிதர்கள் அதிகாரம் உடையவர்களாக இருக்கலாம்; மற்றவர்களால் அங்கீகரிக்கப்பட்ட உரிமைகளை உடையவர்களாக இருத்தல் இயலாது. இறுதியாக, இந்தக் கொள்கையின்படி அரசானது தனி மனிதர்களின் விருப்பத்தின் வினாவாகவும், தனி மனிதர்களுடைய விருப்பத்தின்படி மாறுவதாகவும் அமைவதால், அனுபவத்தில் இது அபாயகரமானது.

ஆயினும் இந்தக் கொள்கையில் சில முக்கியமான உண்மைகள் பொதிந்திருக்கின்றன. அரசாங்கம் ஆலோசித்

தமைத்த ஒப்பந்தத்திலிருந்து உண்டாகவில்லை யாயினும் தானுகவே வளர்ந்ததும் அன்று. உற்பத்திக் காலத்தில் அது தானுகவே உண்டாயிற்று; இயற்கையானது; மனிதனுடனும் சுற்றத்துடனும் சேர்ந்து பிறந்தது. பிறகோ, மனிதனுடைய விருப்பு வெறுப்பினுல் அது பெரிதும் பாதிக்கப் பட்டது. இவ்விஷயம் இந்தக் கொள்கையினுல் அறிவதற் குரிய உண்மைகளுள் ஒன்று.

இரண்டாவது வருமாறு: ஒப்பந்தக் கொள்கையானது தற்கால ஜனநாயகத்துக்கு அஸ்திவாரமாக உதவியது. 'அரசாங்கத்துக்குப் பணிந்தொழுகுத லென்பது ஆளப்படும் மக்களின் சம்மதத்தின்மேல் நடைபெற வேண்டும். அரசன் யதேச்சையாகச் செயலாற்ற எவ்வித உரிமையும் இல்லாதவன்' என்ற அடிப்படையான உண்மையை இக்கொள்கை நிறுவியது.

அரசைப்பற்றிய பலவகைக் கொள்கைகளை ஆராய்ந்து, அது கடவுளால் மனிதனுக்கு அமைத்து வழங்கப்பட்டதன்று என்பதையும், மிக்க வலிமையின் விளைவு அன்று என்பதையும், மனிதனுடைய உபாயங்களால் தீர்மானித்து அமைத்ததன்று என்பதையும் கண்டோம். இக்காலத்தில் உள்ள ஆசிரியர்களுள் பெரும்பாலோர் அரசின் ஆதிகாரணத்தைப்பற்றிக் கொண்டுள்ள கொள்கையைச் **சரித்திரக் கொள்கை** அல்லது **பரிணமக் கொள்கை** என்று சொல்லலாம். இந்தக் கொள்கையின்படி, அரசியல் ஸ்தாபனம் பூர்விகத்தில் ஏற்பட்ட காலம் இன்னதென்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. அரசானது சரித்திரத்தினுல் அறியப்படுவது; சரித்திர பூர்வமான பரிணமத்தில் நாளடைவில் விருத்தியடைந்த ஒரு ஸ்தாபனம். முதல் முதலில் அது மிக ஒழுங்கீனமாகவும் செம்மையற்ற உருவத்தோடும் தோன்றியது. மக்களிடத்தில் அரசியலுணர்ச்சி இல்லாமல் இருந்தது. உறவின்முறை காரணமாக ஏற்படும் பற்றும், சமயக் கட்டுப்பாடும் அதிகாரத்துக்குப் பணிந்தொழுகும் முறையை உண்

உண்மைக்காரணம் யாது? சரித்திரக் கொள்கை அல்லது பரிணமக் கொள்கை.

டாக்கின. அது நாளடைவில் வளர்ந்து பலகாலம் சென்ற பின் அநேகமாகத் தூய்மையும் செம்மையும் உடைய தாயிற்று. அரசியல் உணர்ச்சி ஜனத்தொகையிற் பெரும் பாலோரிடம் பரவியது. அரசு, நிலைபெற்றதாகவும் பொது ஜன ஆதரவு பெற்றதாகவும் ஆயிற்று. உறவின் முறை, சமயம், அமைதிக்கும் பாதுகாப்புக்கும் உள்ள தேவை ஆகிய இவை அரசை அமைப்பதற்கு முக்கிய காரணங்களாயின.

இவற்றுள் உறவின் முறையானது குடும்ப பந்தத்தை ஆதாரமாகக் கொண்ட பல கூட்டங்களை உண்டாக்கியது; ஆரம்பகாலத்தில் அது மிகவும் பலமாக இருந்ததோடு, அரசு உருப்பெற்ற காலத்திலும் நீடித்து இருந்து வந்தது. ஒற்றுமைக்கு உரிய கருவியாகவும், அதிகாரத்துக்கு அநுமதி அளிப்பதாகவும் இருந்த மதமானது ஆதிகாலத்துச் சமூகங்களில் வேறு பிரிக்க முடியாதபடி உறவின் முறையோடு இணைந்து நின்றது; அரசியல் ஒற்றுமை உண்டாக்குவதற்குப் பெரிய பலமாக உதவியது. சமூகத் தொகுதி விரிய விரியச் சமூக வாழ்க்கை சிக்கலுடையதாயிற்று. அமைதி வேண்டும் என்ற குறையும், பாதுகாப்பு வேண்டுமென்ற தேவையும் அரசியல் அமைப்பிற்குக் காரணமான பலமுள்ள தூண்டுகோல்கள் ஆயின.

அரசு நாளடைவில் எவ்வாறு வளர்ந்தது என்பதைப் பற்றிய பொதுவான கொள்கைகளைக் குறிப்பிட்டோம்.

அரசின் வடிவம்

இப்பொழுது, அரசு ஆரம்ப காலத்தில் எந்த வடிவத்தில் இருந்தது, பிறகு எப்படி எப்படி விருத்தியாகி வந்தது என்பவற்றை ஆராய்வோம். மனித வர்க்கத்தின் பூர்விக சரித்திரத்தினால் சமூக அமைப்பானது உறவின் முறையிலிருந்து தோற்றியதென்று அறிகிறோம். முதல் முதலில் ஒற்றுமை ஏற்படுவதற்குரிய பந்தமாகவும், அரசியலதிகாரத்தை அநுமதிக்க இடமளிப்பதாகவும் இருந்தது ரத்த சம்பந்தமே. குடும்பமே அரசின் பூர்விக வடிவமென்று சொல்லவேண்டும். ஆதிகாலத்துக் குடும்பத்தின் அமைப்பு எப்படி இருந்தது என்ற விஷயமாக வேறுபட்ட அபிப்பிராயங்கள் இருக்கின்றன. இரண்டு

மாறுபட்ட கொள்கைகள் எழுதுவதற்கு அவை காரணமாயின். தந்தைவழி, தாய்வழி என்பனவே அவ்விரண்டு கொள்கைகளாம்.

முதல்-முதலில் தந்தைவழி இருந்ததென்பவர்கள் தந்தையின் தலைமையின்கீழ்ப் பூர்விகக் குடும்பங்கள் இருந்தன என்பர். அத்தகைய குடும்பத்தின் மூவபுருஷன் ஓர் ஆடவன். ஆண்வழி ஆணை அந்தப் பரம்பரை வந்து கொண்டிருந்தது. குடும்பத்தில் உள்ள ஆடவர்களுள் வயசு முதிர்ந்தவனே அதனை ஆட்சிபுரியும் உரிமையுடைய தலைவன்.

தாய்வழிக் கொள்கையின் சார்பாக உள்ளவர்கள், பண்டைக் காலத்துச் சமூகத்தில் எல்லா இடங்களிலும் தந்தைவழிக் குடும்பமே இருக்கவில்லையென்று மறுக்கிறார்கள். இக் காலத்திலும் தந்தைக்குப் பின் மகனென்னும் பரம்பரை யமைப்புக்கு அடியோடு மாறுபட்ட குடும்பங்கள் நாகரிகமற்ற வகுப்புகள் பலவற்றில் உள்ளனவென்றும், அக் குடும்பங்கள் தந்தைவழிக் குடும்பம் ஏற்படுவதற்கு முன்பே ஆதிகாலத்தில் இருந்தனவென்றும் அவர்கள் சொல்கிறார்கள். சமீப காலத்து ஆராய்ச்சிகளால் பண்டைக் காலத்துச் சமுதாயப் பிரிவுகளில் புருஷன் மனைவியென்ற உறவு இல்லையென்றும், பரம்பரையானது தாய்வழியைச் சார்ந்தே இருந்ததென்றும் தெரிவதாக அவர்கள் உறுதியாகச் சொல்கிறார்கள். பெண்பாலரின் உறவுபற்றி ஏற்பட்ட தாய்வழித் குடும்பமே பூர்விக சமுதாயத்தில் இருந்ததென்பது அவர்கள் கொள்கை. ஆதிகாலத்து மக்களிடம் தாய்வழிக் குடும்பமே எங்கும் பரவியிருந்தது என்பதற்குப் போதுமான ஆதாரமில்லையென்று நாம் கூறலாம். மேலும் தாய்க்குரிய உரிமையென்பது தாயின் ஆட்சி என்றே எப்பொழுதும் பொருள் படவேண்டும் என்ற அவசியம் இல்லை. உதாரணமாக: மலையாளத்து நாயர்களின் கொடிவழியில் தாய் உரிமை தாய் வழியாகவே அமைந்துள்ளது. ஆனால் குடும்பத்திலுள்ள ஆடவர்களுள் வயசு முதிர்ந்த கரணவனே தர வாட்டை நிர்வகித்துப் பரிபாலித்து வருகிறான். அஸாம் தேசத்தில் காசியென்னும் வகுப்பினருள் பெண்பாலார்

விசேஷமான சொத்துரிமையைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால் ஆட்சியுரிமை தாய்வழியாக வராமல், கொச்சி திருவாங்கூர் அரசர்களைப்போல ஆண்மகனிடத்திலிருந்து ஆண் மகனுக்கு வருகிறது.

தந்தைவழிக் குடும்பம் எங்கும் பரவி யிருந்தது என்று கொள்ளவும் இயலாது. சமுதாய வாழ்க்கையின் ஆரம்பக் காலத்தில் அது அவசியமாக இருந்தது என்று சொல்வதற்கும் இல்லை.

ஆதிகாலத்துக் குடும்பம் இன்னவாறு இருந்தது என்று ஓர் உருவத்தைக் குறிப்பிட்டு நிச்சயமாய்ச் சொல்ல முடியாது. பெரும்பாலான அரசுகள் ஏறக்குறையத் தந்தை வழிக் குடும்பங்களின் உறவிலிருந்தே உண்டாகி வளர்ச்சி பெற்றன. சாதாரணமான குடும்ப உறவென்னும் முறை இல்லாத குழுவிலிருந்து மிகச் சில அரசுகள் பரிணமித்தன. இரண்டும் ஒரே மாதிரியாக வளர்ந்தன. தந்தை வழி அதிக நெருக்கமாகவும் நீண்டதாகவும் இருந்தது.

ஓர் இடத்தில் தாய் வழி உறவும் மற்றோர் இடத்தில் தகப்பன் வழி ஆட்சியும் ஒருங்கே இருந்து வந்தமையே அக்காலத்து ரீதி என்று தெரிகிறது. இக்காலத்திலுள்ள அரசியற் கொள்கைகள் வளர்வதற்கு ஆதிகாரணமாக இருந்தவர்களும், இக்காலத்து அரசுகளைச் சிருஷ்டித்தவர்களுமாகிய ஜன சமூகத்தினர் தகப்பன் வழிக் குடும்பத்தையே அடிப்படையாகக் கொண்டு கட்டுப்பாட்டுடன் வாழ்ந்தார்கள் என்ற விஷயத்தை மாத்திரம் நாம் சொல்ல முடியும். ஆரிய மக்களுள் பூர்விக காலத்தில், யாவரினும் பிராயம் முதிர்ந்த ஆடவனே அரசனுகவும் குருவாகவும் இருந்து குடும்ப பரிபாலனம் செய்து வந்தான். தந்தையின் அதிகாரம் கட்டுப்படுத்தப் பெறாமல் இருந்தது. சொத்தும், குடும்பத்தினரின் உயிர்களுங்கூட அவன் கைக்குள் இருந்தன. ஒவ்வொரு குடும்பத்திலுள்ளவர்களும் ரத்த சம்பந்தத்தாலும் சமயப்பிணைப்பாலும் ஒன்றுபட்டு நின்றார்கள். இத்தகைய குடும்பப் பகுதிகள் ஒன்று சேர்ந்து ஒரு வம்சம் அல்லது வீடு ஆயின. அந்த வம்சத்துக்கு அதிபதியாக

இருந்து ஆண்டவன் குடும்பத்தைச் சார்ந்த பிரதான உறவினனே. அந்த வம்சங்களெல்லாம் சேர்ந்து ஒரு குழு உண்டாயிற்று. இத்தகைய குழுவிலுள்ளார் யாவரும் ஒரே மூல புருஷனிடமிருந்து வந்ததாகச் சொல்வதுண்டு. இத்தகைய குழுவினர் பலர் சேர்ந்து ஓர் அரசு உண்டாயிற்று. அதில் உறவின் முறை என்ற பற்று முன்புபோல அவ்வளவு வலிமையுள்ளதாக இராவிட்டாலும் ஓரளவு இருந்துதான் வந்தது. அரசியலதிகாரம் குடும்பத்திலே தொடங்கவில்லை; குழுவிலிருந்துதான் ஆரம்பமாயிற்றென்று சில ஆசிரியர் கூறுவர்.

அத்தியாயம் 2

அரசின் வளர்ச்சி வரலாறு

அரசின் உற்பத்தியைப் பற்றி ஊகிக்கப்படும் கொள்கைகளையும் ஆரம்ப காலத்து அரசை அமைப்பதற்கு உதவியாக இருந்த விஷயங்களையும்பற்றி இதுகாறும் ஆராய்ந்தோம். சரித்திரத்திற்குட்பட்ட காலங்களில் அரசு வளர்ச்சியடைந்த நெறியில் உள்ள பல நிலைகளைப்பற்றிச் சுருக்கமாகச் சொல்வோம்.

குழு அமைப்பே முதலில் ஏற்பட்ட அரசின் வகையாகும். குழு அமைப்பை அரசாக வைத்துப் பிரஸ்தாபிப்பது சரியா என்பதே அபிப்பிராய பேதத்துக்கு இடமான செய்தியாம். அரசுக்கு நாடு அல்லது பிரதேசம் அவசியமானால் பழங் காலத்துக் குழு அரசு ஆகாது. மக்கள் நாடோடி வாழ்க்கையை விட்டு நிலையான வேளாண் வாழ்க்கையை மேற்கொண்ட காலத்தில்தான் நிலையான ஸ்தாபனங்கள் வளர்ச்சியுறத் தொடங்கின. ஜனங்களின் எஜமானர்களாக இருந்த தலைவர்கள் அவர்களுடைய நாட்டை ஆட்சி புரிவோராகக் கருதப் பெறலாயினர். பூர்விக மக்கட் சமூகங்களிற் சில இந்தக்

1. குழு அமைப்பு

குழு அமைப்பு நிலையோடு நின்றுவிட்டன ; மேலே வளர வில்லை.

மித உஷ்ணமான நிலையும் நிலவளமும் நீர்வளமும் இடைவெளியின்றிப் பரந்து விரிந்த நிலப்பரப்பும் உள்ள இயற்கை வளம் மிக்க இடங்களில் ஜனங்கள் கூடினர். அந்த வளப்ப நிலையானது, மக்கள் பொருள் ஈட்டுவதற்கும், சமாதான காலத்துக் கலைகளிலும் போர்க் கலைகளிலும் தேர்ச்சி பெறுவதற்கும் துணை செய்தன. இத்தகைய அநுகூலமான நில அமைப்பை நைல், கங்கை, மஞ்சளாறு, யாங்ட்ஸி என்னும் ஆறுகள் பாயும் பிரதேசங்களிலே காணலாம். இவற்றில் பழங்காலத்துக் கீழ் நாட்டு ஸாம்ராஜ்யங்கள் வளர்ச்சி யுற்றன.

2. கீழ்நாட்டு ஸாம்ராஜ்யம்

நாகரிக வாழ்வின் ஆரம்ப நிலைகளை உண்டாக்கிய இந்தத் துணைக் காரணங்களே ஆரம்ப காலத்தில் இருந்த வளர்ச்சியற்ற தேக்கமான நிலைக்குக் காரணமாயின. அப் பேரரசுகள், தாம் பெற்ற வெற்றி, அடிமைகளின் சொந்தக் காரரிடத்திலும் வரி தொகுப்பவரிடத்திலும் உள்ள பயம் ஆகியவற்றின் சார்பிலே நின்றமையால் அவற்றில் உண்மை யான ஐக்கியம் இல்லை. போரிற் சிறைப்பட்டோர் அடிமை யாயினர். ஒரு பெரிய ஏவலாளர் சமூகம் விருத்தியாயிற்று. இதனால் சமூகத்தினிடையே வேறுபாடுகளும் சர்வாதிகார மும் உண்டாயின. ஆளும் பரம்பரை மெலிவுறத் தொடங் கியபோது ஸாம்ராஜ்யமே வீழ்ச்சி யடைந்தது பொதுஜன விருப்பத்தைக் கவனியாத கொடுங்கோலாட்சியினர் அரசை ஒரு சொத்தாகக் கருதினர். அத்தகைய நிலையில் ஒற்றுமை யேனும் தனி மனிதனுக்குச் சுதந்திரமேனும் இருப்பது சரத் தியமன்று. அரசியலதிகாரத்தின் நடுநிலை மாறி ஒரு தலை யாகவே, அரசிற்குப் புது உருவம் உண்டாக நேர்ந்தது.

கீழ்நாடுகளில் இருந்த மற்ற அரசியல் முறைகளுக்கு மாறுக, ஹிந்து அரசர்கள் சமயத்தலைமையை உடையன வாக இருக்கவில்லை. இந்தியாவில் மதம் அரசியலை அடக்கி யாளவில்லை. சமய ஸ்தாபனங்களுக்கும் அரசுக்கும் சம்

பந்தம் இல்லை. சமயத்தலைவர்கள் அரசியல் நிர்வாகத்தில் தலையிடவில்லை. ஆளுவோருக்கும் குடிமக்களுக்கும் பொதுவான அறநெறியை அறிவுறுத்தும் அளவிலே சமயத்தின் கொள்கைகள் இருந்தன. இந்த நிலையிருந்தமையால்தான் அரசியலைப் பற்றித் தடையின்றி யாவரும் யோசனை செய்தல் சாத்தியமாயிற்று. முன்னேற்றத்துக்குரிய எண்ணங்கள் தோன்றலாயின. மனிதன் இயல்பாகவே தன்னலங் கருதுபவனுகவும் கெட்டவனுகவும் இருந்தா னென்று ஹிந்து அரசியல்றிஞர்கள் கருதினர்கள். அதிகாரமில்லையானுல் வலியோர் மெலியோரை அழித்து விடுவார்களென்பது அவர்கள் எண்ணம். அவ்வாறு ஒருநிலை ஏற்படாமல் பாதுகாப்பதற்கு அதிகாரமும் தண்டனையும் இன்றியமையாதனவாயின. ஆதலால் மனிதனது ஸ்வபாவம் காரணமாக எழுந்த அவசியத்தால் பூர்விக அரசு தோன்றியது.

ஹிந்துக்களின் அரசியல் அதிகாரத்துக்கு ஒரு ஸ்வரூபமாக மன்னன் இருந்தான். ஆயினும் அம்மன்னன் தனி மனிதனென்ற முறையில் கட்டுப்பாட்டுக்கும் தண்டனைக்கும் உட்பட்டவன். யதேச்சாதிகாரத்தைத் தீவிரமாக எதிர்க்க வேண்டு மென்பதை ஹிந்து அறிஞர்கள் ஆதரித்தார்கள். கட்டுப்பாடற்ற கோலாட்சியைக் காட்டிலும் வரையறுக்கப்பட்ட கோலாட்சியே சிறப்புடைய தென்பது அவர்கள் கருத்து. மிகையைத் தடை செய்வது, நடுநிலைமை வகிப்பது இவற்றை அவர்கள் ஆதரித்து வந்தார்கள். பல ஹிந்து ஆசிரியர்கள் ஜனநாயக ஸ்தாபனங்களையும் பொதுஜன ஆதரவு பெற்ற ஸபைகளையும் சிறப்பித்தார்கள். சகோதரத்துவம், சமத்துவம் என்னும் லக்ஷியங்களைக் குறித்துப் பலமுறை அவர்கள் எழுதியிருக்கிறார்கள்.

ஹிந்துக்களின் அரசியற் கோள்கை

கீழ்நாட்டுப் பேரரசுகளுக்குக் கடல் ஒரு தடையாகவும் இடையூருகவும் இருந்தாலும் கிரேக்கர்களுக்கு அது ஒரு பலமாக இருந்தது. ஏஜியன் கடலிலுள்ள பலவகைத் தீவுகளில் இருந்த வெவ்வேறு வகையான ஜனங்கள் தமக்குள் கலந்து ஒன்றுபட்டார்கள்.

அங்கே ஒதுக்குப்புறமான பள்ளத் தாக்குகளில் கிராமங்களின் தொகுதிகள் நகரங்களாக ஒன்றுபட்டன. ஆனல் அத்தொகுதிகளே இயற்கை யமைப்பிலுள்ள தடைகள் தனித்தனியே வைத்தமையின் ஒவ்வொன்றும் தனித்தனியாக, கடற்கரையைச் சார்ந்த நகர அரசு என்னும் சுதந்திர அரசிய லமைப்பாக வளர்ந்தன. நகரத்தின் சிறிய உருவமும், அங்கே தீவிரமாக மாறிவந்த வாழ்க்கையும் ஜனநாயக அரசாங்கத் தோற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் அநுகூலமான நிலைமையை உண்டாக்கின. இந்த வளர்ச்சி நகரத்திற்கு நகரம் வேறுபட்டது. முடிவான அரசாங்கத்தின் உருவமும் அப்படியே வேறுபட்டது. பொதுவாக அரிஸ்டாட்டில் கூறியபடி கோனுட்சி, சில்லோராட்சி, குடியாட்சி, கொடுங்கோன்மை என்னும் நீதியிலேதான் அந்த வளர்ச்சி இருந்தது.

3. கிரேக்கரின் நகர அரசு

மாஸிடோனிய ரோம அரசுகளால் கிரேக்க நகர அரசுகளே ஒன்றுபடுத்த முடிந்தது. ஆனல் ஜனநாயகம் போயிற்று. கிரீஸைக் காட்டிலும் இத்தாலியில் நில அமைப்பில் உள்ள இயற்கைத் தடைகள் குறைவு. அதனல்தான் ரோமாபுரியில் ஒன்றுபடுத்துவது சுலபமாயிற்று. அவ்வரசிற்கு உண்டான வெற்றிகளும் இராஜ்ய விரிவும் ஏகாதிபத்தியப் பிரச்னைகளைத் தெளிவுறுத்துவதற்கு அதிகத் தகுதியான ஒருவகை அரசை வளர்ச்சி பெறத் தூண்டின. அரசனே வணங்குதல் தேச பக்திக்கு ஓர் அடையாளமாயிற்று. அதிகாரத்தை ஒருமுகப் படுத்துதல், ஒரே மாதிரியான சட்டம், மத்திய ஸ்தாபனம் ஆகிய இவைகளெல்லாம் பரந்துள்ள ரோம ராஜ்யத்தை ஒருசேரச் சேர்ப்பதற்கும் அதில் சமாதானம் நிலவச் செய்வதற்கும் அவசியமாக இருந்தன. இக்காலத்துச் சட்ட முறைகளும், குடியேற்ற நாடுகளின் நிர்வாகமும் ரோமர்களின் முறைகளே அடிப்படையாகக் கொண்டன. ரோமர்களின் லக்ஷ்யமாகிய உலக ஒற்றுமை யென்பது அதற்கு இனமாகிய ஸர்வ தேசச் சட்ட வளர்ச்சி, அகில லோக ஸ்தாபனத்திற்குரிய முயற்சிகள் என்பவற்றையும் உள்ளடக்கி நிற்கிறது.

4. ரோமரின் உலக ஸாம்ராஜ்யம்

அந்த முறையில் இயல்பான குறைபாடுகள் சில இருந்தன. ஏகாதிபத்தியத்தையும், மத்திய அதிகாரத்தையும் வற்புறுத்தியதனால் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரும் விஷயத்தில் ஒரு சிக்கல் ஏற்பட்டது. அதை ரோமர்களால் விடுக்க முடியவில்லை. தனி மனிதனது சுதந்தரத்தையோ, ஸ்தல சுய ஆட்சியையோ வளர்ப்பதற்குரிய ஸ்தாபனங்களை அது உண்டாக்கவில்லை.

5. பாலையப்பட்டு ஆட்சி

'பாலையப்பட்டு ஆட்சி அல்லது உம்பளிக்கை ஆட்சியை ஓர் அரசு என்று சொல்வது தக்கதா?' என்பதே ஐயத்துக் கிடமானது. ஐரோப்பாவானது பலவேறு துண்டுகளாகப் பிரிக்கப்பட்டது. அவற்றில் ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட சட்டமின்றித் தாம் கண்டதே வழக்காக இருந்தன. ஒழுங்கின்மையும் அராஜகமும் நிலவின. சட்டத்திற்கும் அதிகாரத்திற்கும் முரண்பாடு உண்டாயிற்று. ஜனசமூகம் முழுவதையும் பூரணமாக அடிமைப்படுத்தினர். ஒற்றுமையோ சுதந்திரமோ சாத்தியமானதாகத் தோற்றவில்லை. இந்த மத்திய காலங்களில் தன்னுடைய ஒற்றுமை குலையாமல் இருந்தது ரோமன் கத்தோலிக்கச் சர்ச்சு ஒன்றுதான். அது ஏகாதிபத்திய அமைப்பு முறையைத் தழுவி அமைந்தது; அதிகார அமுலை ஆதரித்தது; தனி மனிதனுக்குச் சுதந்திரம் அவசியமென்ற டியூட்டன்களின் கொள்கைகளையும், அரசனுக்குரிய உரிமைகளை வற்புறுத்தும் ரோமர்களின் கொள்கையையும் மறவாமல் இருந்த பாலையப்பட்டு ஆட்சிக் காலத்தில் அவ்விரண்டும் இணைந்து இக்காலத்து ஜனநாயக அரசுக் கொள்கை எழுவதற்கு ஆதாரமாயின.

6. தேசீய அரசு

இத்தகைய சிக்கலான நிலையிலிருந்து நாளடைவில் ஒரு புதிய அரசியல் வாழ்க்கை தோற்றியது. வியாபாரம் தளிர்த்தது. வியாபார வகுப்பினர் தலையெடுத்து விருத்தியாயினர். அவர்கள் நிலவுரிமையாளர்களாகிய பெருஞ் செல்வர்களின் ஆதரவைப் பெற்ற பாலையப்பட்டு ஆட்சியை எதிர்த்தார்கள். சமய ஸ்தாபனங்களுக்குள்ளே புதிய சீர்திருத்த யோசனைகள்

கிளம்பவே அங்கிருந்த ஒற்றுமை குலையத் தொடங்கியது. இயற்கையமைப்பிலுள்ள எல்லைகளால் வலிபெற்ற தேசிய ஜாதிப்பற்றுக் காரணமாகச் சிறிய சிறிய பாளையப்பட்டுக்கள் இணைந்து பின்னும் ஸ்திரமான பகுதிகளாயின. பிரான்சு, ஸ்பெயின், இங்கிலாந்து, ஸ்விட்ஜர்லாந்து, நெதர்லாந்துகள், ருஷியா, பிற்காலத்து ஜர்மனி, இத்தாலி இவைகளெல்லாம் தேசிய அரசுகளாக வளர்ந்தன.

இப்படித் தனித்தனியான அரசுகள் ஏற்படவே, பொதுத் தலைமை வேண்டுமென்ற எண்ணம் மாறியது. அதுகாறும் தனித்தனியாக இருந்த பாளையக்காரர்களின் அதிகாரம் அழிந்தது. சர்வதேசச் சட்டப்படி அரசுகளுக்குள் சமத்துவம் இருக்கவேண்டுமென்ற கொள்கை எழுந்தது.

மத்திய அதிகாரத்திற்குப் பெரிய விரோதிகளாக இருந்தவர்கள் பாளையக்காரர்களே. அவர்களுக்கு விரோதமாக அரசர்களும் ஜனங்களும் ஒன்று சேர்ந்தனர். தேசிய அரசானது நிர்ணயமற்ற கோளுட்சியாகப் பரிணமித்தது. அதற்குத் தனியே படையும், வரி விதிக்கும் திட்டமும் ஏற்பட்டன. பழைய பாளையப்பட்டு ஆட்சியின் வரிகள் போயின.

7. இக்காலத்து ஜனநாயக அரசு

பாளையப்பட்டு ஆட்சிக் காலத்தில் இருந்த பிரிவுகளைப் போலன்றி வேறுபட்ட பிரிவுகள் உண்டாயின; ஜனத் தொகுதி தனித்தனி ராஜ்யங்களாகப் பிரிந்தது. அவற்றினிடையே ஒரே மாதிரியான நோக்கங்களும், ஒரேமாதிரியான நலங்களும் இருந்தன. புதிய கைத்தொழில் வகுப்பினர் புதிய நோக்கம் உடையராயினர். பழங்காலத்துக் குடியானவர்களின் நோக்கத்திற்கு அது வேறுபட்டது. ஜனத் தொகுதியினர் அடிமைத் தளையினின்றும் விடுபட்டுச் செல்வ விருத்தியும் அறிவு வளர்ச்சியும் அடைய அடைய அதிகமான அரசியலுரிமைகளையும் சலுகைகளையும் விரும்பினர். பிரதிநிதித்துவ சபைகள் மேன் மேலும் விரிந்த அஸ்திவாரத்தோடு வளரத் தொடங்கின. இதனல் கட்டுப்பாடில்லாத கோளுட்சியி லிருந்து நாளடைவில் வரையறையுள்ள கோளுட்சி அல்லது ஜனநாயகம் உண்டாவது சாத்திய

மர்யிற்று. பொது ஸ்தாபனங்களில் இங்ஙனம் உண்டான மாறுதல்களின் காரணமாகத் தனி மனிதல் உரிமைக்கும் அரசாங்க அதிகாரத்திற்கும் போராட்டம் நேர்ந்தது. இந்தப் போராட்டம் வரவர வளர்ந்தது, அமெரிக்காக் கண்டத்தைக் கண்டுபிடித்து அதில் மக்கள் குடியேறியவுடன் அரசியல் விஷயமாகப் புது முறைகளைப் பரிசீலனை செய்யும் சந்தர்ப்பம் வாய்த்தது. அதனால் அரசு எந்த அளவு வரையில் தன் காரியங்களை நடத்தலாம் என்ற விஷயமாக முடிவற்ற விவாதம் எழுந்தது.

நவீன ஜனநாயக அரசையே எல்லாவற்றிலும் மிக முன்னேற்ற மடைந்த அரசியலமைப்பாகக் கருதுவர். ஸ்தல சுயாட்சியும், தேசீயப் பிரதிநிதித்துவமும் சேர்வதனால் சுதந்திரமும் ஆட்சியதிகாரமும் ஒன்றுக்கொன்று சரிப்படுத்திக் கொள்ள ஹேது உண்டாயிற்று; இதனால் தனி மனிதனது நலமும் சமூகத்தின் நலமும் ஒருங்கே கவனிக்கப் பெறுகின்றன. தனி மனிதனுக்கும், அரசுக்கும், அதற்கு உட்பட்ட சங்கங்களுக்கும் இடையே எத்தகைய உறவுகள் இருக்க வேண்டுமென்பது சம்பந்தமான பல சிக்கல்கள் இன்னும் தீராமல் இருக்கின்றன. ஜனநாயகத்தைப் பலி கொடுத்தாவது நிறமையுள்ள அரசாங்கத்தை ஸ்தாபிப்பதற்குச் சர்வாதிகாரம் அவசியம் என்ற கொள்கை ஒரு பக்கம் நிலவுகிறது. அதற்கு நேர்மாறாக மற்றொரு பக்கம், அரசாங்கத்தின் பொருள் நிலை தொழிலாளர் நிர்வாகத்தின்கீழ் இருக்க வேண்டுமென்ற கொள்கை இருக்கிறது. இத்தாலியும் ஜர்மனியும் முதல் வகையை மேற்கொண்டு நடத்தி வருகின்றன. ருஷியா இரண்டாவது வகையில் நடந்து வருகின்றது. ஓர் அரசுக்கும் மற்றோர் அரசுக்கும் இடையே உள்ள உறவு இன்னும் திருப்தியற்றதாகவே இருக்கிறது.

8. குடியேற்ற ஸாம்ராஜ்யம்

இக்கால ஐரோப்பாவிலுள்ள நாடுகள் இன ஒற்றுமை, இயற்கை எல்லைகள் என்பவற்றை அதிகமாக வற்புறுத்து கின்றனவாயினும் அதற்கு மாறாகக் கடல் கடந்த தேசங்களைக்கொண்ட ஸாம்ராஜ்யம் வேண்டுமென்ற ஆசை இருந்துகொண்டுதான்

இருக்கிறது. அநேகமாக ஆப்பிரிக்காக் கண்டம் முழுவதும் தனக்கே உரியதென்று ஐரோப்பிய வல்லரசுகளில் ஏதேனும் ஒன்று சொல்லிக்கொண்டுதான் இருக்கிறது. நாடு பிடிக்கும் சண்டையில் குடியேற்ற நாடுகளுக்காக ஏற்படும் போட்டி முக்கியமானதாக இருக்கிறது. தமக்கு உட்பட்ட ஜன சமூகங்களை வல்லரசுகள் அடிமைப்படுத்துவது ஜன நாயகக் கொள்கைக்கும், ஜனங்களின் சுய நிர்ணய உரிமைக்கும் முரண்பட்டது. இது ஒருபுறம் இருக்க, மற்றொரு புறம் இந்த ஸாம்ராஜ்யக் கொள்கையை ஆதரிப்போர், 'பொருளாதார நிலை விஷயத்தில் இக்காலத்தில் ஒருவர்க் கொருவர் உள்ள சம்பந்தம் அதிகமாக இருக்கிறது. அதனல் ஸாம்ராஜ்ய உறவினுல் ஆளப்படும் ஜனங்களும் ஆள்வோரும் ஒருங்கே நன்மை அடைகின்றனர்' என்று கூறுகின்றனர்.

நவீன வளர்ச்சிகள்

சென்ற மகா யுத்தத்தின் பிறகு ஐரோப்பிய வல்லரசுகளுக்கும் அவைகளை ஓரளவு எதிர்பார்த்து நிற்கும் கடல் கடந்த ஜனத் தொகுதியினருக்கும் இடையே உள்ள உறவில் இரண்டு முக்கியமான விஷயங்கள் ஏற்பட்டன.

பிரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்தைச் சார்ந்த ஒவ்வொரு குடியேற்ற நாடும் தாய் நாட்டுக்கு அடங்கியது; பல திறங்களில் சுயாதீனம் பெற்ற பல நாடுகளின் சமஷ்டிக்கு அடங்கியது; ஆயினும் அவை அனைத்தும் பொது உறவினுல் பிணைக்கப்பட்டவை. இத்தகைய சம்பந்தத்தையுடைய பேரரசே பிரிட்டிஷ் காமன்வெல்த் ஆகும். 1918-இல் மகாயுத்தம் முடிந்தபோது ஜர்மனியும் அதைச் சார்ந்த நாடுகளும் சில குடியேற்ற நாடுகளை இழந்தன. அவற்றைக் கைப்பற்றிக் கொண்ட வல்லரசுகள் சர்வ தேச சங்கத்தின் பாதுகாப்புப் பலத்தைக் கொண்டு அவைகளை ஈடாகச் செய்துகொண்டன. இவ்வகையான ஈட்டு ஒப்பந்தமானது சுய நிர்ணயம், ஜனநாயகம் என்னும் லக்ஷியங்களுக்கும், விரிந்த நாடுகள் வேண்டுமென்ற தேவைக்கும் சச்சரவு நேராமல் காக்க முயன்றது.

தேசியப் பற்றும், சர்வ தேசிய நோக்கமும் ஒன்றை

ஒன்று எதிர்ப்பதாகத் தோற்றினும் அவை இரண்டும் நிகழ் கால உலகத்தில் மிகவும் வலியுள்ள கொள்கைகளாக உள்ளன. உண்மையில் அவை, தேசங்களைத் தன் அங்கமாகக் கொண்டதும் உலக முழுவதையும் ஒன்றுபடுத்தி நிற்பதுமாகிய ஐக்கியத்தை நிலைநிறுத்தப் பாடுபடும் ஒரே இயக்கத்தின் இரு பக்கங்களாக இருக்கலாம்.

அத்தியாயம் 3

தற்கால அரசின் சிறப்பியல்புகள்

ஒரு நாட்டில் உள்ள மக்கள் பல வேறுவகையான சங்கங்கள் அமைத்துக்கொண்டிருக்கின்றனர். அத்தகைய சங்கங்களெல்லாவற்றுக்கும் மேல் ஆணை செலுத்தும் சக்தி அரசுக்கு உண்டு. அரசுக்கும் மற்ற ஸ்தாபனங்களுக்கும் பல வேறுபாடுகள் உள்ளன. ஓர் அரசில் இருப்பவர்கள் அதை விட்டு விலகுவதும், தங்கள் கடமையைச் செய்யாமல் இருப்பதும் அவர்களுடைய விருப்பத்தைப் பொறுத்தவை அல்ல. மற்ற ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்களுக்குத் தம் இஷ்டம்போல் நடக்கும் உரிமை உண்டு. மதஸ்தாபனங்களும் தொழிற் சங்கங்களும் யாவராயினும் உலகத்தில் எப்பகுதியில் வசிப்பவராயினும் அவரை அங்கத்தினராகக் கொள்ளலாம். அரசின் அதிகாரமோ அதற்கென்று அமைந்த எல்லைகளுக்கு உட்பட்டது. ஒரு மனிதன் ஒரே சமயத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட அரசுகளைச் சார்ந்தவனாக இருக்க முடியாது. அரசின் அதிகாரம் ஆழ்ந்து பரந்தது. அது ஒவ்வொரு மனிதனையும் தனித்தனியே தன் அதிகாரத்துக்கு உட்படுத்துவது; தனக்குள் அடங்கிய எல்லா ஸ்தாபனங்களையும் ஒருவகைப்படுத்தி அவைகளின்மேல் பேரதிகாரம் வகிக்கும் இயல்பையுடையது. ஆதலின் அது வரம்பற்ற அதிகாரத்தோடு நிகழ்வது.

அரசுக்கும் மற்றச் சங்கங்களுக்கும் உள்ள வேறுபாடு

அரசினுல் பல திறப்பட்ட கூட்டு வேலைகள் செய்ய முடியும். ஜன சமூகத்திலுள்ள மற்ற உறுப்புக்களின் குறைகளை அதனுல் நீக்கவும் இயலும். ஜன சமூகத்தைக் காப்பதோடு, குடிகளின் செல்வ வளர்ச்சியையும் அரசு கவனிக்கிறது. அரசுக்குரிய செயல்களெல்லாம் தக்கவண்ணம் நிறைவேறி வந்தால், ஒவ்வொரு பிரஜையும் கூடுமான வரையில் அபிவிருத்தியை அடைய முடியும்.

ஓர் அரசுக்கு நான்கு சிறப்பு இயல்புகள் உள்ளன. அவையாவன :—(1) ஜனத் தொகுதி, (2) தேசம், (3) அரசாங்கம், (4) சர்வாதிகாரம் அல்லது ஆண்ண என்பவை. ஜனத்தொகையென்பது அரசுக்கு இன்றியமையாத உறுப்புக்களுள் ஒன்று. மக்கள் இல்லாத பிரதேசத்தில் அரசு ஏற்படாது. ஆனுல் எவ்வளவு ஜனத்தொகை ஓர் அரசுக்கு வேண்டுமென்ற வரையறை இல்லை. குடும்பத்தைவிட ஓர் அரசில் அதிக ஜனங்கள் இருக்கவேண்டும். ஆள்வோர், ஆளப்படுவோர் என்ற சம்பந்தம் அமைவதற்குப் போதுமான ஜனத்தொகை இருப்பது அவசியம். ஓர் அரசின் சிறப்பு அதன் ஜனத்தொகையையும், ஜனங்களின் தரத்தையும், அவர்கள் எங்கே கூடி வசித்து வருகிறார்களென்பதையும் பொறுத்திருக்கும். நாட்டில் ஜனன மரண விகிதமும், குடியேற்றமும் ஜனத்தொகையின் கூடுதலுக்கும் குறைவுக்கும் காரணமாகின்றன. போர்செய்து பிற நாடுகளை வெலவும் மனப்பான்மை கொண்ட அரசுகள், வருஷந்தோறும் ஜனத்தொகை பெருகி வரவேண்டுமென்று விரும்புகின்றன.

1. ஜனத்தொகுதி

தேசமும் அரசுக்கு மிகவும் அவசியமானதே. பூமியில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் குறிப்பிட்ட எல்லைகளுக்குள் ஓர் அரசின் பிரஜைகள் வசித்து வரவேண்டும். வேறு அரசைச் சார்ந்த எல்லைகளிலிருந்து தனியே பிரிக்கப்பட்ட எல்லைகள் அதற்கு இருக்கவேண்டும். சமுத்திரத்தில் அரசு ஏற்படுவதில்லை. பூமியிலுங்கூட ஒரு குறிப்பிட்ட இடத்தில் வசிக்காமல் திரிந்துகொண்டிருக்கும் நாடோடிகள், குடுகுடுப்பாண்டிகள் முதலியவர்களையுடைய

2. தேசம்

மனிதர் கூட்டம் அரசு ஆகாது. அத்தகைய கூட்டங்களுக்கு அரசின் லக்ஷணங்கள் இல்லை; பிற அரசுகள் அவற்றை அரசாக அங்கீகரிப்பதும் இல்லை. இங்ஙனம் ஒரு நிலப்பகுதிக்கும் அரசுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதனாலேயே அரசுகளுக்குத் தேசத்தின் பெயரையே இட்டு வழங்குகின்றனர்.

இக்கால அரசுகள் பலவகைப்பட்டன. விஸ்தீரணத்தில் சில சதுரமைல் முதல் பல் லக்ஷம் சதுர மைல் வரையில் பரவிச் சிறியனவும் பெரியனவுமாகப் பலதரங்கள் படைத்தவைகளா யிருக்கின்றன. பெரியதை அடுத்துச் சிறியது இருத்தலும் உண்டு. மிகப் பண்டைக் காலத்திலும் இடைக் காலத்திலும் இவ்வாறே பெரிய தேசிய அரசுகளுக்கும் சாம்ராஜ்யங்களுக்கும் அருகே சின்னஞ்சிறு நகர அரசுகளும் ஏற்பட்டிருந்தன.

முன்னாளில் இந்தியாவில் பஞ்சநதி நீரத்திலும் கங்கையமுனைச் சமவெளியிலுந்தான் அரசுகள் நிலைபெற்றுச் செழித்தோங்கின. மத்திய இந்தியாவைப் போன்ற மலைப்பிரதேசங்களிலும் காடுகளிலும் குடிகள் பழைய நிலைமையிலேயே இருந்து வருகிறார்கள்.

ருஷியா தேசம் ஒரு பரந்த சமவெளி யாகையால் சீன தேசத்தைப்போல அதன் அரசு ஒரு சாம்ராஜ்யமாகவே இருந்து வந்திருக்கிறது. ஸ்விட்ஜர்லாந்து, ஹாலந்து, நார்வே, ஸ்பெயின், இத்தாலிபோன்ற தேசங்கள் இயற்கையாகவே குறுகிய எல்லைக்குள் அமைந்து விட்டமையால் சிறிய தேசிய அரசுகளாகவே இருந்து வருகின்றன.

இவற்றால் அரசின் விரிந்த அளவும் குறுகிய அளவும் இயற்கை யமைப்பை ஒட்டியே அமைதல் விளங்கும்.

அரசுக்கு மூன்றாவது முக்கிய லக்ஷணம் அதன் அமைப்பாகும். அரசியல் அமைப்புக்கு அரசாங்கம், துரைத்தனம் என்று தமிழிலும், 'கவர்ன்மெண்டு' என்று ஆங்கிலத்திலும் பெயர் வழங்கும். அரசாங்கத்திற்கு ஒரு குறிப்பிட்ட உருவம் வேண்டியதில்லை. ஆனால் அதன் ஆணைக்கு மற்றவர்கள் அடங்கி நடக்கும் நிலைமையில் அது அமைக்கப் பெற்றிருக்கவேண்டும். உள்நாட்

3. அரசாங்கம்

டில் அமைதியை நிலை நிறுத்தவும், அரசுக்கு உரியவை என்று பொதுவாகப் கூறப்பெறும் ஊழியங்களைக் குடி மக்களுக்குச் செய்துவரவும், சர்வதேசச் சட்டப்படியும் சம்பிரதாயப்படியும் மற்ற நாட்டு அரசுகளுடன் உறவு கொண்டாடவும் ஓர் அரசால் ஏற்படுத்தப்பெற்ற ஸ்தாபனமே அரசாங்கம் என்பது. அரசாங்கத்திற்குரிய அதிகாரம் அனைத்தும் அரசினிடமிருந்து கிடைத்ததே. அரசின் அதிகாரத்தை வகித்து நடத்தும் ஒருவரோ சிலரோ அரசாங்கத்தின் உருவமாக இருப்பார்கள். அரசாங்கம் என்ற சொல் அதிகாரப் பதவியில் இருப்போர்களைக் குறித்து வழங்குகிறது. எனவே அரசு என்பது பொது மக்களின் மனத்தால் உணரப்படும் அரூபமான ஒன்று ; அரசாங்கமோ ஓர் உருவமுள்ளது. சந்தர்ப்பத்திற்கேற்றபடியோ, புரட்சியின் பயனாகவோ ஓர் அரசாங்கத்தின் தன்மை மாறலாம் ; அரசாங்கமாக இருந்து அதிகாரம் வகிப்போர் மற்றவர்களால் நீக்கப்பெறலாம். ஆனால் அரசாங்கம் மாறினாலும் அரசு மாத்திரம் முன்போலவே நிலையாக நடைபெறும் ; அரசின் நிலையில் மாறுதல் ஏற்படுவதில்லை.

சர்வாதிகாரம்

நான்காவதாக அரசுக்கு அமையவேண்டுவது சர்வாதிகாரம் ; தனியாணை யென்றும் சொல்லலாம். மற்றச் சங்கங்களுக்கும் அரசுக்கும் உள்ள முக்கியமான வித்தியாசத்தை இதனால் உணர்ந்து கொள்ளலாம். சமூக ஒழுக்க விதிகளை நிறுவி அவைகளை நிறைவேற்றவும், தன் எல்லைக்குள் வசிக்கும் எல்லா மக்களின் செயல்களுக்கும் வழிகாட்டிக் கண்காணித்து வரவும் அரசுக்கு அதிகாரம் உண்டு. வெளிநாட்டு அரசுகள் சம்பந்தமாக எத்தகைய ஆதிக்கத்திற்கும் உட்படாமல் சுயேச்சை கொண்டிருப்பதே ஓர் அரசின் சர்வாதிகாரத் தன்மைக்குப் பயன். இந்த இலக்கணத்தின்படி பார்த்தால் இந்தியாவிலுள்ள மைசூர், ஹைதராபாத் முதலிய சுதேச ஸம்ஸ்தானங்களை அரசு என்று சொல்வது பொருந்தாது. அந்த ஸம்ஸ்தானங்களை ஆளும் மன்னர்களுக்கு அவரவர் உள்நாட்டு விஷயங்களில் பூர்ண அதிகாரம் இருந்தாலும், வெளிநாடுகளுடன் உடன்படிக்கைகள் செய்து கொள்ளவோ சட்டங்கள் இயற்

றவோ உரிமை இல்லை; அத்தகைய செயலுக்கு வைசிராயின் சம்மதம் வேண்டும். ஆதலின் ஜனத்தொகுதி, தேசம், அரசாங்கம் என்ற மூன்று லக்ஷணங்கள் அவைகளுக்கு அமைந்திருந்தும், சர்வாதிகாரம் என்ற நான்காவது லக்ஷணம் இன்மைபற்றி அவை அரசு என்று வழங்குதற்குரிய தகுதியைப் பெறவில்லை.

இவற்றைக்கொண்டு அரசு எத்தகைய தென்பதைச் சுருங்கச் சொன்னால், 'பிறரை அடக்கிச் சில விதிகளுக்குக் கீழ்ப்படியும்படி செய்யவும், சண்டை சமாதானம் என்பவற்றைத் தீர்மானம் செய்யவும், பிறநாடுகளுடன் உறவு கொள்ளவும் அதிகாரம் படைத்து, அரசாங்கத்தின் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு, ஒரு தனிப்பட்ட தேசத்தில் வசித்துவரும் மக்கட் கூட்டமே அரசு ஆகும்' என்னலாம்.

சமூகம், அரசு, அரசாங்கம், தேசம், தேசியம், ஜாதி முதலிய பதங்கள் இக்காலத்துப் பத்திரிகைகளிலும் புத்தகங்களிலும் அரசியல்வாதிகள் பேச்சிலும் ஒன்றுக்கொன்று வித்தியாசமின்றி வழங்குகின்றன. ஆனால் அப்பதங்களில் ஒவ்வொன்றும் அரசியல் நூலில் ஒவ்வோர் அடிப்படையான் விஷயத்தையே குறிக்கின்றது. ஆதலின் அந்தச் சொற்களின் பொருளை ஆழ்ந்து ஆராய்ந்து அவற்றின் கருத்தைத் தெரிந்து கொள்ளுதல் அவசியமாகும்.

சமூகம் அல்லது சமுதாய மென்பது ஜனத்தொகுதியைக் குறிக்கும். அரசு என்பதனாற் பெறப்படும் பொருளைக் காட்டிலும் அதன் பொருள் விரிந்தது. ஜன சமூக மென்பது மக்கள் அரசியல் சம்பந்தமாக இணைந்து வாழும் கூட்டமென்பதை மாத்திரம் குறிப்பதன்று; மதம், குடும்பம், கைத்தொழில், கல்வி முதலிய வாழ்க்கைக்கு இன்றியமையாத விஷயங்களில் அவர்களுக்குள்ள சம்பந்தங்களும் அவர்களின் கூட்டுறவினால் விளையுஞ் செயல்களும் அடங்கும்.

சமூகமென்னும் சொல்

அரசு ஜனசமூகத்தை ஒன்றுபடுத்துகிறது. அரசின் ஆதரவு இல்லையேல் ஜனசமூகம் நிலைபெறாது. ஜனசமூகத்தை அநேக பலகைகளைக் கொண்டு இணைக்கப்பெற்ற மரப் பீப்

பாய்க்கும், அரசை அப்பலகைகள் ஒன்றோடொன்று இணைந்து நிற்கச் செய்யும் பொருட்டுச் சுற்றிக் கட்டியுள்ள இரும்புப் பட்டத்திற்கும் ஒப்பிடலாமென்று ஓர் ஆசிரியர் கூறியுள்ளார்.

அரசாங்கமென்னும் பேயர்

அரசாங்கம், சர்க்கார், துரைத்தனம என்று சொல்லப் படுவது அரசு என்பதைவிட்க் குறுகியது. அரசியல் அதிகாரங்களை ஒரு குறிப்பிட்ட காலத்தில் வகித்து வரும் ஒரு மனிதனையோ அல்லது சில மனிதர்களையோ குறித்து வழங்குவது அரசாங்கமென்னும் பெயர். ஒரு நாட்டில் வாழும் மக்கள் யாவரும் அந்நாட்டின் அரசைச் சார்ந்தவர்கள். ஆனால் அவர்கள் எல்லோரும் அரசாங்கத்தைச் சார்ந்தவர்களாக இருக்க முடியாது. மேலும், அரசு ஒரு பிரதேசத்தைக் குறிக்கும்; அரசாங்கமென்பதோ ஒரு மனிதத் தொகுதியைத்தான் குறிக்கும்.

தேசீய ஜாதி உணர்ச்சி

சாதாரணமாய் ஒரே எல்லைக்குள் வசித்து வருபவராயும், பாஷை மதம் இவைகளில் ஒன்றுபட்டவராயும், ஒரே மாதிரியான பழக்க வழக்கங்களும் குணதிசயங்களும் உள்ளவர்களாயும் இருப்போரது தொகுதியைத் தேசியஜாதி யென்று சொல்வர். வருணத்தையோ வகுப்பையோ குறிக்கும் ஜாதி வேறு; தேசியஜாதி வேறு. ஆங்கிலத்தில் இதனை 'நேஷன்' என்பர். அக் கூட்டத்தாரிடையே தோன்றும் ஐக்கிய உணர்ச்சியைத் தேசீயஜாதி உணர்ச்சி என்று சொல்லலாம். அரசியலினால் பல வகுப்பினர்களுக்குள் ஏற்படும் ஐக்கிய உணர்ச்சிக்கும் இந்த ஜாதி உணர்ச்சிக்கும் சம்பந்தமே இல்லை. அரசியற் கட்டுப்பாட்டினால் தேசீயஜாதி உணர்ச்சி உண்டாவதில்லை. அது மதாபிமானம், தேசப்பற்று முதலிய மனோபாவங்களால் ஏற்படுகின்றது. உதாரணமாக: ஆந்திரமக்கள் இந்தியாவில் பல மாகாணங்களில் சிதறியிருந்தாலும் ஒரே ஜாதியினராவர். நெடுநாளாக ஐக்கியம் பெற்றுள்ள பிரிட்டிஷ் தேசத்தாரில் ஆங்கிலேயர், ஸ்காட்சுக்காரர், வெல்ஷ்காரர் என்ற மூன்று தனி ஜாதியினர் அடங்கியுள்ளனர்.

தேசம்

தேசம் என்பது அரசியல் சம்பந்தமுள்ளது. ஜாதி உணர்ச்சி, அரசின் சம்பந்தம் இவ்விரண்டின் பயனாக உண்டாவது தேசம். ஜாதி உணர்ச்சியால் ஐக்கியம்பெற்ற ஒரு கூட்டத்தார் ஒரு தனிப்பட்ட அரசின்கீழ் வாழ்ந்து வருவாராயின் அவர்கள் ஒரே தேசத்தார் ஆவர். பழமையில் பற்றுக்கொண்டு ஒரே சட்டதிட்டத்தால் ஆளப்பெறும் பலரும் சேர்ந்த கூட்டமே ஒரு தேசமாம்.

ஜாதி அபிமானமும் தேசாபிமானமும்

ஜாதி அபிமானத்திற்கும் தேசாபிமானத்திற்கும் மிக்க வித்தியாசம் உண்டு. சாதாரணமாக ஜாதி அபிமானமானது, 'நாம் கலப்பில்லாத ஜாதியினர்' என்ற பெருமிதமேயாம். இது குறுகிய மனப்பான்மையுள்ளதும் பரந்த அறிவுக்கு விரோதமானதுமாகும். தேசாபிமானமோ அத்தகையதன்று. அது பல ஜாதிகளின் இணைப்பினால் வளர்ந்து வரும் விசால உணர்ச்சியாம். ஒரு ஜாதியைச் சேர்ந்தவர்கள் அநேக தேசங்களில் வசித்து வரலாம். முகம்மதியர்கள் இந்தியா, ஆப்கானிஸ்தானம், எகிப்து முதலிய அரசுகளின்கீழ் இருந்து வருகிறார்கள். தேசம் ஏற்படுவதற்குரிய காரணங்களுள் ஜாதியும் ஒன்றாகும். ஒன்றுபட்ட ஆட்சியும் தேசாபிமானத்தை வளர்க்கும்.

அகில இந்திய தேசீய உணர்ச்சி

இந்தியாவில் பாஷை வித்தியாசம், மதவேற்றுமை, சமூக வேறுபாடுகள் முதலியவை இருந்தாலும் நாட்டின் இயற்கையமைப்பாலும், பரம்பரையாக வந்த பழக்க வழக்கங்களின்பாலுள்ள பற்றாலும் ஒற்றுமை யுணர்ச்சி வளர்ந்து வந்திருக்கிறது. சமீபகாலத்தில் நடைபெற்றுவரும் பொதுவான ஆட்சிமுறையும் இவ்வுணர்ச்சிக்குப் பலம் அளித்திருக்கிறது. உண்மையில், அகில இந்திய தேசீய உணர்ச்சி இப்போது பரவியிருக்கிற தென்பதற்குரிய நிச்சயமான அறிகுறிகள் வெளிப்படையாகவே தெரிகின்றன. பாக்கிஸ்தான், சீக்கிஸ்தான் போன்ற வகுப்புவாத இயக்கங்கள் அரசியற் காரணங்களால் ஏற்பட்டவை. அரசியற் காரணங்களால் ஒரு தேசத்தைத் துண்

டாக்குவது எப்போதும் தேசத்தின் கேட்டுக்கே காரண மாகும். அரசியற் காரணத்தை மாத்திரம் உத்தேசித்து இயற்கையல்லாத பிரிவுகளை உண்டாக்குவதனால் ஒரு தேச மென்ற ஒருமைப்பாடு குலைந்து போகும். இவ்விஷயங்களைச் சரித்திரம் படிப்பவர்கள் உணர்ந்திருப்பார்கள். அயர்லாந்தி லிருந்து அல்ஸ்டரைப் பிரித்ததனால் உண்டான துன்பங்கள் பல. ஐரோப்பிய வல்லரசுகள் போலந்தைப் பங்கு போட்ட தால் ஒரு நன்மையையுங் காணவில்லை; கஷ்டங்களே உண் டாயின.

உண்மையான தேசிய உணர்ச்சிக்கு அழகு, தேசத்தி லுள்ள பல திறப்பட்ட ஜனத் தொகுதிகளையும் ஒன்றுபடும் படி தூண்டுவதுதான். தேசிய உணர்ச்சியின் போக்கு, தேசிய அரசின் கொள்கை இவ்விரண்டின் வளர்ச்சியினால் அரசின் இயல்புகளில் அடிப்படையான மாறுதல்கள் ஏற்பட் டிருக்கின்றன. பொருளாதார நிலை அபிவிருத்தி அடைய வேண்டுமென்ற விருப்பமும், சால்பு முதலியவைகளைப் பாது காத்து விருத்தி செய்யவேண்டுமென்ற ஆர்வமும் முறுக முறுகத் தேசிய உணர்ச்சி பெருகி வரும். அதனால் மக்க ளிடையே ஒன்றுபட்ட எண்ணங்களும் முயற்சிகளும் விகழும்; யாவரும் ஒன்றுபடும் நிலையை இவை உண்டாக்கும்.

இக்கால அரசுகளிற் பெரும்பாலானவை தேசிய அரசு களே. "ஒரு தேசிய ஜாதியார் ஒரு தனியரசாக அமைதலே நியாயம்" என்ற கருத்துத்தான் தேசியக் கொள்கைக்கு அடிப்படையாக உள்ளது. பண்டைக் காலத்தில் உலகில் இந்தக் கொள்கை தோன்றவில்லை. பத்தொன்ப தாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து இத்தகைய கொள்கை தோன்றி வளரலாயிற்று. ஒரு குறிப்பிட்ட ஜனப் பகுதியின் பொது லக்ஷியங்களையும், விருப்பங்களையும் நிறை வேற்றிக்கொள்ள அரசியல் ஒற்றுமை இன்றியமையாத தென்று கருதினர். 'தம் அரசைத் தாமே வகுத்துக்கொள் ளல்' என்பதைக் குறிக்கும் 'சுய நிர்ணய' லக்ஷியத்தின்படி ஒவ்வொரு தேசத்தாரும் தம் கருத்துக்கு இசைந்த அரசாங்

ஒரு தேசிய ஜாதி ஓர் அரசு என்ற கோள்கை

கத்தை ஏற்படுத்திக் கொள்ளும் உரிமை பெறவேண்டு மென்ற கொள்கை நாளடைவில் வலியடைந்திருக்கின்றது. ஆனால் இம்முறையை விரிந்த அளவில் மேற்கொள்வதும் கூடாது. இம்முறையினால் பல சின்னஞ் சிறிய அரசுகளை ஸ்தாபிக்க நேரிடும்; அப்போது சுங்கம், போக்கு வரவு, வியாபாரம் போன்ற விஷயங்களில் அந்த அரசுகளுக்குள் அநாவசியமாகப் பல சிக்கல்கள் நேரவும் கூடும்.

மேலும், வரம்புகடந்த தீவிர தேசிய உணர்ச்சியானது பிறநாட்டோடு பகைகொள்ளும் நிலையில் கொண்டுவந்து விடும் சந்தர்ப்பமும் உண்டு. அரசுகளுக்குள் சண்டையும் போட்டியும் பெருகலாம். இவ்வாறு, மிகையான தேசாபிமானத்தினால் வீண் நஷ்டத்தை உண்டுபண்ணிய பேதைமை முயற்சிகள் பலவற்றைச் சரித்திரத்தினால் அறியலாம். ஆயினும் உண்மையான தேசிய உணர்ச்சி உலக ஒற்றுமைக்கு விரோதமான போக்குடையதன்று. அது உலக ஒற்றுமைக்கு ஒரு முதற்படி என்றே சொல்லவேண்டும். இதனை உட் கொண்டே, "தேசிய உணர்ச்சியானது மனிதனை மனித வர்க்கத்துடன் பிணைத்து இருசாராருக்கும் வலிமை யூட்டுகின்றது" என்று மேதாவிகள் சொல்லுகிறார்கள்.

அத்தியாயம் 4

அரசின் சர்வாதிகாரம்

இனி அரசுக்கும் அதன் பிரஜையாகிய தனி மனிதனுக்கும் உள்ள சம்பந்தத்தை ஆராய்வோம். இத்திறத்தில் நாம் கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயங்கள் இரண்டு. அவை அரசின் சர்வாதிகாரம், தனிமனிதனின் சுதந்திரம் என்பனவாம்.

ஓர் அரசின் சிறப்பியல்பு அதன் சர்வாதிகாரமாகும். இக் காலத்திலுள்ள அரசு சர்வாதிகாரம் படைத்த அரசாகும். ஆதலின் அது மனிதர் கூடிய மற்றச் சங்கங்களைப் போலன்றிப் பூரணமான சுயேச்சை கொண்டது. வேறோர்

அதிகாரியின் இஷ்டத்தினுல் அது பாதிக்கப்படுவதில்லை. அன்றியும் தனக்கு உட்பட்ட பிரதேசத்தின்மேல் அதன் அதிகாரம் ஓங்கி நிற்கின்றது. இந்தப் பேரதிகாரம் பிரிக்க முடியாத வகையில் ஒன்றுபட்டுளது. அதன் பிரதேசத்திலிருக்கும் எல்லாப் பிரஜைகளுக்கும், எல்லாச் சங்கங்களுக்கும் அது கட்டளை யிடுகின்றது. ஆனுல் அவற்றுள் யாதொன்றும் அதற்குக் கட்டளையிட முடியாது. அதன் இஷ்டத்திற்குச் சட்டப்படி யாதொரு தடையும் ஏற்படுவதில்லை. ஆதலின் அரசின் சர்வாதிகாரம் வரம்பற்றதும், மாற்றக்கூடாததுமாகுமென்று புலப்படும்.

சர்வாதிகாரக் கொள்கை

சர்வாதிகாரம் இருவகைப்படுமென்று சிலர் கூறுவர். அவை முறையே சட்டபூர்வமான சர்வாதிகாரம் என்றும் ராஜீய சர்வாதிகாரம் என்றும் சொல்லப்படும். நீதி மன்றங்களால் சட்டமென்று ஏற்கப்பெற்று, நிர்வாக அரசாங்கத்தால் நிறைவேற்றப்பெறும் தகுதிவாய்ந்த கட்டளைகளை இடக்கூடிய அதிகார ஸ்தாபனம் **சட்ட பூர்வமான சர்வாதிகாரம்** படைத்தாகும். சட்டப்படி அது சர்வ வல்லமை வாய்ந்தது. மற்றொரு சர்வாதிகாரமாகிய **ராஜீய சர்வாதிகாரம்** அல்லது அரசியல் சர்வாதிகாரமென்பது ஒரு தேசத்துப் பொது மக்களிடத்திலோ, வாக்குரிமை பெற்ற தொகுதியினரிடத்திலோ மறைவாக வியாபித்திருக்கிறது. இவர்கள் அரசியல் விஷயங்களில் தங்கள் விருப்பத்திற்கேற்க நடக்கும் வண்ணம் சட்டப்படி ஏற்பட்ட சர்வாதிகாரிக்குக் கட்டளையிடலாம். ஆகையால் இதைச் சிலர் 'ஜனசம்மதம் பெற்ற சர்வாதிகாரம்' என்றும் கூறுவதுண்டு.

சர்வாதிகார வகை

பிரிட்டனில் பார்லிமெண்டுதான் எல்லாவற்றிற்கும் மேல் நின்று சட்டம் இயற்றும் ஸ்தாபனம். ஆனுல் பொதுத் தேர்தல் ஒன்றில் வாக்காளர்கள் பெரும்பான்மை அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்துச் சட்ட சபைக்கு அனுப்பி அவர்கள் மூலமாக முன் இருந்த பார்லிமெண்டின் சட்டங்களை மாற்றி அமைக்கும்படி செய்யலாம். தங்கள் விருப்

பப்படி சட்டங்களை ஏற்படுத்தும் இத்தகைய நிச்சயமான வழி பொது மக்கள் கையில் இருக்கிறது. இவ்வகையில் பொதுமக்களின் அதிகாரம் பார்லிமெண்டையும் கட்டுப் படுத்துகிறது. ஆகையால் ஒரு விதத்தில், சட்டப்படி ஏற் படுத்தப்பட்ட சர்வாதிகாரி அரசியல் சர்வாதிகாரம் வகிக்கும் வாக்காளர்களால் நியமனம் செய்யப்படக் கூடியவரே ஆவர்.

ஜன சம்மதத்தை அடிப்படையாகக் கொண்டோ, பலாத்காரத்தைத் துணையாகப் பெற்றோ, இவ்விரண்டின் சார்பையும் அடைந்தோ, சர்வாதிகாரமானது உலகிலுள்ள அரசுகளில் நிலவி வருகின்றது. பணிந்து நடக்க வேண்டு மென்ற கட்டாயத்தினாலோ, பணிந்து நடப்பதால் நன்மை உண்டென்ற நம்பிக்கையினாலோ ஜனங்கள் அரசுக்குப் பணிந்தொழுகுகின்றனர். ஜனநாயக ஆட்சியில், அரசுக்குப் பணிந்து நடப்பதால் உண்டாகும் அநுகூலங்களை ஜனங்க ளெல்லாம் நன்கு அறிந்திருக்கிறார்கள். இதனால் அடங்காப் பிடாரிகளான சிலரை அடக்கும் அளவில் மாத்திரமே பலப் பிரயோகம் வேண்டியிருக்கிறது. கொடுங்கோலரசிலோ குடிகள் பயமொன்றினாலேயே அரசுக்குப் பணிந்து கிடக் கின்றனர்.

சட்டப்படி ஏற்பட்டுள்ள சர்வாதிகாரிக்கும் அரசியல் சர்வாதிகாரம் வகிப்பவர்களுக்கும் இடையே உள்ள உறவு நன்கு அமைந்திருந்தால் ஆட்சியும் நல்ல ஆட்சியாக இருக் கும். அரசியல் சர்வாதிகாரி நேரடியாகக் காரியங்கள் செய் தல் கூடாது. அவருடைய இஷ்டம் சட்டப்படி ஏற்படுத்தப் பெற்ற சர்வாதிகாரியின் கட்டளைகள் மூலமாகவே வெளி யாக வேண்டும்; பொதுஜனங்களுக்குத் திருப்திகரமான முறையில் சட்டங்கள் அமைய வேண்டும்.

மேற்கூறிய ஒருதலைப்பட்ட சர்வாதிகாரக் கொள்கை யைப் பல காரணங்களால் எதிர்ப்பவர் பலர். "ஜனங்கள் ஒன்றுகூடி அமைத்திருக்கும் மதஸ்தாபனம், தொழிற் சங்கம் முதலிய சமூகக் குழுக்களும், பொருளாதார சம்பந்தமான சங்கங்களும் அரசைப்போன்றே முக்கியமானவை. அவை அரசுக்குச் சமானமாகவும், சில திறத்தில் அதற்கு மேலாக

வும் குடிகளால் மதிக்கப் பெறுவதற்கு உரியவை. தொழிற் சங்கங்களிலும் பொருளாதாரக் குழுக்களிலும் நடைபெறும் சுய ஆட்சி, அரசின் முக்கியமான வேலைகளை நிறைவேற்றுவதற்குப் பெரிய சாதனமாக உதவுகின்றதோடு, அந்தச் சங்கங்கள் அரசின் தொடர்பின்றியே நடப்பவை யாயும் அரசைவிடச் சில விஷயங்களில் திருப்தி தரக்கூடிய முறையில் செயலாற்றுவனவாயும் இருக்கின்றன" என்று ஒரு சாரார் கூறினர். மற்றச் சங்கங்களின் அதிகாரத்தைப் போலவே அரசின் அதிகாரமும் இருக்க வேண்டுமென்று வேறு சிலர் கூறினர். "அரசு இருக்க வேண்டியது அவசியந் தான்; ஆனால் அதன் அதிகாரம் குறைவாக இருக்க வேண் டும். வேறு வகையான சங்கங்கள் தமக்குள் சண்டையிடும் படி நேரும் சந்தர்ப்பங்களில் தலையிட்டு ஒற்றுமை நிலவும் படி செய்யும் அதிகாரம் மாத்திரமே அதற்கு இருக்க வேண் டும்" என்று மற்றொரு வகையினர் எடுத்துரைத்தனர்.

ஒருதலைப்பட்ட சர்வாதிகாரத்துக் குரிய தடைகள்

சமஷ்டி ஏற்பாட்டை ஆதரிப்பவர்கள், "அரசுக்குச் சர்வாதிகாரம் அத்தியாவசியமன்று. சர்வாதிகார அரசுகளைப் போலவே, அரைகுறையான அதிகாரம் வகிக்கும் அரசு களும், சர்வாதிகாரமே இல்லாத அரசுகளும் உலகத்தில் இருக்கின்றன. உதாரணமாக: சமஷ்டி அரசாட்சியில் சர் வாதிகாரம் பெற்ற ஸ்தாபனம் ஒன்றுமே இல்லை. அரசிய லதிகாரம் அவ்வாட்சியில் இரண்டுபட்டிருக்கின்றது. அவ் வதிகாரமானது அரசியல் திட்டத்தில் நிர்ணயித்திருக்கிறபடி மத்திய அரசாங்கத்துக்கும் சமஷ்டியில் சேர்ந்த தனி நாடு களின் அரசுகளுக்கும் பங்கிடப்பட்டிருக்கிறது" என்று சொல்லுகிறார்கள்.

இவ்வாறு பல வகையான ஆட்சேபங்கள் இருந்தாலும், சட்டப்படி வேறொரு ஸ்தாபனத்தின் தலைமைக்கு உட் படாமல், பூரண சுயேச்சையைக் கொண்டுள்ள தேசமே அரசு என்ற பெயருக்கு ஏற்றதென்பதை இக்காலத்தில் எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள்.

அரசின் ஒருதலைப்பட்ட சர்வாதிகாரக் கொள்கையைத்

தாக்கிக் கண்டிப்பதில் ஓரளவு நியாயம் இருக்கிறதென்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். அதனால் அக்கொள்கையை முழுதும் விலக்கிவிட இயலாது. தனித்தனியான அரசுகளுக்குள்ளே ஏற்படும் பரஸ்பர விரோதங்களைச் சமரஸப் படுத்தித் தீர்த்து வைக்க ஒரு தலைமையான அதிகாரஸ்தாபனம் இன்றியமையாததாகும். அவ்வதிகார ஸ்தாபனமே அரசின் தனியாணையை வெளியிடுவதாக இருக்க வேண்டும்.

உலக அரசு-சர்வதேச சங்கம்

வெளிநாட்டு விஷயங்களில் முழுச் சுயேச்சையும் சர்வாதிகாரமும் படைத்த அரசின் லக்ஷியத்திற்கும் மானிட வர்க்கத்தின் க்ஷேமலாப அபிவிருத்திக்கும் பரஸ்பர விரோதம் ஏற்படுவது இயல்பன்றே என்ற கேள்வி எழலாம். உலக மெங்கும் நாகரிகம் பரவி வரும் இந்நாளில் தேசங்கள் தனித்து நிற்கும் நிலையை விட்டு ஒன்றையொன்று நாடியிருக்கும் நிலையைப்பெற்றிருத்தல் யாவரும் நன்கறிந்த விஷயமே. இனிமேல் உலகமனைத்துக்கும் பொதுவான ஆட்சி ஒன்று வேண்டுமென்றும், அவ்வாட்சியின்கீழ் யாவரும் பணிந்தொழுக வேண்டுமென்றும் எண்ணும் உயர்ந்த நோக்கத்தை நாம் விருத்தி செய்ய வேண்டும். பணிந்து நடத்தலென்பது நம் கடமை; அது நம்முடன் வாழும் மானிட வர்க்கத்தினர் அனைவருடைய நலத்திற்கும் காரணமாகும். பலர் இக்கொள்கை வீண் மனக்கோட்டை யென்றும் காரியசாத்தியமற்ற லக்ஷியமென்றும் கருதுதல் கூடும். மனித சமூகத்தினருக்குரிய சிறந்த லக்ஷியம் இதுவே யென்று சொல்ல வேண்டும். இதற்கான முயற்சிகளைச் செய்து இத்தகைய நிலையை உண்டுபண்ணுவது செயத்தக்க பெருஞ் செயலாகும். சர்வதேச சங்கம் இந்தக் கொள்கையையே தன்னுடைய லக்ஷியமாகக்கொண்டு உழைத்தது. ஆனால் நாடுகளனைத்தையும் கட்டுப்படுத்தி உலகமனைத்தும் விரிந்து நிறகும் அகில லோக அரசை ஏற்படுத்த அதனால் முடியவில்லை. இதற்குக் காரணம் அதன் சக்திக் குறைவுதான்.

அத்தியாயம் 5

பிரஜைகளின் உரிமைகள்

அரசின் சார்வாதிகாரத்திற்கும் பிரஜைகளின் உரிமைகளுக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு. முதல் முதலில் பிரஜை யென்ற பதம் அரசாங்க வேலைகளில் பங்குபெறும் உரிமை படைத்த நகர வாசியையே குறிப்பதா யிருந்தது. இந் நாளில் தேசிய அரசுகளில் அப்பதம் விரிந்த பொருளை அடைந்திருக்கிறது; பிரஜை யென்பது இக்காலத்தில், அரசென்று வழங்கப்பெறும் அரசியற் சங்கத்தின் ஓர் அங்கத்தினரென்ற பொருளை உடையது. பிரஜைக்கும், பிரஜை யல்லாதவனுக்கும் வேறுபாடு உண்டு. பிரஜையல்லாதவன் தான் எங்கே வசிக்கிறானே அந்த நாட்டின் அரசினால் விதிக்கப்பெறும் வரிகளைச் செலுத்த வேண்டும்; ஆனால் அந் நாட்டுப் பிரஜைக்குரிய உரிமையையோ சலுகையையோ அவன் பெற முடியாது.

பிரஜா உரிமைகளின் முக்கியத் தன்மை

ஒருவன் ஒரு நாட்டின் பிரஜையாக இருக்கலாம். ஆனால் அவன வாழும் நாடு வேறாக இருத்தல் கூடும். ஒரு குழந்தையின் பிரஜைத்தன்மை அது பிறந்த இடத்தையோ, பெற்றோர்களின் பிரஜைத் தன்மையையோ பொறுத்ததாகும். குறித்த வயது வந்தவுடன் அதற்குப் பிரஜா உரிமைகள் முழுவதும் ஏற்படும். இந்த உரிமைகள் இயல்பாக வந்து அமைவன. செயற்கையாகச் சொந்த முயற்சியால் ஓர் அரசில் பிரஜா உரிமை பெறுபவரும் உள்ளனர். ஒரு நாட்டைத் தனக்குரிய தேசமாக்க விரும்புபவன, தன் எண்ணத்தை வெளிப்படுத்தி ஒரு குறிப்பிட்ட காலத்துக்குக் குறையாமல் அந் நாட்டில வசித்து வந்தபின் அவ்வரசின் பிரஜா உரிமைகள் எல்லாவற்றையும் அடையும் தகுதி உள்ளவனாவான். ஆனால் ஒரே காலத்தில் ஒருவன் இரண்டு அரசுகளின் பிரஜையாக இருக்க முடியாது.

நாகரிகம் பெற்ற ஒவ்வோர் அரசிலும் நியாய ஸ்தலங்கள் மூலம் நிலைநிறுத்திக்கொள்ளக்கூடிய சில உரிமைகள் அதன் பிரஜைகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பிரஜைக்கும் இத்தகைய உரிமைகளை அளித்துப் பாதுகாப்பதனல் அவன் தன் சக்திக்கும் திறமைக்கும் ஏற்ற வாறு முன்னேற்றத்தை அடைய முடிகிறது.

சட்டபூர்வமாகப் பிரஜைகளுக்கு உள்ள இத்தகைய உரிமைகளை இருவகையாகப் பிரிக்கலாம். அவை **ஸிவில் உரிமைகள்** அல்லது தனி மனித உரிமைகளென்றும், **அரசியல் உரிமைகள்** என்றும் பெயர் பெறும். ஸிவில் உரிமைகளில் அரசாங்கத்தார் தலையிடாமல் இருப்பது நாகரிக வாழ்க்கைக்கு இன்றியமையாத தென்பது அறிஞர் கருத்து. தனி மனிதனென்ற முறையில் அவ்வுரிமைகள் ஒரு பிரஜைக்கு மிகவும் முக்கிய மானவை யாகும்.

இருவகை உரிமைகள்

சுய ஆட்சி நிலவும் ஓர் அரசில் முக்கியமாக அமைந்திருக்க வேண்டிய உரிமைகள் வருமாறு:—உயிரின் பாதுகாப்பு, சட்டப்படி அமையும் சமத்துவம், தனி மனித சுதந்திரம், சொத்துப் பாதுகாப்பு, மதக் கொள்கைகளில் சுயேச்சை, வாக்குச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், போக்கு வரவுச் சுதந்திரம், கூட்டங்களில் சேரும் உரிமை, ஜீவனோபாயத்தைத் தானே தேர்ந்துகொள்ளும் உரிமை முதலியன.

ஸிவில் உரிமைகள்

உயிரின் பாதுகாப்புத்தான் அரசியல் வாழ்க்கைக்கு ஆணிவேர் என்று கூறலாம். பிரஜைகள் தங்கள் உயிருக்கு ஆபத்து இல்லாமல் முதலில் வாழ முடிந்தால்தான் மற்ற உரிமைகளைப் பிறகு அனுபவிக்க முடியும். உயிருக்கு அபாயம் இருந்தால் வேறு எவ்வளவு உரிமை இருந்தாலும் பயனில்லை. இதைக் கருத்தில் கொண்டேதான் மரண தண்டனையையும் தற்கொலையையும் சில தீவிர அரசியல் வாதிகள் கண்டிக்கிறார்கள். ஒவ்வொரு பிரஜைக்கும் சுயேச்சையும் உடற் பாதுகாப்பும் அளிக்கும் கடப்பாடு அரசைச் சார்ந்தது. சட்ட ஆதாரமின்றி ஒருவனைக் கைது செய்

வதும், காவலில் வைப்பதும், அவன்மேல் தண்டத்தைப் பிரயோகிப்பதும் அவனது சுதந்திரத்துக்கு விரோதமாகும். ஒரு மனிதனுக்குத் தன் உயிரைப் பாதுகாத்துக்கொள்ளும் உரிமை உண்டு. அவன் அதை வேண்டிய அளவில் உபயோகிக்கலாம். யுத்த ஆயுதங்கள் வைத்துக்கொள்ளும் உரிமை, பொதுவான பாதுகாப்பு, சுயேச்சை என்பவை தற்காப்புக்கு உதவுகின்றன. சொத்துக்கோ உடலுக்கோ தீங்கு நேரிட்டால் நஷ்ட ஈடு பெறவேண்டி நியாயஸ்தலத்தில் வழக்குத் தொடரும் உரிமை ஒரு பிரஜைக்கு உண்டு.

ஒரு பிரஜை தன் சொத்தைத் தன் விருப்பப்படியே செலவிடலாம்; விநியோகம் செய்யலாம்; தொழில் வியத்திலும் வியாபார விஷயத்திலும் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளலாம்; எந்த வேலையிலும் அமரலாம்; குடும்ப வாழ்க்கையை நடத்திவரலாம். இவைகளெல்லாம் ஸிவில் உரிமைகளின்பாற்படும். தீவிர சம உரிமை வாதிகள் மாத்திரம் இவ்வுரிமைகளைக் குறைத்துவிட வேண்டுமென்றும், அப்பொழுதுதான் ஒவ்வொரு பிரஜைக்கும் வேண்டுமளவில் ஜீவனோபாயம் ஏற்படுமென்றும் அபிப்பிராயப்படுகிறார்கள்.

சட்டவரம்பிற்கு உட்பட்டு நியாயமான விஷயங்களைப் பற்றி ஆலோசிக்கும்பொருட்டுப் பொதுக் கூட்டங்களில் சேரவோ, விஷயங்களை வெளிப்படையாக எழுதவோ, பேசவோ பிரஜைகளுக்கு உரிமை உண்டு. இம்மாதிரியுள்ள முக்கியமான ஸிவில் உரிமைகளையும், அரசியலுரிமைகளையும் பெறும்பொருட்டுப் பல நாடுகளில் நெடுங்காலம் மக்கள் போராடியிருக்கின்றனர். இவை உரிமைகளாக இருப்பினும், பொதுஜன அமைதிக்கும், சன்மார்க்கத்திற்கும் விரோதமாக உபயோகிக்கக் கூடாதென்னும் ஒரு நிபந்தனை மாத்திரம் உண்டு.

ஒரு தொழிலில் அமரவும், வேலைக்குத் தக்க கூலி பெறவும் பிரஜைக்கு உரிமை உண்டென்னும் கொள்கை சாதாரணமாக இந்நாளில் ஒப்புக்கொள்ளப்படுகிறது. அதிக ஜனங்கள் வேலையில்லாமல் திண்டாடினால் அவ்விஷயத்தில்

கவனம் செலுத்தி அவர்களுக்கு வேலை சம்பாதித்துக் கொடுப்பது அரசாங்கத்தின் கடமையாகும்.

பிரஜைகளுக்கு உரிய உரிமைகளுள் மற்றொரு வகையாகிய அரசியல் உரிமைகளில் முக்கியமானவை வருமாறு:—

அரசியல் உரிமைகள்

பொது விஷய சம்பந்தமான விவாதங்களில் அமைதியாய்க் கூட்டங்கூடிக் கலந்து பேசுதல், தனியாகவோ பிறருடன் சேர்ந்தோ அரசாங்கத்திற்கு மனுச் செய்துகொள்ளுதல், தேர்தல் மூலமாகவோ நியமன மூலமாகவோ பதவி பெற்று அதிகாரம் வகித்தல், வாக்குச் சுதந்திரம் அல்லது ஓட்டுரிமை முதலியன.

இந்நாளில் நாகரிகம் பெற்ற நாடுகளில் ஸிவில் உரிமைகளுக்கும் அரசியல் உரிமைகளுக்கும் இடையே உள்ள வித்தியாசம் மறைந்து வருகிறது. உதாரணமாக ஒன்று சொல்வோம்: கல்வியுரிமை ஒரு முக்கியமான ஸிவில் உரிமையே; ஆனாலும் எல்லா அரசியலுரிமைகளுக்கும் அது பெரிய ஆதார பீடமாக நிற்கின்றது.

சில ஸிவில் உரிமைகளையும் சில அரசியல் உரிமைகளையும் '**மூலாதார உரிமைகள்**' என்று கூறுவர். இவ்வகை உரிமைகளைச் சட்ட பூர்வமான அரசியல் திட்டத்தினாலோ, சம்பிரதாயத்தை அநுசரித்தோ ஜனங்கள் பெறுகின்றனர். அங்ஙனம் பெற்று அநுபவிப்பதற்கு அரசு உத்தரவாதம் அளிக்கிறது. இக்கால அரசியல் திட்டங்கள் பலவற்றில் இம்மூலாதார உரிமைகள் தவறாமல் இடம் பெற்றிருக்கின்றன. ஒரு நாட்டினர் சுயேச்சையுடன் வாழ்வதற்குக் குறைந்தபக்ஷம் இன்றியமையாத உரிமைகள் எவையோ அவைகளை அந்தத் திட்டங்களில் காணலாம். இம்மூலாதார உரிமைகள் தேசத்திற்குத் தேசம் வேறுபடும்; ஆனாலும், சில முக்கிய அம்சங்களில் அவற்றினிடையே ஓர் ஒப்புமை இருத்தலை உணரலாம். அரசியல் திட்டத்தில் இத்தகைய உரிமைகளைப் பிரகடனம் செய்து விட்டதாலேயே இவை சரிவர நிறைவேறும் என்று சொல்

மூலாதார உரிமைகள்: உரிமைச் சாஸனம்

வதற்கு இல்லை; என்றாலும், அத்தகைய பிரகடனம் அல்லது 'உரிமைச் சாஸனம்' பொதுமக்கள் மனத்தில் அரசின் பால் நம்பிக்கையை உண்டுபண்ணுவதோடு, வரம்புகடந்த யதேச்சாதிகாரம் செலுத்துவதற்குத் தடையாகவும் நிற்கும்; குடிமக்களின் வாழ்க்கையில் உயர்ந்த லக்ஷியத்தை நிறுவுவதற்கு அது ஒரு நல்ல சாதனமாகவும் பயன்படும்.

இனி, அரசாங்கம் சம்பந்தப்பட்டவரையில் பிரஜைகளுக்குள்ள உரிமைகளைக் கவனிப்போம். பிரிட்டனில் ஒவ்வொரு பிரஜையும், 'சட்ட ஆட்சிமுறை'யின் பாதுகாப்பைப் பெறுகிறான். பிரசித்தி பெற்ற இந்தப் பிரிட்டிஷ் முறையில் இரண்டு சிறப்பான அம்சங்கள் பொதிந்திருக்கின்றன. ஒன்று: எல்லாவற்றிற்கும் மேலான சட்டத்தின் அதிகாரம் அரசாங்கம் தன் இஷ்டம்போல் மக்களிடத்தில் அதிகாரம் செலுத்த முடியாது. சட்டத்தை மீறினால் மாத்திரமே ஒருவனைத் தண்டிக்கலாம். அரசாங்க நடவடிக்கைகளையும் நியாயத்திற்கு இசைந்தவை என்று நீதிபதிகள் அங்கீகரிக்க வேண்டும்; இல்லையேல் சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் உத்தரவின்மேல் எந்த மனிதனையும் கைது செய்யவோ, சிறையிலிடவோ முடியாது.

பிரிட்டிஷ் சட்ட ஆட்சி முறை

இரண்டாவது அம்சம் வருமாறு: சாமான்ய நீதிமன்றங்களில் வழங்கும் பொது வகையான சட்டத்திற்கு ஒவ்வொரு மனிதனும் உட்பட்டவன் என்பதே சட்ட ஆட்சிக்கு ஆதாரமான கருத்து. 'சட்டத்தின் முன்னிலையில் எல்லோரும் சமம்' என்ற கருத்தைக் கொண்ட இந்தக் கொள்கையினால், தோட்டி முதல் தொண்டைமான் வரையில் ஒவ்வோர் உத்தியோகஸ்தனும், தன் தவறுகளுக்காக நீதி மன்றங்களில் சட்டப்படி குற்ற விசாரணைக்கு உட்பட வேண்டியவனாகிறான். பிரான்ஸிலும் ஐரோப்பாவினுள் உள்ள மற்ற நாடுகளிலும், 'ஆட்சிமுறைச் சட்டம்' என்ற தனி விதிகளின் படி, 'நிர்வாக நீதி மன்றங்கள்' என்னும் தனி நியாயஸ்தலங்கள் உள்ளன; அங்கே நிர்வாக உத்தியோகஸ்தர்களின் குற்றங்கள் விசாரணைக்கு வருகின்றன. அத்தேசங்களிலுங்

கூட இக்காலத்தில் 'நிர்வாக நீதி மன்றங்கள்' சர்க்கார் உத்தியோகஸ்தர் விஷயத்தில் பொதுஜனங்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் முறையிலேயே அமைக்கப்பெற்றுள்ளன.

சமீப கர்லங்களில் பிரஜா உரிமைகளின் தன்மையிலும் அளவிலும் ஏற்பட்டிருக்கும் மாறுபாடுகளை விளக்கிக் காட்டச் சில உதாரணங்களைக் குறிப்பிடுவோம். சிறுபான்மை வகுப்பினருக்குத் தங்கள் பாஷைகளையும் சமுதாய சம்பிரதாயங்களையும் போற்றி வரும் உரிமை கிடைத்திருக்கிறது. நாட்டுக் கைத்தொழில்களையும் வியாபாரத்தையும் பாதுகாத்து அபிவிருத்தி செய்வதும், நாட்டு நலத்துக்கு மாறான செயல்களைத் தடுப்பதும் இக்கால அரசின் முக்கியமான கடமைகளென்ற கருத்து உலகில் நிலவுகிறது.

அத்தியாயம் 6

சுயேச்சையும் சமத்துவமும்

அரசு சர்வாதிகார முடையதாக இருக்கும்போது பிரஜைகளுக்குச் சுயேச்சை இருப்பது இயலுமா? இரண்டும் ஒருங்கே நிலவ முடியுமா?—இந்த விஷயத்தில் பெரிய அபிப்பிராய பேதங்கள் இருந்து வருகின்றன. தனி மனிதனுடைய சுயேச்சைக்கு ஊறு செய்யாத வகையிலும், ஒவ்வொருவனும் சட்டத்திற்கு உட்பட்டு உண்மையான சுதந்தரத்தை அனுபவித்துவரும் அளவிலும் அரசாங்கம் எல்லாப் பிரஜைகளின் மேலும் அதிகாரம் வகித்து வருமானால் அப்போது இவ்விரண்டும் ஒன்றுபட்டு நிற்கும். அந்த நிலை ஒரு சிறந்த லக்ஷியமாகும்.

பிரஜைத் தன்மை தக்க முறையில் ஓர் அரசில் அமைய வேண்டுமானால் பிரஜைகளுள் ஒவ்வொருவனும் வாழ்க்கைத் துறைகளெல்லாவற்றிலும் தானே அபிவிருத்தி பெறுவதற்குரிய வசதிகள் ஒருபடியனவாய் இருக்க

வேண்டும். அப்படி இருந்தால்தான் ஒவ்வொரு பிரஜையும் தன் தன் சொந்த க்ஷேமலாப அபிவிருத்திக்காக வாய்க்கும் சந்தர்ப்பங்களைப் பயன் படுத்திக்கொள்ள இயலும். அதுவே சுயேச்சையாகும். பிற ருடைய உரிமைகளுக்கு ஊறு செய்யாத வகையில் தன் விருப்பப்படி காரியங்களைச் செய்து வரும் உரிமையாகிய சுயேச்சை பிரஜைக்கு இருந்தாலொழிய மூன்னே சொன்ன லக்ஷியம் நிறைவேறுதல் அரிது. சமூக நிர்ப்பந்தங்கள், சட்ட நிர்ப்பந்தங்கள் என்பவற்றுள் யாதொன்றினாலும் பாதிக்கப்படாமல் வாழ்ந்துவரும் ஒரு பிரஜையையே சுயேச்சையுள்ளவனென்று சொல்லலாம். அவன் தன் விருப்பப்படி ஆலோசனை செய்யவும், பேசவும், நடக்கவும் உரிமை பெற்றவன். அவன் 'சட்ட ஆட்சி'க்கு மாத்திரமே கட்டுப்பட்டவன்.

சுயேச்சையின் பொருள்

"சட்டமும் சுயேச்சையும் ஒன்றுக்கொன்று முரணனவை அல்லவோ? சட்டத்திற்கு அடங்கினவனைச் சுயேச்சை கொண்டவன் என்று எப்படி நினைப்பது?" என்ற கேள்விகள் இங்கே எழலாம். சட்டத்தை நிறைவேற்றுவதனால் சுயேச்சை ஒருவாறு குறையுமென்பதில் உண்மை உண்டு. ஆனால் சட்டம் இல்லாவிட்டால் சுயேச்சையே போய்விடுமே; குழப்பமும் கலகமும் தேசத்தில் உண்டாகுமே. எந்த இடத்தில் அமைதி நிலவுகிறதோ அவ்விடத்தில்தான் தனிமனிதனின் சுயேச்சையும் நிலவமுடியும். எனவே, அமைதியை உண்டாக்கும் சட்டமும், அவ்வமைதி உள்ள இடத்தில் இருக்கும் சுயேச்சையும் நெருங்கிய தொடர்புடையன என்பது புலப்படும். சட்டமில்லாத நிலையில் உள்ள சுயேச்சை காட்டுமிராண்டித்தனமுந்தான்றோன்றி நடையுமாகத்தான் இருக்கமுடியும். இந்நாளில் அரசியல் சட்டத்தினால்தான் சுயேச்சை நிலைபெறுகிறது. பொது ஜனங்களின் மொத்த நன்மையைப் பாதுகாப்பதற்காகத் தனிமனிதனின் சுயேச்சையை ஓரளவு குறைத்தல் அவசியமேயாம். போலீஸ்காரன் ராத்திரியில் விளக்கில்லாமல் வண்டி ஓட்டுபவர்களையும், பொதுப் பாதை

சட்டமும் சுயேச்சையும்

யில் அசுத்தம் செய்பவர்களையும் பிடித்துக் குற்றம் சாட்டும் போது, அதனால் பிரஜைகளுக்குச் சுயேச்சை குறைந்து விடு வதாக நினைப்பது தவறு. ஆகையால் சமுதாய முழுவதும் நன்மை அடைவதற்காகச் சில பொதுவான நிர்ப்பந்தங்கள் இருத்தல் இன்றியமையாததே.

தேசீய சுயேச்சை

இத்தகைய நிலையில் ஒரு தேசத்தில் தக்க வயது வாய்ந்த பிரஜைகள் மேற்சொல்லிய சுதந்திரங்களைப்பெற்று நாட்டின் ஆட்சியிலும் பங்கு கொண்டிருந்தால் அத் தேச மக்களைச் சுயேச்சை யுடையவர்க ளென்று கூறலாம். அத்தகைய தேசத்திலுள்ள அரசாங்கம் அந்நிய நாட்டினரின் ஆணைக்கோ தலையீட்டிற்கோ உட்படா மல் உள்நாட்டு வெளிநாட்டு விஷயங்களில் அதிகாரம் செலுத்திவரும். ஆனால் அதன் செயல்கள் பிறதேசத்தாரின் உரிமைகளையும் நிலைமைகளையும் அவமதிக்காத முறையில் அமைந்திருக்க வேண்டும். இவ்விதமான இலக்கணத்தோடு கூடிய சுயேச்சையே அரசியல் சுய ஆட்சிக்கு அடிப்படை யாகும். தனி மனிதன் விஷயத்திலும், தேசத்தின் விஷயத்தி லும் மேலே கூறியபடி வரையறை யொன்று இருந்தால் தான் சுயேச்சை யென்பது கைகூடும். இல்லாவிடின் சில ருக்குச் சுயேச்சையும் அதனால் மற்றவருக்கு அடிமைத்தன மும் ஏற்படலாம்.

தனி மனிதனது சுயேச்சை

மனச் சாக்ஷியின்படி நடக்கும் சுதந்திரம், வாக்குச் சுதந் திரம், சொத்துரிமை, சட்ட விஷயத்தில் சமத்துவம், போக்கு வரவுச் சுதந்திரம் ஆகிய இவைகளைப் பெற் றவர்களே தனி மனித சுயேச்சை (ஸிவில் சுயேச்சை) கொண்டவராவர். ஜீவனே பாயம், மதம் என்னும் இரண்டு விஷயங்களில் உள்ள சுயேச்சையும் தனிமனித சுயேச்சையில் அடங்கியதே.

அரசியல் சுயேச்சை

ஒவ்வொரு பிரஜையும் யாதொரு நிர்ப்பந்தமுமின்றி அர சியல் விஷயங்களில் ஈடுபட்டு, அரசியல் நடைமுறையில் செல்வாக்குப் பூண்டிருப் பதே அரசியல் சுயேச்சை எனப்படும். ஒரு பிரஜையின் தனிப்பட்ட அரசியலனுபவத்தின் பயனைச்

சமூக முன்னேற்றத்தின் பொருட்டுப் பயன்படுத்த வசதிகள் வேண்டும். அதற்குத் தடையொன்றும் இருக்கக்கூடாது. அவன் தன் அபிப்பிராயங்களைப் பயமில்லாமல் வெளியிடவும், அதற்காகப் பிறருடன் தடையின்றிச் சேர்ந்து பழகவும் அவனுக்கு உரிமை இருக்க வேண்டும்.

இக்காலத்து அரசாங்கங்கள் குடிமக்களுக்குப் பொருளாதார விஷயத்திலும் சுயேச்சை வேண்டுமென்பதை நன்கு அறிந்திருக்கின்றன. பொருளாதார விஷயங்களில், அவற்றுள்ளும் முக்கியமாக ஒரு பிரஜையின் ஜீவனத்துக்கு வேண்டிய உபாயங்களை அமைத்துக் கொடுக்கும் விஷயத்தில், அரசாங்கம் துணைசெய்ய வேண்டும். முதலாளிகளால் தனி மனிதர்களின் நன்மை அபகரிக்கப்படாமல் இருக்குமாறும், சமத்துவம் நிலைபெறுமாறும் தக்க வசதிகளை ஓர் அரசு அளித்து வந்தாலொழிய, வாழ்க்கையின் மற்றத் துறைகளில் பிரஜைகள் உண்மையான சுயேச்சையை அனுபவிக்க இயலாது.

சுயேச்சையின் அடிப்படையான இலக்கணங்கள் சமத்துவக் கொள்கையின் இலக்கணங்களுக்கு முற்றும் மாறுனவை யென்று சில அரசியல் அறிஞர்கள் கருதுகிறார்கள். பொருளைத் தேடவும், அதிகாரம் பெறவும் ஒரு தனி மனிதனுக்குச் சௌகரியங்களும் சுயேச்சையும் ஏற்பட்டால் அவைகளை அவன் அளவுக்கு மிஞ்சிச் சேகரித்துக் கொள்ளக்கூடும். அதிருஷ்டமடிக்கும் சிலர் இவ்வாறு அளவிலாச் செல்வத்தையோ, மிக்க அதிகாரத்தையோ கைக்கொள்வதனால் எஞ்சியுள்ள பெரும்பான்மையோர் வறுமைக்கு இரையாகிப் பிறரைத் தொழுது பின்செல்பவராக நிற்கவேண்டி வருகிறது. ஒரு மனிதன் அனுபவிக்கும் எல்லையற்ற சுதந்திரம் வேறு பலரின் சுயேச்சைக்கு ஊறு விளைக்கக் காரணமாகலாம். ஆகையால்தான் சுயேச்சைக்கு எல்லையும் தடையும் இன்றியமையாதவை. "நிர்ப்பந்தம் இருப்பதனால்தான் சுதந்திரம் நிலை நிற்கிறது" என்று சொல்வதுண்டு. அது முற்றும் உண்மையே.

சுயேச்சையும் சமத்துவமும்

பொருளாதாரத் துறைகளில் ஏற்றத் தாழ்வுகள் அதிக

மாயிருப்பின், அவை பொதுமக்களை நிர்ப்பந்தங்களுக்கு ஆளாக்கும். அத்தகைய நிலையில் அரசியல் துறையில் சுயேச்சையே இருக்க முடியாது. எனவே விரிவடைந்த சமத்துவத்திற்கும் சுயேச்சைக்கும் விரோதமே இல்லை; அன்றியும் சமத்துவம் விடுதலை லக்ஷியத்தை அடைய இன்றியமையாத சாதனமும் ஆகும். உண்மைச் சமத்துவம் சுதந்திரத்தின் ஒரு பகுதியே. பிரஜைகளுடைய சொத்து, செல்வாக்கு, பதவி இவை போன்ற விஷயங்களில் ஒருவிதமான வித்தியாசமும் ஏற்படலாகாது என்பதும், சமத்துவக்கொள்கையை ஒவ்வோர் அரசும் அங்கீகரித்து அதற்கேற்ப நடந்துவர வேண்டுமென்பதும் இக்காலத்து ஜனங்களின் முக்கிய விருப்பமாக இருக்கின்றன. அதிகாரத்தையும், க்ஷேம லாபங்களையும் பகிர்ந்து கொள்வதில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு குறிப்பிட்ட பகுதியே கிடைக்கவேண்டும். அந்தக் குறிப்பிட்ட பகுதிக்குமேல் யாரும் பெறக்கூடாது. வயது வந்த ஒவ்வொருவனும் பிரஜா உரிமைகளையும் சலுகைகளையும் அதிகாரங்களையும் பெற இடம் இருக்கவேண்டும். பதவி, சொத்து, மதம், ஆண், பெண் என்ற விஷயங்களிலுள்ள வித்தியாசம் காரணமாக ஒரு பிரஜைக்கு வந்த விஷயத்திலும் தடை இருக்கக் கூடாது.

சம உரிமையின் உட்கருத்து

பிரஜைகள் யாவரையும் ஒரேவிதமாக நடத்தவேண்டுமென்பது சம உரிமையின் பொருள் அன்று. சமூக முன்னேற்றத் துறைகளில் பலருக்குப் புலவிதத் திறமை இருக்கும். மனிதர்களுக்கு இயல்பாக உள்ள அறிவாற்றல்களும் ஒரே மாதிரி இரா. ஆகையால் ஒவ்வொரு மனிதனும் தன் அறிவுத்திறத்திற்கும் உடல் வலிமைக்கும் தக்கவாறு அபிவிருத்தி அடைவதற்குரிய வசதிகள் பெறவேண்டும். பிரஜைகள் மேலும் மேலும் தங்கள் தங்கள் அபிவிருத்திக்குரிய சந்தர்ப்பங்களையும், வசதிகளையும் பெறும்படி, அரசானது நடுநிலையில் நின்று அமைத்தால் அதுவே சம உரிமை தருவதாகும்.

பிறருடைய பிரயோஜனத்திற்காக ஒரு தனி மனித

னுடைய நலம் தடைபடக் கூடாது. ஒவ்வொரு மனிதனுக்கும் போதிய உணவு, உடை, இருப்பிடம் ஆகியவை அவசியம் இருக்கவேண்டும். எந்த விஷயத்திலும் யாருக்கும் தனி உரிமையோ சலுகையோ இருக்கலாகாது.—இதுவே சமத்துவம்.

அத்தியாயம் 7

அரசின் நோக்கங்களும் செய்கைகளும்

அரசு என்பதுவே முடிவான பயனா? அல்லது மக்கள் தங்கள் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளுவதற்கு உரிய கருவியாக மாத்திரம் உள்ளதா?—இந்தக் கேள்வியை அடிக்கடி கேட்கிறார்கள். நம் முன்னோர்கள், அரசானது மனித முயற்சியினால் உண்டாகும் விளைவுகளுள் மிக உயர்ந்ததென்று கருதி, அதனையே முடிந்த பயனாக எண்ணினர். தனி மனிதன் நலத்துக்காக அரசென்பதின்றி அரசுக்காகத் தனி மனிதனென்ற நிலை இருந்துவந்தது. இக்காலத்து அரசியலறிஞர்களிற் சிலர்கூட அத்தகைய அபிப்பிராயம் உடையவர்களாக இருக்கிறார்கள். அரசின் கீழ்த்தான் மனிதர்கள் நல்வாழ்வை அடைய முடியுமென்று அவர்கள் கூறுகின்றனர்; அதனால் அரசென்பது வெறும் சாதனமாக மாத்திரம் இராமல் பயனாகவே ஆகிறதென்பர். ஆனால், அரசு தானே முடிந்த பயனன்றென்பதும், மக்கள் க்ஷேமத்தை அடைவதற்கு ஒரு கருவி என்பதுமே பொதுவாக இக்காலத்து அறிஞர்கள் கருத்து.

அரசு ஒரு கருவியா? பயனா?

அரசினால் விளையும் பயன்களை முதலாவது, இரண்டாவது, மூன்றாவது என்று வகுத்துக் கொள்ளலாம். அரசின் முதல் விளைவு அரசாங்கமும் சுதந்திரமும். தனி மனிதர்களுக் கிடையே அமைதி, ஒழுங்கு, பாதுகாப்பு என்பன நிலவும்படி செய்வதற்குரிய முயற்சியை மேற்கொள்ளுவது அரசின்

மூவகைப் பயன்கள்

முதல் வேலையாகும். தனி மனிதனுக்கு எவ்வளவு சுதந்திரம் அளிக்க இயலுமோ அவ்வளவும் கிடைப்பதற்குத் தடையில்லாதபடி அமைந்ததும் அரசாங்கத்தைச் சார்ந்ததுமாகிய ஒரு ஸ்தாபனம் அவ்வேலையைக் கவனிக்க வேண்டும்.

இரண்டாவது கடமை, தேச மக்களைச் செம்மைப் படுத்தி, தேசிய வாழ்க்கையை அபிவிருத்தி செய்வது.

முடிவான பயன் மனித வர்க்கத்தையே பண்படுத்தி உலக நாகரிகத்தை வளர்ப்பது.

இந்த மூன்றும் ஒன்றுக்குப்பின் ஒன்றுக நிகழ்வனவாம்; ஒன்று அதனை அடுத்து வருவதற்கு வழி கோலுவது. சுருங்கச் சொன்னால் அரசின் நோக்கம் தனி மனிதனது நலம் அபிவிருத்தியடைய வேண்டுமென்பதே; அடுத்தபடியாகத் தனி மனிதர்கள் ஒன்றுபட்டுக் கூடிய நிலையில் அவர்களது சமஷ்டி நலத்தைக் கருதவேண்டும்; முடிவாக அது உலகத்தின் முன்னேற்றத்தையும் நாகரிகத்தையும் லக்ஷியமாகக் கொள்ளவேண்டும்.

இக்காலத்து அரசின் நோக்கங்களும் செயல்களும் தன் குடிமக்களுக்கு அது செய்துவரும் தொண்டிலிருந்து வெளியாகும். ஓர் அரசு இன்றியமையாதனவென ஏற்றுக் கொண்டு செய்யவேண்டிய கடப்பாடுகள் இன்னவையே என்று வரையறுத்துச் சொல்ல இயலாது. அவை காலத்தையும் சந்தர்ப்பத்தையும் பொருளையும் பொறுத்தவையாகும். இக்காலத்தில் மோட்டார் வண்டி, ஆகாய விமானம் முதலிய சாதனங்களால் போக்கு வரவு மிக வேகமாகவும் சக்தியுடையதாகவும் ஆகியிருக்கிறது. ஐம்பது வருஷங்களுக்குமுன் இருந்த அரசாங்கத்தில், அவை சம்பந்தமாக இக்காலத்தில் எழும் பிரச்னைகள் எழ நியாயம் இல்லை. சமூக நிலைமையில் மாறுதல்கள் உண்டாக உண்டாக அரசின் நோக்கங்களிலும் காரியத் திட்டங்களிலும் மாறுபாடுகள் அமைவது இயல்பே.

காலத்துக்கேற்ற மாறுபாடு

குறிப்பிட்ட ஒரு காரியத்தை ஓர் அரசு ஏற்றுக்கொள்ளலாமா கூடாதா என்பதற்குரிய விடை மூன்று விஷயங்களைப் பொறுத்திருக்கிறது. முதலாவது: அது பொதுஜன நன்

மைக்கு உகந்ததா என்பது. இரண்டாவது: அக்காரியத்தை நிறைவேற்றுவதற்கு உபயோகிக்கும் சாதனங்களால் எண்ணிய பயன் விளையுமா என்பது. மூன்றுவது: அதனால் ஏற்படும் செலவும் கிடைக்கும் பயனும் ஈடாகுமா என்பது. இம் மூன்று கேள்விகளுக்கும் உரிய விடைகள் எக்காலத்தும் எவ்விடத்தும் ஒரு மாதிரியே இரா. காலத்தையும் இடத்தையும் அரசின் அடிப்படையான கொள்கைகளையும் பொறுத்து அவ்விடைகள் அமையும்.

இக்காலத்து அரசின் செயல் பிரஜைகளின் வாழ்க்கையின் அடிப்படையிலிருந்தே தொடர்புடையது. சுதந்திரம், சொத்து, நல்வாழ்க்கை, பொது மக்களின் க்ஷேமம் முதலியவை அரசின் வேலைகளைச் சார்ந்தன. உள்நாட்டு அமைதியை நிலைநாட்டுவதும்; வெளிநாட்டுத் தாக்குதலைத் தடுப்பதுமே அரசின் முக்கியமான கடமை யென்ற பழைய கொள்கை இப்போது முற்றும் கைவிடப்பட்டது. ஓர் அரசின் உபயோகமும், செல்வாக்கும் தனி மனிதனுக்கும் ஜன சமூகத்துக்கும் அவ்வரசு செய்துவரும் தொண்டைப் பொறுத்திருக்கின்றனவேயன்றி, பிரஜைகளின்மேல் அது செலுத்தி வரும் ஆணையையும், இளர்ச்சியையும் பொறுத்தவை அல்ல. அறியாமை, வறுமை, நோய், வீண்நஷ்டம் முதலியவற்றைப் போக்கவேண்டித் தாக்ஷிண்யமின்றித் தீவிரமாக முயல்வதே இந்நாள் அரசின் கட்மைகளிற் பெரும்பகுதியாக அமைந்திருக்கிறது. அரசு என்பது பாதுகாப்பின் பொருட்டு ஏற்பட்டிருக்கும் ஒரு போலீஸ் ஸ்தாபனம் என்ற கொள்கை மாறி, சமூக நன்மையையும் அபிவிருத்தியையும் நாடுவதே அதன் நோக்கமாக இருக்கவேண்டும் என்ற எண்ணம் உறுதி பெற்றுவிட்டது. உணவு, உடை, இருக்கை முதலிய வசதிகளை அளிக்கும் பொறுப்போடமையாமல் ஜனங்களின் மனப் பயிற்சிக்கு வேண்டிய கல்வி நிலயங்கள், புத்தகாலயங்கள், பூங்காக்கள், காட்சிச்சாலைகள், ரேடியோ முதலிய சாதனங்களையும் பிற சௌகரியங்களையும் உண்டாக்கும் பொறுப்பைக்கூட இக்கால அரசு ஏற்றுக்கொண்டு நிர்வாகம் செய்துவருகிறது.

அரசாங்கத்தின் அதிகார எல்லைகளைப் பற்றி இருவித மான கொள்கைகள் வழங்கி வருகின்றன. தனி உடைமைக் கொள்கை, பொது வுடைமைக் கொள்கை என்பன அவை. தனி உடைமைக்கொள் கையாவது வருமாறு:—'அரசாங்க மென் பதே தவிர்க்க முடியாத ஒரு தீமை. ஆதலின் தனி மனிதர்களின் உயிர், சொத்து, சுதந் திரம் ஆகியவற்றின் பாதுகாப்புக்குப் போது மான அளவில்தான் அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்க வேண்டும். அயலார் தலையீட்டால் பொதுமக்களுக்குத் தீமை விளையுமென்று தோன்றும் சமயங்களில் மாத்திரமே அரசாங்கம் பொதுவிஷயங்களில் தலையிடவேண்டும்'. இந்தக் கொள்கையை ஆதரிப்பவர்கள், சமூகத்திலுள்ள சில வகுப் பாரின் சார்பாகத் தனி மனித உரிமைகளுக்கு ஊறு செய் வதைக்கூடக் கண்டிக்கிறார்கள். தொழிற்சாலை ஒழுங்கு முறைகள், கூலி நிர்ணயம், கட்டாய ஆரம்பக்கல்வி முதலிய விஷயங்களில் அரசாங்கம் ஏற்படுத்தும் விதிகளை அவர்கள் சற்றும் ஏற்றுக்கொள்வதில்லை. அவரவர் க்ஷேம லாபங்களை அவரவரே தேடிக்கொள்ளும்படி ஒவ்வொருவரையும் விட்டு விடுவதே சமூகத்திற்கு நன்மையைப் பயக்குமென்பது அன் னோர் தீர்மானம். 'கட்டுப்பாடற்ற போட்டி' தான் அவர் கள் சொல்லும் பரிகாரம்.

தனி உடை மைக் கொள்கை யும் பொது வுடமைக் கொள்கையும்

ஆயினும் இம்முறையை அநுசரிப்பதால் நீதியோ, நன் மையோ எப்பொழுதுமே ஏற்படுகிறதில்லை என்பது அனு பவத்தில் நன்றாய்த் தெரிந்துவிட்டது. நடைமுறையில், பண மும் பலமும் உள்ளவர்கள் ஏழைகளையும் சக்தியற்றவர்களை யும் தங்கள் நலத்திற்காக உபயோகப்படுத்தி வருகிறார்கள். சிரமப்பட்டு வேலைசெய்து நிறைவேற்றுபவர்கள் தொழி லாளிகள். அதனால் உண்டாகும் லாபத்தை அடைபவன் முதலாளி. பல நாட்கள் வயலில் வேலை செய்து பயிரிடும் உழவனது வீட்டில் அவன் பெற்று வந்த கூலியைத் தவிர மிச்சம் ஒன்றும் இராது. அறுவடையான நெல்லின் பெரும் பாகம் முதலாளிக்கே போய்ச் சேருகிறது. நாள் முழுவதும்

துணி நெசவு வேலையில் ஈடுபடும் தொழிலாளிக்கு உடுத்துக் கொள்ளக்கூடப் போதிய துணி கிடைப்பதில்லை. அவன் வெறும் கூலி பெறும் ஏவலாளனுகிறான்.

இத்தகைய நிலையினால் ஜன சமூகத்திற்குப் பெருங்கேடு விளைகின்றது. இக்கால நாகரிக வாழ்க்கையின் சிக்கல்கள் நாளுக்கு நாள் அதிகரிக்கவே, அரசாங்கம் தலையிட்டுச் சில விதிகளை ஏற்படுத்த வேண்டிய அவசியம் புலப்படுகிறது. எல்லாவற்றையும் அவை போன போக்கிலே விட்டுவிடுவ தனால் சமூகத்திற்கு விளையும் நஷ்டம் மிகவும் அதிகமாகிவிட் டது. ஆதலின் மேலே சொன்ன முறை இந்நாளில் அனுஷ் டானத்தில் இல்லையென்றே கொள்ளலாம்.

அபேதவாதக் கோள்கை

இரண்டாவது கொள்கைக்கு 'ஸோஷலிஸம்' என்ற பொதுப்பெயர் வழங்குகிறது. பொருளாதாரப் பொது வுடைமை சீக்கிரத்தில் எங்கும் நிலைபெற வேண்டுமென்பதே இக்கொள்கையின் லக்ஷி யமாகும். இதை அபேதவாதம் என்று சொல்லலாம். பொருள்கள் எங்கிருந்து உண்டாகின்றனவோ அந்த மூலங்களையேனும் பொதுவுடைமையாக்கி அரசின் அதிகாரத்தை விரிவுபடுத்துவதே இதன் அடிப்படையான தத்துவம். 'விளைபொருள், தாதுப்பொருள் எல்லாம் தனிப் பட்ட ஒரு மனிதனுக்கு உரியன அல்ல; அரசாங்கத்தின் உடைமை' என்பது அபேதவாதிகள் கருத்து. முதலாளி களுக்கு லாபத்தைத் தரும் வகையில் அமைந்துள்ள 'போட் டிக் கொள்கை'யை அவர்கள் அடியோடு வெறுக்கின்ற னர்.

சமதர்மக் கோள்கை

ஸோஷலிஸம் பலவிதமானது. அவைகளில் மிகவும் மித மானது **அபேதவாத அரசு**. 'நிலம், சுரங்கங்கள், தொழிற் சாலைகள், இருப்புப் பாதைகள், காடுகள் போன்ற பொருளாதார மூலங்களும் சாத னங்களும் அவற்றை உபயோகிக்கும் உரி மையும் அரசாங்கத்தின் பொறுப்பில் இருக்க வேண்டும்' என்பதுதான் அக் கொள்கையை ஆதரிப்பவர்கள் கருத்து. இத்தகைய அபேதவாத ஆட்சி ஒவ்வொரு தேசத்திலும்

நாளடைவில் அமைதியாக ஏற்பட வேண்டும் என்பதே அவர்கள் நோக்கம். ஸோஷலிஸத்தின் தீவிரக் கொள்கைக்குச் சமதர்மக் கொள்கை (கம்யூனிஸம்) என்று பெயர். அதன்படி, வகுப்பு வித்தியாசங்கள் ஒழிகிறவரையில் தொழிலாளர்களின் நன்மையின்பொருட்டு அரசாங்கங்கள் பலாத்காரமாகத் தம் அதிகாரத்தைச் செலுத்தி வரவேண்டும்; பொருள் உற்பத்திச் சாதனங்கள் யாவும் பொதுவுடைமையாக வேண்டும். 'ஒவ்வொருவனும் தன் தன் சக்திக்கு ஏற்ற வேலையிலமர்ந்து தன் தன் தேவைக்கு வேண்டிய ஊதியத்தையே பெறவேண்டும்' என்பதுதான் சமதர்ம வாதிகளின் கோட்பாடு. ருஷிய ஸோவியத் அரசு இம் முறையை மேற்கொண்டு அரசியலைத் திருப்தியாக நடத்த முயன்று வருகிறது.

அபேதவாதக் கொள்கைத் திட்டம் நடைமுறைக்கு ஒவ்வாததென்று பல ஆசிரியர் அதைக் கண்டித்து எழுதியிருக்கின்றனர்; "ஊதியம் கிடைக்கும் என்ற ஆசையின் தூண்டுதலின்றிப் பொருள் உற்பத்தியில் ஜனங்களுக்கு ஊக்கம் இருக்குமா? அரசாங்க நிர்வாகிகள் அரசியல் வேலைகளையும், பொருளாதார விஷயங்களையும் சேர்த்துத் திறமையுடன் கவனித்து வரமுடியுமா?" என்று கேட்கின்றனர். இது முடிவில் உத்தியோகஸ்தர் ஆட்சியாகவே மாறி அம் முறையினால் நேரும் தீமைகள் யாவும் உண்டாவதற்கு இடம் கொடுக்கும் என்றும் கருதுகின்றனர்.

ஆனால், அதிதீவிரமான ஜனநாயக் அரசாங்கங்களில் கூட அபேதவாதம் பரவி வருகிறது. வரம்புக்கு உட்படாமல் மேலும் மேலும் சுயநலக்காரர்கள் இடும் போட்டியின் விளைவாக ஏற்பட்ட பெரும் கேடுகளைத் தடுக்க விரிவான அபேதவாதத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டிய அவசியம் பல அரசாங்கங்களில் உண்டாகியிருக்கிறது. பிரிட்டன், ஜர்மனி முதலிய நாடுகளின் நடைமுறையரசியலில் அபேதவாதக் கொள்கை மிகுதியாக வழங்கி வருகிறது. பலவிதமான அபேதவாதக் கட்சியைச் சேர்ந்தவர்கள், பொதுத் தேர்தல்களில் வெற்றி பெற்றுச் சட்ட சபைகளில் புகுந்து, தங்கள்

கொள்கைகளை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரத் தீவிரமாய் முயன்று வருகின்றனர். பிரிட்டனில் மிதவாதிகளும் பிற்போக்குக் கட்சியினருங்கூடப் பொதுவுடைமைத் திட்டத்திலிருந்து பல அம்சங்களைக் கைக்கொண்டு தங்கள் கொள்கைகளுடன் சேர்த்துத் தழுவி வருகின்றனர்.

அத்தியாயம் 8

அரசாங்கத்தின் வகைகள்

அரசியல் அதிகாரம் வகிப்பவரைப் பொறுத்து, இக்கால அரசாங்கங்கள் இருவகைப்படும். அரசனிடத்தோ, அல்லது அரசின் உண்மையான தலைவனிடத்தோ சர்வ அதிகாரங்களும் பொருந்தியிருப்பின் அது **யதேச்சாதிகார அரசாங்கம்** எனப் பெயர்பெறும். அவ்வதிகாரங்கள் பொதுமக்களிடத்தில் இருந்தால் **ஜனநாயகம்** என்ற பெயர் வழங்கும். பிரிட்டனில் உள்ளதுபோல் அரசன், பேருக்குமட்டும் நாட்டின் தலைவனாக இருப்பின், முடியரசுகூட ஜனநாயக அரசாங்கமாகவே கருதப்படும்.

இருவகை அரசாங்கங்கள்: யதேச்சாதிகார மும் ஜனநாயகமும்

உலகத்தில், முன்னேற்ற மடையாத சில தேசங்களில் இன்றும் யதேச்சாதிகார அரசியல் நடைபெற்று வருகிறது. இத்தாலி, ஜர்மனி, ருஷ்யா ஒழிய மற்ற எல்லா நாடுகளிலும் ஜனநாயக அரசியல் முறைதான் சாதாரணமாக வழங்கி வருகிறது. ஓர் அரசனைத் தலைவனாகக் கொண்ட ஜனநாயக ஆட்சிக்கு ஜனநாயக முடியரசு அல்லது வரையறுக்கப்பட்ட கோளாட்சி என்று பெயர். எங்கும் குடியரசுதான் பெரும்பான்மையாக நடைபெற்று வருகின்றது.

இந்த இரண்டு வகையான அரசாங்கங்களின் குணதோஷங்களைச் சுருக்கமாக எடுத்துரைப்போம். யதேச்சாதிகார அரசாங்கத்தின் முக்கியலக்ஷணம் அரசியல் ஊக்கமும்

திறமையுமே. இவ்வரசாங்கத்தில், அரசியல் விஷயங்களில் யாருக்கும் பதில் சொல்லவேண்டிய பொறுப்பு இல்லாத தால், ஆலோசனைச் சபை ஒன்று வேண்டுமென்ற அவசியம் இலலை; அதனால் உண்டாகும் தாமதமும் ஏற்படுவதில்லை. நெருக்கடியான காலத்தில் இப்படி இருப்பது ஒரு பெரிய சௌகரியந்தான். ஆனல் யதேச்சாதிகார அரசியலில் பொது நன்மையைப்பற்றிய கவனம் அதிகம் இருப்பதில்லை. அது பிரஜைகளின் உற்சாகத்தைக் குறைப்பதோடு நாளடைவில் அவர்களின் உரிமைகளையும் சுதந்திரத்தையும் அழித்து விடு கிறது. சில யதேச்சாதிகாரிகள் பொதுநலத்தையும் நாடிய வர்களாக இருக்கலாம். அத்தகையவர்கள் ஆற்றலும் ஆர்வ மும் கொண்டவர்களாயிருந்தால் நாட்டிற்கு நன்மை விளை யும். இவ்வித யதேச்சாதிகார ஆட்சியின் பெரிய குற்ற என்னவெனில் நாட்டில் தேசபக்தன் தான் ஒருவனே என்று யதேச்சாதிகாரம் செலுத்தும் சர்வாதிகாரி கருது கிறன். மேலும் இம் முறையில் பிரஜைகளின் மனப் போக்கு, காரியப்போக்கு இவை இரண்டிலும் சுதந்திரம் இல்லாமலே போய்விடுவதால், அவர்கள் மனமிடிந்து சீர் குலைந்தவர்களாகின்றனர். அநேகமாக, யதேச்சாதிகார ஆட்சியில் ஓரளவாவது பலாத்காரம் நிலை நிற்பதால், போர்த்திறலுக்கும், போருணர்ச்சிக்கும் மதிப்பு ஏற்பட்டு ஜனங்கள் சண்டையிட ஆவல் உள்ளவர்களாக மாறுகிறர் கள். எனவே, யதேச்சாதிகார ஆட்சி சீக்கிரத்திலோ அல்லது சற்றுத் தாமதித்தோ ஒரு நாட்டைப் போரில் இறங் கும்படிச் செய்துவிடும். அன்றியும், மேதாவியான ஓர் யதேச்சாதிகாரிக்குப் பின்பு ஆட்சி செய்ய வருபவர்கள் எல்லோரும் அவரைப்போலவே திறமை படைத்தவர்களாக வும் பொது நன்மையையே நாடுகிறவர்களாகவும் இருப்பது அருமை. யதேச்சாதிகார ஆட்சியில் பொதுநல நோக்கம் இல்லை யெனில், அவ்வாட்சி கொடுங்கோல் ஆட்சி ஆகி விடுகிறது.

ஜனநாயக முறைதான் மிகவும் விரும்பத் தக்க ஆட்சி என்பதிற் சந்தேகம் இல்லை. அவ்வாட்சியே ஜனங்களுக்கு

உகந்த அரசியல் ஸ்தாபனங்களையும் முறைகளையும் ஏற்படுத்துவதோடுகூட, அவர்களின் தேசிய உணர்ச்சியையும் தேசாபிமானத்தையும் வளரச்செய்கின்றது. பிரஜைகளிற் பெரும்பாலோர் அரசாங்க வேலைகளில் சேர்ந்து பொறுப்பான பதவிகளை வகித்து உழைத்தால், அத்தகையவர்களின் தொண்டின் மூலமாகப் பொதுநல அபிவிருத்திக்கு வேண்டிய வசதியும் சந்தர்ப்பமும் எளிதில் கிடைக்கும். செங்கோல் ஆட்சிகூடச் சுய ஆட்சிக்கு நேராகாது. சுய ஆட்சியில் திறமையும் முதிர்ந்த அறிவும் அனுபவமும் வாய்ந்த தலைவர்களின் உதவியினால் பொதுஜன முன்னேற்றம் என்ற லக்ஷியம் கைகூடும்.

இப்போதைய ஜனநாயக ஆட்சியின் அடிப்படையான கொள்கை, "ஒரு தேசத்தில் பொது ஜனங்கள் மாத்திரமே சர்வாதிகாரம் பெற்றவர்கள்; அரசாங்க அதிகாரம் முழுதும் அவர்களிடத்திருந்தே பிறக்கின்றது" என்பதுதான். ஜனநாயக ஆட்சியில்கூடச் சில சமயங்களில் பெரும்பாலோரின் நன்மையை உத்தேசித்துச் சிலரின் உரிமைகளைப் பறிக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படுவதுண்டு. யதேச்சாதிகாரமோ, சிலருடையதானாலும் சரி, பலருடையதானாலும் சரி, அரசாங்க நோக்கங்களையே தலைகீழாக மாற்றிவிடும். இயன்ற அளவில் அதிக நன்மையைப் பெரும்பாலோர்களுக்குச் செய்து வருவதுதான் ஓர் ஆட்சியின் தன்மைக்கும் கொள்கைக்கும் உரைகல்லாகும்.

நவீன ஜனநாயக ஆட்சி இருவகைப்படும். ஒன்று நேர்முகமானது; மற்றொன்று பிரதிநிதிகள் மூலமாக நிலவுவது. நேர்முகமான ஜனநாயக ஆட்சியில், வயது வந்த பிரஜைகள் எல்லோரும் சபை கூடிக் கலந்து யோசித்துச் சட்ட திட்டங்களையும் நிர்வாக முறைகளையும் நிர்ணயிப்பார்கள். ஏதன்ஸ் முதலிய கிரீக், இத்தாலியப் பட்டணங்களும், பூர்விக இந்தியாவில் சில சிறிய நாடுகளும் இம்மாதிரியான ஆட்சி முறையை மேற் கொண்டிருந்தன. இன்னும் ஸ்விட்ஜர்

இருவகை ஜனநாயக ஆட்சி: நேர்முகமானதும் பிரதிநிதித்துவம் வாய்ந்ததும்

லாந்தின் சில 'கரன்டன்'களில் இம்முறை நடைபெற்று வருகின்றது.

இக்கால அரசுகள் விஸ்தீரணத்திலும் ஜனத்தொகையிலும் விரிந்திருப்பதனாலும், அரசாங்க விஷயங்களில் பெரிய சிக்கல்கள் ஏற்படுவதனாலும், பொதுஜனங்களைக் கூட்டி எல்லோருடைய யோசனையையும் பெற்று விஷயங்களைத் தீர்மானம் செய்வது அசாத்தியமான காரியமாகிவிட்டது. எனவே, இந்நாள் ஜனநாயக அரசாங்கங்கள் எல்லாவற்றிலுமே பொறுப்பு வாய்ந்த பிரதிநிதி ஆட்சி முறைதான் நடைபெற்று வருகின்றது. பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்க ஐக்கிய நாடுகள் முதலிய முக்கிய தேசங்களிலெல்லாம், குறிப்பிட்ட காலங்களில் பொது மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கிறார்கள். இந்தப் பிரதிநிதிகள், ஒன்று கூடி ஆலோசனை செய்து அரசாங்கத்தின் கொள்கைகள், வேலைத் திட்டங்கள் முதலியவற்றைத் தீர்மானிக்கிறார்கள்.

பிரதிநிதித்துவ ஜனநாயக ஆட்சி பொதுஜன நோக்கத்திற்கு இணங்கி நடக்கும்பொருட்டு, குறித்த விஷயங்களில் நேர்முகமாகப் பொது மக்களின் அபிப்பிராயத்தைப் பெறவேண்டி **ரெபரெண்டம்** (Referendum), **இனிஷியேட்டிவ்** (Initiative) **ரீகால்** (Recall) முதலிய முறைகள் சில நாடுகளில் அனுஷ்டானத்தில் இருந்து வருகின்றன. 'ரெபரெண்டம்' என்னும் முறைப்படி, அரசியல் சட்டங்களும் ஏனைய முக்கிய விஷயங்களும் பொது மக்களின் ஓட்டுக்கு விடப்பட வேண்டும். 'இனிஷியேட்டிவ்' என்னும் முறைப்படி வாக்காளர்கள், பிரதிநிதிகளையோ நிர்வாக உத்தியோகஸ்தர்களையோ எதிர்பாராமல் தாங்களாகவே அரசியல் பிரச்னைகளைக் கொண்டுவந்து அவைகளைச் சட்டசபைகள் ஏற்றுக் கொள்ளும்படி செய்யலாம். 'ரீகால்' என்னும் முறைப்படி ஒரு பிரதிநிதியிடத்தில் பல வாக்காளர்களுக்கு நம்பிக்கையில்லையெனின், அவனது உத்தியோக காலம் முடியுமுன்னமேயே பெரும்பாலோரின் ஓட்டுப்பலத்தால் அவனை உடனே

பிரதிநிதி ஆட்சியில் நேர்முகமாகப் பொது மக்கள் அபிப்பிராயத்தைப் பெறும்முறைகள்

தள்ளிவிட்டு வேறொரு பிரதிநிதியை அவர்கள் நியமிக்கலாம்.

பல தேசங்களில் உள்ள ஜனநாயக ஆட்சியின் போக்கிலிருந்து ஒரு முக்கிய உண்மை வெளியாகிறது. அவ்வாட்சியில் அநேக நன்மைகள் இருப்பினும் கொடிய தீமைகளும் காணப்படுகின்றன என்பதே அது. பணக்காரர்கள் லஞ்சம் கொடுத்துப் பல சூழ்ச்சிகள் செய்து சட்டசபையையும் நிர்வாகத்தையும் தங்கள் சார்பில் இருக்கும்படி செய்துவிடுகிறார்கள். உத்தியோக இலாகாக்களில் உண்மையான தகுதிக்கு மதிப்பு இல்லை; சலுகையும், சிபாரிசும் தலையிட்டுப் பாதிக்கின்றன. சிக்கனத்தில் லக்ஷியமில்லை; வீண் செலவு எளிதில் ஏற்பட்டு விடுகிறது. நிபுணர்களின் அபிப்பிராயங்களுக்கு மதிப்பு இல்லை; கட்சிச் சண்டைகளும், பக்ஷபாத உணர்ச்சியும் மேம்பட்டு நிற்கின்றன. தேர்தல் காலங்களில் அரசியல் வாதிகள் ஜனங்கள் கருத்தைக் கவர்வதற்காகத் தங்களால் நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை வாக்காளர்களுக்கு அளிக்கின்றனர்.

ஜனநாயக ஆட்சியின் குறைகள்

19-ஆம் நூற்றாண்டின் பிற்பாதியில் அநேகமாக ஐரோப்பாவிலுள்ள எல்லா நாடுகளிலும் பிரதிநிதித்துவ ஜனநாயக ஆட்சி உச்சநிலையில் இருந்தது. 20-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஆசியாவிலுள்ள பர்ஸியா, சீனம் போன்ற நாடுகளிலும் ஜனநாயகக் கொள்கைகள் வலிபெற்றுப் பரவலாயின. ஐரோப்பிய மகா யுத்தத்தின் விளைவாக, ஜனநாயக ஸ்தாபனங்கள் ஐரோப்பாவின் பெரும்பகுதி முழுவதும் நிறுவப் பெற்றன. எப்படியோ இப்போது ஜனநாயக ஆட்சியின் அதிருப்திகரமான பலன்களால் ஜனநாயகத்துக்கு முன்பு இருந்த கௌரவம் போய்விட்டது. சில நாடுகளில் அரசாங்கத் திறமையும் பொதுஜன விருப்பத்தின் பலமும் ஒன்றையொன்று தழுவிக்கொண்டு போகாத காரணத்தால் பிரதிநிதித்துவ அரசாங்கத்துக்கு இருந்த மதிப்புக் குறையலாயிற்று. இப்பொழுது ஜனநாயக ஸ்தாபனங்களில் அவநம்பிக்கையும், ஜனநாயகக் கொள்கையில்

லாத அரசாங்கமுறையின் பக்கமாகச் சாயும் மனப்பான்மையும் நிலவுகின்றன. இத்தாலியிலும் ஸ்பெயினிலும் சட்டசபைகளில் உள்ள அநீதியும் பொறுப்பற்ற தன்மையும் காரணமாகப் பிரதிநிதித்துவ ஸ்தாபனங்களே அடியோடு ஒழிந்தன. இத்தாலியில் பாஸிஸ்ட் முறையினால் ஒரு மந்திரி சபையினிடம் மேலான ஆணை அமைந்திருக்கிறது. பொதுஜனங்களின் விருப்பத்தைப் பெற்று ஏற்பட்ட சபை அன்று அது. அரசாங்கத்தில் பாஸிஸ்ட் மகா சபை (Fascist Grand Council) தனி ஆணை செலுத்துகிறது. ருஷியாவில் ஏகநாயக ஆட்சி போய்ச் சமதர்மவாதக் கொள்கையின்படி அரசாங்கம் நடைபெறுகின்றது. ஜர்மனியிலும் நாஸிக் கட்சித் தலைவராகிய ஹிட்லரின்கீழ்ச் சர்வாதிகார ஆட்சி நிலைபெற்றுள்ளது.

பிரதிநிதித்துவ ஜனநாயகம் மறைய மறைய ஜனநாயக அரசுகளில் **ஸமஸ்தவாத அரசைப்பற்றிய** ஆராய்ச்சி மிக்கு வருகின்றது. அவ்வகை அரசு மனிதனது வாழ்வு முழுவதையும் தன் அதிகாரத்தின்கீழ் வைக்கும் உரிமை பாராட்டுகிறது. தனி மனிதனுடைய வாழ்க்கையில் எப்பகுதியும் அதன் பார்வைக்கும் ஆணைக்கும் புறம்பானதன்று. அரசு சர்வசக்தியுடையது ; தவறு செய்யாதது. மக்கள் தாமே தனித்தனியே கூடிவாழும் வாழ்க்கைக்கு அத்தகைய அரசில் இடமில்லை. சமயம், தர்மம், கல்வி எல்லாம் அரசுக்குக் கீழ்ப்பட்டனவே. இத்தாலியில் கல்வி சம்பந்தமான சங்கங்களும் பொழுதுபோக்குக் கழகங்களுங்கூடப் பாஸிஸ்டுகளின் கைக்குள் அடங்கியிருக்கின்றன. அரசுக்கும் சமூகத்துக்கும் இடையே உள்ள அடிப்படையான வேறுபாட்டை அழித்து அரசை எல்லாம் வல்லதாகச் செய்வதே ஸமஸ்தவாத அரசின் நோக்கமாகும். தனி மனித சுதந்தர விருப்பம் வேரூன்றிப்போன ஆங்கிலோ ஸாக்ஸன் நாடுகளில் அரசின் காரியங்கள் அதிகரித்து வருகின்றன. இந்த நிலை ஒரு புதுவிதமான ஸமஸ்தவாதமாக மாறலாம் ; அதனை ஜனநாயக ஸமஸ்தவாதமென்று கூறலாம்.

ஸமஸ்தவாதம்

ஆரம்பத்தில் ஸமஸ்தவாதக் கொள்கையென்ற ஒன்று

இருக்கவில்லை. இத்தாலி, ஜர்மனி என்ற நாடுகளில் நிகழ்ந்த அரசியல் நிகழ்ச்சிகளின் போக்கினால் இந்த ஸமஸ்தவாதக் கொள்கை அரசியலில் முன்னணிக்கு வந்தது. பாஸிஸ்டுத் தலைவர்களும் நாஸித் தலைவர்களும் தங்கள் முறைகளையும் செயல்களையும் நியாயமென்று காட்டும்பொருட்டு ஒரு புதிய கொள்கையைக் கண்டுபிடிக்க வேண்டியிருந்தது.

ஸமஸ்தவாத அரசு நடைமுறையில் சர்வாதிகாரம் படைத்தது. ஜர்மனியில் ஹிட்லரையும், இத்தாலியில் முஸ்ஸோலினியையும், ருஷியாவில் ஸ்டாலினையும்போல உள்ள தனிமனிதனது தலைமைக்கு அடங்கி ஜனங்கள் நடக்கவேண்டும். ஸமஸ்தவாதம் தேசிய ஜாதியின் சிறப்பைப் பாராட்டிப் பிறரை எதிர்த்துப் போர் செய்வதையும் ஏகாதிபத்திய வீரிவையும் ஆதரிக்கிறது. நாட்டின் விரிவை வேண்டியும் மூலப் பொருள்களை விரும்பியும், தங்கள் உற்பத்திப்பொருள்களை விற்பனை செய்யும் பொருட்டும் இத்தாலியும் ஜர்மனியும், குடியேற்ற நாடுகளை வேண்டி நிற்கின்றன. ஆதலின் அந்நாட்டுத் தலைவர்கள் யுத்தத்தின் அவசியத்தைப்பற்றி வெளிப்படையாகவே உபதேசம் செய்யவேண்டியிருக்கிறது. இப்போது உலகையே அடிப்படுத்தவேண்டி ஜர்மனி செய்துவரும் அசுரப் போராட்டம் ஸமஸ்தவாதக் கொள்கையின் விளைவேயாகும். ஸமஸ்தவாத அரசு பொதுவுறத் தனியாளும் உரிமையும் பிறரை எதிர்பாராத பொருளாதார நிறைவும் வேண்டுமென்ற நோக்கத்தை உடையது. இந்த இயக்கம் முதலில் பொது ஜனங்களின் ஆதரவு பெற்றதாக இருந்தாலும், இப்போது தம் அதிகாரத்தைச் செலுத்துவதற்காக விவாதத்துக்கிடமான முறைகளை மேற்கொள்ளும் ஒரு கூட்டத்தினரால் நிர்வகிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும் இப்போது ஸமஸ்தவாத அரசாங்கத்தினால் உண்டான விளைவுகளில் சில சிறப்புடையனவாகும். சமதர்மம், பாஸிஸக் கொள்கை, நாஸிக் கொள்கை என்பன நிலவும் தேசத்தில் உள்ள ஜனங்கள் ஒரு குறிப்பிட்ட கொள்கையோடு வாழும் இயல்பும், இறக்கவரினும் கைவிடாத ஒரு தர்மமும் உடையவர்களாக இருக்கின்றனர். அந்த ஸமஸ்த

வாத அரசுகளில் இளைஞரும் முதியரும் சுயநலமற்ற ஊழியம் செய்ய முன்வருகின்றனர். சர்வாதிகாரிகள் இடைவிடாமல் ஜன சமுதாயத்தின் முன்னேற்றத்தின் பொருட்டுப் பாடு பட்டு வருகின்றனர்; வறுமை, வேலையின்மை இவற்றைப் போக்கத் திருப்திகரமான முயற்சிகளைச் செய்கிறார்கள். இதனால்தான் இதுவரையில் ஸமஸ்தவாத அரசுகள் எல்லாம் ஒருவாறு தடையின்றி நிகழ்ந்து வருகின்றன.

ஆனால் இந்த ஆட்சி முறையில் உண்டாகும் நஷ்டம் மிகப் பெரிது. படைகளை ஸித்தமாக வைத்திருத்தல், ஜனங்கள் யாவரையும் ராணுவ மயமாக்கல், தலைவர்களுக்குள்ளே நம்பிக்கைக் குறைவு, பிரதிக்ஞைகளினின்றும் வழுவுதல் என்னும் இவைகளோடு கூடிய இந்த ஆட்சி முறையினால் நிச்சயமாக மனித ஜாதியின் கௌரவம் போய்விடும். இந்த நஷ்டத்தை மக்கள் உணருங்காலம் வரும்போது, தனியாணை செலுத்தும் சர்வாதிகாரம் மறைந்து மனிதனின் சுதந்தர உணர்ச்சி மீண்டும் எழுந்து உயர்ந்து, கிரேக்கர்கள் பெற்ற தைப்போல உச்ச ஸ்தானத்தை அடையும் என்று தோன்றுகின்றது.

எல்லாவற்றையும் ஆலோசிக்கையில் ஜனநாயக ஆட்சியே சிறந்த அரசியல்முறை என்பது அனுபவத்தில் தெரிய வருகிறது. வேறு எந்த முறையிலும் தனி மனித உரிமைக்கும் பொதுஜன நன்மைக்கும் தேசிய வளர்ச்சிக்கும் இவ்வளவு பாதுகாப்பும் சந்தர்ப்பமும் ஏற்படுவதில்லை.

அத்தியாயம் 9

அரசியல் திட்டங்களின் வகை

ஒவ்வோர் அரசிலும் அதற்கெனக் குறிப்பிட்ட அரசியல் திட்டம் ஒன்று உண்டு. அதன்படியேதான் அரசியல் விவகாரங்கள் நடைபெறும். அரசியல் திட்டமானது அரசாங்கத்தின் அதிகார எல்லையை நிர்ணயித்துத் தனி மனி

தனுக்கு இன்றியமையாதவையான சில மூலாதார உரிமை களைத் தெளிவாகக் குறிப்பிடுகின்றது. தனி மனிதர்களும் சங்கங்களும் அரசுக்கு எவ்விதம் கட்டுப் பட்டவர்க ளென்பதையும், அவர்களுக்கு அரசியல் அதிகாரத்தில் எவ்வளவு தொடர்பு உண்டு என்பதையும் அத்திட்டம் நன்கு விளக்கும்; சட்டசபை, நிர்வாகம், நீதி இலாகா என்பவற் றின் அமைப்பையும் அதிகார வரம்புகளையும் நிர்ணயம் செய்யும்.

அரசியல் திட்டத்தின் உள்ளுறை

அரசின் அதிகாரம் வரம்பு கடந்து சென்றால் அதைத் தடைப்படுத்தி நிறுத்துவதுதான் அரசியல் திட்டத்தின் முக்கிய உபயோகம். ஒவ்வோர் அரசுக்கும் அரசியல் திட் டம் ஒன்று இருந்தே தீரவேண்டும். அரசாங்கத்திற்கும், சமூகத்தின் பல பகுதிகளுக்கும் ஏற்படும் தொடர்பை நிர்ண யிக்கும் மூலாதாரக் கொள்கைகளும் விதிகளும் அத்திட்டத் திலல் ஏற்படும்; அவை இல்லாவிடின் அரசியல் நிலைமை சீர்குலைந்து போகும்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் வேறு பல தேசங்களி லும் அரசியல் திட்டம் சட்ட பூர்வமாக அமைந்துள்ளது. பிரிட்டனிலுள்ள அரசியல் திட்டம் ஒன்றுதான் அவ்வாறு அமையவில்லை. ஆயினும் அங்கேகூட அரசியல் விதிகளும் முறைகளும் சில நிர்ணயமான சட்டங்கள் மூலமாகவும் நீதிமன்றத்துத் தீர்ப்புகள் மூலமாகவும் ஓரளவு அறியக்கிடக் கின்றன. பிரிட்டனில் நடைமுறையில் சில சம்பிரதாயமான வரையறைகளும் முறைகளும் உண்டு; அந்தச் சம்பிரதாயங் களுக்கும் சட்டபூர்வமாக ஏற்பட்ட விதிகளைப் போன்ற செல்வாக்கும் சிறப்பும் உண்டு.

சட்ட பூர்வமான அரசியல் திட்டங்களில் திருத்தங்கள் செய்வது கஷ்டம். திருத்தங்களை நிறைவேற்றுவதற்குத் திட்டத்தில் குறித்துள்ளபடி ஒரு தனி ஸ்தாபனம் ஏற்பட வேண்டும்; அல்லது ஒரு தனி முறையை மேற்கொள்ள வேண்டும். பிரிட்டனிலோ இத்தகைய அவசியம் இல்லை. அங்கே அரசியல் திட்ட மாறுதல்கள் சாதாரணச் சட்டங்கள்

நிறைவேறுவதைப்போலவே மிக எளிதில் சட்டசபைகளில் நிறைவேறக்கூடும். இதற்காகத்தான் பிரிட்டிஷ் அரசியல் திட்டத்தைச் சமயத்திற்கு ஏற்ப நெளிந்து கொடுக்கும் திட்டமென்று சொல்லுகிறார்கள். அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் பிரான்ஸ் முதலிய தேசங்களிலும் திருத்தங்கள் எளிதில் நிறைவேறுதல் அரிது. அவ்வரசியல் திட்டங்கள் நெளிவுள்ளன அல்ல.

சட்ட பூர்வமான திட்டமும் சம்பிரதாயமும்

முக்கியமாக அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியல் முறையில் ஒரு சிறிய மாறுதல் ஏற்படவேண்டுமானாலும் அது மிகவும் சிரமமான காரியம். ஜனப் பிரதிநிதி சபையான காங்கிரஸினால் அதைச் செய்யமுடியாது. காங்கிரஸ் சபையும், சமஷ்டியில் அடங்கியுள்ள நாடுகளால் நியமனம் செய்யப்பெற்ற பிரதிநிதிகளடங்கிய கூட்டுச்சபைகளும் சேர்ந்து அம்மாறுதலுக்குத் தங்கள் உடன்பாட்டை அளிக்கவேண்டும். 'நெருக்கடியான காலங்களில் இப்படி ஊர்கூடிச் செக்குத் தள்ளும் காரியம் எளிதில் நடக்கக்கூடியதா? முக்கியமாகச் செய்யவேண்டிய மாறுதல்கள் தடைப்பட்டு ஒரு கால் அரசுக்கே கேடு விளையக்கூடுமே' என்று சிலர் கருதலாம். ஆனால் சென்ற நூற்றைம்பது வருஷங்களில் நீதிபதிகளின் தீர்ப்புக்களாலும், விசேஷ யுக்தி உபாயங்களாலும் அமெரிக்க அரசியல் திட்டத்தில் மாறுதல்கள் நடந்தேறி வந்திருக்கின்றன.

இப்போது நடக்கும் உலக யுத்தத்தினால் பெரிய நெருக்கடி நேர்ந்தபோது அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தலைவரான ரூஸ்வெல்ட்டு தாமாகவே அரசியல் முறையில் சில அவசியமான மாறுதல்களை நிறைவேற்றிவிட்டார். பிறகு அவை தடையின்றி அங்கீகரிக்கப்பட்டன. 'நெளியாத அரசியல்' என்று சொல்லும் அரசியலுள்ள ஐக்கிய அமெரிக்காவில் கூடச் சமயத்திற்கு ஏற்ப அரசியல் திட்ட மாறுதல்கள் இவ்வாறு நிறைவேறுவதைக் கவனிக்கும்போது அத்திட்டங்களில் 'நெளிவுள்ளது', 'நெளியாதது' என்ற பாகுபாடு அவ்வளவு சிறப்பாகத் தோன்றவில்லை. நெளிந்து கொடுக்கும்

அளவில்தான் வேறுபாடு இருக்கின்றதேயன்றி நெளிவே இல்லாதது என்று சொல்லும்படி ஐக்கிய அமெரிக்க அரசு இருக்கவில்லை யென்றே எண்ணவேண்டி யிருக்கிறது.

சட்ட பூர்வமான அரசியல் திட்டத்தில் அரசாங்க அமைப்பைப் பற்றிய முடிவான நியதிகளையும், அரசியல் அதிகாரத்தைச் செலுத்துவதைப்பற்றிய விதிகளையும் குறித்தல் ஒருவிதத்தில் மிகவும் விரும்பத்தக்கதே. அவ்விதிகள் பொதுஜனங்களால் ஆலோசிக்கப்பட்டு அவர்கள் சம்மதத்தைப் பெற்ற பிறகே அரசியற் சட்டமாக நிறைவேற முடியும். மேலும் சட்ட பூர்வமான அரசியல் திட்டத்தின் விதிகளுக்கு ஒரு தனி மதிப்பு உண்டு. முக்கியமாய், சிறுபான்மை வகுப்புகள், சிறுபான்மை மக்கள் ஆகியவர்களுடைய அபிவிருத்திக்கு வேண்டிய சுதந்திரங்களும் உரிமைகளும் அத்திட்டத்தில் காணப்பெறின் அவர்கள் அதை மிகவும் ஆதரித்துத் தழுவி வருவார்கள். திருப்தியைத் தரும் ஓர் அரசியல் திட்டம் சுருக்கமாக இருப்பதுடன், அரசியல் அமைப்பின் முக்கிய அம்சங்களை மாத்திரமே தெளிவாகக் குறித்துக் காட்டவேண்டும். அதிக விரிவாக இருந்தால் நெருக்கடியான காலங்களில் அரசியற் போக்கில் இடையூறுகள் ஏற்பட்டுவிடும். எப்போதும் அரசியல் விதிகளும் முறைகளும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடி மாறக்கூடியவையாக இருப்பதுதான் நலம். சட்டபூர்வமான அரசியல் திட்ட விதிகளின் வியாக்கியான விஷயத்தில் அபிப்பிராய பேதங்கள் கிளம்பிக்கொண்டே யிருக்கும்; திட்டம் மிக விரிவாயிருப்பின் விவாதங்களும் அதிகமாகும்; அவற்றைத் தீர்க்கும் அதிகாரமும் பொறுப்பும் நீதிபதிகள் தலையில் அளவுக்கு மிஞ்சிய சுமையாக அமையும்.

சட்ட பூர்வமான திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

அரசியல் திட்டங்களை **ஐக்கிய ஆட்சித் (யூனிடரி)** திட்டங்களென்றும், **சமஷ்டி** அல்லது கூட்டு ஆட்சித் **(பெடரல்)** திட்டங்களென்றும் இருவகைகளாகப் பிரிக்கலாம். ஐக்கிய ஆட்சி அமைப்பில், அதிகாரம் முழுவதும் ஒரு மத்திய ஸ்தாபனத்தினிடம் அமைந்திருக்கும். உதாரணமாக பிரிட்ட

னில் பார்லிமெண்டு மகாசபை சர்வாதிகாரம் பெற்றுள்ளது.

ஐக்கிய ஆட்சித் திட்டமும் சமஷ்டித் திட்டமும்

பிரிட்டிஷ் ஸ்தல ஸ்தாபனங்கள் யாவும் பார்லிமெண்டின் அதிகாரத்துக்கு முற்றும் அடங்கியவை. ஸ்தல ஸ்தாபன அதிகாரங்களைக் கொடுத்தலும் எடுத்தலுமாகிய உரிமைகள் அந்த மத்திய ஸ்தாபனத்திற்கே உள்ளன.

சமஷ்டி அமைப்பு அத்தகையதன்று. ஒன்று சேர்ந்து ஒரு புதிய கூட்டு அரசியலை அமைக்க ஒப்பந்தம் செய்து கொண்ட தனி நாடுகளும், புதிதாய் ஏற்படுத்தப்பெற்ற மத்திய சமஷ்டி அரசாங்கமும் அரசியல் அதிகாரங்களைத் தம்முள் பகிர்ந்துகொள்ளும். இவ்வதிகாரப் பிரிவினையைச் சமஷ்டி சர்க்கார் தன் இஷ்டப்படி மாற்றிவிட முடியாது. அதிகாரப் பிரிவு விதிகளின் பொருள் சம்பந்தமாக விவாதங்கள் ஏற்பட்டால் சமஷ்டி நீதிஸ்தாபனம் அவற்றை விசாரித்துத் தீர்ப்பு அளிக்கும். சமஷ்டி அமைப்பில் பேர்போன அரசுகள் அமெரிக்க ஐக்கிய நாடுகளும் ஸ்விட்ஜர்லாந்துமே.

சமஷ்டி அமைப்பில் சில நன்மைகள் இருக்கின்றன. அமெரிக்க ஐக்கிய நாடுகள் போன்ற மிக்க விரிவான தேசங்களுக்குச் சமஷ்டி அரசியலே ஏற்றதாகும். அமெரிக்க ஐக்கிய நாட்டு அரசில் நாற்பத்தெட்டுத் தனி நாடுகள் சேர்ந்திருக்கின்றன. அவற்றில் ஒவ்வொன்றும் விஸ்தீரணத்தில் சில பெரிய ஐரோப்பிய நாடுகளுக்குச் சமானமாகும். வெகு தூரம் பரவியுள்ள அப் பிரதேசங்களுக்கு, சமஷ்டி அமைப்பினால்தான் ஒன்றுபட்ட ஆட்சியின் நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன. சமஷ்டியில் அடங்கிய தனி நாடுகள் அதிகார வரம்புக்குள் அரசியலை நடத்தி வரலாம். அந்த அந்தப் பிரதேசங்களுக்கு ஏற்றவாறு பரீக்ஷார்த்தமாக ஸ்தல ஸ்தாபனங்கள் முதலியவைகளை ஏற்படுத்திப் புதிய விதிகளைச் செய்யலாம்; அவைகளினால் விளையும் நன்மை தீமைகளிலிருந்து நூதன அனுபவத்தையும் அரசியல் அறிவையும் பெறலாம். மேலும், சமஷ்டி அமைப்பின்கீழ் ஒவ்வொரு தனி

சமஷ்டியின் நலன்களும் குறைகளும்

மனிதனும் சமஷ்டி அரசியலின் பிரச்னைகளும் சிக்கல்களும் தனக்கு நெருங்கிய சம்பந்தமுள்ளவை யல்லவென்ற நினைவினால் அவைகளை அசட்டை செய்தாலும், தன் சொந்த நாட்டின் அரசியல் விஷயங்களில் ஈடுபட்டு ஊக்கத்துடன் தொண்டு செய்து வரச் சந்தர்ப்பங்களும் சௌகரியங்களும் அதிகம் உண்டு. ஆகையால் ஒரு பிரஜைக்கு ஸ்தல ஆட்சியில் தீவிர உணர்ச்சியும், தேசிய உணர்ச்சியும் உண்டாகின்றன. அன்றியும், அரசியல் விஷயங்களையும் அதிகாரங்களையும் சமஷ்டி ஸ்தாபனத்திற்கும் அதற்கு அங்கமாகிய தனி நாடுகளின் அரசாங்கங்களுக்கும் பிரித்துக் கொடுப்பதால், நிர்வாகம் எளிதாகிறது. திருப்திகரமாக அமைக்கப்பெற்ற சமஷ்டி அரசியலில்தான் பிரஜாவுரிமைகள் போதுமான அளவில் பாதுகாக்கப்பெறும். எனவே, அரசியல் கூட்டுறவு இயக்கத்தில் சமஷ்டி அமைப்புத்தான் முன்னேற்றத்திற்கு வழி காட்டியாகிறது. ஆனால், அதை ஏற்று நடத்தும் தலைவர்கள் மிக்க திறமையும் அறிவுத்திறனும் வாய்ந்தவர்களாக இருக்க வேண்டும்.

சமஷ்டி அமைப்பின் ஒரு பெரிய குறை நெருக்கடிக் காலங்களில்தான் வெளிப்படுகிறது. யுத்த காலத்திலும், வெளிநாட்டு விஷயங்களில் ஏற்படும் சிக்கல்களைச் சரிப்படுத்தவேண்டி வரும் காலத்திலும் சமஷ்டி அரசியல் திறமையாகவும் திருப்திகரமாகவும் நடைபெறுவதில்லை. இரட்டை ஆட்சியின் காரணமாக வீண்செலவும், கவைக்குதவாத சிக்கல்களும் ஏற்படுவது மற்றொரு குறையாகும். சில தனி நாடுகள் சமஷ்டி அரசாங்கத்துடன் உறவு பூணுமல் முரண்பட்டால் பொதுச் சட்டங்களைப் பிரயோகிக்கலாம்; ஆனால் தாக்ஷிண்யமின்றி எங்கும் ஒரே மாதிரியாக அச்சட்டங்களை நிறைவேற்றி வைப்பது சமஷ்டி அரசாங்கத்திற்கு எளிதில் இயலாத காரியமாகி விடுகிறது. அதனால்தான் சமஷ்டி அரசாங்கங்களெல்லாம் நாளடைவில் தனி நாடுகளின் செல்வாக்கைக் குறைத்து மத்திய ஸ்தாபனத்தின் அதிகாரங்களை விரிவாக்கிப் பலப்படுத்தும் நோக்கத்தைக் கொண்டுள்ளன.

ஐக்கிய ஆட்சி அமைப்பில் சிக்கல் இல்லாமையால் அவ் வாட்சி எளிதில் நடைபெறக் கூடும். நாடெங்கும் ஒரே விதமான சட்டமும் நிர்வாகமும் நிலைபெறுவதால் அரசாங்க வேலைகளைத் திறமையுடன் நடத்த ஏது உண்டாகிறது. நிர் வாக உத்தியோகஸ்தர்களும் பொறுப்புடனும் ஊக்கத்துட னும் தங்கள் வேலைகளைச் செய்துவருகிறார்கள். ஆனால், எல்லா அதிகாரங்களும் மத்திய சர்க்காரிடத்தில் குவிந்துள் ளமையால், ஸ்தல சுயஆட்சி ஸ்தாபனங்களின்பால் பிரஜை களுக்கு மதிப்பு இருத்தல் அரிது. இக் காரணத்தினல் ஸ்தல சுய ஆட்சியில் பிரஜைகளுக்கிருக்கும் ஊக்கமும் சௌகரியங்களும் குறைந்து போகக்கூடும். ஆயினும் இரண்டு ஆட்சிகளையும் சீர்தூக்கிப் பார்க்கின், ஐக்கிய ஆட்சி யில்தான் அதிக நலம் காணப்படும்.

அத்தியாயம் 10

அரசாங்க அமைப்பு—I

நிர்வாகம்

இக்கால அரசாங்கத்தின் வேலைகள் மூவகைப்படும். அவை சட்டம் இயற்றுதல், நிர்வாகத்தை நடத்துதல், நியாயம் செலுத்துதல் என்பனவாம். முற்காலத்தில் இம்மூன்று செயல்களையும் நாட்டின் தலைவர் ஒருவரே நடத்திவந்தார். இக்காலத்து அரசாங்கங் களில் இவ்வேலைகளை மூன்று தனி ஸ்தா பனங்கள் செய்துவருகின்றன. பதினெட் டாம் நூற்றாண்டில் மான்டெஸ்க்யூ என்ற பிரசித்தி பெற்ற பிரெஞ்சு அரசியல் அறிஞர், "சுதந்திரம் நிலைபெற வேண்டு மானல் அரசாங்க அதிகாரங்கள் ஒரே ஸ்தாபனத்தினிடம் குவிந்திருத்தல் கூடாது" என்று சொன்னர். அதற்குக் காரணம் பின்வருமாறு: "சட்ட நிரூபணம், நிர்வாகம்

அதிகாரப் பாகுபாட்டுக் கோள்கை

என்னும் இரண்டு அதிகாரங்களும் ஒரே மனிதனிடமோ அல்லது ஒரே ஸ்தாபனத்தினிடமோ சேர்ந்திருந்தால், குடிகளின் உரிமைக்கு ஊறு விளையும். ஒரே அரசன் அல்லது நிர்வாக சபை கொடுமையான சட்டங்களை இயற்றி அவற்றைக் கடுமையான முறையில் உபயோகிக்கவும் இடமேற்படும். சட்ட நிரூபணம், நிர்வாகம் என்பவற்றினின்று நீதி பரிபாலன அதிகாரத்தைப் பிரிக்காவிட்டாலும் நாட்டில் சுதந்திரம் இராது. அது சட்ட நிரூபணத்துடன் சேர்ந்து இயங்குமேல், பிரஜைகளின் உடல், பொருள், ஆவி இவற்றின்பாலும் யதேச்சாதிகாரம் செலுத்த இடம் ஏற்படும். சட்டம் இயற்றுபவனே நீதிபதியுமாக இருப்பதுதான் இதற்குக் காரணம். நிர்வாகத்துடன் சேர்ந்தால் நீதிபதி அநீதிபதியேயாவான்." எனவே, அரசாங்கத்தின் மூன்று ஸ்தாபனங்களும் ஒன்றை ஒன்று அடக்கிவரும் முறையில் அமைக்கப்பட வேண்டுமென்று அவர் யோசனை கூறினார். இதற்கு **அதிகாரப் பாகுபாட்டுக் கொள்கை** என்று பெயர். அமெரிக்க நாடுகளின் அரசியல் திட்டத்தை வகுத்தவர்கள் இக்கொள்கைக்கு மிக்க மதிப்பு அளித்தனர்.

அரசியல் அதிகாரங்களைப் பொறுப்புணர்ச்சி இன்றிச் செலுத்துவதனால் விளையும் தீமைகளைச் சுட்டிக் காட்டுவதுதான் மேற்சொன்ன கொள்கையின் உண்மையான நோக்கம். ஆனால் அனுஷ்டானத்தில் மான்டெஸ்க்யூ சொல்லியபடி அதிகாரப் பிரிவினை முழுதும் நடைபெறுவது இயலாத காரியம். அரசியல் திருப்திகரமாய் நடைபெறுவதற்கு, அதிகாரம் வகிப்பவர்களைப் பொறுத்த வரையில் இம்மாதிரியான அதிகாரப் பாகுபாடு அவசியமன்று. அன்றியும் மேலே சொல்லிய மூன்றுவிதமான அரசியல் வேலைகளும் செல்வாக்கிலும் தலைமையிலும் சமமாகா. இந்நாள் ஜனப் பிரதிநிதி ஆட்சியில் சட்ட சபைக்குத்தான் பேரதிகாரம் உண்டு; சட்டங்களை நிறைவேற்றும் கடமையைப் பெற்ற மந்திரிகள் சட்டசபையின் சம்மதத்தின் மேல்தான் நியமிக்கப்பெறுகிறார்கள். சட்ட சபையின் தீர்மானங்களை மீறி நிர்வாக அதிகாரிகள் நடக்க முடியாது. அரசாங்க அதி

காரங்களின் எல்லைகளைத் தெளிவாய் நிர்ணயம் செய்வது அவசியமே. ஆனால், மூன்று அரசியல் உறுப்புக்களையும் ஒன்றுக்கொன்று சம்பந்தமின்றி, தனிப் பகுதிகளாகச் செய்துவிட்டால் அரசாங்கத்தின் ஐக்கியம் சீர்குலையும்; முரண்பாடுகளும் ஏற்படும். ஆயினும், இக்கால அரசில் சுதந்திரம் நிலைபெறுவதற்கு மிகவும் இன்றியமையாத ஓர் அரசியல் அம்சத்தை மான்டெஸ்க்யூ தமது அதிகாரப் பிரிவினைக் கொள்கையின்மூலம் வற்புறுத்தியிருக்கிறார் என்பதில் சற்றும் சந்தேகமில்லை.

அரசியல் அங்கங்கள் மூன்றிலும் நிர்வாகப் பகுதியே பொதுமக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. நடைமுறையில், நிர்வாக உத்தியோகஸ்தர்களுடன்தான் ஒவ்வொரு பிரஜைக்கும் தினந்தோறும் சம்பந்தம் இருந்து வருகிறது. இக்காரணத்தினால் அவ்விஷயத்தை முதலில் கவனிப்போம்.

ஜனப் பிரதிநிதி சபை இயற்றும் சட்டங்களின் மூலம் நிர்ணயமாகும் விஷயங்களை அனுஷ்டானத்துக்குக் கொண்டு வருவதுதான் நிர்வாகப் பகுதியின் முக்கியமான வேலை. ஆகையால் ஆலோசனைச் சபையின் அமைப்பிலிருந்து நிர்வாக அங்கத்தின் அமைப்பு வேறுபடும். நிர்வாகத்திற்கு முக்கியமாக வேண்டியது திறமை. அத்திறமை ஏற்பட வேண்டுமானால், நிர்வாக அதிகாரங்கள் வேலைக்குத் தக்க வாறும் எளிதில் செலுத்தப்பெறும் முறையிலும் சில உத்தியோகஸ்தர்கள் கைகளில்தான் இருத்தல் வேண்டும்.

பெரும்பாலும் இக்கால அரசாங்கங்களில் பேருக்கு மாத்திரமே நிர்வாகத் தலைவர் ஒருவர் இருக்கிறார். அவர் பெயரால் நிர்வாகம் நடைபெறும். ஆனால் உண்மையில் பொறுப்புள்ள மந்திரிகளே முக்கிய அரசாங்க வேலைகளை நடத்திவருகிறார்கள். பிரிட்டன் போன்ற சில தேசங்களில் பரம்பரையாக ஓர் அரசர் தலைமை வகித்து வருகிறார். பிரான்ஸ், அமெரிக்க ஐக்கிய நாடுகளைப் போன்ற தேசங்களில் இருப்பதுபோல, நேர்முகமாகவோ அல்லது பிரதிநிதிகள் மூல

நிர்வாக வேலைகள்

மாகவோ குறித்த காலத்திற்குப் பிரஜைகளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் தலைவராகலாம். இந்தத் தலைவரின் உத்தியோக காலம் மூன்று வருஷம் முதல் ஏழு வருஷம் வரையில் நீண்டிருக்கும். தலைவர் ஸ்தானம் கிடைத்த ஒருவர் சாதாரணமாக நெருக்கடிகள் ஏற்படாவிடில் மறுபடியும் தேர்தலுக்கு நிற்பதில்லை.

நிர்வாகப் பகுதியின் வேலைகளைப் பின்வருமாறு வகுக்கலாம்:—

(1) **லிவில் வேலை** :—உள்நாட்டுச் சட்டங்களையும் விதிகளையும் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருவது, காரியக்கிரமத்தை மேற்பார்வை யிடுவது, முக்கிய உத்தியோகஸ்தர்களையும், சர்க்கார் ஏஜெண்டுகளையும் சட்டசபையின் அனுமதி பெற்றோ தானாகவோ நியமிப்பது.

(2) **ராணுவ வேலை**:—அநேகமாக நிர்வாகத் தலைவர் தாம் நாட்டின் சைனியத்திற்குப் பிரதம அதிபதியாக இருப்பார். அரசின் உத்தரவை அனுசரித்து அவர் படையை எவ்விதத்திலும் தம் இஷ்டம்போல் உபயோகிக்கலாம். யுத்த காலங்களில் அவருடைய அதிகாரமும் பொறுப்பும் அளவில்லாதவையாகும்.

(3) **ராஜதந்திர வேலை** :—வெளிநாட்டு விஷயங்களை நடத்துவது, தூதர்கள் முதலிய ராஜதந்திர உத்தியோகஸ்தர்களை வரவேற்பது, அனுப்புவது, புதிய அரசுகளையும் அரசாங்கங்களையும் தனக்குச் சமமாக ஏற்றுக் கொள்ளுவது, சட்ட சபையின் அனுமதியுடனே இன்றியோ ஒப்பந்தங்கள் முதலியவற்றைச் செய்தல்.

(4) **நீதி விநியோகம்** :—குற்றவாளிகளை மன்னிக்கவோ தண்டனைகளைக் குறைக்கவோ நிர்வாகத் தலைவருக்கு அதிகாரம் உண்டு. ஒரே காலத்தில் பலர் செய்த குற்றத்தை மன்னித்து விடுதலை உத்தரவு இடவும் அவருக்கு அதிகாரமுண்டு. நிர்வாக உத்தரவுக்கு இணங்கி உத்தியோகஸ்தர்கள் மேற்கொள்ளும் முறைகளினாலோ, செயல்களினாலோ ஏற்படும் கஷ்ட நஷ்டங்களிலிருந்து அவர்களைக் காப்பாற்றலாம்.

(5) சட்ட நிர்மாண வேலை;—நிர்வாக இலாகாவுக்கு விதிகளை விதிக்கும் முக்கிய அதிகாரம் உண்டு. அவசரச் சட்டங்களையும் பொது விதிகளையும் யாருடைய சம்மதமு மின்றி இயற்றலாம். இவற்றிற்குச் சட்ட சபையால் நிர் மாணிக்கப் பெற்ற சட்டங்களைப் போன்ற செல்வாக்கு உண்டு.

நிர்வாக இலாகாவுக்கு இம்மாதிரியான பரந்த அதிகா ரங்கள் இருப்பதால், அவ்விலாகா தன் இஷ்டம்போல் அதி காரம் செலுத்தக்கூடும். பிரிட்டிஷ் நீதிபதி ஒருவர் இத் தகைய புதிய யதேச்சாதிகாரத்தை முற்றும் தாக்கி எழுதி யிருக்கிறார். சில சமயங்களில், சட்டசபை இயற்றிய சட் டங்களைக் கூட, சரியாகப் பரிசோதனை செய்யப்படவில்லை என்ற வியாஜத்தால், நிர்வாகப்பகுதி நிறைவேற்றுமல் முட் டுக்கட்டை போடலாம். என்றாலும் கடைசியில் சட்ட சபையின் அதிகாரமே ஓங்கி நிற்கும்.

உண்மையில் இப்பொழுது நிர்வாகம் நடத்திவருபவர் களைப்பற்றி இனி ஆராய்வோம். பிரிட்டன், பிரான்ஸ் முதலிய தேசங்களில் முழு நிர்வாகப் பொறுப்பும் அதிகா ரமும் மந்திரி சபையிடம் ஒப்பிக்கப்பட்டிருக்கின்றன. அச் சபைக்குப் பிரதம மந்திரியே தலைவர் ஆவர். மந்திரிசபை சட்டசபைக்குப் பதில் சொல்லவேண்டிய பொறுப்புடை யது. அதனால் அதற்குப் **பார்லிமெண்டரி நிர்வாகம்** என்று பெயர். அமெரிக்க ஐக்கியநாடுகளில் நான்கு வருஷங்களுக்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப் படும் குடியரசுத் தலைவரே பேருக்கும் உண்மையிலும் நிர்வாகத்தலைவர். அவ ருடைய மந்திராலோசனைச் சபையின் அங்கத்தினர்கள் அவருக்குத்தான் பதில் சொல்லவேண்டிய வர்களாகையால் அவருடைய அதிகாரத்திற்கு முற்றும் கீழ்ப்பட்டவர்கள். இதற்குத் தலைவரின் நிர்வாகம் என்று பெயர்.

பார்லிமெண்டரி நிர்வாகமும் தலைவரின் நிர்வாகமும்

ஸோவியத் ருஷ்யா, ஸ்விட்ஜர்லாந்து என்னும் இரண்டு தேசங்களில் மாத்திரமே, நிர்வாக அதிகாரம் முழுதும் ஒரு

மந்திரிக் கூட்டத்தினிடம் அளிக்கப்பெற்றுள்ளது. மந்திரி சபை நிர்வாக முறையைக் கூட்டு நிர்வாகம் என்றும், அமெரிக்க ஐக்கிய நாடுகளில் நடைபெறும் தலைவரின் நிர்வாக முறையைத் தனி நிர்வாகம் என்றும் சொல்லலாம்.

நிர்வாக உத்தியோகஸ்தர்கள் வரம்பு கடந்து அதிகாரம் செலுத்தாமலும், பிரஜைகளை வருத்தாமலும் நடந்துவரும் படிச் செய்வதில் மந்திரிசபை நிர்வாக முறையே சிறந்தது. சட்டசபையை மீறி ஆக்கிரமிக்கவும், பிரஜா வுரிமைகளை நிராகரிக்கவும் இம் முறையில் சாமானியமாக இயலாது. பொதுவாகத் தனி நிர்வாகத் தலைவரைவிட, மந்திரி சபை நிர்வாகத்தார், திறமையும் புத்திநுட்பமும் வாய்ந்தவர்களாக இருப்பர். சட்ட சபைத் தீர்மானங்களை அநுஷ்டானத்துக்குக் கொண்டு வரவேண்டிய கடமையோடு, தேசமுன்னேற்றக் கொள்கைகளுக்கு ஏற்ற திட்டங்களை வகுப்பதும் நிர்வாகப்பகுதியின் பொறுப்பு; ஆகையால், ஒரு மந்திரிசபைதான் அவைகளைத் திருப்தியும் வெற்றியும் உண்டாகும்படி செய்து முடிக்கக்கூடும். ஆனால் மந்திரி சபை நிர்வாக முறையில் ஒரு பெரிய குறை உண்டு: நிர்வாகப் பொறுப்பு, பலரிடத்தில் இருக்கிறது; அதனால் பலர் கூடி ஆலோசனை செய்யவேண்டிய அவசியம் நேரும் போது சில சமயத்தில் காரியப்போக்குத் தாமதப்படும்.

இரண்டு நிர்வாக முறைகளின் நன்மை தீமைகள்

அநேகமாக நவீன ஜனநாயக அரசாங்கங்கள் மேற் சொல்லிய மந்திரிசபை நிர்வாக முறையையோ, தலைவரின் நிர்வாகம் அல்லது காங்கிரஸ் நிர்வாகமுறையையோ மட்டுமே தழுவி வருகின்றன.

மந்திரிசபை நிர்வாகத்தின் முக்கிய அம்சமாவது நிர்வாக சபையின் அங்கத்தினர் சட்டசபைக்கு வரும் ஜனப் பிரதிநிதிகளிலிருந்து தெரிந்தெடுக்கப் பெறுவது. ஆதலின் மந்திரிசபையைச் சட்டசபையின் ஒரு பொறுக்குக் கூட்டம் என்றே கூறலாம். அது சட்ட சபைக்குப் பதில் சொல்லியாக வேண்டும். மந்திரிசபை அங்கத்தினர்கள் பிரதிநிதி சபையில் எந்தக்கட்சி பெரும்

மந்திரி சபை

பான்மைக் கட்சியாக உள்ளதோ, அந்தக் கட்சி அங்கத் தினர்களிலிருந்தே பொறுக்கப்படுகிறார்கள். பல கட்சிகள் இருந்துவரும் நாடுகளில் அரசியலில் கலந்து உழைக்கச் சம்மதிக்கும் பிரபல கட்சிகளின் முக்கிய அங்கத்தினர்களைச் சேர்த்துக் கூட்டு மந்திரிசபை அமைப்பதும் உண்டு.

சட்ட சபையின் தலைமைப் பொறுப்பையும் சட்டங் களை நிறைவேற்றும் பாரத்தையும் மந்திரி சபை வகிக்கிறது. அரசியற் கட்சிப் பற்று இல்லாமல் உள்ள நிரந்தரமான சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் மூலம் மந்திரிகளின் மேற் பார்வையில் நிர்வாக இலாகாக்களின் வேலை நடைபெறும்; ஆயினும் நிர்வாகத்தின் முழுப் பொறுப்பும் மந்திரி சபை யைத்தான் சேர்ந்தது. மந்திரிகளின் உத்தியோக வாழ்வு அவர்களுக்குச் சட்டசபையில் இருக்கும் ஆதரவைப் பொறுத்தது. அச்சபையில் தோல்வியடைந்தால் மந்திரிப் பதவியை விட்டு அவர்கள் நீங்கவேண்டும். கூட்டுக் கட்சி களின் நிர்வாக முறையில் சர்க்கார் எதிர்பாராத தோல்வி அடையக்கூடுமாகையால், மந்திரி சபையில் அடிக்கடி மாறு தல்கள் ஏற்படும். இதனால் நிர்வாக வேலைத் திறமை குறைவுபடும்.

மந்திரிகள் தாங்கள் தலைமை வகிக்கும் இலாகாக்களைப் பற்றிய விஷயங்களில் சட்டசபைக்குப் பதில்சொல்லவேண் டிய பொறுப்புள்ளவர்களா யிருப்பார்கள்; அன்றியும் மொத் தத்தில் அவர்கள் சர்க்காரின் பொதுக் கொள்கைகளுக்கும் காரியக் கிரமத்திற்கும் பொறுப்பாளிகள் ஆவார்கள். வாக் காளர்களின் ஆதரவு கிடைக்குமென்ற நிச்சயம் இருந்தா லொழிய, ஏதாவது ஒரு முக்கிய விஷயத்தில் சட்டசபையில் தோல்வி அடைந்தால் மந்திரி சபை சாதாரணமாக ர்ராஜீ நாமாச் செய்துவிட வேண்டும். அம்மாதிரியான சந்தர்ப்பங் களில் சட்டசபையைக் கலைத்து, மறு தேர்தல் நடத்த உத் தரவு இடும்படி அரசின் தலைவரைத் தூண்டலாம். மற் றொரு முக்கிய அம்சம் மந்திரிகளிடையேயுள்ள ஒற்றுமை யும் ஒத்துழைப்புமாம். ஏதாவது ஒரு முக்கியக் கொள்கை யைப்பற்றியோ, காரியக் கிரம விஷயங்களைப்பற்றியோ

ஒரு மந்திரிக்கும் அவர் தோழர்களுக்கும் அபிப்பிராய பேதம் ஏற்பட்டால் அம்மந்திரி ராஜீநாமாச் செய்துவிட வேண்டும்.

மந்திரி சபை நிர்வாக முறையில் காணும் விசேஷங்கள் பின்வருமாறு :—

மந்திரிசபை நிர்வாக முறையின் முக்கிய அம்சங்கள்

(1) **ஒற்றுமை**—ஜனப் பிரதிநிதி ஆட்சியில் மந்திரிசபை முறையில் மாத்திரமே நிர்வாக அங்கத்தினருக்கும் சட்ட சபைக்கும் பூரண ஒற்றுமையும் ஒத்துழைப்பும் ஏற்படுகின்றன. அதிகாரப் பிரிவினைக் கொள்கைக்கு ஆதரவு அளிக்காமல், அதிகாரங்களைக் குவித்து ஓரிடத்தில் பொறுப்பு ஏற்றுவதே இந்நிர்வாக முறையின் முக்கிய அம்சம். பிரிட்டனில் பண சம்பந்தமான மசோதாக்களைச் சட்டசபையில் கொண்டுவரும் உரிமை மந்திரி சபைக்கு மாத்திரமே உண்டு. ஆதலின், ஆதிமுதல் கடைசி வரையில், சட்டம் இயற்றிப் பணம் அளிக்கும் அதிகார ஸ்தாபனத்திற்கும் சட்டத்தை நிறைவேற்றிப் பணத்தைச் செலவழிக்கும் நிர்வாக ஸ்தாபனத்திற்கும் ஒத்துழைப்பு அதிகம் இருக்கும். முரண்பாடுகளும் முட்டுக்கட்டைகளும் நேர்வது துர்லபம்.

(2) **பொறுப்பு** :—தன் நிர்வாகக் கொள்கைக்கும் காரியக் கிரமத்திற்கும் சட்டசபையில் பெரும்பான்மையோரின் ஆதரவு இல்லாவிடின் மந்திரி சபை ராஜீநாமாச் செய்துவிட வேண்டும்; இன்றேல் சட்டசபையைக் கலைத்துப் புதிய தேர்தலுக்கு ஏற்பாடு செய்யவேண்டும். இந்த நியதி இருத்தலினால் சர்க்கார் எப்பொழுதும் ஜனங்களுக்குக் கீழ்ப்பட்டுள்ளதாகவே இருக்கும். வாக்காளர்களின் அபிப்பிராயத்திற்கு விரோதமாக யாதொரு கொள்கையும் நடவடிக்கையும் நீடித்து நடைபெறுவது முடியாத காரியம். ஆகையால் மந்திரி சபை ஆட்சி பொறுப்பாட்சியாகும்.

(3) **வளைந்து கொடுக்கும் தன்மை** (அரசியல் சமாதான முறையில் நடைபெறுதல்) :—சட்டசபையில் அரசாங்கக் கட்சி தோல்வியடைந்தால் எதிர்க் கட்சித் தலைவர் பிரதம

மந்திரிப் பதவியை வகித்து அரசாங்கத்தை நடத்துவது வழக்கம். ஆகையால் நெருக்கடிச் சமயங்களில்கூட நிர்வாக அமைப்பில் யாதொரு சிக்கலும் ஏற்படாமலும், நாட்டில் சச்சரவு குழப்பம் முதலியவை உண்டாகாமலும் அரசியல் வேலைப் பொறுப்பை எச்சமயத்திலும் மேற்கொள்ளக் கட்சித் தலைவர்கள் ஸித்தமா யிருக்கின்றனர்.

மந்திரி சபை ஆட்சி முறையில் பின்வரும் குறைகள் காணப்படுகின்றன.

மந்திரி சபை நிர்வாக முறையின் குறைகள்

(1) **கட்சி ஆட்சியின் பலாத்காரம்**:—கட்சி உணர்ச்சியும் கட்சி ஆட்சி மனப்பான்மையும் அதிகமாகின்றன. ஆகையால் கட்சி ஸ்தாபனங்கள் பிரபலமடைந்து விடுகின்றன. ஆஸ்திரேலியாவைப்போன்ற தேசங்களில் கட்சிகள் அரசியல் வாதிகளின் யதேச்சாதிகாரக் கூட்டங்களாக மாறிவிடுகின்றன. பிரிட்டனில்கூட மந்திரி சபையானது கட்சி ஏற்பாட்டின் கொடுமைக்கு உள்ளாக வேண்டியிருக்கிறது. சட்ட சபையில் அங்கத்தினர்கள் தங்கள் சொந்த அபிப்பிராயங்களை வெளியிடுவது இயலாத காரியம். சில சமயம் வெளிக்கு மாத்திரமே மந்திரி சபையில் ஒற்றுமை இருப்பதாகத் தோற்றும்; உண்மையில் அபிப்பிராய பேதங்கள் பலமாக இருந்து வரலாம்.

(2) **பிரதம மந்திரியின் யதேச்சாதிகாரம்**:—சட்ட சபையின் காரியக் கிரமம் முழுவதும் மந்திரி சபையின் கையில் இருப்பதால், மற்றக் கட்சிகளின் அங்கத்தினர்களுக்கு அவர்கள் விருப்பத்திற்கேற்ற விஷயங்களை ஆலோசனைக்குக் கொண்டுவர முடிகிறதில்லை. மந்திரி சபையின் தலைவர் பிரதம மந்திரியே யாகையால், அவருடைய அதிகாரம் வரம்பற்றதாக இருக்கும். இப்படி அரசியல் அதிகாரம் ஓரிடத்தில் குவிந்திருப்பது சில சமயங்களில் நாட்டிற்குக் கெடுதியை விளைவிக்கக் கூடும். அநுபவத்தில் பொதுஜன அபிப்பிராயத்திற்கு விரோதமாகச் சில திட்டங்களும் கொள்கைகளும் கூட அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரப் பட்டிருக்கின்றன.

(3) சில்லறை விஷயங்கள் தலைமை பெறுதல்:—மந்திரி சபை நிர்வாகமுறை கட்சி யமைப்பை அடிப்படையாகக் கொண்டதாகையால் தேச நன்மையைக் காட்டிலும் கட்சியின் வெற்றி விஷயத்தில் அதிகக் கருத்து ஏற்படுகிறது. பிரான்ஸ் போன்ற ஐரோப்பிய தேசங்களில் சில சில்லறை விஷயங்கள் காரணமாகக் கட்சிகளுக்கிடையே சச்சரவு ஏற்பட்டு அதனால் மந்திரி சபைகள் கலைக்கப்பெற்று அடிக்கடி நிர்வாக சபையில் மாறுதல்கள் உண்டாகின்றன. இதன் பயனாக மந்திரி சபையின் செல்வாக்குக் குறைகிறது; நிர்வாகமும் பலமிழந்து அலங்கோலமாகப் போய் விடுகிறது.

தலைவரின் நிர்வாக முறை: முக்கிய அம்சங்கள்

தலைவரின் நிர்வாக முறையின் முக்கியமான அம்சம், நிர்வாக அங்கமும் சட்டசபையும் வேறுபட்டிருப்பதே. அவை ஒன்றுக்கொன்று கட்டுப்படாமல் தனிப்பட்டனவாக இருக்கும். நிர்வாக அதிபதியான தலைவர் சட்டசபையின் சம்பந்தமின்றியே பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படுவர். அரசியல் திட்டத்திற் கண்டபடி ஒரு குறித்த கால அளவு வரையில் அவர் உத்தியோகம் நீடித்திருக்கும். அவருடைய அதிகாரங்களும் சலுகைகளும் தெளிவாக அரசியல் திட்டத்தில் நிர்ணயிக்கப் பெற்றிருக்கும். சட்டசபை அவைகளில் தலையிடக்கூடாது. அவருடைய அரசாங்க மந்திரிகளுக்கு, அமெரிக்க ஐக்கிய நாட்டில், காரியதரிசிகள் என்று பெயர். அக்காரியதரிசிகள் அவராலேயே நியமனஞ் செய்யப் பெறுவார்கள். சட்ட சபையில் அவர்களுக்கு இடம் இல்லை. தலைவர் முடிவாக வாக்காளர் தொகுதிகளுக்கே பதில் சொல்லவேண்டிய பொறுப்புடையவர். பெரிய ராஜீயக் குற்றம் செய்தல் காரணமாகச் சட்ட சபை விசாரணைசெய்து அவரைப் பதவியிலிருந்து நீக்கலாமேயொழிய வேறு விதத்தில் அவருடைய உத்தியோக காலத்தைக் குறைக்க முடியாது.

அரசாங்கத்தின் மூன்று உறுப்புக்களும் ஒன்றுக்கொன்று ஏற்றத் தாழ்வின்றி அமைக்கப் பெற்றிருக்கின்றன. தலைவரின் காலஅளவும் சட்டசபையின் கால அளவும் நிர்ணயமான

தால், மந்திரிசபை நிர்வாக முறையைவிட இது நிரந்தரத் தன்மை வாய்ந்தது. மேலும், தலைவரின் மந்திரி சபையிலும், காங்கிரஸ் என்னும் சட்டசபைகளிலும் ஒரே கட்சி அதிகாரத்தைப் பெறுவது அநேகமாய் அசாத்தியமாகையால், சிறுபான்மைக் கட்சியின் அபிப்பிராயத்தை நிராகரித்துப் பெரும் பான்மைக் கட்சி தன் இஷ்டப்படி ஆட்சி நடத்துதல் இம் முறையில் அவ்வளவு எளிதன்று. அன்றியும், நிர்வாக இலாகாக்கள் தலைவரின் நேரான மேற்பார்வைக்கு உட்பட்டிருப்பதால் பயமின்றித் தீர்மையாகவும் சுறுசுறுப்பாகவும் வேலைகளை நடத்த முடியும். நிர்வாக உத்தியோகஸ்தர்கள் தம் அதிகார வரம்புகளை மீறி நடக்கிறார்களா என்பதைப்பற்றி முடிவாகத் தீர்ப்பளிக்கும் அதிகாரம் நீதிஸ்தாபனத்தினிடமே உள்ளது. ஆகையால், இந்த ஆட்சி முறையில், நிர்வாக இலாகாவுக்குச் சட்டசபைக்குப் பதில் சொல்லவேண்டிய பொறுப்பு இல்லாவிடினும், அதன் நடவடிக்கைகளைக்கட்டுப்படுத்தித் தணிக்கை செய்ய வழிகள் இருக்கின்றன.

அத்தியாயம் II

அரசாங்க அமைப்பு—II

சட்டசபை

சட்டசபைதான் அரசின் நோக்கங்களை உருவாக்குகின்றது.

ஆகையால் போதுமான ஆலோசனைக்கும் விவாதத்துக்கும் வசதியிருக்கும்படி சட்டசபை அமைக்கப்படவேண்டும். அதன் அதிகாரங்களும் கடமைகளும் பொறுப்புக்களும் நாட்டிற்கு நாடு வேறுபடுகின்றன. ஆனால் பொதுவாகச் சட்டசபையின் கடமைகள் கீழே கூறப்படுவனவாம்:

(1) அரசியல் திட்டத் திருத்தம்:—பிரிட்டனில் பார்லிமெண்டுச் சட்டத்தின் மூலம் அரசியல் திட்டத்தைத் திருத்தலாம். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அரசியல் திட்டத்தைத் திருத்துவதற்குக் காங்கிரஸுக்குத் தனி அதிகாரம் இல்லை;

சட்ட சபையின் கடமைகள்

ஆயினும், அது அங்கீகரித்த பிறகுதான் திருத்தங்கள் தனி நாடுகளின் சம்மதத்திற்கு அனுப்பப்பட வேண்டும்; இன்றேல் நாடுகளில் மூன்றில் இரண்டு பங்கு எண்ணிக்கை கொண்ட சட்டசபைகளின் வேண்டுகோளின்மேல் ஓர் அரசியல் அமைப்புக் கூட்டம் தனியே கூடவேண்டும்.

(2) சட்ட நிர்மாணம்:—இது ஒரு முக்கியமான வேலை. தேசத்தின் பொருளாதார அமைப்பு விரிந்து சிக்கல் அடைய அடையத் தொழிலாளர் வாழ்க்கை நிலைமையில் ஏற்படும் மாறுதல்களுக்குத் தக்கபடி புதிய சட்டங்களை இயற்ற வேண்டிவரும். அதனால் சட்ட நிரூபண வேலையின் தலைமை அதிகரித்துக்கொண்டு வருகிறது.

(3) நிதி நிர்வாகம்:—அநேக அரசுகளில், முக்கியமாக ஜனநாயக ஆட்சி நாடுகளில், வரித்தொகையையும், அதனை வசூல் செய்யும் முறைகளையும், செலவின் நோக்கங்களையும் சட்டசபை அங்கீகரிக்க வேண்டும். இவ்விஷயங்களில் நிர்வாக இலாகாவைச் சட்டசபை நிர்த்தாக்ஷிண்யமாய்க் கண்காணிப்புச் செய்து வரவேண்டும்.

(4) வெளிநாட்டு விஷயங்கள்:—இவை சட்ட சபையின் மற்றொரு முக்கியமான வேலை. யுத்தம் தொடங்குவதும், சமாதான உடன்படிக்கை செய்வதும் உண்மையில் நிர்வாக வேலைகளே யென்றாலும், இவைகளில்கூடச் சட்டசபை தன் அபிப்பிராயத்தை நிர்வாகசபை கவனித்து நடக்கும்படி செய்துவிட முடியும். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உடன்படிக்கைகளைத் தலைவர் ஒப்புக்கொள்வதற்கு முன், செனெட் என்னும் சட்டசபையின் அங்கீகாரம் கிடைக்கவேண்டும்.

(5) சில்லறை வேலைகள்:—சட்டசபை வேறு சில சில்லறை வேலைகளையும் செய்து வருகிறது. அவை சட்ட நிரூபண சம்பந்தமாக இல்லாவிடினும், சபையின் முக்கிய வேலைகளுக்குச் சம்பந்தப் பட்டவையாகவும் அதன் சுதந்திரத்தைப் பாதுகாப்பவையாயும் இருக்கின்றன. தேர்தல் சச்சரவுகளில் தீர்ப்பளித்தல், தன் அங்கத்தினர்களின் குற்றங்களை விசாரித்தல், பெரிய உத்தியோகஸ்தர்களின் மீது குற்றஞ்சாட்டுதல்,

சில முக்கியமான உத்தியோகஸ்தர்களை நியமித்தல் முதலியவை சில உதாரணங்களாம்.

சட்டசபை அங்கத்தினரின் உத்தியோக காலம் எல்லாத் தேசங்களிலும் ஒரே மாதிரி இருக்கவில்லை. தலைவரின் நிர்வாக முறை உள்ள அரசில், சட்டசபையின் கால அளவு அரசியல் திட்டத்திலேயே நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அக்காலத்திற்குள் ஒரு சபையைக் கலைத்துவிட முடியாது. மந்திரிசபை நிர்வாக அரசுகளில் சட்டசபைக்கு ஒரு குறித்த கால அளவு இருப்பினும், சந்தர்ப்பம் நேரும்போது மந்திரிசபை தன் இஷ்டம்போல் அதைக் கலைத்து விடலாம். ஆனால் சாதாரணமாக இவ்வரசுகளில் சட்டசபை ஐந்து வருஷங்களுக்கு நீடித்திருக்கும். பிறகு மறு தேர்தல் நடக்கும்.

சட்டசபையின் கால அளவைப்பற்றி அபிப்பிராய பேதம் உண்டு. அப்போதைக்கப்போதுள்ள பொதுஜன அபிப்பிராயம் சட்டசபையில் வெளிப்பட வேண்டுமாகையால் இரண்டு மூன்று வருஷங்களுக்கு மேற்பட்டுப் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு சட்டசபை நீடித்திருக்கக் கூடாதென்பது சிலரின் அபிப்பிராயம். சட்டசபை அங்கத்தினர் அரசியல் விஷயங்களில் அனுபவமும் திறமையும் பெறவேண்டுமாகையால் சட்டசபை ஐந்து முதல் ஏழு வருஷம்வரையில் நீடித்திருப்பதே நலம் என்று வேறுசிலர் கருதுகிறார்கள். குறைந்த கால அளவினால் அடிக்கடி ஏற்படும் தேர்தல்களின் பயனாக அனுபவமற்ற அங்கத்தினர்களே மாறி மாறி வரும்படி நேருமாகையால் சட்டசபையின் திறமை குறைவுபடக் கூடும்; ஆதலின் எல்லாவற்றையும் யோசித்தால் ஐந்து வருஷ கால அளவுதான் நல்லதென்று தோன்றுகிறது.

சட்டசபையின் கால அளவு

சட்டசபை இரண்டு பிரிவுகள் கொண்டதாக இருக்க வேண்டுமென்று நெடுநாளாக ஓர் அரசியற் கொள்கை இருந்து வருகிறது. இவ்விரண்டு சபைகளையும் முறையே கீழ்ச் சபை, மேற் சபை யென்று சொல்வார்கள். முதற்சபை, இரண்டாவது சபை என்று வழங்குவதும் உண்டு. பெரும்பாலான நாடுகளில்

இரு சபை ஏற்பாடு

கிழ்ச்சபைக்கே அதிகாரம் அதிகம். இரண்டு சபைகள் வேண்டுமென்பதற்குரிய காரணங்கள் வருமாறு :—

(1) இரண்டு சபைகள் இருப்பதால் அரசியல் விஷயங்களில் ஆழ்ந்த பரிசீலனையும், நடவடிக்கைகளில் சாவதானமும் ஜாக்கிரதையும் உண்டாகும். முதலில் ஒரு சபையில் பிரேரணை செய்து மற்றொரு சபையில் நிறைவேற்றி முடிப்பதால் பிரச்னைகளை நன்றாகப் பரிசீலனை செய்து முடிவு கட்டுவதற்குத் தேவையான அவகாசமும் ஏற்படும். ஒரு சபையில் உணர்ச்சியாலும், எதிர்ப்பாலும், வெளிநிர்ப்பந்தங்களாலும் பொதுநலத்துக்குத் தடை நேர்வதுண்டு ; இரண்டு சபைகள் இருந்தால் அவை ஒரே மாதிரி இருசபைகளிலும் நேரிடுவது அருமை.

(2) இரு சபை அங்கத்தினர்களுடைய தேர்தல்களும் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு முறைகளில் நடைபெறுமாகையால் சட்டசபையின் பொதுநோக்கமும் தீர்மானமும் அநேகமாகப் பெரும்பான்மையான ஜனங்களின் அபிப்பிராயத்தை அனுசரித்தே இருக்கக்கூடும். ஒரே சபையாக இருந்தால் அதன் ஆயுட்கால முடிவிற்குள் பொது ஜன அபிப்பிராயத்திற்கும் அதற்கும் தொடர்பே அற்றுப்போகும்.

(3) இரு சபைகள் இருந்தால் தனிக்கூட்டத்தார்களுக்கும் விசேஷ வகுப்புக்களுக்கும் நாட்டுப் பிரிவுகளுக்கும் சில பிரதிநிதித்துவ உரிமைகளை அளிப்பதற்குரிய வசதிகளை எளிதில் ஏற்படுத்தலாம். சமஷ்டி அரசியல் ஏற்பாட்டில் இம்முறை பெரிதும் விரும்பத்தக்கதாகும் ; இரு சபைகளில் ஒன்று சமஷ்டியில் சேர்ந்த தனி நாடுகளின் பிரதிநிதியாக இருந்து அவைகளின் உரிமைகளைப் பாதுகாத்து வரக்கூடும்.

(4) தனிப்பட்ட ஒரு சபை சட்ட நிரூபணம் செய்வதில் உண்டாகும் யதேச்சாதிகாரத்தை இந்தமுறை ஒரு வாறு தடுக்கும். மற்றொரு சபையின் அங்கீகாரத்தைப் பெறவேண்டு மென்ற பயம் காரணமாக, சக்தியும் சலுகையும் பெரிதும் பெற்றிருப்பினும் எந்தத் தனிச் சபையும் சிறிது நிதானமாகவே நடந்து கொள்ளும்.

ஆனால், சமீப காலத்தில் ஒரு தனிச் சபையைகொண்ட முறையை ஆதரிக்கும் மனப்பான்மையே நாடுகளிடையே வளர்ந்து வருகிறது. இதற்குப் பல காரணம் உண்டு. முதற்காரணம், ஒற்றைச் சபை அமைப்பானது சுலபமான தாகவும் சிக்கனமுள்ளதாகவும் இருப்பதே. ஒரு சிறிய நாட்டிற்கு இது பெரிதும் ஏற்றது. இரண்டாவதாக, பொறுப்பு ஓரிடத்திலேயே இருப்பதால் அனுவசிய நெருக்கடியும் சச்சரவும் இல்லாமல் சட்ட நிரூபண வேலை நிறைவேறக்கூடும். மூன்றுவதாக, இவ்வமைப்பில் வாக்காளர்களுக்கு நேரடியான பொறுப்புப்பெற்ற பிரதிநிதிகள் வருகிறார்கள். ஊழல்கள் நேரிடின் ஒரு சபை அங்கத்தினர் மற்றொரு சபையின்மேல் பொறுப்பைப் போட்டுவிட இயலாது. கடைசியாக, அனுபவத்தில் இரண்டு சபைகளில் ஒன்று தன் தலைமையை இழந்து வெகுஜன அபிப்பிராய பலத்தைக் கொண்டுள்ள மற்றொரு சபையின் மனோபாவத்தின்படி நடக்கும் சபையாக மாறிவிடுகிறது. அமைப்பிலும் ஒன்றி மற்றொன்றைப் போலவே ஆகிவிடுகிறது. இரண்டு சபைகளையும் எவ்வளவு ஜாக்கிரதையாகப் பிரிவுபடுத்தி ஏற்படுத்தினாலும் முரண்பாடின்றி அவை அரசியல் காரியங்களை நடத்தி வருவதில்லை. தாமாக வேண்டிய சலுகைகளை ஏற்படுத்திக்கொள்வதில் மாத்திரமே இவை ஒன்றுக்கொன்று அனுசரணையாக இருந்து வருகின்றன.

இரண்டாவது சபை அல்லது மேற்சபையின் அமைப்பில் நான்கு விதங்கள் உண்டு.

(1) அங்கத்தினர்களை நேர்முகமாக வாக்காளர்கள் தேர்ந்தெடுக்கலாம். இம் முறை ஆஸ்திரேலியாவில் இருக்கிறது.

இரண்டாவது சபை அல்லது மேற்சபை

(2) பிரான்ஸில் ஒரு தனிப்பட்ட வாக்காளர்களின் பிரதிநிதிகளைக் கொண்ட சங்கம் இரண்டாவது சபைப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கிறது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பல வருஷங்களுக்கு முன் சமஷ்டியில் சேர்ந்த தனி நாடுகளின் சட்ட சபைகள் தேர்ந்தெடுத்தன.

(3) பிரிட்டனில் இருப்பதுபோல் இரண்டாவது சபை அங்கத்தினர்களில் சிலரைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் வார்சுரிமை பெற்றவர்களாயிருக்கலாம்.

(4) கானடாவிலும், தென் ஆப்பிரிகாவிலும் உள்ளது போல் அங்கத்தினர்கள் ஒரு குறித்த காலத்திற்கோ, ஆயுள் பரியந்தமோ சர்க்காரால் நியமனம் செய்யப்படலாம்.

மேற்சொல்லிய நான்கு முறைகளில் யாதொன்றும் திருப்திகரமாயில்லை. என்றாலும், ஜனநாயகக் கொள்கை சிறந்து நிற்கும் இக்காலத்தில் சட்டசபைக்குப் பிரதிநிதிகளை நியமனம் செய்யும் முறை சற்றும் ஒவ்வாது. நேர்முகமான தேர்தல்தான் சிறந்ததென்ற அபிப்பிராயமே இக்காலத்தில் மேலிட்டு நிற்கிறது. அன்றியும் இரண்டாவது சபை அங்கத்தினர்கள் முதற் சபை அங்கத்தினர்களைவிட அதிகத் தகுதியுடையவர்களாக இருக்கவேண்டுமென்றும், அவர்களின் உத்தியோக காலமும் நீடித்திருக்க வேண்டுமென்றும், அங்கத்தினர்களின் எண்ணிக்கை முதற்சபையைவிட இரண்டாவது சபையில் மிகவும் குறைந்ததாகவே இருக்கவேண்டுமென்றும் பொதுவான அபிப்பிராயங்கள் இருக்கின்றன.

இக்கால ஜனநாயக அரசுகளில் முதற் சபைக்கு இரகசிய ஓட்டுச் சீட்டு முறைப்படி பிரதிநிதிகளை நேர்முகமாகத் தேர்ந்தெடுப்பதுதான் வழக்கத்தில் இருக்கிறது. இச்சபை அங்கத்தினர்களின் உத்தியோக கால அளவில் மட்டும் அரசுகளுக்குள் அதிக வித்தியாசம் இருக்கிறது.

சில அரசுகளில் வாக்காளர்களை விடச் சட்டசபை அங்கத்தினர்கள் அதிக வயதானவர்களாக இருக்க வேண்டுமென்ற நிபந்தனை உண்டு. இதற்குக் காரணம் வயது முதிர்ந்தவர்கள் ஓரளவு அநுபவமும் மனப் பக்குவமும் பெற்றவர்களாக இருப்பார்கள் என்பதேயாம். தொழிற் கட்சியும் அபேதவாதக் கட்சியும் தலையெடுத்த பிறகு சட்டசபை அங்கத்தினர்களுக்கு வருஷச் சம்பளமே ஏற்பட்டுவிட்டது. அந்தக் கட்சிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப் பெற்றுச் சட்டசபைக்கு வரும் அங்கத்தினர்களிற் பெரும்பாலோர்

முதற் சபை அல்லது கீழ்ச் சபை

பணக்காரர்கள் அல்லர்; ஜீவனத்துக்கு வேண்டிய உத்தி யோகமோ தொழிலோ செய்பவர்கள். அவர்கள் அரசிய லிற் புகும்போது தங்கள் ஜீவனோபாயமாக உள்ள தொழிலை நடத்த இயலாது. அதனல் அவர்களுடைய குடும்பப் பாது காப்பு நடவாமற் போய்விடும். பொதுஜன நன்மையின் பொருட்டுச் சட்டசபைக்கு வருகிறவர்கள் தங்கள் க்ஷேமத்தை இழப்பது நியாயமன்று. ஆதலால்தான் அர சாங்கத்தார் அவர்களுக்குச் சம்பளம் ஏற்படுத்தும் வழக்கம் உண்டாகியிருக்கிறது.

பிரதிநிதித்துவத் தின் அடிப் படை : ஸ்தலத் தொகுதிப் பிரதிநிதி முறை

சாதாரணமாக, இக்கால ஜனப் பிரதிநிதித் தன்மை ஸ்தலத் தொகுதிகளையும் ஜனத் தொகையையும் அடிப்படை யாகக் கொண்டது. தேர்தலில் தேசத்தை ஜனத்தொகை ஓரளவாக இருக்கும் பல தொகுதிகளாகப் பிரித்து விடுகிறார்கள். இப்படி ஏற்படுத்திய ஒவ்வொரு தொகுதி யும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பிரதிநிதிகளைச் சட்டசபைக்குத் தேர்ந் தெடுக்கும். பிரிட்டனில் ஒரே பிரதிநிதியைக் கொண்ட ஸ்தலத் தொகுதிகளே உண்டு. பத்து வருஷங்களுக்கு ஒரு தடவை ஜனத்தொகைக் கணக்கு எடுத்து முடிந்தவுடன், தேர்தல் தொகுதிகளை அதற்குத் தக்கவாறு நூதனமாக ஏற் படுத்துகிறார்கள். தேர்தலில் பெரும்பான்மையான ஓட்டு கள் அடைபவரே வெற்றி பெறுவார்.

ஸ்தலத் தொகுதி முறையில் பல பெரிய குறைகள் ஏற் படுகின்றன. ஒரு ஸ்தானத்திற்குப் பல அபேட்சகர்கள் நிற்கும் தொகுதியில், சிறுபான்மை வாக்காளர்களின் ஆத ரவினலேயே ஒருவன் வெற்றி பெறக்கூடும். உதாரணமாக லக்ஷம் வாக்காளர்கள் இருக்கும் ஒரு தொகுதியில் மூன்று அபேட்சகர்கள் நின்று, அவர்களுள் ஒருவனுக்கு நாற்பதி னாயிரம் ஓட்டுகளும், மற்றொருவனுக்கு முப்பத்தையாயிரம் ஓட்டுகளும், மூன்றாமவனுக்கு இருபத்தையாயிரம் ஓட்டு களும் கிடைத்தால், முதற் சொல்லியவனே வெற்றி பெறு கிறான். ஆனல், அறுபதினாயிரம் வாக்காளர்கள், அதாவது

பெரும்பான்மை வாக்காளர்கள் அவன்பால் ஆதரவு காட்டவில்லை. இக்குறையை நீக்குவதற்குச் சில அரசுகளில் மறு தேர்தல் ஒன்று நடத்துகிறார்கள். முதல் தேர்தலின் முடிவில் ஓட்டுகளை அதிகமாகப் பெற்ற முதல் இரண்டு அபேட்சகர்களைத் தவிர மற்ற எல்லோரையும் நீக்கிவிட்டு மீட்டும் தேர்தல் வைத்துப் பெரும்பான்மை ஓட்டின்படி இருவரில் ஒருவரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இம்முறையினால் பணச் செலவு அதிகமாகும்; திருப்திகரமான பயனும் உண்டாவ தில்லை.

பல பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு ஸ்தலத் தொகுதித் தேர்தல் முறை சாதாரணமாக வழக்கத்தில் இல்லை. இதற்கு முக்கிய காரணங்கள் எல்லாப் பிரதிநிதிகளுக்கும் வாக்காளர் களுடன் அவ்வளவு நேர்முகமான தொடர்பு ஏற்பட முடியா தென்பதும், ஒரு பிரதிநிதிக்கும் தனிப்பட்ட பொறுப்பு இராது என்பதுமேயாம்.

தொழில் பிரதிநிதித்துவ முறை

ஒரே பிரதிநிதியைக் கொண்ட ஸ்தலத் தொகுதித் தேர்தல் முறையினால் தக்கவாறு பிரதிநிதித்துவம் ஏற்படுவ தில்லையென்பதும், குறிப்பிட்ட பிரதேசத்தில் வாசம் செய்வதனால் மாத்திரமே ஒரு தொகுதியில் இருக்கும் ஜனங்களுக்குள் பொது விஷயங்களில் ஊக்கம் உண்டாவதில்லை யென்பதும் சமீப காலத்தில் பலரிடம் ஏற்பட்டிருக்கும் அபிப்பிராயம். ஸ்தல வாசத் தொடர்பைவிடத் தொழில் தொடர்பு உண்மையான சமூகக் கூட்டுறவை ஏற்படுத்தக் கூடுமாகையால், தொழில்களை அடிப்படையாகக் கொண்டு தேர்தல் தொகுதிகளைப் பிரிப்பதே மேலானது என்பது அவர்களின் கொள்கை. ஆனால், இம்முறையை அநேகர் பலமாய் எதிர்க்கிறார்கள். 'தொழில்வாரித் தொகுதிகளினால் ஜன சமூகத்திற்குத் தீமை விளையும்; தேசிய ஒற்றுமைக்குக் கேடு வரும்; தொழிற் சங்கங்கள் ஒன்றோடு ஒன்று போட்டியிடும்; வகுப்புச் சண்டை மேலும்மேலும் முற்றிவரும். இக் காரணங்களால் தொழில்வாரித் தொகுதித் தேர்தல் முறை சற்றும் கூடாது' என்ற அபிப்பிராயம் தலைதூக்கி நிற்கிறது.

மேற்சொல்லிய இரண்டு முறைகளையும் ஒடடிய மற றொரு முறை உண்டு. அதனை நடுத்தர முறையென்று சொல்லலாம். அதற்கு **விகிதாசாரப் பிரதி நிதித்துவ முறை** என்று பெயர். அது பல ரால் ஆதரிக்கப்படுகிறது. அதன்படி ஒரு தேசம் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட பிரதிநிதி களைக்கொண்ட ஸ்தலத் தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப் படுகிறது. இம்முறையில் அரசியற் கொள்கைகளில் ஒற் றுமை பெற்ற வாக்காளர்கள் ஒன்று சேர்ந்து, தேர்தலில் தங்களின் ஓட்டுப் பலத்திற்குரிய விகிதப்படி ஏற்படும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கக்கூடும். ஆனல் பல சிறு சிறு கட்சிகள் ஏற்பட்டுக் கட்சிச் சண்டை அதிகமாகும்; சர்க்காரின் நிரந்தரத் தன்மைக்குக் கேடு விளையும். முக்கிய மாய் மந்திரி சபை ஆட்சி முறை சீர்குலையும். நிர்வாக வர்க் கத்தின் ஆதிக்கம் பெருகிப் பலப்படும்.

விகிதாசாரப் பிரதிநித்துவம்

சட்ட சபை அங்கத்தினர்களின் உரிமைகளையும் கடமை களையும் பற்றிப் பல்விதமான அபிப்பிராயங்கள் இருக்கின் றன. வாக்காளர்களின் பிரதிநிதிகள் என்ப தால் அவர்கள் அவ் வாக்காளர்களின் சொற்படித்தான் நடந்துகொள்ள வேண் டும். வாக்காளர்களின் க்ஷேமலாபங்களைக் கருதுவதே அவர்கள் கடமை. பிரதிநிதிகள் வாக்காளர்களிடமிருந்து அதிகாரம் பெற்றவர்களாகையால், எப்போதானலும் அவர் களை வாக்காளர்கள் நீக்கி விடலாம் என்று ஒரு சாரார் கருதுகிறார்கள். மற்றொரு சாராரின் அபிப்பிராயம் அதற்கு முற்றும் வேறுபடுகின்றது; ஒரு தொகுதியில் உள்ள வாக் காளர்களால் தேர்ந்தெடுக்கப்பெறினும், தேசமக்கள் அனை வரின் சார்பாகவே சபை அங்கத்தினர்கள் பிரதிநிதித்துவம் பெறுகிறார்கள். ஒரே கொள்கையும் மனப்பான்மையும் கொண்ட பிரதிநிதிகளுடன் கலந்து யோசித்துச் சமூக விஷயங்களில் தங்கள் மனச்சாக்ஷிக்கு விரோதமின்றி நட ந்துகொள்வதே பிரதிநிதிகளின் நிலைமைக்குப் பொருந்தும் என்பதே அது. மூன்றுவதாக ஓர் அபிப்பிராயம் சமீப

பிரதிநிதியின் சுதந்திரம்

காலத்தில் உண்டாகி நிலவி வருகிறது. அதன்படி, பிரதிநிதிகள் கட்சி ஏற்பாட்டுக்கு உட்பட்டவராவர். வாக்காளர்களின் இஷ்டப்படியோ தங்கள் மனச் சாக்ஷியின்படியோ ஓட்டுச் செய்யக்கூடாது. கட்சிகளின் சேவகர்கள் என்ற நிலைமையிலேயேதான் அவர்கள் நடந்துவர வேண்டும்.

பிரதிநிதிகள் பொது நன்மையையே முக்கியநோக்கமாகக் கொள்ளவேண்டு மென்ற கொள்கைதான் மேலானது என்பதில் சற்றும் சந்தேகமில்லை. ஆனாலும் இந்நாளில் கட்சி உணர்ச்சியும் கட்சி ஆட்சியுமே பிரபலமாகத் தலை யெடுத்து ஓங்கிவிட்டன. சட்டசபை அங்கத்தினர்கள் கட்சித் தலைவர்களைத் தான் பின்பற்றி நடக்கவேண்டும். சுதந்திரம் என்பதே அவர்களுக்கு இல்லை. அவர்கள், கட்சி என்னும் கருவியின் உறுப்புகள் என்ற அபிப்பிராயம் வலுத்துவிட்டது. மேலும் மந்திரி சபை ஆட்சிமுறையானது கட்சி ஸ்தாபனத்தின் அமைப்புப் பலத்தையே அடிப்படையாகக் கொண்டது. ஏனவே, மந்திரி சபை ஆட்சி நடைபெறும் நாடுகளில் கட்சி உணர்ச்சியும் கட்சிக் கட்டுப்பாடும் நிச்சயமாய் இருக்கவேண்டும். பல அரசுகளில் சட்டசபை கூடுவதற்குமுன், கட்சிக் கூட்டம் நடைபெறுகிறது. அதில் கட்சித் திட்டங்களும் கொள்கைகளும் விரிவாக விவாதிக்கப்படுகின்றன. கட்சிக் கூட்டத்தில் அங்கத்தினர்களுக்குள் எவ்வித அபிப்பிராய பேதம் இருந்தாலும், சட்ட சபையில் மட்டும் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஒரே கட்டுப்பாடாகத் தங்கள் கட்சியின் சார்பாகவே ஓட்டுக் கொடுத்தாகவேண்டும்.

சட்ட சபை அமைப்பைப்பற்றிய முக்கியமான விஷயங்களை அரசியல் திட்டங்களே வகுத்துவிடுகின்றன. என்றாலும் சாதாரணமாக ஒவ்வொரு சட்ட சபையும் அதன் அதன் நடைமுறை விதிகளையும் முறைகளையும் தானே அமைத்துக்கொள்ளுகிறது: சட்டசபை நடைமுறை இந்நாளில் மிகவும் நுணுக்கமான விஷயமாகிவிட்டது. சில்லறை நுணுக்கங்களுக்குக் கூடப் பிராதான்யம் ஏற்பட்டிருக்கிறது.

சட்டசபை நடைமுறைகள்

சட்டசபை அங்கத்தினர்கள் எவ்வளவு திறமை யுடையவர்களாக இருந்தாலும், பிரஜைகளின் பிரதிநிதிகள் என்ற உரிமையை நியாயமாகப் பெற்றிருந்தாலும், சட்டசபை நடவடிக்கைகள் எல்லோருக்கும் எளிதில் விளங்குவனவாகவும், நடுநிலையினின்றும் பிறழாதனவாகவும் இருக்கவேண்டும். இல்லாவிடில் திறமை பெற்ற ஜனநாயக ஆட்சி என்று பெருமைகொள்ள இயலாது. இவ்வுண்மையை அரசியல் நிபுணர்கள்கூடச் சிலசமயங்களில் மறந்துவிடுகின்றனர். சட்டசபை ஏற்பாடுகளைப்பற்றிய பிரச்னைகள் இந்நாளில் பெரிதும் முக்கியமாகிவிட்டன. இவைகளில் இரண்டு மூன்று முக்கிய விஷயங்களைமட்டும் இங்கே எடுத்துக் கூறுவோம்.

'கமிட்டி' ஏற்பாடு

சட்ட சபை அங்கத்தினர்கள் பிரேரணை செய்யும் எல்லா விஷயங்களையும் தீர ஆலோசித்து முடிவு கட்டுவது என்பது, தற்கால சட்டசபையின் அமைப்பினாலும் அங்கத்தினர்களின் எண்ணிக்கைப் பெருக்கினாலும் அசாத்தியமாகிவிட்டது. ஆகையால்தான் அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரான்ஸ் முதலிய அரசுகளில் 'கமிட்டி ஏற்பாடு' சட்டசபையில் தீவிரமாய் நடந்தேறி வருகிறது. இதன்படி, சட்ட சபை பல கமிட்டிகளாகப் பிரிக்கப்படுகின்றது. ஒவ்வொரு கமிட்டியும் ஒவ்வொரு விஷயத்தில் ஆராய்ச்சி செய்யும் திறமை பெற்றிருக்கும். அவ்விஷயத்தைப்பற்றிய மசோதாக்கள் அந்தக் கமிட்டியின் சர்ச்சைக்கு அனுப்பப் பெறும். ஒவ்வொரு கமிட்டிக்கும் பெரும்பான்மைக் கட்சியின் அங்கத்தினர்களுள் ஒருவரே தலைமைவகிப்பர். சாதாரணமாய்ச் சிறுபான்மைக் கட்சியோருக்குக்கூட இக் கமிட்டிகளில் விகிதாசாரப்படி ஸ்தானம் கிடைக்கும்.

ஒரு கமிட்டியால் அங்கீகரிக்கப்பட்ட மசோதாவைச் சட்டசபை நிராகரிக்கலாம். ஆனால் கமிட்டி ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள விரும்பாத மசோதாக்களுக்குச் சட்டசபையின் ஆதரவு கிடைப்பது அரிது. 'ஒரு மசோதாவின் நோக்கமும் ஷரத்துக்களும் அவ்விஷயத்திற்குரிய

கமிட்டிக்கு ஒவ்வாமல் இருந்தாலுங்கூட, சர்ச்சைசெய்து முடிவு கட்டியாகவேண்டும் என்று அக்கமிட்டியை நிர்ப்பந்தம் செய்வதே முறை' என்பது சமீப காலத்துச் சட்டசபைச் சீர்திருத்த இயக்கத்தின் ஒரு முக்கிய நோக்கமாகும்.

சட்டசபை விவாதத்தைப் பற்றி இன்னும் ஒரு சிக்கலான பிரச்னை உண்டு. வன்மை படைத்த சில சிறுபான்மைக் கட்சியினர் சாத்தியமானபோது முட்டுக் கட்டைகள் போடலாம். நியாயமான விவாதத்திற்கு ஏற்பட்ட விதிகளைச் சிறிதும் பொறுப்புணர்ச்சியின்றி வீண் முறையில் மேற்கொண்டு விதண்டாவாதம் செய்வதால், பெரும்பான்மைக் கட்சியோ அல்லது அதிகாரம் வகித்துவரும் கட்சியோ தன் திட்டப்படி அரசியல் வேலைகளை நிறைவேற்றி வைக்க முடியாமல் போகிறது. இதனால் சிலசமயம் சட்ட நிரூபணவேலையைச் சர்க்கார் வெகு அவசரமாய்ச் செய்யும்படி நேர்வதுடன், சில முக்கிய மசோதாக்களையும் பரிசீலனைக்குக் கொண்டுவராமலே தள்ளிப்போட வேண்டிய அவசியமும் ஏற்பட்டு விடுகிறது. இம்மாதிரியான கஷ்டங்கள் நேரிடாமல் இருக்க ஒரு குறித்த தேதியிலேயோ அல்லது அதற்கு முன்பேயோ விவாதம் முடிவு பெற்று விவாத விஷயத்தைப் பற்றி ஓட்டு எடுத்தாக வேண்டும் என்று பல நாட்டுச் சட்டசபைகள் நியதி ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றன. இம்முறைக்கு, 'குலோஷர்' அல்லது கட்டாய விவாத முடிவு என்று பெயர்.

குலோஷர்' அல்லது கட்டாய விவாத முடிவு

எப்பொழுது, எவ்வளவுமுறை சட்டசபைகளைக் கூட்டலாம் என்பதைப்பற்றிய விதிகள் அரசியல் திட்டத்திலேயே குறிக்கப் பெற்றிருக்கலாம். நிர்வாக அதிகாரிகளின் உசிதப்படி விசேஷக் கூட்டங்களும் கூட்டப்பெறலாம். வருஷந்தோறும் குறித்த காலங்களில் சட்டசபை கூடுவதே இக்கால ஜனநாயக அரசுகளில் நடைபெறும் பொதுவான முறை.

சட்டசபை கூட்டலும் தள்ளி வைத்தலும்

சாதாரணமாக, சபை கூடும் தேதியையும் ஒழிவுகாலங்

களையும் நிர்ணயித்தல், சபைக் கூட்டத்தைத் தள்ளிவைத்தல் முதலிய விஷயங்களில் ஒவ்வொரு சட்டசபையும் தனக்கு இசைந்தபடி விதிகளை ஏற்படுத்திக் கொள்ளும். பிரிட்டனில் மந்திரி சபை நெருக்கடி ஏற்படும் காலத்தில் சட்டசபையைக் கலைத்து விடும்படி அது உத்தரவு போடலாம். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் காங்கிரஸ் கலைய வேண்டிய தேதியைக்குறித்து இரண்டு சபைகளுக்கும் அபிப்பிராய பேதம் ஏற்பட்டால் மாத்திரமே தலைவர் அந்தத் தேதியைக் குறிப்பிடலாம்.

இரண்டு சபைகளுக்கும் இடையே முட்டுக்கட்டை ஏற்படின் பல அரசுகளில் இரு சபைகளும் கூடி நெருக்கடி விஷயத்தைப்பற்றி ஆலோசனை செய்து ஓட்டு எடுத்துத் தீர்மானத்திற்கு வரும். சில சமயங்களில் விகிதாசாரப்படி இரு சபைகளின் பிரதிநிதிகளையும் கொண்ட ஒரு கூட்டுக் கமிட்டியின் தீர்மானத்திற்கு விவாத விஷயத்தை விட்டுவிடுவதும் உண்டு. அதன் முடிவு இரு சபைகளிலும் சர்ச்சை செய்யப்பெறும். அப்பொழுதும் ஒற்றுமை ஏற்படாவிட்டால் சட்டசபைகளைக் கலைத்துப் புதிய தேர்தல்கள் நடத்துவார்கள்.

முட்டுக் கட்டை களை எப்படி நீக்குவது ?

அத்தியாயம் 12

அரசாங்க அமைப்பு—III

நீதி ஸ்தாபனம்

நல்ல அரசாட்சிக்கு மற்ற அரசியல் அங்கங்களைப்போலவே திறமை வாய்ந்த நீதி ஸ்தாபனமும் அவசியமான ஓர் அங்கமாகும். ஓர் அரசாங்கம் சிறப்புடைய தென்பதற்கு அதன் நீதி பரிபாலன முறையைவிட மேலான அடையாளம் இல்லை. அறிவுடையோர் நிரம்பிய ஒரு சட்டசபையும், பலம் பெற்ற நிர்வாக சபையுங்கூட அளிக்க முடியாத

பாதுகாப்பையும், அமைதியையும் நேர்மையும் திறமையும் உள்ள நீதி ஸ்தாபனம் தேச மக்களுக்கு அளிக்கக்கூடும்.

நீதி ஸ்தாபனத்தின் முக்கியத் தன்மை

நீதிபதியே ஜனங்களின் சுதந்திர உரிமைகளைப் பாதுகாப்பவன். அவனே அரசியல் சட்டங்களுக்கு வியாக்கியானம் செய்பவன். பொதுமக்களிடையே ஏற்படும் வியவகாரங்களைத் தீர்த்து முடிவு கூறுபவனும் அவனே. நீதிபதிதான் அரசாங்கத்திற்கும் பிரஜைகளுக்கும் உண்டாகும் விவாத விஷயங்களில் முடிவான தீர்ப்பளிப்பவன்.

நீதிபதிகளின் முக்கியமான வேலை தங்களுக்கு முன் கொண்டுவரப்படும் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்குவதுதான். வழக்குகள் இருவகைப்படும்.

இருவகை வழக்குகள் : ஸிவிலும், கிரிமினலும்

ஒன்று **ஸிவில் வழக்குகள்** : சொத்துச் சம்பந்தமாய்ப் பொது மக்களிடையே ஏற்படும் வியவகாரங்கள், சர்க்காருக்கும் தனிப் பிரஜைகளுக்கும் ஒப்பந்த விஷயங்களில் உண்டாகும் வழக்குகள் ஆகியவை யெல்லாம் ஸிவில் வழக்குகள் எனப்படும். மற்றொரு வகை வழக்குகளுக்குக் **கிரிமினல் வழக்குகள்** என்று பெயர். அரசுக்கு விரோதமாக ஒரு தனி மனிதன் செய்த குற்றங்களும், சமூகத்துக்கு ஊறு விளைப்பனவும் கிரிமினல் வழக்குகளாம். சட்டத்தை மீறுவதையும், உரிமைகளைப் புறக்கணிப்பதையும் நீதிபதிகள் '**இன்ஜங்ஷன்**', '**ரிட்டு**' என்னும் உத்தரவுகளினால் முன்னராகவே தடுக்கக்கூடும்.

வழக்குகளில் உண்மையைக் கண்டுபிடித்து ஏற்ற சட்டத்தைப் பிரயோகிப்பதுதான் நீதிபதிகளின் வேலை. என்

சட்ட நிரூபண வேலை

றாலும், பல சந்தர்ப்பங்களில் சட்டம் தெளிவாயிருப்பதில்லை. குறிப்பிட்ட ஒரு சட்டம் நிறைவேறியபோது உள்ள நிலைமையில் எதிர்பார்க்க முடியாத மாறுதல்கள் பின்பு ஏற்பட்டு விடுகின்றன. வழக்கில் இருந்துவரும் சட்டம் இம்மாறுதல்களுக்கு முற்றும் பொருந்துவதில்லை. சில சமயங்களில் எந்தச் சட்டத்தின்கீழ் ஒரு விஷயத்தில் நடவடிக்கை எடுத்துக்

கொள்வது என்பதை நிர்ணயிப்பது கஷ்டமாயிருக்கலாம். எனவே, சட்டங்களின் தெளிவான நோக்கங்களையும் பொருத்தத்தையும் தீர்மானிப்பதனாலும், சட்ட விவரங்களை விரித்துரைப்பதனாலும் நேர்மையான நடத்தை நியாயம் இவ்விரண்டையும் அடிப்படையாகக் கொண்ட கொள்கைகளின்படி தீர்ப்பு அளிக்கவேண்டியிருப்பதனாலும், நீதி ஸ்தாபனம் உண்மையில் ஒரு சட்ட நிரூபண ஸ்தாபனத்தைப்போலவே ஆகிவிடுகிறது. பிரிட்டனிலும், அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் முன்னுள்ள தீர்ப்புக்களை ஆதாரமாகக் கொண்டு, பின்னர் நேரும் வழக்குகளுக்குத் தீர்ப்புக் கூறுகிறார்கள்; வாதம் செய்கிறார்கள். இக்காரணத்தினால் நீதி பதிகளின் தீர்ப்புக்களே சட்ட திட்டத் தொகுதியின் ஒரு பெரும் பகுதியாக நிலைபெற்றுவிட்டன.

சில தேசங்களில், நீதி மன்றங்கள் தங்கள் அபிப்பிராயத்தை முன்னதாகவே சொல்லிவிடுகின்றன. சடடப்படி செய்யவேண்டியது என்னவென்று கட்சிக்காரர்கள் கேட்கும்பொழுது, நீதிபதிகள் அவர்களை வீணாக வழக்குச் செலவுக்கு ஆளாக்காமல் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிடலாம். இம்மாதிரியான தீர்ப்புக்களை 'அபிப்பிராயம் கூறும் தீர்ப்புக்கள்' என்று சொல்லுவதுண்டு. ஆனால், இச்செயல் நீதி ஸ்தாபனத்தின் அந்தஸ்துக்கு ஏற்றதன்று எனக் கருதுகின்றனர்.

சமஷ்டி அரசியலில் நீதி ஸ்தாபனத்திற்குச் சிறப்பு அதிகம்.

சமஷ்டி அரசியலில் நீதி ஸ்தாபனத்தின் முதன்மை

அரசியல் திட்டம் சமஷ்டி அரசாங்கத்திற்கும் அதில் அடங்கியுள்ள மாகாணங்களுக்கும் இடையே ஏற்பட்ட ஓர் ஒப்பந்தமாகும்; அந்த அரசியல் திட்டத்தின் ஷரத்துகளைப்பற்றி நீதி ஸ்தாபனம் செய்யும் வியாக்கியானங்களினால், சமஷ்டி அரசியலின் தன்மையே முக்கிய அம்சங்களில் மாறிவிடலாம். சமஷ்டி நீதிபதிகள் பொதுவாக மத்திய அரசாங்கத்தின் சார்பாகவே தீர்ப்புக்கள் அளித்து வருகிறார்களென்றும், அதனால் சில அரசியல்களில் மத்திய அரசாங்கத்தாருக்கு மாகா

ணங்களின்மேல் நடைமுறையில் அதிக அதிகாரம் ஏற்பட்டு விடுகிறது என்றும் குறை கூறுவாரும் உளர்.

சட்ட ஸ்தாபன முறைகளிலும் சட்ட நிரூபண முறைகளிலும் தேசத்திற்குத் தேசம் வித்தியாசங்கள் ஏற்பட்டிருப்பினும், நீதி ஸ்தாபனங்களையும் அங்குள்ள ஏற்பாடுகளையும் பற்றிய வரையில் எல்லாத் தேசங்களிலும் சில முக்கிய அம்சங்கள் பொதுவாகவே காணப்படுகின்றன. நிர்வாக சபையானது நியாயப் போக்கிலும் நீதிபதிகளின் தீர்ப்பிலும் தலையிடுதல் கூடாது. நீதிபதிகள் தங்கள் வேலைகளைப் பக்ஷபாதமின்றிச் சரியாகச் செய்து முடிப்பதற்கு நீதி ஸ்தாபனத்திற்குத் தேவையான அதிகாரமும் சம்பளமும் சட்டசபை அளிக்கவேண்டியது அவசியம்.

உயர்ந்த சம்பளமும் அதிகாரமும் அவசியம்

நீதி ஸ்தாபன அமைப்பில் படிப்படியாக மாஜிஸ்ட்ரேட்டுகளும் ஜட்ஜுகளும் இருக்கின்றனர். ஓர் உயர்தர நீதிமன்றம் மற்ற எல்லா நீதி மன்றங்களுக்கும் மேலே அதிகாரம் வகித்து வருகிறது. பிரிட்டனிலும் இந்தியாவிலும் கீழ்த்தர நீதி மன்றங்களில் சாதாரணமாக ஒரே நீதிபதி தான் உண்டு. சில ஐரோப்பிய உள் நாடுகளில் கீழ்த்தர மன்றங்களிலேகூடப் பல ஜட்ஜுகள் சேர்ந்து வழக்குகளை விசாரிக்கிறார்கள். இதற்குக் காரணம் நீதிபதிகள் தங்கள் இஷ்டப்படித் தீர்ப்பளிக்காமல் இருக்கவேண்டு மென்பதும், சிபாரிசு, பரிதானம் முதலியவற்றால் அவர்கள் நடுநிலை தவறாமல் இருக்கவேண்டு மென்பதுமே.

கீழ்த்தர நீதி மன்றங்களில் பல நீதிபதிகள் இருப்பதன் நோக்கம்

பிரிட்டனில் எவில் வழக்குகள் இரண்டு வகைப்படும். சட்டப்படி விதிக்கப்படும் வழக்குகள் ஒருவகை, மற்றொரு வகை 'எக்குயிட்டி' வழக்குகளென்பன. வழக்கு விஷயத்தில் சட்டப்படி ஒரு நிர்ணயமான பரிகாரம் காணப்படும் வழக்குகள் முதல் வகையைச் சார்ந்தன. அப்படிச் சரியான பரிகாரம் காணப்பெறுத விஷயங்கள் 'எக்குயிட்டி' வழக்குகளாம்.

எக்குயிட்டி வழக்குகள்

சில நாடுகளில் ஸிவில், கிரிமினல் வழக்குகள் தனித்தனி நீதிமன்றங்களில் நடத்தப்பெறுகின்றன; மத்தியஸ்த மன்றங்கள், தொழில் விவாத நீதிமன்றங்கள் என்ற சில விசேஷ ஸ்தாபனங்களும் உண்டு.

சமஷ்டி அரசியல்களில், அநேகமாக இரண்டுவிதமான தனி நீதிமன்றங்கள் இருக்கின்றன. ஒன்று சமஷ்டி முழுவதற்கும் பொதுவான சட்டங்களின்படி நியாயம் செலுத்தும் மத்திய நீதிமன்றமாகும். மற்றொன்று மாகாணங்களுக்குள் உண்டாகும் விவாதங்களை மாத்திரமே கவனித்து அந்த அந்த மாகாணங்களுக்குரிய சட்டப்படி நீதி செலுத்தும் ஸ்தாபனம். ஸ்விட்ஜர்லாந்து சமஷ்டியில் ஒரே ஒரு தலைமை நீதிமன்றந்தான் இருக்கிறது. சமஷ்டிச்சட்டங்கள் மாகாணங்களின் நீதி மன்றங்களாலேயே நிறைவேற்றப்படுகின்றன. இம்முறை மிகவும் சிக்கனமானது. இந்தியாவிலும் இம்முறைதான் புதிய சமஷ்டித் திட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

நீதிபதிக்குரிய லக்ஷணங்கள், சம்பளம் முதலியவை

சட்ட ஞானம், பொருளாதார நிலைமையைப் பற்றிய அறிவு, நீதி நெறியில் திறம்பாத உயர் குணம், நடுநிலைமை, முதிர்ந்த அனுபவம், அரசியற் கட்சியினிடம் பரிவில்லாமை என்பவையெல்லாம் சிறந்த நீதிபதிக்கு இருக்கவேண்டிய லக்ஷணங்கள். இக்குணங்கள் உள்ளவர்களையே முக்கிய நீதிபதி ஸ்தானங்களில் ஏற்படுத்த வேண்டும். அவற்றிற் கேற்றபடி உத்தியோக கால அளவின் நிர்ணயமும், உயர்ந்த சம்பளமும் நீதிபதிகளுக்கு அளிக்கப்பட வேண்டும். சட்டசபை தன் இஷ்டப்படி இவைகளை மாற்றிவிடக் கூடாது.

நீதிபதிகளின் நியமன முறைகள்

நீதிபதிகளை நியமனம் செய்வதில் எந்த முறை மிகவும் திருப்திகரமானது என்பதைப்பற்றிப் பல வகை அபிப்பிராயங்கள் இருக்கின்றன. சில அமெரிக்க நாடுகளில் சட்டசபை அங்கத்தினர்கள் நீதிபதிகளைத் தேர்ந்தெடுக்கின்றனர். இது நல்ல முறை அன்று. இம் முறையில் நீதி

பதிகளின் சுதந்திரத்திற்குக் கேடு விளையும். நீதிபதிகளின் நியமன விஷயத்தில் கட்சி உணர்ச்சியும் தாக்ஷிண்யமும் அதிகரித்து வீண் சண்டையும் ரகசியக் கலகங்களும் ஏற்பட்டக் கூடும். வேறொரு முறை பல நாடுகளில் இன்னும் சோதனை நிலையில் இருந்துவருகிறது. அங்கே நீதிபதிகள் பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இப்போது ஸோவியத் ருஷ்யாவில் மாத்திரமே இம்முறை அனுஷ்டானத்தில் இருந்து வருகிறது. இதில் ஒரு முக்கியமான குறை உண்டு. நீதிபதிகள் திறமையற்றவர்களாகவும் நேர்மையில்லாதவர்களாகவும் ஆகிவிடுவார்கள். நீதிமன்றங்களுக்கு வேண்டிய திறமைபெற்றவர் சாதாரணமாய் அரசியல் சம்பந்தமான போட்டிப் போராட்டங்களில் கலந்து கொள்ளப் பின்வாங்குவார்கள். நல்ல யோக்கியதை உள்ளவாகளை மாத்திரமே தேர்ந்தெடுக்கும்படியான பகுத்தறிவு வாக்காளர்களுக்கு இருப்பதில்லை. ஆதலின் தேர்தல்களின் மூலம் அரசியல் வாதிகளே நீதிபதிகளாக வந்துவிட்டால் அரசியல் ஸ்தாபனத்திற்கும் நீதி ஸ்தாபனத்திற்கும் நேரான தொடர்பு ஏற்பட்டு விடும். இது தீமையையே விளைவிக்கும்.

சாதாரணமாய்ப் பல நாடுகளில் நீதிமந்திரியின் சிபாரிசின்மேல் அரசாங்கத் தலைவரே நீதிபதிகளை நியமனம் செய்கிறார். சட்ட சபையையும் பொதுஜனங்களையும் விட நிர்வாக அதிகாரிகளே நீதிபரிபாலனத்திற்கு வேண்டிய திறமை படைத்தவர்களைப் பொறுக்கி யெடுக்கும் தகுதி வாய்ந்தவர்கள் என்ற காரணத்தினால் இம் முறையைப் பலர் ஆதரிக்கின்றனர். இப்படி நியமனம் செய்யப்பெற்ற நீதிபதிகள் பெரும்பாலும் பொதுமக்களின் அபிப்பிராயத்திற்குப் பயப்படாமலும் கட்சி தாக்ஷிண்யத்திற்கு உட்படாமலும் அரசியற் காரணங்களுக்குச் செவி சாய்க்காமலும் நீதி செலுத்திவரக் கூடும்.

இவ்விஷயத்தில் அரசியல் ஞானிகள் பலரின் அபிப்பிராயம் வருமாறு: ஒரு நீதிமன்றத்திலுள்ள சுதந்திரம்பெற்ற நீதிபதிகளோ, அல்லது உயர்தர நீதிபதிகளோ, நாட்டில் நீதிபதி ஸ்தானத்திற்குத் தக்க யோக்கியதை யுள்ளவர்களைப்

பொறுக்கி எடுத்து, அவர்கள் பெயர்களை ஒரு ஜாபிதாவில் சேர்த்து நிர்வாக அதிகாரிகளுக்கு அனுப்பிவிடவேண்டும். அந்த ஜாபிதாவில் குறிக்கப்பெற்றிருக்கும் பேர்களிலிருந்து நீதிபதிகளை நிர்வாக சபையினர் நியமிக்க வேண்டும். ஸிவில் ஸர்விஸ் உத்தியோகஸ்தர்களைப்போலக் கீழ்த்தர மன்ற நீதிபதிகளையும் போட்டிப் பரீட்சைமூலம் தேர்ந் தெடுப்பது மற்றொரு முறை. தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு அவர்கள் திறமைக்குத் தக்கபடியும் உத்தியோக கால அளவின்படியும் அதிகச் சம்பளமும் உயர் பதவியும் கொடுக்க வேண்டும். இம்முறை பிரான்ஸ் தேசத்தில் வழக்கில் இருந்து வருகிறது. இதனால் நீதிபதிகள் அறிவும் திறமை யும் உள்ளவர்களாக இருந்தாலும், நாளடைவில் படிப்படி யாக மேல் பதவியை அடைய விரும்புவோராகையால் நிர்வாக மேலதிகாரிகளின் தயவை எதிர்பார்க்கவேண்டியிருக்கிறது. ஆதலின் அவர்களின் நோக்கமும் மனப்பான்மையும் விரி வின்றிக் குறுகிவிடுகின்றன.

நீதிபதிகளின் உத்தியோக காலஅளவை நிர்ணயிக்கும் விஷயத்தில் சிறந்த முறை, அவர்கள் திருப்தியாய் வேலை செய்யக்கூடிய வரையில் உத்தியோகம் வகித்து வரும்படி செய்வதே. இதைப் பலரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். வேறு எந்த முறையிலும் நீதிபதிகளின் சுதந்திர நிலைமையைப் பாதுகாக்க முடியாதென்று பலர் கருதுகிறார் கள். அடிக்கடி மறு தேர்தலையோ, மறு நியமனத்தையோ, உயர் பதவியையோ எதிர்பார்த்துநிற்கும் நீதிபதிகள் பக்ஷ பாதமின்றித் தீர்ப்பு அளிப்பது அசாதாரணம். சட்டத் தைக் கண்டிப்பாய் அனுசரித்துத் தீர்ப்புச் செய்வதை விட் டுப் பொதுஜன விரோதம் அல்லது மேலதிகாரிகளின் விரோ தம் நேராமல் இருக்கும்படியான தீர்ப்பையே அவர்கள் செய்ய நேரிடும். இந்தியாவில் நீதிபதிகளின் உத்தியோக காலம் அவர்களின் வயது அளவைப் பொறுத்து ஏற்பட் டிருக்கிறது. ஒரு குறிப்பிட்ட வயதுக்கு மேல் அவர்கள் வேலையிலிருந்து நீங்கிவிட வேண்டும்.

நீதிபதிகளின் உத்தியோக கால அளவு

திறமையற்றவர்களையும், சக்திக் குறைவுடையவர்களை யும், நேர்மை தவறுகிறவர்களையும் நீக்கிவிட ஒரு வழி அவசி யம் இருக்கவேண்டும். பிரிட்டனில் பார்லிமெண்டு சபை களின் இபார்சின்மேல் உயர்தர நீதிபதிகள் நீக்கப்பெறலாம். ருஷ்யாவிலும் சில அமெரிக்க நாடுகளிலும் வாக்காளர் களின் அபிப்பிராயப்படி நீதிபதிகளை வேலையிலிருந்து விலக்கிவிடலாம். ஆனால் நீதிபதிகளைப் பொதுஜனங்கள் தேர்ந்தெடுக்கக் கூடாது என்ற ஆட்சேபத்திற்குச் சொல் லிய காரணங்களை இம் முறைக்கும் சொல்லலாம்.

மற்ற அரசாங்க உறுப்புக்க ளுடன் தொடர்பு

சட்ட பூர்வமான அரசியல் திட்டத்தில் குறித்திருக்கும் நீதிமன்றங்களைத் தவிர, மற்றவைகளை அமைக்கவோ, சீர் திருத்தவோ, எடுத்துவிடவோ சட்டசபை களுக்கு அதிகாரம் உண்டு. அவை நீதிபதி களின் தொகையை நிர்ணயிக்கவும் நீதிமன் றங்களின் அமைப்பில் தலையிடவும் கூடும். சட்டசபை அளிக்கும் பணத்தொகையைக்கொண்டே நீதி மன்றங்கள் நடைபெறவேண்டும். இக்காரணங்களினால் சட்டசபைக்கு அம் மன்றங்களின் மேல் ஓரளவு அதிகாரம் இருக்கிறது. பல நாடுகளில் சில முக்கியமான குற்றச்சாட்டு வழக்குகளில் நீதிவிசாரணையை நடத்தும் உரிமையை இரண்டாம் சட்டசபையே பெற்றுள்ளது. பிரிட்டனில் இன்றுகூடப் பிரபுக்கள் சபைதான் பிரபுக்களின் குற்ற விசாரணைகளைச் செய்து வருகிறது. இந்த அதிகாரத்தை வகிப்பதும் தவிர, மற்ற வழக்குகளில் அது ஒரு மேலான 'அப்பீல் கோர்ட்டா'கவும் இருக்கிறது. இவ்விரண்டு வேலைகளையும் பிரபுக்கள் சபை ஒரு சிறிய நீதி விசாரணைக் கமிட்டி மூலம் நடத்தி வருகிறது.

சட்டத்தில் தெளிவாய் விதித்தபடியோ, அல்லது அதன் ஷரத்துக்களிலிருந்து தொனிக்கும் கருத்தின்படியோ, நீதிமன்றம் சட்ட நிரூபண விஷயத்தில் அதிகமான அதிகா ரம் வகிக்கக்கூடும். சட்ட சபை நிறைவேற்றிய சட்டங் கள் அரசியல் திட்டத்தில் குறிக்கப்பட்ட வரம்புகளுக்கு உட்பட்டிருக்கின்றனவா என்பதையும் நீதி ஸ்தாபனம்

தீர்மானிக்கலாம். இம்மாதிரியான அதிகாரம் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மிகுதியாக வளர்ந்திருக்கிறது. பிரிட்டனிலோ பார்லிமெண்டே சர்வாதிகாரம் பெற்றது. அது இயற்றிய சட்டங்களை அரசியல் திட்டத்திற்கு விரோதமானவையென்று சொல்லப் பிரிட்டிஷ் நீதிபதிகளுக்கு அதிகாரம் இல்லை. ஆனல் அவர்கள் கீழ்த்தர ஸ்தாபனங்களின் விதிகளைப் பற்றிய தீர்மானங்களைச் செய்யக்கூடும். சட்டசபையினிடமிருந்து தக்க அங்கீகாரம் பெறுத நிர்வாக இலாகா உத்தரவுகளைப் பிரிட்டிஷ் நீதிபதிகள் நிறைவேற்றுமல் இருந்திருக்கிறார்கள். பிரான்ஸில் சட்டசபைகளின் வேலையைப் பரிசீலனை செய்யும்படி நீதி ஸ்தாபனத்தைக் கட்டாயப்படுத்த வேண்டுமென்று செய்த முயற்சி வீணுய்ப் போயிற்று. ராஜாங்க சபை மாத்திரம் நிர்வாக இலாகா உத்தரவுகளை இடைவிடாமல் கண்காணித்துப் பரிசீலனை செய்து வருகின்றது.

நிர்வாக இலாகாவிற்கு நீதி ஸ்தாபனத்தின்மேல் ஓரளவு அதிகாரம் இருக்கவே இருக்கிறது. அரசாங்கத்தின் ஆதரவு இருந்தாலொழிய நீதிபதிகளின் தீர்ப்புக்கள் பயன்படா. இது நிர்வாக இலாகாவைப் பொறுத்ததாகவே இருக்கிறது நீதி மன்றங்களின் கட்டளைகளை நிறைவேற்றி வைக்க நிர்வாக இலாகா முயற்சி செய்யத் தவறினுல், அதை அப்படிச் செய்யும்படி நிர்ப்பந்தம் செய்ய நீதி ஸ்தாபனத்திற்கு அதிகாரமில்லை.

நீதி ஸ்தாபன உத்தியோக நியமன விஷயத்தில் நிர்வாக இலாகாவிற்குப் பேரதிகாரங்கள் உண்டு. சில சமயங்களில் சுயேச்சை மனப்பான்மையுள்ள நீதிபதிகள்—முக்கியமாகக் கீழ்த்தர நீதிபதிகள்—நேர்மையை நிலை நிறுத்தும்பொருட்டு நிர்வாகத்திற்கு விரோதமாக நடந்தால் அவர்களுக்குச் சம்பள உயர்வு, மேற்பதவி இவை கிடைக்காமல் போதலும் கூடும். தாம் திறமையாக எவ்வளவு காலம் வேலை செய்யக் கூடுமோ அவ்வளவு காலம் உத்தியோகத்தை வகித்து வரலாம் என்ற விதி நீதிபதிகள் விஷயத்தில் கண்டிப்பாய் அனுஷ்டானத்தில் இருந்தால், நீதி நிலய நியமனங்களா

லேயே சர்க்கார் நடவடிக்கையின் போக்கு நீண்ட காலத்திற்குத் திருப்தியளிக்கக்கூடியதா யிருக்கும்.

நிர்வாக நீதி மன்றங்கள்

ஸிவில் கோர்ட்டுகளிடமிருந்து நிர்வாக சம்பந்தமான வழக்கு விசாரணைகளை எடுத்துவிட வேண்டுமென்ற எண்ணம் முதலில் பிரெஞ்சுப் புரட்சிக் காலத்தில் பிறந்தது. பிறகு மற்ற ஐரோப்பிய நாடுகளிலும் இந்தக் கருத்துப் பரவிற்று. பிரெஞ்சு அரசாங்க நிர்வாக அதிகாரிகளின்மேல், நீதி மன்றங்கள் செலுத்திவந்த அதிகாரத்தில் பலருக்கு இருந்த மனவெறுப்பே இதற்குக் காரணம். நிர்வாக விஷயமான வழக்குகளை விசாரிக்க அங்கே தனிப்பட்ட நிர்வாக நீதி மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. நிர்வாக அதிகாரிகளின் நடவடிக்கைகளெல்லாம் சட்டத்திற்கு இணங்க இருக்கின்றனவா வென்பதைப்பற்றி விசாரிக்கும் வழக்குகள் யாவும் அந்த நிர்வாக நீதி மன்றங்களிலேயே விசாரிக்கப்படுகின்றன. ஒரு சர்க்கார் அதிகாரியின் அஜாக்கிரதையால் தனி மனிதனுக்கு ஏதாவது நஷ்டம் ஏற்பட்டால், அவன் அந்த நீதி மன்றங்களில் சர்க்காரின்மேல் வழக்குத் தொடுக்கலாம். அவன் ஜயித்தால் சர்க்காரே அவனுக்கு நஷ்ட ஈடு அளிக்கும்.

நீதி ஸ்தாபனத்திற்கு நிர்வாகத்தின் மேல் அதிகாரம் இருந்தால் அதிகாரப் பிரிவினைக் கொள்கைக்குப் பங்கம் ஏற்படுமென்றும், நிர்வாக இலாகாவிற்கு அதனால் அனுவசியத் தொல்லைகள் உண்டாகுமென்றும் அரசியல் வாதிகள் கருதினர்கள். இன்று பிரான்ஸில் நிர்வாக நீதி மன்றங்கள் நிர்வாக இலாகாவின்மேல் அதிக அதிகாரம் செலுத்த முடியாத வகையிலும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுடைய யதேச்சாதிகார உத்தரவுகளிலிருந்து தனி மனிதனைப் பாதுகாக்கும் முறையிலும் அமைக்கப் பெற்றிருக்கின்றன.

மேற்சொல்லிய பிரான்ஸ் நிர்வாகக் கோர்ட்டு ஏற்பாடு, ஆங்கிலச் சட்ட ஆட்சிக் கொள்கைக்கு நேர் விரோதமாகும். பிரிட்டனில் அதிகார வரம்புகளைக் கடந்தோ, சட்டத்தை மீறியோ, அஜாக்கிரதையாகவோ நிர்வாக உத்தியோகஸ்தர்கள் நடந்திருந்தால், அவர்களின்மேல் சாதாரண நீதி ஸ்தலங்

களிலேயே வழக்குத் தொடுக்கலாம். அத்தகைய சந்தர்ப்பங்களில் ஒரு குறித்த உத்தியோகஸ்தன்மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமே யொழிய அரசர்மேல் வழக்குத் தொடரக் கூடாது. நஷ்ட ஈட்டையும் அந்த உத்தியோகஸ்தனிட மிருந்தே பெறவேண்டும். சில சந்தர்ப்பங்களில், சட்ட சபையின் ஓட்டுமூலம், அரசாங்கமே ஓர் உத்தியோகஸ்தன் திறத்தில் விதித்த நஷ்ட ஈட்டைக் கொடுத்துவிடக்கூடும்.

இது திருப்திகரமான முறையன்று. ஏனெனில் நிர்வாக நடவடிக்கையில் ஏற்படும் தவறுகளுக்குப் பொறுப்பாளி யாகும் உத்தியோகஸ்தன் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள ஏதாவது சட்டத்தின் மூலை முடுக்குகளைத் தேடிப் பார்த்து ஆதாரம் கண்டுபிடிக்க முயலுவான். தைரியமாகத் தனக்கு நேரென்று தோன்றும் வழியில் உத்தியோகத்தை நடத்தி வராமல், எப்போதும் தப்பித்துக்கொள்ளும் வழியைத் தேடியே அவன் தன் கடமைகளை நிறைவேற்றி வருவான். சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் பிழைகளுக்குச் சர்க்கா ரைப் பொறுப்பாளியாக்குவதுதான் சரியான முறையென் பதையும், நிர்வாக இலாகா சம்பந்தமான வழக்குகளைத் தனி மன்றங்களில் விசாரணை செய்வதே தக்கதென்பதையும் இக் கால அரசியல் அறிஞர்கள் அதிகமாக ஆதரிக்கின்றனர்.

அத்தியாயம் 13

பொது நிர்வாக வேலையும் ஸிவில் ஸர்விஸ்-ம்

இக்காலத்து அரசில் பொது நிர்வாகம் என்பது ஒரு முக்கிய மான விஷயமாகிறது. அரசாங்க அமைப்பிலே அந்த இலாகா ஒரு தனிப்பகுதியாகி விட்டது. அரசாங்கத்தின் கடமைகளும் பொறுப்புகளும் பெருகி வளர்ந்து வரவே, அதற்கு ஏற்றவாறு நிர் வாக உத்தியோகஸ்தர்களின் தொகையும், அவர்களின் வேலைகளும் விரிவடைந்து நிற்பதே இதற்குக்

பொது நிர்வாக வேலை

காரணம். போலீஸ் படையால் உள்நாட்டுப் பாதுகாப்பு, போர்ப் படையால் வெளிநாட்டுப் பாதுகாப்பு ஆகியவை முதலாக உணவுப் பொருள்கள் மருந்து சாமான்கள் என் பவைகளின்மேல் கண்காணிப்பு, தந்தி, தபால், டெலிபோன், ஆஸ்பத்திரிகள், மின்சார வசதி, பொது மக்களின் கல்வி, போக்குவரவுச் சாதனங்கள் முதலியவை வரையில் எல்லாப் பொதுநலக் கருவிகளையும் தன் பிரஜைகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்கும் பொறுப்பை இந்நாள் அரசு ஏற்றுவருகிறது. எல்லா அரசுகளிலும் மேற்கூறிய வசதிகள் காணப்படுமென் பது இல்லை. அரசாங்கத்தின் அடிப்படைக் கொள்கை யைப் பொறுத்தும் அந்த அந்தக் காலங்களுக்கும் தேசங் களுக்கும் ஏற்றவாறும் இவற்றில் வித்தியாசம் ஏற்பட்டிருக் கின்றது. இம்மாதிரியான விஷயங்களுக்குப் **பொது ஊழியம்** (Public Service) என்றும் அவைகளில் அமர்ந்திருக்கும் உத்தி யோகஸ்தர்களுக்குப் **பொதுஜன ஊழியர்கள்** (Public Servants) என்றும் பெயர். அரசுக்கும் பிரஜைகளுக்கும் ஒற்றுமை நிலவக்கூடிய ஜனநாயக அரசில் சர்க்கார் உத்தியோகஸ்தர் கள் உண்மையிலேயே கௌரவம் பெற்ற பொதுஜன ஊழி யர்களே யாவர்.

ஸிவில் ஸர்விஸ் உத்தியோகஸ்தர் களின் நீலமை

இப்போது அநேக அரசுகளில் பொதுஜன அபிப்பிரா யப்படி, ஜனப் பிரதிநிதி சபைகளே அரசின் பொதுக் கொள் கைகளை நிர்ணயிக்கின்றன. அந்தக் கொள் கைகளை நிறைவேற்றுவது நிர்வாக இலாகா வின் கடமையாகும். இந்த முக்கிய வேலைக்கு மிகுதியான உத்தியோஸ்தர் களின் கூட்டமும், பலவகைக் காரியாலயங்களும், இலாகாக் களும் அவசியம் வேண்டும். இக்கூட்டத்தில் சேர்ந்த நிரந் தர உத்தியோகஸ்தர்களே உண்மையில் ஆட்சி புரிபவ ரென்று சொல்லலாம். "பார்லிமெண்டுகளும், அரசின் தலைவர்களும் செங்கோல் பிடிக்கலாம்; ஆனால் ஸிவில் ஸர்விஸே ஆட்சி புரிகிறது" என்று சொல்வதில் தவறே யில்லை. மந்திரிப் பதவியை அடைவது நிர்வாகத் திறமையி னால் அன்று. வேறு யோக்கியதை காரணமாக நிர்வாக

அனுபவம் இல்லாதவர்கள்கூட மந்திரிகளாவார்கள். ஆகவே அனுபவம் வாய்ந்த உத்தியோகஸ்தர்களின் உதவியின்றி மந்திரிகளால் ஒன்றும் செய்யமுடியாது. சர்க்காரின் சட்டப் பிரேரணைகளை யெல்லாம் நிர்வாக இலாகாக்களே தயாரித்து உருப்படுத்துகின்றன. எனவே அரசாங்கத்தில் அடிக்கடி ஏற்படும் பல சீர்திருத்தங்களுக்கும் அவைதாம் மூலாதாரம். சட்டத்தை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வரவேண்டிய விதிகளையும் அவைகளே ஏற்படுத்துகின்றன. இவ்விதம் பல இலாகாக்களால் வெளியிடப்பட்ட விதிகள் குறித்தகால அளவு கடந்தவுடன் சட்டத்தின் பலம் பெற்று விடுகின்றன. பிரிட்டனில் இதற்கு 'உதவிச் சட்ட நிரூபணம்' என்று பெயர். பேருக்கு மட்டும் மந்திரியே கிளைச்சட்டங்களையும் உப விதிகளையும் இயற்றுகிறார். உண்மையில் அவையெல்லாம் நிரந்தர உத்தியோகஸ்தர்களின் வேலைகளேயாம். நிதி விஷயங்களிலுங்கூட நிரந்தர உத்தியோகஸ்தர்களின் செல்வாக்கு மிக அதிகமாகவே உள்ளது. அநேகமாக எல்லாப் பொக்கிஷ மந்திரிகளும் அவர்களுக்குக் கட்டுப்பட்டுத்தான் நடக்க வேண்டியிருக்கிறது. அவர்கள் தங்கள் வேலைகளை வெளிப்படையாகச் செய்துவரும் புகழை வேண்டாமல், உண்மையில் அதிகாரத்தைத் தம்மிடம் கொண்டிருக்கிறார்கள்.

உத்தியோகஸ்தர்களின் நியமனம், பதவி, உயர்வு முதலியவை

இந்நாள் அரசிய லமைப்பில் பொது நிர்வாக ஊழியர்களின் நிலைக்கு ஏற்ப உயர்ந்த திறமை படைத்தவர்களையே நியமிப்பதும் உயர்த்துவதும் அத்தியாவசிய மாகும். வெகுமதி, அந்தஸ்து, பிரஜா உரிமைகள் ஆகிய எல்லாவற்றையும் வேலைகளில் அதிக ஊக்கமும் பற்றும் கொள்ளும் படியாக அவர்களுக்கு அளிக்க வேண்டும்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் தேர்தலில் வெற்றிபெற்ற கட்சியைச் சேர்ந்தவர்களுக்கே எல்லா உத்தியோகங்களும் முன்பு கொடுக்கப்பட்டு வந்தன. இது திருப்திகரமான ஏற்பாடு அன்று என்று இப்போது அநேகமாய்க் கைவிடப் பட்டு வருகின்றது. தகுதியை அறிந்து அதற்கேற்ப உத்தி

யோகஸ்தர்களை நியமனம் செய்வதுதான் சரியான முறை யென்பது இப்போது எல்லோருக்கும் உள்ள அபிப்பிரா யம். இதை உட்கொண்டே பப்ளிக் ஸர்விஸ் கமிஷன் என் னும் சுயேச்சைபெற்ற ஒரு மத்திய ஸ்தாபனம் பகிரங்கப் பரீக்ஷைகள் வைத்து, தேறினவர்களை உத்தியோகங்களுக்கு நியமிக்கின்றது. இக்கமிஷனின் மற்ற வேலைகள் பின் வரு வனவாம்:—நியமன காலத்தில் வயது அளவின் நிர்ணயம், தேர்ந்தெடுக்கப்பெறுபவர்களின் அறிவுத் திறமையையும் தேகவலிமையையும் கண்டுபிடிக்க விதிகள் விதிப்பது, ஸிவில் ஸர்விஸ் உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பளம், பதவி உயர்வு, ரஜா, உபகாரச் சம்பளம், பிராவிடெண்டு நிதி முதலியவைகளில் வசதிகள் ஏற்படுத்தல்.

பிரிட்டனில் ஸிவில் ஸர்விஸ் போட்டிப் பரீக்ஷையில், பொதுவான கல்வித் திறமையே (அதாவது ஹைஸ்கூல் படிப்பையும் சர்வகலாசாலைப் படிப்பையுமே) மிகவும் பாராட்டுகின்றனர். வயது அளவும் அங்கே சற்று அதிகம்; இருபத்தொரு வயது பூர்த்தியாயிருக்க வேண்டும். ஜர்மனி யிலும் பிரான்ஸிலும் அந்த அந்த உத்தியோகங்களுக்கு வேண்டிய தனிப்படிப்பும் யோக்கியதையும் அபேட்சகர் களுக்கு இருக்கவேண்டும். தவிரவும், பிரான்ஸில் ஸிவில் ஸர்விஸ் உத்தியோகஸ்தர்களுக்குத் தங்கள் உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ளவும் குறைகளை வெளிப்படுத்தவும் அவர்களுக்குள் தொழிற் சங்கங்களை ஏற்படுத்திக் கொள் ளும் உரிமை இருக்கிறது. உயர் பதவியும் சம்பளமும் உத்தியோக கால அளவைப் பொறுத்தன அல்ல; திறமையை ஒட்டியவையே.

உத்தியோக நியமனம் முதலிய விஷயங்களைத் தவிர வேறு சில விஷயங்களும் முக்கியமானவை. ஓர் இலாகா வுக்கும் மற்றோர் இலாகாவுக்கும் உள்ள தொடர்பு, நிர்வாக இலாகாக்களுக்குப் பொது மக்களுடன் உள்ள சம்பந்தம் முதலிய விஷயங்களைப் பொறுத்தனவாக நிர்வாக ஊழியத் தின் திறமையும் நன்னடத்தையும் இருக்கும்.

பொதுநிர்வாக உத்தியோகஸ்தர்களுக்கு வேலையிலும்

சம்பளத்திலும் நிரந்தரமான சலுகை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். ஜனநாயக அரசுகளில் நிர்வாக உத்தியோகஸ்தர்கள் தீவிர சிரத்தையுடனும் மனச்சாக்ஷிக்கு ஒத்தவாறும் தங்கள் வேலைகளை நடத்திவரவேண்டுமென்பதே இதற்குக் காரணம். அவர்கள், உத்தியோக முறையில் செய்யும் வேலைகளினால் ஏற்படும் பொதுஜன வெறுப்பையோ தூஷணையையோ பொருட்படுத்தக் கூடாது. வேலைகளைத் திறமையாய்ச் செய்து வருவதில் புகழையும் எதிர்பார்க்கக் கூடாது. கட்சிப்பற்றின்றி, அதிகாரம் வகித்து வரும் கட்சியிடமே ஆதரவு காட்டி அதன் காரியத் திட்டத்தை மனப்பூர்வமாக நடத்திவரவேண்டும். பிரிட்டனில் நிரந்தர உத்தியோகஸ்தர்கள் அதிகாரத்தில் இருக்கும் கட்சியிடம் சிநேகப்பான்மையுடனும் நேர்மைக் குணத்தோடும் நடந்து வருகின்றனரென்பது யாவர்க்கும் தெரிந்ததேயாகும். நிர்வாக இலாகாத் தலைவர்களாகிய உத்தியோகஸ்தர்கள் மந்திரிகளின் யோசனைகளில் மனங்கலந்து அவர்கள் அபிப்பிராயங்களுக்கு மதிப்புக் கொடுத்து அவர்களைத் தழுவி நடந்து வரவேண்டும். உத்தியோகஸ்தர்களுடைய நடவடிக்கைகளை ஜனங்கள் எதிர்த்தாலும், அவர்கள் தலைமை வகித்திருக்கும் இலாகாக்களின் பேரில் வீண் பழி ஏற்பட்டாலும் மந்திரிகள் கூடிய அளவு அவர்களுக்கு ஆதரவு அளிப்பது அவசியமாகும்.

பப்ளிக் ஸர்விஸின் லக்ஷியங்கள்

சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் எந்தக் கட்சியையும் சார்ந்தவர் அல்லராதலால் அவர்களுக்கு ஓட்டு உரிமை இருக்கக் கூடாது என்பது சிலர் அபிப்பிராயம். இது சரியன்று. சர்க்கார் உத்தியோகஸ்தனும் அரசின் பிரஜைதான். மூலாதாரமான பிரஜா உரிமைகளை அனுபவிக்கும் சுதந்திரம் அவனுக்கும் உண்டு. சர்க்கார் உத்தியோகத்தில் அமர்ந்துவிட்டான் என்பதற்காக அவற்றை அவனிடமிருந்து எடுத்து விடுவது நியாயமாகாது. மேலும், சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் எல்லோரும் படித்தவர்களும் அறிவாளிகளுமாவர். அவர்களுக்கு ஓட்டு உரிமை இல்லை யென்றால் வாக்காளர்களின் தொகு

திக்கே அது ஒரு பெரிய நஷ்டமாகும். சர்க்கார் உத்தியோகஸ்தனை ஓட்டுக் கொடுக்கும் உரிமையை மட்டும் உபயோகிக்கலாமேயன்றி, அரசியல் கூட்டங்களிலோ தேர்தல் போட்டிப் பிரசாரத்திலோ கலந்துகொள்ளக்கூடாது.

அத்தியாயம் 14

ஸ்தல ஸ்தாபன ஆட்சி

மத்திய அரசாங்கத்திற்கும் ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் இடையே இருக்கும் தொடர்பு அரசியலமைப்பில் ஒரு முக்கியமான அம்சமாகும். எல்லாத் தேசங்களிலும் ஒழுங்கும் நேர்மையுமுள்ள வாழ்க்கைக்கு மூலாதாரம் ஸ்தல ஸ்தாபன ஆட்சியேயாம். சுய ஆட்சியாயினும் சரி, செங்கோலாட்சியாயினும் சரி, அதன் சிறப்பு ஒரு நாட்டிலுள்ள கிராமங்களிலும் நகரங்களிலும் உள்ள ஆட்சியில் நிலவும் சுயேச்சையின் தன்மையையும் அளவையுமே சார்ந்து நிற்கும்.

ஸ்தல ஸ்தாபன ஆட்சியின் முக்கியத்தன்மை

ஸ்தல ஸ்தாபன ஆட்சியில் மற்றொரு முக்கியமான அம்சம் உண்டு: ஒன்றையொன்று எதிர்த்து நிற்கும் அரசியற்கட்சிகளுக்கிடையே சமரஸம் ஏற்படுத்திக் கட்சி உணர்ச்சியின் வேகத்தைக் குறைப்பதற்கு அது உதவுகின்றது. ஸ்தல ஸ்தாபன வேலைகளில் ஈடுபடுவதால் பல வகுப்புக்களுக்கும், பல ஜாதியார்களுக்கும், பல மதத்தினருக்கும் இடையே உறவும் ஒற்றுமையும் ஏற்படும். ஒருவரையொருவர் அடுத்து வசித்து வருவதே ஜனசமூக உணர்ச்சி பலமடைவதற்குப் பெரிய சாதகமாகும். நல்ல தெருக்கள், பாதைகள், தெரு விளக்குகள், சுகாதாரம், உல்லாசத் தோட்டங்கள் என்பவைபோன்ற பொதுநல வசதிகளில் அடுத்து வாழும் மக்கள் பொதுவில் ஈடுபட்டு ஊக்கத்துடன் உழைத்துவர ஏது இருக்கிறது. இவ்வசதிகளை அநுபவிக்கும் ஜனங்கள் ஒன்றுகூடி ஒத்துழைத்துத் தங்களுக்குத் தேவையான பொதுவசதிகள் பூர்த்தியாவ

தற்கும், தேசீய ஒற்றுமையும் தேசீய முன்னேற்றமும் ஏற் படுவதற்கும் அடிகோலுவார்கள்.

ஸ்தல ஸ்தாபன சுய ஆட்சியில் பின்னும் உயர்ந்த விசே ஷம் ஒன்று உண்டு. ஸ்தல சுயஆட்சி ஸ்தாபனம் ஜன சமூ கத்திற்கு வேண்டிய பொறுப்புணர்ச்சியையும் நேர்மையை யும் உண்டுபண்ணுவதற்கேற்ற பயிற்சி ஸ்தலமாக இருக் கிறது. ஆதிகாலத்துக் கிரேக்க இத்தாலிய நகரங்களிலும் புராதன இந்தியக் கிராமங்களிலும் நிலவிய வாழ்க்கையின் சிறப்புக் காரணம், ஒரே இடத்தில் வசித்து வந்தவர்களுக் குள் தழைத்து வளர்ந்துவந்த சமுதாய வாழ்க்கையுணர்ச்சி யின் பலமே. தேசீயத் தலைவர்களும், வீரர்களும் ஸ்தலஸ்தா பன ஆட்சியில்தான் முதல் முதல் முளைத்து எழுந்து பக்குவம் அடைகிறார்கள். ஸ்தலப் பிரச்னைகளில் ஈடுபடுவதனால் நிர் வாகத்தைப்பற்றிய நேரான அனுபவமும் பயிற்சியும் அவர்க ளுக்கு முதலில் ஏற்படுகின்றன. பிற்காலத்தில் தேசீய ஆர் வம் அதிகரித்து ராஜீய விஷயங்களில் கலந்து கொள்ளும் போது அவர்களுக்கு ஸ்தல சுய ஆட்சியில் ஏற்பட்ட அனு பவம் மிகவும் துணையாயிருக்கிறது. பிரோஸ் ஷா மேத்தா, டாக்டர் டி. எம். நாயர் முதலிய இந்தியத் தலைவர்கள் ஆதி யில் ஸ்தல ஸ்தாபன சுயஆட்சியில் ஆழ்ந்த பழக்கமும் அனு பவமும் பெற்றிருந்ததால்தான் பின்பு சிறந்த தேசீயத் தலை வர்களாக விளங்க முடிந்தது.

இம்மாதிரியான அதிகாரத்தைச் சிறு ஸ்தாபனங்களுக் கும் பகிர்ந்து விநியோகம் செய்வதுதான் ஜனநாயகத்தின் சாராம்சம். அதிகாரம் முழுவதும் ஓரிடத்திலேயே, அதா வது மத்திய அரசாங்கத்தினிடமே, குவிந்திருப்பது சுயேச்சை கொண்ட தனிமனிதனது இயல்புக்கு முரணுவதோடு ஜன நாயக லக்ஷியத்திற்கே மாறுபட்டதாகும்.

ஐக்கிய ஆட்சிக்கும் சமஷ்டிக்கும் உள்ள வித்தியாசத் தைக் குறிப்பிட்ட இடத்தில், மத்திய அரசாங்கத்திற்கும் அதில் அடங்கிய தனி நாடுகளுக்கும் இடையே ஏற்படும் அதிகாரப் பிரிவினையின்படி தனிநாடுகள் அநேக விஷயங் களில் சுய ஆட்சி கொண்டவை யென்றும், சில விஷயங்க

ளில் மத்திய அரசாங்கத்திற்கும் தனிநாடுகளுக்கும் சம அதிகாரம் இருக்கிற தென்றும் கூறினேம். அங்கே குறிப்பிட்ட அதிகாரப் பிரிவினையும் ஸ்தல சுய ஆட்சியின் விசேஷ அம்சமாகிய அதிகார விநியோகமும் வெவ்வேறு இயல்புடையனவாகும். ஐக்கிய ஆட்சி அரசுகளிலும் சமஷ்டி அரசுகளிலும் சிறு ஸ்தலத் தொகுதிகள் பல ஏற்படுத்தப்படுவதால் அவற்றின் விஸ்தீரணமும் ஜனத்தொகையும் ஆட்சி அமைப்பும் உரிமைகளும் வேலைகளும் பலவிதமாக இருக்கின்றன. இவ்விதமாய் நாடுகளைப் பிரிப்பதனால் இரண்டு நோக்கங்கள் நிறைவேறுகின்றன. முதலாவது, நிர்வாகத்தில் ஏற்படும் சௌகரியம். இரண்டாவது, சுய ஆட்சியில் ஜனங்களுக்குள்ள ஆசை நிறைவேறுவது. ஸ்தல சுயஆட்சியின் அளவு, தொகுதிகளின்தரம் முதலியவை மத்திய அரசாங்கத்தால் தீர்மானிக்கப்படுபவை. ஆனால் ஸ்தல சுய ஆட்சித் தொகுதிக்கு ஒரு பூரணமான ஆட்சித் திட்டமும், தேவைக்குத் தக்கபடி வரிவிதித்துப் பணம் வசூலிக்கும் அதிகாரமும் கொடுக்கப்பட வேண்டும்.

ஸ்தல ஸ்தாபனங்களின் லக்ஷணங்களும் அமைப்பும்

ஸ்தல சுய ஆட்சி முறையில் முனிசிபாலிட்டியைப் போன்ற நகரஸ்தாபனங்களும் பஞ்சாயத்து போர்டுகளைப் போன்ற கிராம ஸ்தாபனங்களும் உண்டு. சாதாரணமாக நகர ஸ்தாபனங்களில் இடவிஸ்தீர்ணம் குறைந்தும், ஜனத்தொகை அதிகமாயும், வியவசாயம் சிறிதாகவும், கைத்தொழில்கள் அதிகமாயும், வியாபாரம் மிகுந்தும் இருக்கும். ஸ்தல ஸ்தாபனங்களை ஏற்படுத்துவதில் ஒவ்வோர் அரசு ஒவ்வொரு முறையை அனுஷ்டிக்கின்றது. மொத்தத்தில் அமைப்பு முறை எங்கும் ஒரேமாதிரியாகத்தான் இருக்கிறது. ஸ்தல ஸ்தாபனங்களை அமைக்கும் போதே அவற்றின் ஆட்சிமுறை, அதிகாரங்கள் முதலியவைகளை மத்திய அரசாங்கம் நிர்ணயித்துவிடும். அவற்றைச் சட்டசபைமூலம் மாற்றவோ எடுத்துவிடவோ கூடும்.

பல நாடுகளில் ஸ்தல ஸ்தாபனங்கள் இரண்டு விதமான பொறுப்புக்களை வகித்து வருகின்றன. ஸ்தலப் பிரஜைகளின்

பிரதிநிதியாக இருந்து ஸ்தல உரிமைகளையும் சலுகைகளையும் பாதுகாத்து வருவது ஒன்று. ஸ்தல விஷயங்களில் மத்திய அரசாங்கத்தின் ஊழியனாக இருப்பது மற்றொன்று. மத்திய அரசாங்கம் ஸ்தல விஷயங்களில் அளவுக்கு மிஞ்சியோ அடிக்கடியோ தலையிடாமல் பார்த்துவர வேண்டியது மிக அவசியம்.

அதிகாரங்களும் வேலைகளும்

ஆட்சிப் பொறுப்புகள் எல்லாம் ஒருங்கே மத்திய அரசாங்கத்தினிடம் இருக்கும் அரசுக்கு உதாரணம் பிரான்ஸ் தேசமே. அங்கே ஸ்தல சுய ஆட்சி மிகக் குறைவு; அதுவும் மத்திய அரசாங்கத்தின் கண்காணிப்புக்கு உட்பட்டது. ஆகையினால்தான் பிரெஞ்சு மக்கள் சமீபகாலத்தில் 'ரீஜியனலிஸம்' என்னும் ஸ்தல ஆட்சி முறையில் ஆர்வம் கொண்டிருக்கின்றனர். இம்முறைப்படி ஸ்தல சுயஆட்சி பலவிதமாய் இருக்கவேண்டும். ஒரு ஸ்தலத் தொகுதியில் இருக்கும் தொழிற் சங்கங்கள் எல்லாவற்றுக்கும் சுய ஆட்சி கொடுக்கப்பட வேண்டும்.

மத்திய அரசாங்கத்திற்கும் ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் இடையே இருக்கும் தொடர்பு தக்க வண்ணம் அமைந்தால் நல்ல பயன்கள் விளையும். தங்களுக்குள்ள பல வேலைகளையும் கடமைகளையும் சரியாய் நிறைவேற்றிவர ஸ்தல ஸ்தாபனங்களுக்குப் போதுமான வசதிகளும் பலமும் இருக்க வேண்டும். ஆனால் மத்திய அரசாங்கம் அவற்றின்பால் உள்ள பலவகைப்பட்ட வேலைகளையும் ஒப்புநோக்கித் தணிக்கைச்செய்து, தன் உத்தியோகஸ்தர்களைக் கொண்டு கண்காணிப்புச் செய்துவர வேண்டியது மிகவும் அவசியமாகும். அப்போதுதான் எல்லா ஸ்தலத் தொகுதிகளின் நிர்வாக ஆட்சியும் ஒரே தரமான தாகவும் பரஸ்பர ஒற்றுமை பெற்றதாகவும் இருக்கும். ஸ்தல ஸ்தாபனங்களுள் ஒவ்வொன்றின் அனுபவமும் ஒவ்வொரு விதமாயும் குறுகியதாகவும் இருக்கும். பல ஸ்தல ஸ்தாபனங்களின் வேலைகளையும் பரிசீலனை செய்துவரும் மத்திய அரசாங்கம் வெவ்வேறு இடங்களிலிருந்து உணரும் அனுபவ பூர்வ

மத்திய அரசாங்கத்திற்கும் ஸ்தல ஸ்தாபனங்களுக்குமுள்ள தொடர்பு

மான செய்திகளை ஒவ்வொன்றுக்கும் அறிவித்துப் பயன் பெறச் செய்யலாம். முக்கியமாக, பொதுச் சுகாதாரத்திலும் போக்கு வரவுச் சாதனங்களிலும் மற்றப் பொதுநல விஷயங் களிலும் மத்திய அரசாங்கம் பேருதவிசெய்யக்கூடும். மேலும் ஸ்தலஸ்தாபனங்களுக்கு அவற்றின் வருமானம் மட்டும் போதுவதில்லை. சில சமுதாயத் தேவைகளையும் மூன்னேற் றத் திட்டங்களையும் நிறைவேற்ற அவை மத்திய அரசாங்கத் தினிடம் பொருளையும் வேறு உதவிகளையும் எதிர்பார்க்க வேண்டி யிருக்கிறது. ஆகையால் மேலதிகாரிகளின் கண் காணிப்பும் பரிசீலனையும் மிகவும் அவசியம்.

ஜனங்கள் ஒரு பிரதேசத்தில் நெருங்கி வாழ்வதனால் தெருக்களையும் பாதைகளையும் செப்பனிடுவது, விளக்குப் போடுவது, ஊரைச் சுத்தமாக வைத்துக்கொள்வது, பிற சுகாதார விஷயங்களைக் கவனிப்பது முத லிய பொறுப்புக்கள் ஏற்படுகின்றன. இப் பொறுப்புகளை யெல்லாம் சுயஆட்சி ஸ்தாபனங்களே வகித்து வரவேண்டும். உல்லாசத் தோட்டங்கள், ரேடியோ, வாசக சாலைகள், விளையாட்டு வெளிகள், குடிதண்ணீர் முதலிய பொது வசதிகளை அவைகளே ஏற்படுத்திக் கொடுக்கவேண் டும். மின்சார விநியோகம் போன்ற பொதுநல விஷயங்களை அவைகளே நிர்வகித்து வரவேண்டும், இல்லாவிடில், அவை களிலிருந்து கிடைக்கும் பெரிய லாபம் முழுவதையும் வேறு வித முதலாளிகள் அடைந்துவிடுவார்கள். நம் நாட்டில் பல முனிசிபாலிட்டிகளின் முன் யோசனைக் குறைவால் மின்சார வியாபாரக் கம்பெனியார் நீண்ட காலத்திற்கு ஒப்பந்தம் செய்துகொண்டு, உயர்ந்த கட்டணங்களை விதித்து அளவற்ற லாபத்தை அடைந்து விட்டனர். இது மின்சாரம் உபயோ கிப்பவர்களுக்கும் நகரின் பொது ஜனங்களுக்கும் ஒரு பெரிய நஷ்டம்.

போறுப்புக்கள்

ஆரம்பக் கல்வி ஸ்தல ஸ்தாபனத்திற்குரிய விசேஷப் பொறுப்பாகும். ஆயினும் பொதுமக்களின் அறிவின்மையை நீக்க ஏற்பாடு செய்வது முக்கியமான தேசிய விஷயமானதால் அந்த விஷயமான செலவில் ஒரு பகுதியை மத்திய அரசாங்

கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். சுகாதாரப் பிரச்னைகள் வர வர அதிக ஊக்கத்துடன் முனிசிபாலிட்டிகளிலும் கிராமப் பஞ்சாயத்துகளிலும் கவனிக்கப்பட்டு வருகின்றன. இந்தியாவில் இப்போது எல்லா முனிசிபாலிட்டிகளிலும் தனியாகச் சுகாதார இலாகா ஏற்பட்டிருக்கின்றது. அம்மை குத்துதல், காலரா பிளேக்கு முதலிய நோய்களுக்கு ஊசி குத்துதல், உணவுப் பொருள்களைப் பரிசோதனை செய்தல், உணவுப் பொருள்களில் மட்டச் சரக்கைக் கலந்து விற்பனை செய்வதைத் தடுத்தல், பிரஸவ ஆஸ்பத்திரிகளை ஏற்படுத்தல், ஸம்ரக்ஷண சங்கங்களை நடத்தி வருதல் முதலிய வேலைகளைப் பயிற்சிபெற்ற சுகாதார இலாகா உத்தியோகஸ்தர்கள் கவனித்து வருகின்றனர்.

மேற் சொல்லிய முக்கிய வேலைகளை, நிபுணர்களின் யோசனை யில்லாமலும் மத்திய அரசாங்கத்தின் பணஉதவியின்றியும் ஸ்தல ஸ்தாபனங்கள் நன்றாகச் செய்துவர முடியாது. வீட்டுவரி, தொழில் வரி, லைசென்ஸ் கட்டணம், தண்ணீர் வரி, சாக்கடை வரி முதலியனவும், அவ்வப்போது மத்திய அரசாங்கத்தினிடமிருந்து கிடைக்கும் மானியங்களுமே இந்தியாவிலுள்ள முனிசிபாலிட்டிகளின் முக்கியமான வருவாயாகும். பஞ்சாயத்து போர்டுகளுக்கும் முன்னே சொல்லிய கடமைகள் உண்டு. ஆனால் அவைகளுக்குத் தக்கபடி வருமானம் இல்லை.

இக்காலத்து அரசாங்கங்களிலே, ஜர்மனியில் தான் பூர்ண ஸ்தல சுய ஆட்சி பிரஜைகளுக்கு மிகுதியான நலன்களை அளித்திருக்கின்றது. ஜனங்களின் பொது நன்மைக்கான எல்லாவிதமான சமூகப் பொருளாதார விஷயங்களையும் தனிப் பிரஜைகளின் கல்வித் தேர்ச்சியையும் தன் இடைய பொறுப்புகளாகக் கொண்டு தன் வருமானத்திலிருந்து அவ்விஷயங்களில் செலவு செய்ய ஜர்மன் நகர ஸ்தல ஸ்தாபனத்திற்கு அதிகாரம் உண்டு. அது தன் இஷ்டப்படியே பொது நன்மைக்காக எவ்விதமான ஏற்பாடுகளையும் செய்யலாம். பிரஜைகளின் முன்னேற்றத்தின் பொருட்டுப்

ஜர்மன் ஸ்தல ஸ்தாபனங்களின் சிறப்பு

பொருள் வருவாய்க்குரிய பொருள்களையும் சாதனங்களையும் தக்கவண்ணம் உபயோகித்துக் கொள்ளும் உரிமை அதற்கு உண்டு. அந்த அந்த ஸ்தலத்திற்குரிய விஷயங்களை மாத்திரமே நகர ஸ்தாபனமும் அதன் உறுப்புக்களும் கவனித்துவர வேண்டும். இந்த நிலையில் பல ஜர்மன் நகர ஸ்தாபனங்கள், சட்ட சபையின் உத்தரவின்றியே, ஸினிமா நாடகக் கொட்டகைகள், டிராம், வியாபாரம், பள்ளிக்கூடங்கள், வைத்திய சாலைகள், பள்ளிக்கூட மாணவர்களுக்கு இலவச உணவு வசதி முதலியவைகளைத் தாமே ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. இவற்றைத் தவிர, சங்கீதம், நாடகம் இவை போன்ற கலைப் பயிற்சிக்கு வேண்டிய சௌகரியங்கள், க்ஷய ரோக ஆஸ்பத்திரிகள், மூனிசிபல் க்ஷேம நிதிகள், வீடுகள் கட்டிக் கொடுத்தல், வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்குதல், நெருப்புப் பாதுகாப்பு முதலிய பொறுப்புக்களையும் ஏற்று வருகின்றன. எனவே, சமூக வளர்ச்சியிலும் பொருளாதார அபிவிருத்தியிலும் கலைத்திறத்திலும் இந்நாள் ஜர்மன் நகரங்கள் முன்னணியில் நிற்கின்றனவென்று கூறலாம்.

இந்திய ஸ்தல ஸ்தாபனங்களின் நிலைமை

நமது நாட்டிலோ ஸ்தல ஸ்தாபனங்களின் உரிமைகளும் கடமைகளும் விரிவுடையன அல்ல. அவற்றிற்குப் போலீஸ் நிர்வாக வேலை ஒன்றுமே இல்லை. சுகாதாரம், பொருளாதாரம், கல்வி முதலிய துறைகளில் முன்னேற்ற ஏற்பாடுகள் செய்ய மேலதிகாரிகளின் உத்தரவை முன்னதாகப் பெறவேண்டுமென்ற சட்டம் இருக்கிறது; அதனால் ஸ்தல ஸ்தாபனங்கள் மூலம் சமூக நிலையை அபிவிருத்தி செய்ய நகரவாசிகளுக்கு உற்சாகமே இல்லாமற் போகிறது. வரி விதிக்கும் விஷயத்தில்கூட இந்திய ஸ்தல ஸ்தாபனங்களுக்குப் பல நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன. வருவாய்க்குரிய வழிகள் அவ்வளவாகப் போதா. அந்த ஸ்தாபனங்களின் அமைப்பும் பூரண ஜனநாயக முறைப்படி ஏற்படவில்லை. அவை முற்றும் ஜனப் பிரதிநிதித்துவம் பெற்றவையல்ல. சில அங்கத்தினர் சர்க்காரால் நியமிக்கப்பெறுகிறார்கள். எல்லா நகர வாசிகளுக்கும் வாக்கு உரிமை

இல்லை. சொத்துள்ளவர்களுக்கும் வரி கொடுப்பவர்களுக்கும் ஒரு குறித்த தொகைக்குமேல் வருமானம் உள்ளவர்களுக்கும் மாத்திரமே முனிசிபல் வாக்குரிமையுண்டு. சமீபத்தில்தான் எழுத்தறிவு பெற்றவர்களுக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டுள்ளது.

இந்திய நாட்டில் கிராம சுய ஆட்சி ஸ்தாபனங்கள் மொத்தத்தில் அவ்வளவு ஊக்கம் உள்ளவையாகவும் உபயோகமானவையாகவும் இப்போது இல்லை. முன்காலத்தில் இத்தேசத்தில் ஸ்தல நிர்வாகத்தை நடத்திவந்த சுய ஆட்சி ஸ்தாபனங்கள் மிகத் தேர்ச்சிபெற்ற முறையில் ஏற்பட்டிருந்தன. முன்பு நமது தேசத்தின் தனிச் சிறப்புடைய அரசாங்க ஏற்பாட்டின்படி நிர்வாக ஆட்சிக்குக் கிராமந்தான் அடிப்படையாயிருந்தது. புராதன கிராம சமுதாயங்களின் ஆட்சிமுறையைப் பிரசித்திபெற்ற பல அரசியல் நிர்வாக நிபுணர்கள் புகழ்ந்து எழுதியிருக்கின்றனர். ஆனால் அந்த முறை க்ஷீணமடைந்து சீர்குலைந்து போய்விட்டது; ஆங்கிலேயர் ஏற்படுத்திய அரசாங்க முறையினால் அழிந்துவிட்டது. இப்போது நமது தேசத்தில் பழைய காலத்தில் இருந்த கிராம சமுதாய ஏற்பாடுகள் முற்றும் மறைந்தே போயின.

இந்தியாவில் ஏற்படுத்தப் பெற்றுள்ள ஸ்தல ஸ்தாபன ஆட்சித் திட்டம் ஆங்கில முறையை அனுசரித்தது. 1793-ஆம் வருஷத்துப் பிரகடனச் சட்டந்தான் முதல் முதலாக இந்நாட்டில் ஸ்தல ஸ்தாபனங்கள் ஏற்படச் சட்டபூர்வமான வசதியை அளித்தது. இப்போது நடைமுறையில் இருக்கும் திட்டம் 1870-ஆம் வருஷத்தில் மேயோ பிரபு செய்த தீர்மானத்திலிருந்தும், 1882-ஆம் வருஷம் ரிப்பன் பிரபு செய்த தீர்மானத்திலிருந்தும் வளர்ந்து வந்திருக்கிறது. 1918-ஆம் வருஷம் வெளிவந்த மாண்டேகு - செம்ஸ்போர்டு திட்டமும் இவ்விஷயத்தில் முன்னேற்ற ஏற்பாடுகளைச் சிபாரிசு செய்தது. கூடியவரையில் பிரஜைகளே ஸ்தல ஸ்தாபனங்களின் நிர்வாகத்தை வகிக்கவேண்டு மென்றும் மேலதிகாரிகளின் கண்காணிப்புக் குறையவேண்டு மென்றும் அதில் கண்டிருந்தது.

1921-ஆம் வருஷத்தில் அரசியல் சீர்திருத்தங்கள் வந்தது முதல் ஸ்தல ஸ்தாபன நிர்வாக இலாகாவைச் சட்ட சபை அங்கத்தினர்களிடையே யிருந்து தேர்ந்தெடுக்கப் பெற்ற மந்திரியிடம் ஒப்படைத்தனர். புதிய இந்திய கவர்ன்மெண்டு சட்டத்தின்படி மாகாண சுய ஆட்சி ஏற்பட்டுவிட்டதால் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு மத்திய சர்க்காரின் கண்காணிப்பு நிர்ப்பந்தம் இல்லை. ஆனலும், மாகாண சுய ஆட்சித் திட்டம் எவ்வளவு தூரம் பழைய காலத்துக் கிராம சமுதாய முறைகளைப் புனருத்தாரணம் செய்ய முடியுமென்பது இனி மேல்தான் தெரியவேண்டும்.

அத்தியாயம் 15

பொதுமக்களின் பொறுப்பு—I

பொதுஜன அபிப்பிராயம்

அரசாங்கம் பிரஜைகள் கருத்துக்கு இணங்கி ஆட்சி புரிய வேண்டும் என்று வற்புறுத்தும் விஷயத்தில் பொதுஜன அபிப்பிராயம் மிக்க வலிமை பெற்றதாகும். இப்போதுள்ள அரசாங்க நிர்வாகத்தின் பெருமை பொதுஜன அபிப்பிராயம் திரண்டு உருக்கொள்வதைப் பொறுத்துத்தான் இருக்கின்றது. யதேச்சாதிகாரிகளும் சர்வாதிகாரிகளும் பொதுஜன வாக்கை மதிக்காதவர்களைப்போலத் தோன்றலாம். ஆனல் அவர்கள்கூடச் சாமர்த்தியமாகப் பிரசாரம் செய்து பொது மக்களின் பாராட்டையும் ஆதரவையும் பெறத்தான் வேண்டி யிருக்கிறது. ஜனநாயக அரசில், பொதுக் காரியங்களில் முடிவான பொறுப்பைச் சாதாரணப் பிரஜைகளிடம் விடுவதனலும், நிர்வாகக் கொள்கைக்கும் முக்கியமான காரியங்களுக்கும் பொதுஜன ஆதரவைப் பெறுவதனலுந்தான் தேசிய அமைதியும் நிலைபெற்ற அரசியல் வாழ்வும் ஏற்படக் கூடும். எனவே, ஒவ்வொரு ஜனநாயக அரசாங்கமும்

பொதுஜன அபிப்பிராயம்

பொதுஜன வாக்கைப் பெறுவதற்கு ஏற்ற வசதியையும், அரசின் முக்கியமான பிரச்னைகளைப்பற்றிப் பொது மக்களின் அபிப்பிராயத்தைச் சரிவரத் தெரிந்து கொள்வதற்கேற்ற வழிகளையும் ஏற்படுத்த வேண்டியது மிகவும் அவசியம்.

பொதுஜன அபிப்பிராயத்தை அறிந்துகொள்வதன் அருமை

ஆனால், பொதுமக்களின் மனப்பான்மையைச் சரியாய்க் கண்டுபிடித்து அவர்களின் விருப்பத்தை அறிவது எளிதான காரியம் அன்று. பொதுஜன அபிப்பிராயமென்பது, இன்னது தானென்று உறுதியாக நிர்த்தாரணம் செய்யமுடியாத ஓர் உருவற்ற சக்தி. பெரும்பாலோரின் அபிப்பிராயமே பொதுமக்களின் வாக்கு என்று கொள்வதும் தவறாகும். ஏனெனில் பொதுவிஷயங்களைப் பற்றித் தாமாகவே ஆய்ந்து ஓய்ந்து பரிசீலனை செய்து பார்க்கவேண்டிய அவகாசமும் போதிய அறிவும் சிரத்தையும் பிரஜைகளிற் பெரும்பாலோருக்கு இருப்பதில்லை. பெரும்பாலும் அவர்கள் சில தலைவர்களின் அறிவுரைகளையும் அபிப்பிராயங்களையுமே ஏற்றுக் கொள்ளுகின்றனர். எனவே, பொதுஜன அபிப்பிராயத்தின் நேர்மை முழுதும் அத்தலைவர்களின் அறிவையும் நடுநிலைமையையும் பொறுத்திருக்கிறது. இந்நாளில் பல சங்கங்கள் தோன்றித் தங்கள் தங்கள் தனிப்பட்ட கொள்கைகளுக்கும் காரியத் திட்டங்களுக்கும் ஆதரவு பெறவேண்டிப் பொதுமக்களிடையே பெருங் கிளர்ச்சியும் தீவிரமான பிரசாரமும் செய்து வருகின்றன. யுத்தம் போன்ற நெருக்கடிக் காலங்களில் புறத்திலிருந்து வரும் தவறான அறிக்கைகளை மறுக்கவும், சேனையின் ஊக்கத்தை வளர்க்கவும், சண்டையில் சேராத நாடுகளின் ஆதரவைப் பெறவும், உள்நாட்டுப் பொதுமக்களின் அபிப்பிராயங்களை ஒன்றுபடுத்திக் காட்டவும் அரசாங்கமே விரிவான முறையில் பிரசார வேலையை முனைந்து நடத்தி வருகிறது.

உண்மையான பொதுஜன அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ளச் சரியான முறை யாதொன்றும் இதுவரையில்

கண்டுபிடிக்கப்பட வில்லை. ஒரு தேசத்தில் பொதுஜன அபிப்பிராயத்தை வெளியிடக்கூடிய சாதனங்களுள் முக்கியமானவை, பத்திரிகை, பிரசங்க மேடை, சட்டசபை ஆகியவைகளே. இவைகளுடன் சங்கங்கள், கல்வி ஸ்தாபனங்கள், மதஸ்தாபனங்கள் ஆகிய இம் மூன்றையும் ஒருவாறு சேர்த்துக்கொள்ளலாம்.

பொதுஜன அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ளும் வழிகள்

மேற்சொல்லியவைகளில் பத்திரிகைதான் மிக்க பலம் படைத்தது. அது பெரிய நன்மையையும் பெருந்தீமையையும் செய்யக்கூடும். சுயேச்சை யுணர்ச்சியுடன் பயமின்றி நடந்துவரும் பத்திரிகை, பொதுமக்களின் விருப்பத்தையும் கருத்தையும் எடுத்துக் காட்டும் கண்ணாடியை யொக்கும். ஆனால் இக்காலத்தில் அரசியல் பத்திரிகை ஒன்றும் இந்த உயர்ந்த லக்ஷியத்தின்படி நடக்கமுடிவதில்லை. நெருக்கடிக் காலங்களில் அரசாங்கமே தலையிட்டுப் பத்திரிகைச் செய்திகளைப் பரிசோதித்துப் பார்த்து, தனக்குப் பாதகமான விஷயங்கள் வெளிவராமல் அமுக்கி விடுகின்றது. சில பத்திரிகைகள் செல்வாக்குப் படைத்த ஏதாவதொரு கம்பெனிக்கோ, தனவானுக்கோ சொந்தமா யிருக்கின்றன. அத்தகைய பத்திரிகைகளின் சொந்தக்காரர்கள் தங்களுடைய கொள்கைகளுக்கும் நலங்களுக்கும் ஏற்றவாறு செய்திகளை மாற்றி வெளியிட்டும், சில விஷயங்களை வெளியிடாமல் மறைத்தும் பத்திரிகைகளைப் பிரசுரித்துப் பொது ஜனங்களின் மனத்தில் தவறான அபிப்பிராயங்கள் உண்டாகும்படி செய்கின்றனர். இம்மாதிரி, தனி உரிமைகளையும் சுய நலத்தையுமே கருத்தாகக் கொண்ட ஸ்தாபனங்களால் பாதிக்கப்படாமல் தினசரி சமாசாரப் பத்திரிகைகள் பிரசுரிக்கப்பட்டு வரும் நாளே நன்னாடு ஆகும்.

சமாசாரப் பத்திரிகைகள்

பிரசங்க மேடை மூலமாகத்தான் அவ்வப்போது அரசியல் பிரச்னைகளில் பாமர மக்களுக்கு அறிவு ஊட்ட வேண்டி இருக்கிறது. அரசியல் கட்சித் தலைவர்கள் நாடெங்கும் சுற்றுப் பிரயாணம் செய்து, பொதுக்கூட்டங்

களில் பேசி, தங்கள் கொள்கைகளையும் சீர்திருத்த நோக்கங்களையும் விளக்கி, அவற்றுக்கு ஆதரவு தேடுகின்றனர். இக்காலத்தில் ரேடியோவும் ஸினிமாவும் இவ் விஷயத்தில் மிகவும் முக்கியமான துணைக் கருவிகளாய்விட்டன. கல்வியறிவு பலருக்கும் மிகக் குறைவாயுள்ள இந்நாட்டில் பிரசங்க மேடையும் ரேடியோவும் ஸினிமாவுமே அரசியல் விஷயங்களைப்பற்றிப் பாமர மக்களிடையே பிரசாரம் நடத்த இன்றியமையாத கருவிகளாக உள்ளன.

பிரசங்க மேடை

சட்ட சபைக்கும் பொதுஜன அபிப்பிராயத்தை உணர்ந்து தொழிற்படுத்துவதில் முக்கியமான பங்கு உண்டு. அடிக்கடி நடை பெறும் தேர்தற் காலங்களில் வெவ்வேறுக் உள்ள அரசியற் கொள்கைகளைப் பொது மக்களுக்குத் தெளிவாய் விளக்கிக் காட்ட அபேக்ஷகர்களுக்குத் தக்க சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன. சில தேசங்களில் பொதுஜன வாக்குப் பெறும் முறை (ரெபரண்டம்), பொதுஜனச் சட்டம் இயற்றும் முறை (இனிஷியேட்டிவ்) முதலியவை தேர்தல் தொகுதியினருக்கு அறிவு ஊட்டி அவர்களின் அபிப்பிராயங்களைப் பெறுவதற்கான சாதனங்களா யிருக்கின்றன.

சட்ட சபைகளும் சட்ட முறைகளும்

சட்டசபை அங்கத்தினர்களிற் பெரும்பாலோரின் அபிப்பிராயம் ஜனங்களின் இஷ்டத்தையொட்டி யிருக்குமென்று தீர்மானமாகச் சொல்லமுடியாது. ஆனாலும் தேர்தல்களுக்கு முன்பு நடைபெறும் பிரசாரங்களும் விவாதங்களும் அரசியல் விஷயங்களைத் தெளிவாக்கிப் பொதுஜன அறிவை விருத்தி செய்கின்றன. இம்முறையில் சிறுபான்மைக் கட்சியோர் கூட விவாதத்திற்குரிய விஷயங்களில் கலந்து உதவிசெய்யக் கூடும். அந்த விவாதத்தால் மக்களுக்கு ஒவ்வொரு பிரச்னையிலும் உள்ள இருவேறு கட்சிகள் தெளிவாகின்றன. இதனால் சிறுபான்மைக் கட்சியினரும் பிரசார பலத்தால் தங்கள் கட்சியின் நியாயத்தைப் பொது ஜனங்கள் உணரும்படி செய்து பொதுஜன அபிப்பிராயத்தைத் தங்கள் சார்பாகத் திருப்பிப்

பலமடைந்து பெரும்பான்மைக் கட்சியினராக மாறலாம். இம்மாறுதல் வெறும் கட்சிச் சண்டையால் வருவதன்று; திறமை வாய்ந்த விவாதங்களாலும் விஷய ஆராய்ச்சியாலும் ஏற்படக் கூடியது. நாட்டிலும் சட்ட சபையிலும் அரசியல் விஷயமாக இத்தகைய பிரசாரம் நடைபெறுவதனால் பொது ஜனங்கள் அரசியல் நிகழ்ச்சிகளில் சிரத்தை கொள்கிறார்கள். அவர்களுடைய அபிப்பிராயம் உபயோகமுள்ள உருவத்தை அடைகிறது. இத்தகைய நிகழ்ச்சிகள் ஜனநாயகக் கொள்கையின் பெருமையை யாவரும் உணர்வதற்குத் தக்க சாதனமாகின்றன.

'பொதுஜன அபிப்பிராயம் என்று இப்போது சொல்கிறார்களே, அது பொதுஜனங்களின் சம்பந்தமுள்ளதே அன்று; பொதுஜன அபிப்பிராயமும் அன்று' என்று பல சூக்ஷ்ம அரசியல்வாதிகள் கருதுகின்றனர். முன்னே விவரித்துச்சொன்ன முறைகளில் பல சுயநல ஸ்தாபனங்கள் பிரசாரம் செய்யும் கொள்கைகளே அந்தப் பிரசாரத்தால் கவரப் பெற்று யோசனை செய்யாமலேயே பொதுமக்கள் ஏற்றுக் கொண்டு வருகிறார்கள் என்பதே அவர்களின் கருத்து. இக் கருத்தில் பெரிதும் உண்மை இருக்கிறது. பொது மக்களிடையே அரசியல் அறிவைப் பரப்புவதாலும், அவர்களே அவ்வப்போது எழும் அரசியல் வியவகாரங்களில் நேர்முகமாகக் கலந்து கொள்ளும்படி தூண்டுவதாலும் இந்தக்குறையை நிவர்த்தி செய்து விடலாம். பொது மக்கள் தங்கள் காலத்தையும் அறிவையும் ஆற்றலையும் போதுமானபடி செலுத்தி அரசாங்க விஷயங்களில் சிரத்தையுடனும் திறமையுடனும் ஈடுபடுவதனால் மட்டுமே இக்கால அரசியல் நிலைமையில் நல்ல மாறுதல் ஏற்பட இடமுண்டு.

அத்தியாயம் 16

பொதுமக்களின் பொறுப்பு—II

வாக்குரிமை

சமத்துவமே ஜனநாயகத்தின் மூலாதாரமான நோக்கம். பொது மக்களின் முடிவான மேற்பார்வைக்கு உட்பட்டு, அரசாங்கத்தை நடத்திவரும் ஜனப்பிரதி நிதிகளைத் தேர்ந்தெடுப்பதில் எல்லாப் பிரஜைகளுக்கும் சமமான உரிமை இருக்க வேண்டு மென்பதுதான் சமத்துவமாகும். ஜனப்பிரதிநிதித் தேர்தல்களிலும் அரசாங்கப் பிரேரணைகளை ஏற்றுக்கொள்வதிலும் அல்லது நிராகரிப்பதிலும் பொது ஜனங்கள் பங்கு எடுத்துக் கொள்ளும் உரிமையை **வாக்குரிமை** அல்லது ஓட்டு உரிமை என்று கூறுவர்.

வாக்குரிமையின் விசேஷ அம்சங்கள்

புராதன காலத்துக் கிரேக்க ரோமாபுரி நகர அரசுகளில் இந்த வாக்குரிமை ஒவ்வொரு பிரஜைக்கும் ஏற்பட்ட பாத்தியதையென்று கருதினர். மத்திய காலத்தில், நிலச்சுவான்தார்கள் என்ற யோக்கியதாம்சம் உள்ளவர்களுக்கே இந்த உரிமை இருந்தது. பின்புதான் ஓட்டுரிமை ஒவ்வொரு பிரஜைக்கும் உரிய பாத்தியதை என்ற அபிப்பிராயம் வலிபெற லாயிற்று. இக்காலத்தில் வாக்காளர்கள் அரசாங்கத்தின் ஓர் உறுப்பு என்றே கருதப்படுகிறார்கள். இவ்வுறுப்பின் அமைப்பும் அதிகாரங்களும் அரசியல் சட்டங்களால் நிர்ணயிக்கப் பெறுகின்றன.

வாக்கு அளிப்பது ஒரு பொதுஜனப் பொறுப்பு என்றும், சந்தர்ப்ப அவசியத்தினால் ஏற்பட்ட ஓர் அரசியல் பாத்தியதை யென்றும், பின்பு சட்டத்தினால் உறுதிபெற்ற உரிமை யென்றும் கொள்ளலாம். சட்டத்தால் ஏற்பட்ட உரிமை யாகையால் ஏதாவது ஒரு காரணத்தைக் கொண்டு அரசாங்கம் இந்த ஓட்டுரிமையைக் குறைக்கலாம் என்று ஏற்படுகிறது. உண்மையில் சமீபகாலம் வரையில் பல ஜனநாயக

அரசுகள்கூட ஓட்டுரிமையைக் குறைத்தே வந்தன. ஓட்டுரிமை ஒரு பிரஜையின் பாத்தியதையென்று கருதப்பெற்றால், அதை உபயோகிப்பதும் உபயோகிக்காமல் இருப்பதும் அவன் இஷ்டத்தைப் பொறுத்தனவாகும். அது சட்டத்தினால் ஏற்படுத்தப்பெற்ற கடமையென்று கருதினால் ஆஸ்திரேலியாவில் இருப்பதுபோல, ஒவ்வொரு பிரஜையும் ஓட்டுச் செய்தே தீரவேண்டும். ஓட்டுரிமையை உபயோகிக்காமல் இருப்பதற்காகத் தண்டனை விதிக்கும் அரசுகள் ஒன்று இரண்டு மாத்திரமே உண்டு. ஓட்டுச் செய்ய வேண்டுமென்ற நிர்ப்பந்தம் இருந்தால் அது ஓர் உரிமையென்ற மேலான லக்ஷியத்தைக் குறைவு படுத்திப் பொது மக்களுக்கு அரசாங்கத்தினிடம் அதிருப்தி ஏற்படும்படி செய்யும்; அரசியலில் லஞ்சம் முதலிய ஊழல்களை உண்டுபண்ணவும் கூடும்.

வாக்குரிமைக்கு ஏற்பட்டிருக்கும் தகுதிகள்

ஒரு பிரஜையின் வாக்குரிமைக்கு வேண்டிய தகுதிகள் இடத்திற்கும் காலத்திற்கும் தக்கபடி பலவாறு வித்தியாசப்படுகின்றன. இவ்வித்தியாசங்கள் வயது, பால் (ஆண் பெண்), குடியிருப்பு, சொத்து, படிப்பு முதலியவைகளினால் ஏற்படுகின்றன.

வயது:—குறித்த வயதுக்குக் கீழ்ப்பட்டவர்கள் ஓட்டுரிமை பெறக்கூடாதென்ற ஒரு வரையறை இருக்கவேண்டியது அவசியந்தான். சாதாரணமாக ஓட்டுரிமை பெறும் வயது இருபத்தொன்று என்று ஏற்பட்டிருக்கிறது. சட்டப்படி 'மேஜர்' ஆவதற்கான வயது இருபத்தொன்று என்ற காரணத்தைத் தவிர, வேறு காரணம் ஒன்றும் இதற்கு இருப்பதாகத் தெரியவில்லை. ஸோவியத் ருஷ்யாவில் பொருள் உற்பத்தி வேலையில் இருக்கும் தொழிலாளர்களுக்கு ஓட்டுரிமை வயதைப் பதினெட்டாக அரசாங்கத்தார் நிர்ணயித்திருக்கின்றனர். துருக்கியிலும் இதே வயதளவுதான் இருக்கிறது.

பால் வேறுபாடு:—ஆதியில், அரசியல் அதிகாரம் ராணுவ ஊழிய சம்பந்தமாக இருந்ததால், மகளிருக்கு அதில் பங்கு இல்லை. இக்கால அரசுகள் தோன்றிய போதும், சட்ட ஏற்

பாட்டிலும், பொருளாதாரத் துறைகளிலும் மகளிருக்குச் சுதந்திரம் இல்லாமையால் அவர்களுக்கு அரசியலில் பிரதி நிதித்துவ உரிமை தேவையில்லையென்ற கருத்து இருந்தது. மகளிருக்கு வாக்குரிமை அளிக்க வேண்டுமென்ற பொது இயக்கம் ஐரோப்பிய மகா யுத்தத்திற்குப் பின்புதான் வலி பெற்றது. இவ்வியக்கத்தைத் தாக்கி எதிர்த்தவர்கள், உடல் அமைப்பில் பெண்கள் பிரஜைகளின் கடமைகளை, முக்கிய மாய் ராணுவ ஊழியப் பொறுப்பை, நிறைவேற்றும் சக்தி யற்றவர்களென்றும், அதனால் அவர்கள் பிரஜா உரிமைகள் பெறும் தகுதி இல்லாதவர்களென்றும் கூறினர்; பொது விஷயங்களில் கலந்து கொள்வதனால் தாய் என்னும் முறை யிலும் குடும்ப நிர்வாகத்திலும் அவர்களுக்குரிய மகத்தான பொறுப்புகளுக்கு ஊறு விளையுமென்றும், மனோபலத்தைக் காட்டிலும் உணர்ச்சியின் சக்தியே அவர்கள் செயல்களுக்குக் காரணமா யிருக்குமென்றும், புதுமை மாறுகிறவரையில் தான் பொது விஷயங்களில் அவர்களுக்குச் சிரத்தை யிருக்கு மெனறும் பலவிதமாக வாதித்தனர். ஆனால் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்க வேண்டுமென்பதை மும்மூரமாய் வற் புறுத்தியவர்கள், ஓட்டுச் செய்யும் உரிமைக்கு வேண்டிய தகுதி தேக பலத்தை ஒட்டியது அன்று என்றும், புத்தியை யும் நன்னடத்தையுமே பொறுத்ததென்றும், நியாயத்தில் ஆண் மக்களைப் போலவே பெண்மக்களும் சம உரிமைகள் பெற வேண்டுமென்றும், ஆலைத் தொழில் விஷயத்தில் பெண் டிர்களைப் பாதிக்கும்படியான வகுப்புச் சட்டங்கள் நிறைவே றுமல் இருக்கும்படி கவனித்துவர அவர்களுக்கும் ஓட்டுரிமை அவசியமென்றும், மகளிர் பொது விஷயங்களில் கலந்து கொள்வதால் அரசியலே புனிதமாகுமென்றும், பிரதிநிதித் துவமின்றி வரிகள் விதிக்கக் கூடாது என்ற நியதிக்கு மகளிர் மாத்திரம் விலக்காக இருப்பது சிறிதும் நியாயமன்றென்றும் எதிர்வாதம் செய்தனர்.

மேற்குறித்த வாதங்கள் சரியோ தப்போ, எப்படி யிருந்த போதிலும் கட்டாயப் பொதுக் கல்வியும் பொருளா தார விஷயங்களில் நாளுக்குநாள் வளர்ந்துவரும் மகளிரின்

சுயேச்சையும் அவர்களின் வாக்குரிமைக்கு ஏற்பட்டிருந்த எதிர்ப்பை அநேகமாய்ப் போக்கிவிட்டன. பிரான்ஸ், ஸ்விட்ஜர்லாந்து இவ்விரண்டு தேசங்களைத் தவிர அநேகமாய் மற்ற எல்லா நாடுகளிலும் மகளிருக்கு ஆடவர்களுடன் சரிசமான மான வாக்குரிமை அளிக்கப்பட்டு விட்டது.

பிரஜைத்தன்மை :—ஓட்டுரிமை பெறுவதற்கு ஒருவன் உள்நாட்டில் பிறந்தவனாகவோ, அல்லது குறித்த காலஅளவு அந்த நாட்டில் வாசஞ்செய்து வந்தவனாகவோ இருக்கவேண்டும். ஸோவியத் குடி அரசில் மாத்திரமே பிரஜைகளாயிருந்தாலும், இல்லாவிட்டாலும், பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட எல்லாத் தொழிலாளர்களுக்கும ஓட்டுரிமை உண்டு. பிரஜையாயிருப்பதால் மட்டுமே ஒருவனுக்கு ஓட்டுரிமை ஏற்படுவதில்லை. பல காரணங்களினால், பல பிரஜைகள் ஓட்டுரிமை பெறுமல் இருக்கக்கூடும்.

வாசம் :—அநேகமாக எல்லாத் தேசங்களிலும் வாக்காளர்கள் குறித்த காலத்திற்குக் குறித்த இடத்தில் சட்டத்தில் ஏற்பட்டபடி வசித்து வந்திருக்கவேண்டும் என்ற நியதி உண்டு. அவர்கள் தாம் வசித்துவரும் தொகுதிகளில்தான் ஓட்டுச் செய்யலாம். சுதுவாது ஏற்படாமலிருக்கத் தேர்தலுக்கு முன் வாக்காளர்கள் பெயர்களைப் பதிவு செய்து வைப்பது வழக்கமாயிருக்கிறது.

சொத்து :—நீண்டகாலமாக வாக்குரிமை சொத்துள்ளவர்களுக்கே இருந்தது. அவர்களே ஜன சமூக க்ஷேமலாபங்களில் நிரந்தரமாகப் பங்கும் பதவியும் பெற்றிருந்தனர் என்பதுதான் இதற்குக் காரணம். இன்றுங்கூட, வரி விதிக்கும் சபையின் அங்கத்தினர்களை வரி கொடுப்பவர்களே தேர்ந்தெடுக்க வேண்டுமென்று சிலர் வற்புறுத்துகின்றனர். ஆனால் இந்நாளில் ஓட்டுரிமைக்குச் சொத்து வேண்டுமென்பது சரியன்று என்றும், அந்த நிர்ப்பந்தத்தை நீக்கிவிட வேண்டுமென்றும் பலமான அபிப்பிராயம் பரவி வருகிறது.

அறிவு, ஒழுக்கம், மதம் முதலியவை :—இப்போதைய அரசுகளில் ஓட்டுரிமைக்கும் மதக்கொள்கைகளுக்கும் சம்பந்தம் இல்லை. குற்றவாளிகளுக்கும், பிறவி மூடர்களுக்கும், பைத்

தியக்காரர்களுக்கும் சாதாரணமாய் ஓட்டுரிமை இல்லை. சில நாடுகளில் சில குற்றங்களுக்காகத் தண்டிக்கப் பெற்றவர்கள் எப்போதுமே ஓட்டுரிமையை இழந்துவிடுவர். இந்தியாவில் அரசியற் குற்றத்திற்காகத் தண்டனை பெற்றவர்களுக்கு ஓட்டுரிமை இல்லை. இது நியாயமன்று என்று இந்நாளில் கருதுகின்றனர்.

ஓட்டுக்கொடுப்பதற்கு அறிவுத்திறமை வேண்டுமென்ற கொள்கையை அனுசரித்து, எழுதப்படிக்கத் தெரிந்தவர்களுக்கே ஓட்டுரிமை உண்டு என்று சமீப காலத்தில் சில தேசங்கள் சட்டம் இயற்றி யிருக்கின்றன. ஆனால் அதிகமான கல்வித்திறமை படைத்தவர்கள், அரசியல் விஷயங்களில் ஒன்றும் தெரியாதவர்களாகவும் இருக்கக்கூடும். இதற்கு மாறாக, நமது தேசத்திலேயே படிப்பில்லாதவர்களிலும் பலர் அரசியல் விஷயத்தில் புத்தி சாதுரியமும் ஊக்கமும் உள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆதலின் இந்த யோக்கியாதாம்சம் திருப்தியளிக்கக் கூடியதன்று. இன்னும் சில வெள்ளைக்காரர் தேசங்களில் ஜாதிக் கர்வத்தினால் ஓட்டுரிமை கறுப்பு ஜாதியார்களுக்குக் கொடுக்கப்படவில்லை.

பன்மை ஓட்டும் தகுதி ஓட்டும்:—ஒவ்வொரு பிரஜைக்கும் ஓர் ஓட்டுவீதம் எண்ணிக் கணக்கிடுவதற்குப் பதிலாகச் சில அரசுகளில் சொத்து, அந்தஸ்து, சர்வகலாசாலைப் பட்டம் முதலிய காரணங்களினால் சிலருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட ஓட்டுகள் அளிக்கும் உரிமை ஏற்பட்டிருக்கிறது. பல வகை யோக்கியதைக்குப் பல ஓட்டு உரிமை ஏற்படுவதால் இம்முறைக்குத் தகுதி ஓட்டு முறையென்றும் பன்மை ஓட்டு முறையென்றும் பெயரிடுவது ஒருவாறு பொருந்தும். தகுதியை நிர்ணயஞ் செய்யத் திருப்திகரமான அளவுகோல் கிடைப்பதாக வைத்துக்கொண்டாலும் இம்முறையில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டுவிடும். ஜனநாயக தத்துவத்தின் அடிப்படையான சமத்துவக் கொள்கைக்கும் நியாயத்திற்கும் இது முற்றும் விரோதமாகும்.

வயது வந்தவர்கள் எல்லோருக்கும் ஓட்டுரிமை இருக்கும் தேசங்களில்கூட வாக்காளர்களாகப் பதிவு செய்யப்படுபவர்

கள் தொகை மொத்த ஜனத்தொகையில் பாதிதான் இருக்கும். சொத்து, கல்வி, ஆண், பெண் என்ற நிபந்தனைகளும் ஏற்பட்டு விட்டால் ஜனத் தொகையில் ஐந்தில் ஒருபாகமே வாக்காளர்களாகத் தேறலாம். ஜனநாயகம் என்ற பெயர் வைத்துக்கொண்டும் ஜனங்களின் சார்பாக வேலை செய்வதாகச் சொல்லிக்கொண்டும் சிலரே நேர்முகமாகவோ மறைவிலிருந்தோ அதிகாரம் முழுவதையும் தங்களுடைய கையில் அடக்கிக கொண்டு விடுவார்கள். ஆகையால் வறுமையும் கல்வியின்மையும் தாண்டவமாடும் நமது இந்திய தேசத்தில் வயது வந்த ஆண் பெண் எல்லோருக்கும் வாக்குரிமை கிடைக்க வேண்டுமென்று வற்புறுத்துவது அவசியமாகும். இதனால்தான் பிரஜைகள் எல்லோருக்கும் அரசியலில் சமமான உரிமைகள் ஏற்படும். இதன் மூலந்தான் சிறுபான்மையோர் பிரச்னைக்கு ஒரு பரிகாரம் உண்டாகலாம். வாக்குரிமை பெறுவதனால் அனுபவத்தில் உண்டாகும் நன்மை இன்னும் அளவற்றதாகும்.

அத்தியாயம் 17

பொதுமக்களின் பொறுப்பு—III

பிரதிநிதித்துவம்

அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் பிரான்ஸ் முதலிய தேசங்களிலும் அபேட்சகர்களுக்கு வாக்காளர்களைக் காட்டிலும் அதிக வயதளவு (இருபத்தைந்து முதல் முப்பது வயது வரை) ஏற்பட்டிருக்கிறது. பிரிட்டனிலோ அம்மாதிரியான வித்தியாசம் இல்லை. அபேட்சகர்கள் சொத்துள்ளவர்களாயிருக்க வேண்டுமென்ற நிபந்தனை பல அரசுகளில் இல்லை. பிரிட்டனிலும் வேறு சில தேசங்களிலும் அபேட்சகர்கள் பிரதிநிதிகளாக இருக்க விரும்பும் தேர்தல் தொகுதிகளில் குறித்த கால அளவு கட்டாயம்

பிரதிநித்துவ நிபந்தனைகளும் வசதிகளும்

வாசம் செய்திருக்கவேண்டும். ஜீவனோபாயம் குறைவாக உள்ளவர்களைச் சட்டசபையில் தொண்டு புரியும்படி தூண்டும்பொருட்டு, அநேகமாய் எல்லா நாடுகளிலும் சட்டசபை அங்கத்தினர்களுக்குச் சம்பளமோ, அல்லது வேறு விதத்தில் பண சகாயமோ அளிக்கப் பெறுகிறது. சில தேசங்களில் இலவச ரயில் பிரயாண வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

இரகசிய 'பாலட்' முறை

இக்கால ஜனநாயக அரசுகளில் தேர்தல்கள் இரகசியமான முறையில் நடைபெறுகின்றன. ஓட்டுச் சீட்டை ஒரு வாக்காளர் இரகசியமாய்க் குறியிட்டுப் 'பாலட்' பெட்டியில் போடக்கூடும். வாக்காளர்களைப் பலாத்காரத்தினாலோ, அல்லது வேறு அக்கிரம நிர்ப்பந்தத்தினாலோ தங்கள் விருப்பத்திற்கு விரோதமாக ஓட்டுச் செய்யும்படிப் பிறர் தலையிடுவதைத் தடுப்பதுதான் இம்முறையின் நோக்கம். இந்தியாவில் எழுதவும் படிக்கவும் தெரியாதவர்கள் பகிரங்கமாக ஓட்டுச் செய்யலாம். ஆனால், காலப்போக்கில் எழுத்தறிவு வளர வளர இந்த வழக்கத்தை நிச்சயமாக எடுத்துவிடவேண்டிவரும்.

நேர்முகத் தேர்தலும் மறைமுகத் தேர்தலும்—நன்மைகளும் தீமைகளும்

தேர்தல்கள் நேர்முகமாகவும் மறைமுகமாகவும் இருக்கலாம். நேர்முக முறையில், குறித்த தகுதிகளைப் பெற்ற பிரஜைகள் நேராகத் தாமே ஓட்டு அளிக்கிறார்கள். மறைமுக முறைப்படியோ, பல வாக்காளர்கள் கூடித் தங்களில் ஒருவரையோ, அல்லது சிலரையோ பொறுக்கி எடுத்துத் தங்கள் சார்பாக அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரத்தைக் கொடுக்கிறார்கள். இம்முறை வாக்காளர்களின் செல்வாக்கைக் குறைத்து விடுகிறது. இம்முறைக்கு ஆதரவு ஏற்பட்டிருப்பதற்கு முக்கிய காரணம் அறிவில்லாத பாமர வாக்காளர்களுக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை முற்றும் அளிப்பது தீமையை விளைவிக்கும் என்பதுதான். ஆனால், அநேக தேசங்களின் அநுபவத்திலிருந்து இம்முறை

பினால் நன்மையைவிடத் தீமையே விளைகின்றது என்று சொல்லலாம். முடிவாக, அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்க முதலில் வாக்காளர்களால் பொறுக்கப் பெற்றவர்கள் (அதாவது 'நடுத்தர' வாக்காளர்கள்) குறைவாயிருப்பார்களாகையால் நேர்முகத் தேர்தலைவிட இம்முறையில் லஞ்சத்திற்கும், அக்கிரமத்திற்கும், சூழ்ச்சிக்கும், மற்றுமுள்ள கெடுதிகளுக்கும் இடம் அதிகமுண்டு. நேர்முகமற்ற ஓட்டு முறையில் தேர்ந்தெடுக்கப்பெற்ற அபேட்சகர்கள் பொதுஜன அபிப்பிராயத்தை அவ்வளவாக லட்சியம் செய்வதில்லை. மேலும், கட்சியேற்பாடு திருப்தியாய் அமைந்திருந்தால் இரண்டாவது தேர்தல் போலித் தேர்தலாகவே முடியும். ஏனெனில், கட்சித் தலைவர்களால் ஆதரிக்கப் பெற்றவர்களைத்தான் அபேட்சகர்களாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவர்களையே வாக்காளர்கள் தங்கள் பிரதிநிதிகளாக (நடுத்தர வாக்காளர்களாக)ப் பொறுக்குவார்கள். ஆகையால் நேர்முகமான தேர்தலே திருப்தியளிக்கக்கூடியது. பொதுத் தேர்தல்தான் வாக்காளர்களுக்கு அரசியல் விஷயத்தில் மனப் பூர்வமான ஊக்கமும் பொறுப்பும் இருக்கும்படி செய்ய ஏற்ற சாதனமாகும். ஆனால், பல தேசங்களில் மேற்சபைத் தேர்தல்களுக்கு மாத்திரம் நேர்முகமல்லாத தேர்தல் முறையே கடைபெற்று வருகிறது.

பிரதிநிதிகளை அமைக்கும் முறைகள் எல்லாத் தேசங்களிலும் ஒரேமாதிரியாக இல்லை. பிரிட்டனில் எழுபதினாயிரம் ஜனங்களுக்கு ஒரு பிரதிநிதி என்ற கணக்கில் தேசம் முழுவதையும் சரிசமானமான தேர்தல் தொகுதிகளாகப் பிரித்திருக்கின்றனர். இதற்கு ஒற்றை அங்கத்தினர் தொகுதி முறை யென்று பெயர். இந்த முறையில் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட அபேட்சகர்கள் போட்டியிட்டால், சிறுபான்மை ஓட்டுகளினாலேயே ஒருவன் வெற்றிபெறக்கூடும்; இது ஒரு குறை. இங்ஙனம் பல தொகுதிகளில் நேரிடுமாயின், பெரும்பான்மைப் பிரதிநிதிகள் சிறுபான்மை ஓட்டுகளினாலே தேர்ந்தெடுக்கப்பட

பிரிட்டிஷ் பிரதிநித்துவ முறை: ஒற்றைத் தொகுதிகள்

லாம். பிரிட்டனில் இப்படிப் பல தடவைகளில் நேர்ந்திருக்கிறது. ஆகையால் பிரிட்டிஷ் அரசியல் வாதிகளில் பிரமுகர்கள் பலர் இம்முறையைக் கண்டித்திருக்கின்றனர். ஆனால், தேர்தல் முறையைச் சீர்திருத்தி அமைக்கவேண்டிக் கொண்டுவரப்பெற்ற பிரேரணை யாதொன்றும் சட்டசபையில் நிறைவேறவில்லை.

பிரெஞ்சுத் தேர்தல் முறைக்கு 'லிஸ்டு முறை' அல்லது ஜாபிதா முறை யென்று பெயர். அதன்படி ஒவ்வொரு தேர்தல் தொகுதியும் பத்துப் பிரதிநிதிகளையோ மேற்பட்ட பிரதிநிதிகளையோ கொண்டதாக இருக்கும்படி தேசம் முழுவதும் பிரிக்கப்பட்டுள்ளது. இவைகள் பல அங்கத்தினர்களைக் கொண்ட தொகுதிகள் என்று சொல்லலாம். ஒவ்வோர் அரசியற் கட்சியும் எத்தனை தேர்தல் ஸ்தானங்கள் உண்டோ, அத்தனை அபேட்சகர்களின் பெயர்களை ஒரு ஜாபிதாவில் சேர்த்து வெளியிடும். வாக்காளர்கள் ஒரு ஜாபிதா முழுவதற்குமே ஓட்டுச் செய்யவேண்டும். பெரும்பான்மை ஓட்டுகளைப் பெறும் கட்சிக்கு எல்லா ஸ்தானங்களும் உரியனவாகும். பிரிட்டிஷ் முறையைவிடப் பிரெஞ்சு முறை விஷயத்தில் அதிக ஆட்சேபம் இருக்கிறது. பல தடவைகளில் பரீட்சை செய்து கடைசியில் பிரான்ஸ் தேசமே இம்முறையை நிராகரித்துவிட்டது.

பிரெஞ்சு 'லிஸ்டு முறை'

ஜர்மன் பிரதிநிதித்துவ முறைக்கு '**விகிதாசார ஜாபிதா முறை**' என்று பெயர். அதன்படி தேசத்தைப் பல பெரிய தேர்தல் தொகுதிகளாக பிரித்திருக்கிறார்கள். ஒவ்வொரு தொகுதிக்கும் அறுவர் முதல் பதின்மர்வரையில் பிரதிநிதிகள் உண்டு. ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு தொகுதிக்கும் அபேட்சகர் ஜாபிதா ஒன்றைத் தயாரித்து வெளியிடும். வாக்காளர்கள் கட்சிகளின் ஜாபிதாக்களில் ஏதாவது ஒன்றுக்கு ஓட்டுச் செய்யலாம். தேர்தலில் ஒரு கட்சி பெறும் ஓட்டுகளின் தொகையைப் பொறுத்து விகிதாசாரப்படி அக்கட்சியினரின் பிரதிநிதிகள்

ஜர்மன் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை

இத்தனை பேரென்ற நிர்ணயம் ஏற்படுகிறது. உதாரணமாக: தேசமுழுவதும் முந்நூறு ஸ்தானங்களுக்குத் தேர்தல் நடப்பதாக வைத்துக்கொள்வோம். ஒரு கட்சி ஜாபிதாவுக்கு எல்லாத் தொகுதிகளிலும் சேர்ந்து, தேசம் முழுவதும் ஓட்டுச் செய்தவர்கள் தொகையில் ஆறில் ஒரு பங்கு ஓட்டுகள் கிடைத்தால், அக் கட்சிக்கு முந்நூறு ஸ்தானங்களில் ஆறில் ஒன்றுகிய ஐம்பது ஸ்தானங்கள் அளிக்கப்படும். இந்த ஐம்பது ஸ்தானங்களுக்கும் ஐம்பது பிரதிநிதிகளை நியமிக்கும் பொறுப்பு அக்கட்சித் தலைவருக்கு உரியது.

இம்முறை பிரெஞ்சு லிஸ்டு முறையையும், பிரிட்டிஷ் முறையையும்விட மேலானது என்பதிற் சந்தேகமில்லை. ஆனால், இதிலும் பல குறைகள் சாதாரணமாய்க் காணப்படுகின்றன. வாக்காளர்கள் அபேட்சகர்களின் யோக்கியதையையும் திறமையையும் தெரிந்து ஓட்டுச் செய்வதில்லை. வாக்காளர்களுக்கும் பிரதிநிதிகளுக்கும் நேரான தொடர்பு ஏற்படுவதில்லை. ஆகையால் சரியான ஜனநாயக லக்ஷியத்திற்கு இது விரோதமாக இருக்கின்றது.

ஸோவியத் ருஷ்யாவில் பிரதிநிதித்துவம் நேர்முகமானது; அன்றி ஒரு தொழிலையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. அதாவது தொழிலாளர்களைத் தேர்தல் திட்டங்களாக அமைத்து ஒவ்வொரு திட்டத்திற்கும் ஏற்பட்ட பிரதிநிதிகளை அக்கூட்டத்தில் சேர்ந்த தொழிலாளிகள் நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கின்றனர்.

ஸோவியத் தொழில் பிரதிநித்துவ முறை

இந்தியாவில் தேர்தல் தொகுதிகளைப் பிரதேசவாரியாகவும் ஜனத்தொகை வீதப்படியும் அமைத்திருப்பது மட்டுமின்றி, வகுப்பு வீதமாகவும் பிரித்திருக்கின்றனர். பொதுத் தேர்தல் தொகுதிகளைத் தவிர, முகம்மதியர்கள், கிறிஸ்துவர்கள் முதலிய சிறுபான்மை வகுப்பினர்களுக்குத் தனித் தொகுதிகள் ஏற்படுத்தப் பெற்றிருக்கின்றன. இதற்கு **வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறை** யென்று பெயர்.

இந்தியாவில் பொதுத் தேர்தல் தொகுதியும், வகுப்புவாரித் தனித் தொகுதியும்

இவ்வகுப்புவாரி முறையில் சில நல்ல அம்சங்கள் இருக்கின்றன. ஒரு சிறுபான்மை வகுப்பினருக்குரிய சில தனி உரிமைகளுக்கும் சலுகைகளுக்கும் பாதுகாப்பு ஏற்படுகிறது; சட்ட சபையில் அவர்களுக்குப் போதுமான பிரதிநிதித்துவம் உண்டாவதுடன் வகுப்பை ஒன்றுபடுத்திக் கல்வி அபிவிருத்தி, தேசத்தொண்டுகள் முதலியவைகளுக்கேற்ற அதிக வசதிகளை இம்முறை அளிக்கக்கூடும். ஆனால் இதனால் ஏற்படும் கொடிய தீமைகள் பல. இவ்விதமான பிரதிநிதித்துவம் சரித்திர அநுபவத்திற்கு விரோதமானது. தேசப் பொதுநன்மையைக் கருதினால், ஜாதிமத வித்தியாசங்களெல்லாம் அரசியல் விஷயங்களில் நுழையக்கூடாதென்பதுதான் இந்நாள் அரசுகளின் கொள்கை. பிற தேசங்களிலெல்லாம், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கொள்கை கைவிடப் பெற்று, பிரதேசவாரிப் பிரதிநிதித்துவக் கொள்கையே இப்போது நடைமுறையில் இருந்துவருகிறது. இந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறை வகுப்புவாத உணர்ச்சியையும், குறுகிய மனப்பான்மையையுமே நீடிக்கச் செய்யும். ஒரு சிறுபான்மையோர் வகுப்பு, தன் உரிமைகளையும் சலுகைகளையும் கொண்டே திருப்தியடையக் கூடுமாகையால், மேன்மேலும் முன்னேற்றம் அடைய வேண்டுமென்னும் உணர்ச்சிக்குத் தூண்டுதலே இல்லாமல் போய் விடுகிறது. இச்சலுகை தொற்று நோயைப் போன்றது. ஒரு வகுப்பினரோடு மாத்திரம் இச்சலுகை நின்றுவிடாது. பிற வகுப்புகளும் இம்மாதிரியான சலுகைகளைப் பெற வேண்டிப் போட்டி போட்டுக்கொண்டு சண்டையிடும். தவிரவும், ஒரு சிறுபான்மை வகுப்பினர்களுக்குள்ளேயே, சின்னஞ்சிறு உட் பிரிவுகள் தோன்றித் தங்கள் வித்தியாசத்தைப் பெரிதாகப் பாராட்டி, மேலும் விசேஷச் சலுகைகளுக்காகக் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்துவிடும்.

வகுப்புவாரி முறையின் நன்மை தீமைகள்

இங்கிலாந்தில், இந்தியாவிற்குக்கூட அவ்வளவு பாதகமில்லாத மற்றொரு முறை இருக்கின்றது. ஒரு கூட்டுத் தொகுதியில் சிறுபான்மை வகுப்பினருக்கு அவர்களின்

ஜனத்தொகை வீதப்படி சில ஸ்தானங்களை ஒதுக்கி வைக்கலாம். உதாரணமாக: ஒரு தேர்தல் தொகுதிக்கு ஜன விகிதப்படி நான்கு ஸ்தானங்கள் ஏற்பட்டிருந்தால், அங்கே முகம்மதியர்கள் சுமார் நான்கில் ஒரு பங்கு ஜனத்தொகை கொண்டவர்களாக இருந்தால், அவர்களுக்கென்று ஒரு ஸ்தானத்தை ஒதுக்கிவைத்து விடலாம். ஆனால் முகம்மதியர்களின் பிரதிநிதி முகம்மதிய ஓட்டர்களால் மட்டுமே தேர்ந்தெடுக்கப் படக்கூடாது. வாக்காளர்கள் அனைவரும் தேர்தலில் கலந்துகொள்ள வேண்டும். அப்போது வெற்றி பெறும் ஒரு முகம்மதிய அபேட்சகர் எல்லா வாக்காளர்களுடைய பிரதி நிதியாகவும் ஆகிறார்.

சில ஸ்தானங்களை ஒதுக்கி வைத்தல்

பிரதிநிதித்துவ முறையிலேயே மாற்று ஓட்டுத் திட்டப்படி ஏற்படும் விகிதாசாரப் பிரதிநிதித்துவமே எல்லாவற்றிலும் மேலானது. தேச ஒற்றுமையைப் பாதிக்காத வழியில், சிறுபான்மை வகுப்புக்களுக்குப் பிரதிநிதித்துவம் எவ்விதம் அளிக்கக்கூடும் என்னும் சிக்கலான பிரச்னை இம் முறையினால் ஒருவாறு திருப்திகரமாகவே முடிவு பெறலாம்.

இக்கால அரசுகள் ஒவ்வொன்றிலும் சிறுபான்மையோரைப் பற்றிய பிரச்னை பெரிய சங்கடங்களுக்குக் காரணமாயிருந்து வருகிறது. சிறுபான்மையோரை, சிறுபான்மை ஜாதியார், சிறுபான்மை வகுப்பினர், ஓட்டுப் பல விஷயத்தில் சிறுபான்மையோர் என மூவகையினர்களாகப் பிரிக்கலாம்.

சிறுபான்மையோர் பிரச்னை

சிறுபான்மை ஜாதியார்:—மத்திய ஐரோப்பிய நாடுகள் சிலவற்றில் சில ஜாதியினர் எப்பொழுதும் ஜனத் தொகையில் சிறுபான்மையினராகவே இருக்கின்றனர். யூதர்கள், ஸெக்குக்காரர்கள், ஸ்லாவுக்காரர்கள் என்பவர்களை உதாரணமாகக் கூறலாம். தங்களுக்குரிய விசேஷ பாத்தியங்கள் சில தனிப்பட்ட பாதுகாப்புகளுடன் அரசியல் திட்டத்திலேயே நிர்ணயிக்கப்பட வேண்டுமென்பதே அவர்கள் விருப்பம். ஆனால் அங்ஙனம் பாதுகாக்கப் பெறும் உரிமைகள் அரசியல் சம்பந்தமானவை யல்ல. மத வழிபாட்டில் சுயேச்சை,

தாய்ப் பாஷையில் அவர் குழந்தைகள் கல்வி கற்க வசதிகள், தனிப்பட்ட பள்ளிக்கூடங்கள் இவைபோன்ற கலாபிவிருத்திக்கும் மன வளர்ச்சிக்கும் தேவையான உரிமைகளையே சிறுபான்மையோர்கள் வேண்டுகின்றனர். தனிப்பட்ட அரசியல் சலுகைகளையோ, தங்கள் ஜாதியினருக்கு விசேஷ உத்தியோகங்களையோ, பதவிகளையோ அவர்கள் விரும்பவில்லை. ஆதலின், அரசியல் திட்டத்திலேயே அவர்களது வேண்டுகோளின்படிப் பாதுகாப்புகளை அளித்து விட்டால் சிறுபான்மையோர் பிரச்னை தீர்ந்து முடிவு பெறும்.

சிறுபான்மை வகுப்பினர்:—இது இந்தியாவுக்கென்றே ஏற்பட்ட விசேஷ அம்சம். முன்பே சொல்லியபடி சில இந்துக்கள், முகம்மதியர்கள், கிறிஸ்துவர்கள், ஐரோப்பியர்கள், ஆங்கிலோ இந்தியர்கள் ஆகியவர்களுக்கு அளித்திருக்கும் தனித்தேர்தல் தொகுதிகளால் தேசமே சின்ன பின்னமாய்ப் பிரிக்கப்பட்டு விடுகிறது. ஒரே தேசத்தினராயிருந்தும், ஜனங்கள் வகுப்புணர்ச்சியினால் பிரிந்து நின்று, தனித் தேர்தல் தொகுதியிலேயே கருத்துக்கொண்டிருக்கிறார்கள்; அதனால் தாங்களும் நாட்டு மக்கள் என்பதைக்கூட மறந்துவிடுகின்றனர். எனவே, ஜனநாயகத்தின் அடிப்படைக் கொள்கையாகிய சமத்துவத்தையே இம் முறை பாதித்துப் பொதுப்பிரஜை என்ற உணர்ச்சியின் வளர்ச்சிக்குப் பெரிய தடையாக ஏற்பட்டுவிடுகிறது.

ஓட்டுப் பலத்தில் சிறுபான்மையோர்:—ஒவ்வொரு பிரதிநித்துவ முறையிலும் சிறுபான்மையோருக்குத் தேவையான பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்பது ஜனநாயக ஆட்சியின் முக்கிய அம்சங்களில் ஒன்று. பிரிட்டிஷ் அங்கத்தினர் தேர்தல் தொகுதி முறையில் சில ஜனக்கூட்டங்களுக்கு நடைமுறையில் ஓட்டு உரிமையில்லாமலே போய்விடுகிறது. சில சமயங்களில் பிரதிநிதிகள் பெரும்பான்மையோரின் இஷ்டமின்றியே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். எனவே, இம்முறை சிறுபான்மைக் கூட்டத்தினர்களுக்கும் சிறுபான்மைக் கட்சிகளுக்கும் பெருத்த அநியாயம் விளைவித்திருக்கின்றது.

ஜன நாயக ஆட்சி பெரும்பான்மையோரின் ஆட்சியாக மாத்திரம் இருப்பது கூடாது. அது நியாயமும் சமத்துவமும் பொருந்திய ஆட்சியாயிருக்க வேண்டும். உண்மையான சமத்துவம் படைத்த ஜனநாயக ஆட்சியில் ஜனங்களின் ஒவ்வொரு பகுதிக்கும் அதனதன் பலத்திற்கேற்ற விகிதாசாரப் படி பிரதிநிதித்துவம் இருக்கவேண்டும். அதாவது, பெருந் தொகுதியான வாக்காளர்களுக்குத் தொகையிற் பல பிரதிநிதிகள் இருந்தால், சிறுபான்மைக் கூட்டத்தார்களுக்கும் அவர்களுக்கேற்ற சில பிரதிநிதிகள் இருக்கவேண்டும்.

சிறுபான்மையோருக்கு நியாயமான பிரதிநிதித்துவத்தை எப்படி ஏற்படுத்துவது என்ற விஷயம், இக்கால ஜனநாயக அரசாங்கங்களில் ஒரு பெருத்த பிரச்னையாக இருந்து வருகிறது. அதைத் தீர்க்கப் பல்வேறு முறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இரண்டாம் ஓட்டு:—பிரிட்டனைப்போல் ஒற்றை அங்கத்தினர் தேர்தல்முறை அனுஷ்டானத்தில் இருக்கிற தேசத்திற்கு இது ஒக்கும். ஓர் அபேட்சகருக்குத் தீர்மானமான பெரு வாரி ஓட்டு (அதாவது மொத்த ஓட்டுகளில் பாதிக்குமேல்) முதல் தடவையில் கிடைக்காவிட்டால், இரண்டாவது தேர்தல் உடனே நடைபெறும். இத் தேர்தலில் முன் நின்ற அபேட்சகர்களில், ஓட்டுப்பலத்தின்படி முதலில் நின்ற இரண்டு பேர்களைத் தவிர மற்றவர்களின் பெயர்களை எடுத்து விட்டு, அவர்கள் இருவரில் யாருக்கு அதிக ஓட்டுகள் கிடைக்கின்றனவோ, அவருக்குத் தேர்தலில் வெற்றி கிடைக்கும். இம் முறைக்கும் ஆட்சேபணை இருக்கிறது. வீண்செலவு ஏற்படுவதோடு இரண்டாவது தேர்தலுக்குமுன் இரகசியமாகப் பேரமும், சூழ்ச்சியும் அதிகரித்து, அனுவசியமான கஷ்டங்கள் ஏற்படுகின்றன.

'லிமிடெட்டு ஓட்டு' அல்லது குறைந்த ஓட்டு முறை:—இதன்படி எத்தனை ஸ்தானங்கள் தேர்தலுக்கு இருக்கின்றனவோ, அத்தனை ஓட்டுகள் ஒவ்வொரு வாக்காளருக்கும் இல்லை. இதனால் சிறுபான்மைக் கட்சியார்க்குக் குறைந்தது ஒரு பிரதிநிதியாவது வர இடம் இருக்கிறது.

'க்யூமுலேட்டிவ்' அல்லது குவியல் ஓட்டுமுறை :—எத்தனை ஸ்தானங்கள் உண்டோ அத்தனை ஓட்டுகளையுடைய ஒரு வாக்காளர், ஒரே அபேட்சகருக்குத் தமக்குரிய எல்லா ஓட்டுகளையும் கொடுத்து விடலாம். உதாரணமாக : நான்கு ஸ்தானங்கள் தேர்தலுக்கு விடப்பட்டால் ஒரு வாக்காளருக்கு நான்கு ஓட்டுகள் உண்டு. அவர் தம் நான்கு ஓட்டுகளையும் தம் இஷ்டப்படி ஒரே அபேட்சகருக்கோ, அல்லது பிரித்து வெவ்வேறு அபேட்சகருக்கோ கொடுக்கக் கூடும். ஒரு சிறுபான்மை வகுப்பினர்க்குள் ஐக்கிய பாவமும் மன உறுதியும் இருந்தால் அவர்கள் நிச்சயமாக இம்முறையால் பிரதிநிதித்துவம் பெற்றுவிடலாம். ஆனால் லிமிட்டெட், க்யூமுலேட்டிவ் ஆகிய இரண்டு முறைகளிலும் சூழ்ச்சிகளுக்கும், நேர்மையான நோக்கமும் லக்ஷியமும் இல்லாத செயல்களுக்கும இடம் தாராளமாக ஏற்படுகின்றது.

மாற்று ஓட்டு :—பிரிட்டிஷ் பிரதிநிதித் தேர்தல் முறையில் அனுபவத்தில் காணப்படும் குறைகளை விலக்கவே இம்முறை உபயோகப்படுகிறது. இதன்படி ஒரு வாக்காளர் ஓட்டுச் சீட்டில் குறிக்கப் பெற்றிருக்கும் அபேட்சகர்களில் இருவர் அல்லது அதற்கு மேற்பட்ட பெயர்களுக்கு எதிராகத் தம் இஷ்டத்தைத் தெரிவிக்குமாறு 1, 2, 3, 4 என்று குறிக்க வேண்டும். முதல் ஓட்டுக்கணக்கில் யாதோர் அபேட்சகருக்கும் பாதிக்கு மேற்பட்ட முதல் ஓட்டுத் தொகை கிடைக்காவிட்டால், அந்த அந்த அபேட்சகருக்கு எதிராக 2 என்று குறிக்கப்பெற்ற சீட்டுகளும், முதல் ஓட்டுகளுடன் சேர்த்துக் கணக்கிடப்படும். பாதிக்குமேல் ஓட்டுகள் ஒருவருக்குக் கிடைக்கிற வரையில் இவ்வித ஓட்டு மாற்றுதல் நடைபெறும்.

இதை விளக்கிக் காட்டுவோம் :

செங்கற்பட்டு ஜில்லாவுக்கு ஓரே பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கும் உரிமை இருப்பதாக வைத்துக் கொள்வோம். அதற்கு நான்கு அபேட்சகர்கள் நிற்கின்றனர். ஜில்லாவிலுள்ள வாக்காளர்களின் தொகை 10,000 என்று கொள்வோம். அபேட்சகர்களுள் ஒருவர் வெற்றிபெறக் குறைந்த

பட்சம் 5001 ஓட்டுகள் பெற வேண்டும். வாக்காளர்கள் நான்கு அபேட்சகர்களுக்குள் ஒருவருக்கு மட்டும் சீட்டில் × என்னும் குறியிட்டு ஓட்டுக் கொடுத்து நின்று விடுவதற்குப் பதிலாக, தமக்கு அதிக விருப்பமுள்ள ஒருவருக்குத் தம் ஓட்டை முதலாவதாகவும், அவருக்கு அடுத்தபடியாக விருப்ப முள்ள ஒருவருக்கு இரண்டாவதாகவும் கொடுத்து விட வேண்டும். இப்படியே படிப்படியாகத் தங்கள் குறிப்பைத் தெரிவிக்க வேண்டும்.

உதாரணம்:—

அபேட்சகர் பெயர்			வாக்காளர்களின் இஷ்டத்தைக் குறிக்கும் எண்
பழனி செட்டியார்	...	...	2
முத்துசாமி முதலியார்	...	...	4
ராஜு பிள்ளை	...	...	1
வேங்கடராம ஐயர்	...	...	3

இப்படி ஓட்டுச் சீட்டில் குறிப்பதாக வைத்துக் கொள் வோம். ஒவ்வோர் அபேட்சகருக்கும் 1 என்ற எண் இடப் பட்ட ஓட்டுகள் எவ்வளவு கிடைத்திருக்கின்றன என்று முத லில் கணக்கிடுவார்கள். யாருக்காவது 5001 முதல் ஓட்டுகள் 1 என்ற குறிப்போடு இருந்தால் அவரே தேர்ந்தெடுக்கப் பெறுவர். அப்படி ஒருவருக்கும் இல்லாவிட்டால் 1 என்ற எண்ணிக்கையை மிகக் குறைவாகப்பெற்ற அபேட்சகரை நீக்கிவிட்டு, அவர் அப்படிப் பெற்றுள்ள சீட்டுகளில் யார் யாருக்கு இரண்டாவது ஸ்தானம் கிடைத்திருக்கிறதோ அவற்றை முதல் ஸ்தானமாக வைத்து அவரவர்கள் சீட்டுக் கணக்கோடு சேர்த்து விடுவார்கள். இப்படி மாற்றிப் பார்க் கும்போது யாருக்கு 5001 ஓட்டுகள் கிடைக்கின்றன்வோ அவர் வெற்றி பெறுவார். இந்தத் தடவையும் கிடைக்கா விட்டால் மீட்டும் ஒருவரை விலக்கி ஏனைய இருவருக்கு அவர் ஓட்டுப் பலத்தை மாற்றிக் கணக்குப் பார்ப்பார்கள்.

இந்த முறைப்படியும் சிறுபான்மையோர் தொகைக் கேற்பப் பிரதிநிதித்துவம் ஏற்படுகிறதில்லை. கட்சிகளின் சூழ்ச்சிக்கும், பேரத்திற்கும் இடமுண்டு. வீண் செலவு மாத்திரம் இம்முறையில் நேராது. தேர்தல் ஒருமுறை நடை பெறுகிறதுதான் அதற்குக் காரணம்.

விகிதாசாரப் பிரதிநிதித்துவம்:—மேற்சொல்லிய குறைகளை நீக்கிப் பல வகுப்பினர்களுக்கும் இடம் கொடுத்துத் தேசத்தின் பலதிறப்பட்ட அபிப்பிராயங்களையும் உண்மையாகப் பிரதிபலித்துக் காட்டும் ஒரு சட்ட சபையை ஏற்படுத்த விரும்பினால், '**விகிதாசார ஒற்றை ஓட்டு மாற்று**' முறைதான் மிகவும் திருப்திகரமானது. இது அநேக அங்கத்தினர்கள் உள்ள தேர்தல் தொகுதிகளுக்கே தகுதியாகும். பத்து வருஷ ஜனத்தொகைப் பதிவுக் கணக்கு ஒவ்வொன்றுக்கும் தக்க வாறு தொகுதிகளைப் பிரித்து அமைக்கும் அசௌகரியமும் கஷ்டமும் இதில் நேரிடுவதில்லை. வெகு காலமாக நடை முறையில் இருந்துவரும் தேசப்பிரிவுகளையே தேர்தல் தொகுதிகளாக வைத்து வரலாம். மேலும் ஒவ்வோர் ஓட்டுக்கும் சமமான மதிப்பு ஏற்படுகிறது. இவை இம்முறையின் சில சிறந்த விசேஷங்களாம்.

இம்முறை வழக்கத்தில் மேற்கொள்ளப்படுவது எப்படி என்பதைப்பற்றிச் சுருக்கமாய்ச் சொல்லுவோம். ஒரு தேர்தலில் சரியானபடி கொடுக்கப்பெற்ற மொத்த ஓட்டுகளைத் தேர்தல் ஸ்தானங்களின் தொகையால் வகுத்து வந்த ஈவுக்கு **நிறையெண்** (கோட்டா) என்று பெயர். மற்றத் தேர்தல் முறைகளைப்போல, இம்முறையில் மற்றவர்களைக் காட்டிலும் அதிக ஓட்டுகள் பெற்ற ஓர் அபேட்சகருக்குத் தான் தேர்தலில் வெற்றி என்பது இல்லை. பாக்கிப் பேர்களுக்கு எத்தனை ஓட்டுகள் கிடைத்திருக்கின்றன என்பதையே கவனியாமல் நிறையெண்ணின்படி ஓட்டுப்பெறுகிற அபேட்சகர்கள் வெற்றி பெறுவார்கள். ஓட்டுச் சீட்டில் அபேட்சகர்களின் பெயர்கள் குறிக்கப்பட்டிருக்கும். வாக்காளர்கள், அபேட்சகர்களைப்பற்றித் தங்களுக்கு இருக்கும் அபிப்பிராயத்தின்படி, அபேட்சகரின் பெயர்களுக்கு எதிராக 1, 2, 3,

4, 5 என்று எழுதவேண்டும். ஓட்டுக்களைக் கணக்கிடும் போது '1' என்று அபேட்சகர்கள் ஒவ்வொருவருக்கும் குறிக்கப்பட்ட சீட்டுகளைப் பொறுக்கி எடுத்துக் கூட்டிப் பார்க்கையில் நிறையெண் தொகை கிடைத்தவர்கள் தேர்தலில் வெற்றி பெற்றவர்களாவர். இந்த ஸ்தானங்களை நீக்கிப் பாக்கியிருக்கும் ஸ்தானங்களுக்கு, வெற்றியடைந்தவர் ஓட்டுகளில் நிறையெண்ணுக்கு மேல் உள்ள ஓட்டுத் தொகையும் கடைசியாகக் குறைந்த ஓட்டு வாங்கின அபேட்சகர்களின் முதல் ஓட்டுகளையும், அந்த அந்த ஓட்டுச் சீட்டுகளில் '2' என்று குறிக்கப்பட்ட அபேட்சகர்களுக்கு மாற்றுவார்கள். இது மாதிரி எல்லா ஸ்தானங்களுக்கும் அபேட்சகர்கள் தேர்ந்தெடுக்கப்படும் வரையில் ஓட்டு மாற்றல் நடைபெறும்.

ஓட்டுகளைக் கணக்குப் பண்ணி மாற்றிக்கொண்டிருப்பது சற்றுச் சிக்கலான விஷயந்தான். ஆனால்லும் இந்தச் சிக்கலினால் வாக்காளர்களுக்கு ஒருவித அசௌகரியமும் இல்லை. கணக்கிடும் உத்தியோகஸ்தர்கள் அக்கடமையை நிறைவேற்றி விடுவார்கள். தேர்தலுக்கு எத்தனை ஸ்தானங்கள் இருந்தாலும், எத்தனை அபேட்சகர்கள் நின்றாலும், ஒவ்வொரு வாக்காளருக்கும் ஒவ்வோர் ஓட்டுத்தான் உண்டு. ஓட்டுச் சீட்டில் '1' என்று குறிக்கப்பட்ட அபேட்சகருக்கே முதலில் அந்த ஓட்டுக் கணக்கிடப்படும். ஆனால் சந்தர்ப்பத்திற்கேற்ப இந்த ஓட்டு மாற்றப்படக் கூடியது. ஆகையால் தான் இது 'மாற்று ஒற்றை ஓட்டு' என்று சொல்லப்படுகிறது. இத்தேர்தல் முறையில் அநேக நல்ல அம்சங்கள் உள்ளன. மற்ற முறைகளின் குறைகள் இதில் இல்லை. இதனால் சிறுபான்மையோருக்கும் நிச்சயமாய்ப் பிரதிநிதித்துவம் ஏற்படும். தேர்தல்களில் சூழ்ச்சிகளுக்கும் மற்றக் கெடுதல்களுக்கும் அவ்வளவாக இடம் இல்லை.

ஆனால் இந்த முறையிலும் சில குறைகள் இல்லாமற் போகவில்லை. ஒரு தேசத்திலுள்ள கட்சிக்களின் தொகையைச் சுருக்கி இரண்டு அல்லது மூன்று முக்கியமான கட்சிகளாக வைத்து அவற்றிற்குப் பிரதிநிதித்துவம் கொடுப்பது போய்ப் பல கட்சிகளுக்கு இடம் ஏற்படுகிறது; இருக்கிற

கட்சிகளைப் பூர்வ ஸ்திதிக்கு ஹானியின்றி ஒரேமாதிரியாக இருக்கச் செய்கிறது. ஒவ்வொரு சிறு பிரிவும் தன் தனிக் குணங்களை வேறு பிரித்து வைக்க முயலுமேயன்றி யாவும் ஒன்றுபட்டு அரசியலை நடத்த வேண்டும் என்ற சிரத்தை இல்லாமற் போய்விடும். கட்சியமைப்பைப பெரிதாக்கும் முயற்சியைத் தூண்டிவிடும். இதனால் பிரதிநிதிகளுக்கு தம் தொகுதி விஷயத்தில் சிரத்தை இருப்பதில்லை. இப்படிக் கலவையாக அமைந்த பிரதிநிதிகளின் கூட்டத்திலிருந்து சட்ட சபையில் ஒற்றுமையும் ஒழுங்கான திட்டமும் உள்ள மந்திரி சபை ஏற்படுவது துர்லபமாக முடியும்.

அத்தியாயம் 18

அரசியற் கட்சிகள்

முக்கிய அரசியற் கொள்கைகளிலும் பிரச்னைகளிலும் ஒரே மனப்பான்மை கொண்ட வாக்காளர்கள், அரசாங்கம் நடத்துவோரைக் கட்டுப்படுத்தி அரசாங்கக் காரியங்களையும் காரியக் கிரமத்தையும் கண்காணித்துத் தங்கள் லக்ஷியங்களை நிறைவேற்ற வேண்டி ஏற்படுத்திய நிலையான ஸ்தாபனங்களுக்கு **அரசியற் கட்சிகள்** என்று பெயர். அவைகள் அரசாங்கத்தின் பகுதியல்ல. சட்ட நிரூபணம், நிர்வாகம், நீதி பரிபாலனம் என்னும் மூவகை அரசியற் பகுதிகளுக்கும் பின்னிருந்து வேலைசெய்துவரும் ஒரு தனி இலாகாவென்றே அவற்றைக் கருதலாம். கட்டுப்பாட்டுடன் அமைக்கப் பெற்று, வாக்காளர்களின் எண்ணிக்கைப் பலமும் கொண்ட அரசியற் கட்சிகளுக்குப் பெருத்த செல்வாக்கு ஏற்படுகிறது. முக்கியமாக இக்கால ஜனநாயக அரசில் சர்க்காரின் வேலைகளும், வாக்காளர்கள் நேர்முகமாயும் மறைவாயும் வகித்து வரும் அதிகாரங்களும் நாளுக்கு நாள் விரிவடைந்து வருகின்றன. வாக்காளர்களிற் பெரும்பாலோர் அரசியல் விஷயங்

அரசியற் கட்சிகளின் அவசியம்

களில் போதிய அறிவில்லாமலும் ஊக்கமின்றியும் இருப்பதால், அவர்களுக்குப் பொறுப்புணர்ச்சி உண்டுபண்ணி அரசியற் பிரச்னைகளை விளக்கிக் காட்டிப் பின்னிருந்து உதவியும் தூண்டுதலும் செய்துவருவதே அரசியற் கட்சிகளின் முக்கியமான செயலாகும். பிரஜைகளின் அபிப்பிராயங்களையும் குறைகளையும் வெளியிட்டுத் தக்க பரிகாரங்களைத் தேடி அமைத்துக்கொள்ளும் விஷயங்களிலும் அரசியற் கட்சிகள் மிகவும் உபயோகமுள்ளவை. ஆகவே, ஜனநாயக அரசில் பொதுமக்களின் அதிகாரத்தைச் செலுத்துவதில் அரசியற் கட்சிகளுக்குத்தான் ஒரு பெரிய பங்கு இருந்து வருகிறது. கட்சிகள் பொதுஜன அபிப்பிராயத்தைத் திரட்டுவதற்கேற்ற சக்தி வாய்ந்தவையா யிருப்பதன்றிச் சில நாடுகளின் பரந்த பிரதேசங்களில் ஜனநாயக ஆட்சி நடைபெறுவதற்கு அவசியமான ஐக்கிய பாவத்தை உண்டுபண்ணக் கூடியவையாயும் இருக்கின்றன.

கட்சிப் பிரிவுகள் இயற்கையான மனப்பான்மையின் பேதங்களை ஒருவாறு வெளிப்படுத்துகின்றன. **கன்ஸர் வெட்டிவ்** அல்லது பொதுவாகச் சமூக வேறுபாட்டை விரும்பாத கட்சி, **லிபரல்** அல்லது சீர்திருத்தக் கட்சி என்னும்

கட்சிப் பிரிவுகள் இயற்கையானவை

பிரிவு இயற்கையில் உண்டாகும் அபிப்பிராய வித்தியாசத்தைப் பொறுத்த பிரிவாகும். தேர்தல் வேண்டாத கட்சியிலேயே மிதவாதிகளும் தீவிரவாதிகளும் உண்டு. அவ்வாறே லிபரல் கட்சியினரும் **தீவிர லிபரல்** என்றும் **மிதவாத லிபரல்** என்றும் இருவகைப்படுகிறார்கள்.

இரண்டு அல்லது மூன்று கட்சிகள் இருந்தால், அக்கட்சிகள் ஒவ்வொன்றிலும் உட்பிரிவுகள் ஏற்படும். ஐரோப்பிய உள் நாடுகளில் அநேகமாக உட்பிரிவுகளே தனிக் கட்சிகளாக அமைந்திருக்கின்றன. ஆனால், இவைகளுக்குப் பலமும் செல்வாக்கும் மிகக் குறைவாகவே உள்ளன. ஆதலால் நெருக்கடிச் சமயங்களில் சில உட்பிரிவுகள் தமக்குள் கட்டுப்பாடு செய்துகொண்டு எதிர்க் கட்சிகளுடன் போர்புரியும்படி நேரிடு

கிளைக் கட்சிகள்

கிறது. 'சாரதா சட்டம்' போன்ற ஒரு தனிச் சட்டத் தையோ, அல்லது 'மது விலக்கு'ப் போன்ற ஒரு சீர்திருத் தத்தையோ நிறைவேற்றுவதற்காக மாத்திரம் ஏற்பட்ட ஒரு சங்கமோ கூட்டமோ அரசியற் கட்சியாகாது. ஏனெனில், குறிப்பிட்ட லக்ஷியம் நிறைவேறியபின் அதற்காக ஏற்பட்ட கட்சியும் மறைந்துவிடும்.

கட்சிகள் ஏற்படுவதற்கு முக்கிய காரணங்கள்

அரசியற் கட்சிகள் ஏற்படுவதற்கு ஒரு பலமான காரணம் பொருளாதார விஷயங்களாகும். பணக்காரர்கள் அநேகமாகப் பிற்போக்கு மனப்பான்மை உடையவர்களாக இருப்பார்கள். ஜன சமூக அமைப்பிலும் நோக்கங்களிலும் ஒருவித மாறுதல்களையும் அவர்கள் விரும்பமாட்டார்கள். சமூக மாறுதல்கள் ஏற்படின், அவர்களுக்கு நஷ்டம் எவ்விதமாவது விளையக்கூடும். ஆனதுபற்றிச் சொத்துடையவர்கள் இயற்கையாகப் பிற்போக்குக் கட்சியையே ஆதரிப்பார்கள். ஏழைகளோ எப்போதும் மாறுதல்களை விரும்பியவர்களாய், மிதவாதிகளாகவோ, தீவிரவாதிகளாகவோதாம் இருப்பார்கள். மாறுதல்கள் எவ்விதம் ஏற்படினும் அவர்கள் நிலைமை கொஞ்சமாவது உயருமேயொழிய, முன்னைவிடக் குறைவுபட இடமில்லை. இதேமாதிரியாக, மதசம்பந்தமான வித்தியாசங்களும், தேசீயப் பிரச்னைகளும், அரசியல் தத்துவக் கொள்கைகளும் கட்சிகள் ஏற்படுவதற்குக் காரணங்களாகின்றன. தேசத்தில் பெரிய நெருக்கடிகள் நேரிடும்போதும், தீர்ப்பதற்கரிய பெரிய பிரச்னைகள் கிளம்பும்போதும், முன்னிருந்த கட்சிகள் கலைந்து உரு மாறலாம்; புதிய கட்சிகள்கூட ஏற்படலாம். பிரிட்டனில் கன்ஸர்வெட்டிவ், லிபரல், தொழில் என்று மூன்று கட்சிகள் இப்போது இருக்கின்றன.

பொதுமக்கள் எளிதில் அறிந்துகொள்ளக்கூடிய முறையில் ஒவ்வொரு கட்சியும் அரசியல் விஷயங்களில் தனிக் கொள்கைகளையும் காரியத் திட்டங்களையும் வெளியிட்டுத் தழுவி வருகின்றது. அமெரிக்க ஐக்கிய நாடுகளிலோ இரண்டு கட்சிகளே உண்டு. அவைகளின் பெயர்கள் ஜன

நாயகக் கட்சி, குடியரசுக் கட்சி என்பனவாம். ஆனல், அவை களுக்குள் அரசியற் கொள்கைகளைப் பற்றியோ அல்லது வேறு பிரச்னைகளைப் பற்றியோ உண்மையான வித்தியாசம் ஒன்றும் காணப்படுவதில்லை. கட்சிச் சண்டையெல்லாம் அரசியல் நிர்வாகக் கருவியைக் கைப்பற்ற வேண்டியதற்காக வும் உத்தியோக வேட்டைக்காகவுந்தான். நமது பாரத தேசமோ கொஞ்சகாலமாக மேல்நாட்டு ஜனநாயக ஆட்சி முறைகளைத் தழுவி வருகின்றது. அரசியற் கட்சிகளும் மேல்நாட்டு முறைப்படியே ஒருவாறு அமைந்திருக்கின்றன. கட்சி ஏற்பாட்டில் பல குறைகள் உண்டென்றலும், நம் நாட்டில் உண்மையான ஜனநாயக ஆட்சி திறமையாகவும் வெற்றிகரமாகவும் நடைபெற வேண்டுமானல், நாமும் கட்சி களைத் திருப்தியான முறையில் அமைத்து அவைகளையே அடிப்படையாகக் கொண்டு ஆட்சி நடத்திவர வேண்டும்.

கட்சிகளின் வேலைகள்

பிரிட்டன், பிரான்ஸ் முதலிய தேசங்களில் சட்டசபை நடவடிக்கைகளில் கட்சி ஆட்சி ஒரு விசேஷ அம்சமாகும். சட்டசபைகளில் தனியாகவோ மற்றக் கட்சிகளின் உதவிகொண்டோ பெரும்பான் மைப் பலத்தைப் பெற்ற கட்சிதான் அர சியல் அதிகாரம் முழுவதையும் வகித்துவரும். எதிர்க் கட்சி கள் அவ்வதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டிச் சட்டசபை களிலும், வெளியே தேர்தல் தொகுதிகளிலும் அரசாங்கக் கட்சிக்கு விரோதமாகப் பலத்த பிரசாரம் செய்து அதை அதிகாரப் பதவியிலிருந்து விரட்டிவிட முயற்சி செய்து கொண்டே இருக்கும். இப்பிரசாரச் சண்டையின் பலனுக எதிர்க் கட்சி மிக்க ஆதரவைப் பெறுமாகில் அதுவரையில் அதிகாரம் வகித்துவந்த கட்சியை வெளியேற்றிவிட்டுத் தானே அப்பதவியைக் கைப்பற்றும்.

ஓர் அரசியற் கட்சி அதிகாரப் பதவியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அதன் அங்கத்தினர்களை ஒன்றுசேர்த் தும், அதன் கொள்கைகளைப் பற்றியும் காரியத் திட்டங் களைப் பற்றியும் பொது மக்களிடையே இடைவிடாது பிர சாரம் செய்தும் வரவேண்டும். அப்போதுதான் பொது

மக்களுக்கு அரசியல் விஷயங்களிலும் கட்சி ஏற்பாட்டிலும் அக்கறை இருக்கும். மேலும், தேர்தல்களில் அபேட்சகர் களைப் பொறுக்கி நிறுத்துவதிலும் தேர்தல்களைச் சரிவர நடத்துவதிலும் முக்கியமான பொறுப்பு, கட்சிகளுக்குத் தான் உரியது. இப்பொறுப்பினால் உண்டாகும் சலுகை யின் காரணமாகக் கட்சிகள் அரசியல் திட்டத்தில் குறிக்கப் பெறுத ஒரு முக்கிய அரசியல் உறுப்பாக அமைந்துள்ளன. மகத்தான பிரச்னைகள் ஏற்படும்போது அபிப்பிராய பேதங் களை விளக்கிக்காட்டியும், பொதுமக்கள் அப்பிரச்னைகளின் குணதோஷங்களை நன்கு அறிந்து தேர்தலில் கலந்துகொள் ளும்படி கட்சிகள் உதவி செய்தும் வருகின்றன. அரசியற் கொள்கைகள் உருவாக்கப்படுவதற்கும் பொது மக்களின் ஆதரவு அவைகளுக்கு ஏற்படும் வண்ணம் நாடு முழுவதும் பிரசாரம் நடைபெறுவதற்கும் கட்சி ஸ்தாபனங்களே முக் கியமான சாதனங்களாக இருக்கின்றன.

இங்ஙனமாக ஜனநாயக அரசின் லக்ஷியங்கள் கைகூடு வதற்கு அரசியற் கட்சித் திட்டம் மிகவும் உபயோகமாக இருந்து வருகிறது என்பதில் சந்தேகமில்லை. சுருக்கமாகக் கூறுவோமானால், இப்போதைய பிரதிநிதித்துவ ஜனநாயக ஆட்சியின் வெற்றி பெரும்பான்மையும் கட்சித் திட்டத்தின் வலிமையையும் திறமையையும் ஊக்கத்தையும் பொறுத் திருக்கிறது என்றே சொல்லவேண்டும்.

கட்சி ஆட்சி முறையினால் பல பெரிய கெடுதல்கள் விளைகின்றன. கட்சிக் கட்டுப்பாடுகளினால் பொதுமக்கள் கட்சித் தலைவர்களுக்குக் கீழ்ப்படிந்து அவர்கள் தீர்மானத் தின்படியே பல விஷயங்களில் நடக்க வேண்டி யிருக்கிறது. ஆகையால் ஜன நாயக ஆட்சியின் அபிவிருத்திக்கு அவசிய மாகக் கருதப்படும் சுயேச்சை பொதுமக்க ளுக்கு இல்லாமலே போய்விடுகிறது. மேலும் ஒவ்வொரு கட்சிக்குள்ளும் அபிப்பிராய பேதம் இருக்கவிடுவதில்லை. அங்கத்தினர்களுக்குள் உண்மையான சுதந்திரம் இராது. ஒவ்வொரு கட்சியும் சில தலைவர்களின் சூழ்ச்சிக்கு உட்

கட்சி ஆட்சி முறையின் குறைகள்

பட்ட கோஷ்டியாக மாறிவிடுகிறது. சட்டசபை கூடுவதற்கு முன்பு, ஓர் அரசியற் கட்சியிற் சேர்ந்துள்ள சட்டசபை அங்கத்தினர்கள் ஒன்றுகூடி, ஆலோசனைக்கு வரும் பிரச்னைகளைப்பற்றி விவாதம் செய்து சில முடிவுகளுக்கு வந்துவிட்டால், பின்பு சட்டசபையில் பகிரங்கமாக நடைபெறும் விவாதத்திலோ, ஓட்டுக் கொடுப்பதிலோ கட்சி அங்கத்தினர்கள் ஒரே கட்டுப்பாடாய்க் கடசித் தீர்மானத்தையே ஆதரிக்க வேண்டியவர்களாகி விடுகின்றனர். மீறி நடப்பார்களாயின் கட்சியிலிருந்து நிச்சயமாக நீக்கப்படுவார்கள். இம்முறைக்குக் 'காக்கஸ் ஆட்சி' என்று பெயர். இதன்படி சுதந்திரம் என்பதே இல்லை. தலைவர்கள் இட்டதுதான் சட்டமாக இருக்கிறது.

மேலும், கட்சியை ஆதரிப்பவர்களுக்கு மாத்திரமே பதவியும் உத்தியோகமும் அளிப்பது என்ற முறையினால் விளையும் தீமைகள் மிகக் கொடியவை. சில சுயநலக்காரர்கள் அரசியலில் தலையிட்டுப் பொதுநல நோக்கமே இல்லாமல் பொதுமக்களை ஏமாற்றிச் சுரண்டிவர இடம் தாராளமாக ஏற்பட்டுவிடுகிறது. தவிரவும், எதிர் கட்சித் தலைவர்கள் எவ்வளவு திறமை படைத்தவர்களாயிருப்பினும் அரசாங்க வேலையில் சேர்ந்து உழைக்க முடிவதில்லை. இதனால் அவர்களின் அனுபவமும் திறமையும் தேசத்திற்குப் பயன்படாமலே வீணாய்ப் போகின்றன. அவர்கள் பயனில்லாத சட்டசபை விவாதங்களிலும் கட்சிப் போர்களிலும் காலங் கழிக்கும்படி நேரிடுகிறது.

அரசாங்கக் கட்சியை எப்போதும் எதிர்ப்பது தான் கட்சி ஆட்சியின் தர்மம் ஆகையால், அரசாங்கத்தார் கொள்கையும் திட்டமும் ஒரு விஷயத்தில் தேச நன்மைக்கு எவ்வளவு ஏற்றவையாயிருந்தாலும் எதிர்க்கட்சியினர் எதிர்த்துத்தான் பேசுவார்கள். அவர்கள் எதிர்ப்புக்கு அர்த்தமும் இல்லை; அதனால் யாதொரு பலனும் உண்டாவதில்லை. ஒரே கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் கூடத் தங்கள் அபிப்பிராய பேதங்களை இஷ்டம்போல் சட்டசபையில் வெளியிட இயலுவதில்லை. ஓட்டுப் பலம் பெறுவதற்காக வேண்டி நிறை

வேற்ற முடியாத வாக்குறுதிகளைத் தேர்தல் பிரசார காலத்தில் கட்சித் தலைவர்கள்கூடத் தாராளமாக அள்ளி இறைத்து விடுகிறார்கள்.

ஜனநாயக அரசுகளுக்குள் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் தான் அரசியற் கட்சிகள் திறமையுடனும் அதிக விரிவுடனும் அமைக்கப் பெற்று அபிவிருத்தி அடைந்திருக்கின்றன. வெகு காலமாக அங்கே கட்சிகள் மிக்க அதிகாரம் செலுத்தி வருகின்றன. ஆதலால் கட்சி ஆட்சியின் கெடுதல்கள் அதிகமாகவும் தெளிவாகவும் அங்கே காணப்படுகின்றன. சட்டப்படி ஏற்படுத்தப் படாத அரசியல் ஸ்தாபனங்க ளர்கையால் அமெரிக்க அரசியற் கட்சிகள் நுணுக்கமான ஏற்பாடுகளுடன் பொறுப் பில்லாத முறையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. கட்சிக்கும் கட்சித் தலைவருக்கும் அளவிலாச் செல்வாக்கு ஏற்பட்டிருக்கிறது. கட்சித் தலைவர்கள் மனச் சாட்சியின்படி நடவாதவர்களாய் இருப்பார்களாயின் பொதுமக்களின் நிலைமைக்குக் கொடிய தீமைகள் விளையும். கட்சிகளின் மூலதனத்திற்கு இரகசியமாக ஏராளமான பொருள் உதவி செய்துவரும் தொழில் முதலாளிகளுக்கும், ஆலை முதலாளிகளுக்கும், பெரிய வியாபாரச் சங்கங்களுக்கும் விசேஷச் சலுகைகள் ஏற்பட்டு விடுகின்றன. இவ்விதமான சலுகைகள் பொதுமக்களின் நலத்துக்குப் பெரிதும் ஊறு செய்கின்றன. இத்தகைய ஊழல்களையும் குறைகளையும் ஒருவாறு நீக்கச் சில பிரமுகர்கள் சட்ட மூலமான முயற்சிகளைச் செய்து வருகிறார்கள். கட்சிகளின் மூலநிதிகளைப்பற்றிய விரிவான வாக்குமூலங்களும் உறுதிகளும் தேர்தல்களில் ஏற்படும் வரவு செலவுக் கணக்குகளும் அப்போதைக்கப் போது சர்க்காருக்கு அனுப்பப்படவேண்டும் என்ற நிர்ப்பந்தமும், இதைப் போன்ற மற்ற விதிகளும் அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. என்றாலும் இவையெல்லாம் கட்சி ஏற்பாட்டின் சூழ்ச்சிகளையும் தீமைகளையும் வேரற அழித்துவிடக் கூடியனவாக இல்லை. பொதுமக்களுக்கு

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அனுபவம்

அரசியல் விஷய ஞானமும் உயர்வான பிரஜா நோக்கங்களும் ஏற்பட்டு வளர்ந்து வந்தால் மாத்திரமே கட்சி ஆட்சியின் தீமைகள் ஒருவாறு குறைவுபடும்.

'இரு கட்சி முறை' யினுல்தான் பொறுப்பு வாய்ந்த ஜனநாயக அரசாங்கம் வளர்ந்து ஓங்கி ஆட்சி புரியக் கூடுமென்பது வெகுநாளாக ஒப்புக்கொள்ளப்பட்ட அரசியற் கொள்கைகளுள் ஒன்றாகும். இந்த முறையினுல் வாக்காளர்கள், போட்டியிடும் இரண்டு கட்சிகளின் லக்ஷியங்களையும் காரியத் திட்டங்களையும் அறிந்துகொண்டு ஒருவிதத் தீர்மானத்திற்குச் சுலபமாக வரக் கூடும். வாக்குறுதிகளைப் புறக்கணித்த கட்சியை மறு தேர்தல் காலத்தில் பிரஜைகள் கண்டிக்கக்கூடும். அரசியற் காரியங்களில் ஏற்படும் தவறுகளுக்காக அரசாங்கப் பொறுப்பை வகித்துவரும் கட்சியை எளிதிற் கண்டிப்பதற்கும் இடம் ஏற்படும். பொதுமக்களின் நம்பிக்கையை இழந்துவிட்ட கட்சியைப் பதவியிலிருந்து நீக்கி அரசாங்க அதிகாரத்தைத் தாமதமின்றியும் எவ்வித முரண்பாடின்றியும் எதிர்க்கட்சியினர் கைப்பற்றி நடத்துவது இம்முறையினுல்தான் எளிதில் சாத்தியமாகிறது.

'இருகட்சி ஆட்சி முறை' யின் நன்மை தீமைகள்

ஆனுல் இந்நாள் அரசுகளில் ஏற்படும் பலவிதமான அரசியற் பிரச்னைகளைப்பற்றிய அபிப்பிராயங்கள் எல்லாவற்றையும் இரண்டு கட்சிகளின் அபிப்பிராயங்களாக மாத்திரம் வகுத்துவிடுவது சாத்தியமான விஷயம் அன்று. ஒவ்வொரு பிரச்னையைப் பற்றியும் பலதிறப்பட்ட அபிப்பிராயங்கள் உண்டாகலாம். அவை இரண்டு கட்சிகளுக்குள் அடங்கா. இவ்வாறு பிரச்னைகளும் அபிப்பிராய பேதங்களும் அதிகம் ஆக ஆகக் கட்சிகளும் கோஷ்டிகளும் அதிகரிக்கும். இக் காரணத்தினுல்தான் அநேக தேசங்களில் பல அரசியற் கட்சிகள் தோன்றி, அரசியல் வியவகாரங்களில் தலையிட்டு வருகின்றன. கட்சிகளுக்குள் வீண் போட்டியும் சண்டையும் சச்சரவும் ஏற்பட்டுப் பொதுமக்களின் அபிவிருத்தி

கூட்டுக் கட்சி முறை

தடைப்பட்டு விடுகிறது. சில சமயங்களில் கட்சிகளுக்குள் இரகசியமான ஒப்பந்தங்களும் நடைபெறுகின்றன. அவைகளின் பலனைச் சில அரசியற் கட்சிகள் கூடிச்சேர்ந்து அரசாங்கப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுகின்றன. ஆனல் அவைகள் தேர்தல் காலங்களில் வெளியிட்ட உறுதி மொழிகளின்படியோ அறிக்கைகளின்படியோ நடக்கக்கூடாத நிலைமையில் இருக்க வேண்டி நேர்கின்றன. ஏனெனில், அரசுபுரிவதற்கு மற்றக் கட்சிகளின் ஆதரவு வேண்டியிருப்பதால், எந்தக் கட்சியும் தன் கொள்கைகளையும் காரியத் திட்டங்களையும் வாக்களித்தபடி நிறைவேற்ற முடிவதில்லை. இம்முறையில் அரசியலில் ஏற்படும் தவறுகளுக்குப் பொறுப்பு யாருடையது என்று நிர்ணயிப்பது பொது மக்களுக்கு இயலாத காரியமாகிறது.

மேற்சொல்லிய கெடுதல்களெல்லாம் பிரான்ஸ் தேசத்து அரசியல் நிர்வாக முறையில் தெளிவாகக் காணப்படுகின்றன. அங்கே நடைமுறையில் இருந்துவரும் கூட்டுக் கட்சித் திட்டம் பல விதங்களில் அதிருப்தியை உண்டு பண்ணி யிருக்கிறது. சாதாரணமாக ஒரு மந்திரி சபை சராசரி பதினெரு மாதங்களுக்கு மேல் நீடித்திருந்ததில்லை. ஏனெனில் நிர்வாக விஷயங்களிலும் சட்ட நிர்மாண விஷயத்திலும் பிரெஞ்சு மந்திரிசபை பல சிறு கட்சிகளின் ஆதரவை எதிர்பார்த்து நிற்க வேண்டியிருக்கிறது. சிநேகமா யிருந்த ஒன்று இரண்டு கட்சிகள் எந்தக் காரணத்தினலாவது மந்திரி சபையின் அபிப்பிராயத்திற்கு விரோதமாகப் போய் விட்டால் அரசியல் நிர்வாகம் நடைபெற முடியாது. உடனே சட்ட சபையில் தக்க ஆதரவு பெறவேண்டி, முன்னிருந்த மந்திரி சபை கலைக்கப்பட்டு, மறுபடியும் கட்சி பேரங்கள் நடைபெற்றுப் புதிதாக மந்திரி சபை யொன்று அமைக்கப் பெறும். இதனல் அரசியல் நிர்வாகத்தின் நிலையான தன்மையே குறைந்து போகின்றது; பொறுப்பாட்சியும் நிலைபெறுவதில்லை. சூழ்ச்சிகளுக்கும் தந்திரங்களுக்கும் இடம் ஏற்படுகிறது. இவைகளை யெல்லாம் நாம் கவனித்துப் பார்க்கையில், இரு கட்சித் திட்டமே அதிகத்

திருப்தியை அளிக்கக் கூடியது என்ற முடிவுக்கு வரவேண்டியிருக்கிறது.

சமீப காலத்தில் மற்றொரு கட்சி முறையும் ஏற்பட்டு நடந்து வருகிறது. இதனை 'ஒற்றைக் கட்சி முறை' என்று சொல்லலாம். ஸோவியத் ருஷ்யாவில் 'போல்ஷிவிக்' என்னும் கோஷ்டியினரும் இத்தாலியில் 'பாஸிஸ்டு' என்ற பெயர் கொண்ட கட்சியைச் சேர்ந்தவர்களும், ஜர்மனி தேசத்தில் 'நாஸி'களும் ஒற்றைக் கட்சி ஆட்சி முறையை ஆதரிப்பவர்கள். கட்சித் தலைவர் பதவியும் அரசின் சர்வாதிகாரமும் ஒருவரிடத்தில் கூடியிருப்பதே இம்முறையின் சிறப்பியல்பாகும். சர்வாதிகாரியின் லக்ஷியங்களும் காரியக் கிரமமும் பொதுமக்களின் அபிப்பிராயத்திற்கும் அபிவிருத்திக்கும் ஏற்றவாறு இருக்குமாயின் இம்முறையினால் ஏற்படும் நன்மைகள் மற்ற எந்த முறையினாலும் கைகூடுவன அல்ல. ஆனால் இம்மாதிரியான ஐக்கியமும் ஒற்றுமையும் ஒரு தேசத்தில் ஏற்பட்டாலும் அவை கொஞ்சகாலமே நிலைபெறும். அபிப்பிராயபேதங்கள் உண்டானால் உடனே சர்வாதிகாரி தன் முழுப் பலத்தையும் கொண்டு அவற்றை அடக்கிவிட முயலுகிறான். வாக்குச் சுதந்திரம் பத்திரிகைச் சுதந்திரம் முதலிய உரிமைகள் யாவும் பறந்து போகின்றன. சர்வாதிகாரியின் அபிப்பிராயமே பொதுமக்களின் அபிப்பிராயமாக மதிக்கும்படி அவன் செய்து வருகிறான்.

'ஒற்றைக் கட்சி முறை'

இம்முறை நீண்ட காலம் நடைபெறும் என்று நினைப்பது தவறாகும். அபிப்பிராய பேதங்களை முற்றும் அழித்து விட முடியாது. சர்வாதிகாரியின் பலமும் செல்வாக்கும் வரவரக் குன்றுமே யொழிய வளருவதற்குச் சாத்தியம் இல்லை. நெருக்கடி ஏற்பட்டு அரசியல் நிர்வாகம் தடைப்பட்டுப் போனால் அரசே அதோடு சீர்குலைந்து போகும்.

அத்தியாயம் 19

சர்வதேச நேசமும் உலக அரசும்

அரசின் உற்பத்தி, வளர்ச்சி, அரசாங்கத்தின் அமைப்புகள் முதலிய விஷயங்களைப் பற்றி நாம் இதுவரையில் கவனித்து வந்தோம்; அரசுகளின் உள் நாட்டுப் பிரச்னைகளைப் பரிசீலனை செய்தோம். இந்நாளில் தேசீய அரசுகள் தன்னந் தனியாகத் தங்கள் காரியங்களை நடத்திவர முடிவதில்லை. உலக நாகரிகம் நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. ஜனங்களுடைய கொள்கைகள், தொழில்கள், இலக்கிய நூல்கள் முதலியவை ஒரு தேசத்திலிருந்து வேறொரு தேசத்திற்குப் பரவி அவை எங்கும் ஒரே மாதிரி ஆவதை நாம் அனுபவத்தில் பார்த்து வருகிறோம். இந்நிலையில் எந்த அரசும் மற்ற அரசுகளினால் பாதிக்கப்படாமல் முற்றும் பிரத்தியேகமாக நடந்து வருவது என்பது அசாத்தியமான காரியம். மேலும், ஒவ்வொரு நாடும் தனித்துத் தன்வழியே சென்றால், உலக முன்னேற்றமே தடைப்படும். சில முக்கிய அரசியற் கொள்கைகளையும் கடமைகளையும் நிறைவேற்றுவதிலும், அவரவர்களுடைய பிரஜைகளின் பொருளாதாரச் சலுகைகளையும் உரிமைகளையும் பாதுகாத்து வருவதிலும் அரசுகள் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டிருப்பதனால்தான் மானிட வர்க்கத்தின் நிலைமை மேன்மேலும் விருத்தியடைந்து வருகின்றது.

தேசீய அரசுகளின் ஒத்துழைப்பு அவசியம்

இம்மாதிரியாக உலக அரசுகளில் ஒன்றோடொன்று நெருங்கிய சம்பந்தம் பெற்றிருப்பதனால் அவைகளுக்குள் அபிப்பிராய பேதங்களும் சச்சரவுகளும் உண்டாவது சகஜம். அச்சந்தர்ப்பங்களில் ஒவ்வோர் அரசும் அதன் சர்வாதிகார நிலையை வலியுறுத்திக்கொண்டு நடந்து கொள்ளுமாகில் சமரஸமே ஏற்படாது. ஒன்றுக்கொன்று சண்டைபோட்டு அவ்விஷயங்களைத் தீர்த்துக் கொள்வதென்

பது பைத்தியம் பிடித்தவன் செயலாய்த்தான் முடியும். கொஞ்ச காலமாக ராஜதந்திர நிபுணர்களும், அரசியல் அறிஞர்களும் உலக வழக்குகளைச் சமாதான முறையிலும் நிதேக பாவத்திலும் தீர்த்து வைக்கப் பலவகை முயற்சிகளைச் செய்து வந்திருக்கின்றனர்.

சர்வதேச சங்கம்

எல்லாத் தேசிய அரசுகளின் ஒத்துழைப்பையும் கூட்டுறவையும் அடிப்படையாகக் கொண்டு அமைக்கப் பெற்றுள்ள உலக அரசியல் ஸ்தாபனங்களில் மிகவும் பேர் போனதும் நடைமுறையில் இருந்து வருவதுமான ஸ்தாபனம் 'சர்வதேச சங்கம்' என்பதே. தனி அரசுகள் எல்லாவற்றையும் உடன்படிக்கைகளின் மூலம் ஒருவாறு கட்டுப்படுத்தி, சர்வதேச ஒற்றுமையை ஏற்படுத்துவதுதான் இதன்நோக்கம். 1918-ஆம் வருஷம் மகாயுத்தம் முடிந்து பல உடன்படிக்கைகள் நிறைவேறுகையில் இச்சங்கத்தின் அமைப்பும் நிர்ணயிக்கப் பெற்றுச் சமாதான உடன்படிக்கைகளின் ஒரு பகுதியாகச் சேர்க்கப் பெற்றது. சர்வ தேச சங்கத்தின் ஒப்பந்தத்தில் முதல் முதல் கையெழுத்து இட்ட நாடுகள் முப்பத்திரண்டு. ஜர்மனி தேசத்தைத் தவிர மற்ற எல்லாத் தேசங்களும் அதில் சேரக் கூடும். 1926-ஆம் வருஷத்தில் ஜர்மனியும் சேர்ந்து கொள்ள அனுமதி அளிக்கப்பட்டது. சுதந்திரம்பெற்ற 'டொமினியன்'களும், குடியேற்ற நாடுகளுங்கூட அதன் அங்கங்கள் ஆயின. சங்கத்தில் சேர விரும்பும் அரசுகள் மனுச் செய்து கொள்ள வேண்டும். மனுத்தேதியில் சங்கத்திலுள்ள அங்கத்தினர்களில் மூன்றில் இரண்டு பங்கு அரசுகள் அம் மனுவை அங்கீகரித்தால் மேற்படி அரசுகள் பூர்ண அங்கங்களாகக் கருதப்படும். இப்போது சுமார் அறுபது நாடுகள் சர்வதேச சங்கத்தில் சேர்ந்திருக்கின்றன. உலக ஜனத்தொகையில் முக்கால் பாகமுள்ள அரசுகள் சர்வதேச சங்கத்தில் சேர்ந்திருக்கின்றன. அமெரிக்க ஐக்கிய நாடுகள் முதலிலிருந்தே சேரவில்லை. சமீப காலத்தில் ஜப்பான், இத்தாலி, ஜர்மனி, ஸோவியத் ருஷ்யா முதலிய வல்லரசுகள் இந்தச் சங்கத்திலிருந்து விலகிவிட்டன.

ஆதியில் சர்வதேச சங்கத்தை ஜினிவா நகரில் ஸ்தாபித்தவர்கள் அதை ஓர் உண்மையான உலக அரசியல் சமஷ்டியாகச் செய்ய வேண்டும் என்ற நம்பிக்கையோடு இருந்தனர். ஆனால் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியல் திட்டம் அத்தேசம் சங்கத்தில் சேருவதற்கு இடம் அளிக்கவில்லை. 1932-ல் துருக்கியும் 1934-ல் ஸோவியத் ருஷ்யாவும் சங்கத்தில் சேர்ந்தபோது, உலக சமஷ்டி லக்ஷியம் ஏறக்குறையக்கை கூடினதாகப் பலரும் கருதினர். ஆனால் திடீரென்று ஜப்பானும் ஜர்மனியும் சர்வ தேச சங்கம் தங்களுக்கு விரோதமாக இருப்பதாகக் கோபங்கொண்டு, ஒப்பந்தத்தின் ஷரத்துப்படி இரண்டு வருஷ 'நோட்டீஸ்' கொடுத்துவிட்டுப் பின் விலகின. இதுபோலவே வேறு சில அரசுகளும் செய்தன.

சர்வதேச சங்கத்தின் ஒப்பந்தப் பத்திரத்தின் ஷரத்துக்களை மாற்ற வேண்டுமானால் சங்கத்தின் கவுன்ஸிலுடைய முழுச் சம்மதமும் சங்கத்தின் அஸெம்ப்ளியில் பெருவாரிப் பலமும் இருக்கவேண்டும். ஒரு திருத்தத்தை அங்கீகரிக்காத அரசு சங்கத்திலிருந்து நீங்கி விட்டதாகக் கருதப்படும். ஒப்பந்தத்தின் ஷரத்தை மீறி நடக்கும் அரசுகளை நீக்கிவிடுவதற்கு வேண்டிய விதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சங்கத்தின் உறுப்புகள் பல விஷயங்களில் ஒரு சமஷ்டியின் உறுப்புக்களைப் போலவே அமைந்திருக்கின்றன. அவற்றில் அஸெம்ப்ளி, கவுன்ஸில், நிர்வாகக் காரியாலயம் இவை முக்கியமானவை.

சர்வதேச சங்கத்தின் ஒப்பந்தத்தில் மாறுதல்கள்

அஸெம்ப்ளி தான் சங்கத்தின் பார்லிமெண்டு. அது ஒவ்வொரு வருஷமும் சாதாரணமாகச் செப்டெம்பர் மாதத்தில் கூடும். எல்லா அங்கத்தினர்களுக்கும் அதில சம உரிமையுண்டு. ஒவ்வோர் அரசும் மூன்று பேருக்கு மேற்படாத பிரதானப் பிரதிநிதிகளை அனுப்பலாம். சங்கத்தின் விஷயங்களைப் பொதுவாகக் கண்காணித்து நடத்தும் ஸ்தாபனம் அஸெம்ப்ளி

சர்வதேச சங்கத்தின் அரசியல் உறுப்புகள்

1. அஸெம்ப்ளியின் அமைப்பும் வேலைகளும்

தான். வரவு செலவை அதுதான் நிர்வகிக்கிறது. புது அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொள்வதும் அதன் வேலை தான். இன்னும், சங்கத்தின் அதிகாரத்திற்கு உட்பட்ட எந்தக் காரியத்தையும், உலக சமாதானத்தைப் பாதிக்கும் எந்த விஷயத்தையும் அஸெம்ப்ளிதான் கவனிக்கவேண்டும். உத்தியோக முறையில் உபயோகப்படுத்தப் பெறும் பாஷைகள் ஆங்கிலமும் பிரஞ்சும் ஆகும். கூட்டங்களில் நடைபெறும் பிரசங்கங்கள் வேண்டுமானால் மொழிபெயர்த்துச் சொல்லப்படும்.

2. கவுன்ஸிலின் அமைப்பும் வேலைகளும்

கவுன்ஸில் என்பது சங்கத்தின் நிர்வாக சபை. வருஷத்தில் குறைந்தது நான்கு தடவைகளாவது அது கூடும். பிரிட்டன், பிரான்ஸ் முதலிய முக்கிய அரசுகளுக்கு அதில் நிரந்தரமாக ஒரு ஸ்தானம் உண்டு. மொத்தம் பதினாறு ஸ்தானங்களில், பத்து ஸ்தானங்களுக்கு மற்ற அரசுகளிலிருந்து பிரதிநிதிகளை அஸெம்ப்ளி தேர்ந்தெடுக்கும். ஆனால் கவுன்ஸிலில் பிரதிநிதி இல்லாத நாட்டுக்கு அதன் சொந்த விஷயங்களைப்பற்றி நடக்கும் விவாதங்களில் கலந்துகொள்ள உரிமையுண்டு. கவுன்ஸில் அதற்கு அனுப்பப் பெற்ற வேலைகளை ஒரு சமரஸ போர்டு போலவும் விசாரணைக் கமிஷனைகளும் இருந்துகொண்டு செய்து முடிக்கும். அதன் முக்கிய வேலைகள் பின்வருவனவாம்: பல சர்வ தேசக் கமிஷன்களை நியமிப்பதும் கண்காணிப்பதும்; சில அரசுகளின் நிர்வாகத்திற்குட்பட்ட நாடுகளின் ஆட்சியைப்பற்றிய அறிக்கைகளைப் பரிசீலனை செய்வது; சங்கத்தின் ஒப்பந்தத்தின்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமாறு அரசுகளை நிர்ப்பந்திப்பது. இவைகளைத் தவிர, சங்கத்தின் அதிகாரத்துக்குள் அடங்கிய எவ்வித விஷயத்திலும் கவுன்ஸில் தலையிடக்கூடும்.

சங்கத்தின் நிர்வாகக் காரியாலயத்தில்தான் சங்கத்தின் காரியக்கிரம வேலை நடைபெறுகிறது. இதைச் 'சர்வ தேச ஸிவில் ஸர்விஸ்' என்றுகூடச் சொல்வதுண்டு. இதன் தலைவர் 'ஸெக்ரெடரீ ஜெனரல்' என்பவர். அவர், அஸெம்ப்ளியின் அனுமதியுடன் கவுன்ஸிலால் நியமிக்கப்பெறுபவர். அவ

ருடைய உதவி உத்தியோகஸ்தர்கள் எல்லோரும் அவரால் நியமிக்கப்படுகிறார்கள்; அவருக்கே பதில் சொல்லவேண்டியவர்கள். காரியாலய அங்கத்தினர் எல்லோருக்கும் ராஜ தந்திரிகளின் உரிமைகள் உண்டு. அவர்கள் சங்கத்தின் மேலதிகாரிகளுடைய கட்டளைப்படி நடக்கக் கட்டுப்பட்டவர்களே யொழிய, அவரவர்களின் சர்க்கார்களுக்குக் கீழ்ப்படிய வேண்டியவர்கள் அல்லர்.

3. சர்வதேச சங்கத்தின் நிர்வாகக் காரியாலய அமைப்பும் அலுவல்களும்

அதன் வேலைகள் பின் வருமாறு.—அஸெம்ப்ளியிலும் கவுன்ஸிலிலும் சர்ச்சைக்கு வரும் விஷயங்களைப்பற்றி விவரங்கள் சேகரித்தல்; சங்கத்தின் கமிட்டிகளின் நிர்வாக வேலைகளில் உதவியளித்தல்; உடன்படிக்கைகளைப் பதிவு செய்தல்; குறிப்புப் புத்தகங்களையும் தஸ்தவேஜுகளையும் சரியாய் வைத்திருத்தல்; சங்க நடவடிக்கைகளைப்பற்றி அங்கத்தினர்களுக்கு அறிக்கை விடுத்தல்; எவ்வாச் சர்வதேசப் பிரச்னைகளைப் பற்றியும் கிடைக்கும் சமாசாரங்களைப் பிரசுரித்துப் பரவச் செய்தல்.

சர்வதேச சங்கத்துடன் நெருங்கி ஒத்துழைக்கும் மற்றொரு தனிமையான ஸ்தாபனம் இருக்கிறது. அதற்குச் **'சர்வ தேசத் தொழிற்சங்க அமைப்பு'** என்று பெயர். அது 'ஐ. எல். ஓ.' என்று சுருக்கி வழங்கப் பெறும். அதன் நோக்கம் உலகம் முழுதும் தொழிலாளர் நிலைமையை அபிவிருத்தி செய்வதுதான். ஒவ்வொரு வருஷமும் அதன் பொதுக் கூட்டம் நடைபெறும். அக்கூட்டத்தில் சர்வ தேச சங்கத்தின் அங்கத்தினர் யாவரும் கலந்து கொள்வார்கள். ஒவ்வொரு தேசத்திற்கும் நான்கு பிரதிநிதிகள் உண்டு. இந்நால்வரில் இரண்டுபேர் அத் தேச அரசாங்கத்தின் பிரதிநிதிகள்; ஒருவர் முதலாளிகளின் பிரதிநிதி, மற்றொருவர் தொழிலாளர்களின் பிரதிநிதி. இச்சங்கத்தின் நிர்வாக வேலையை நடத்திவர நிரந்தரமான காரியாலயம் ஒன்று இருக்கிறது. சர்க்கார்களின் பிரதிநிதிகள் பதினாறு பேர்;

சர்வதேசத் தொழிற் சங்க அமைப்பு

முதலாளிகளின் பிரதிநிதிகள் எட்டுப் பேர்; தொழிலாளர்களின் பிரதிநிதிகள் எட்டுப் பேர். ஆக மொத்தம் முப்பத்திரண்டுபேர் அடங்கிய ஒரு கண்காணிப்புச் சபையின்கீழ் 'ஐ. எல். ஓ.' காரியாலயம் வேலை செய்கிறது. சர்வதேசத் தொழில்களின் நிலைமையைப் பற்றியும் தொழிலாளர்களின் அபிவிருத்தியைப் பற்றியும் விதிகளையும் ஒப்பந்தங்களையும் தயாரித்து, அந்த அந்த அரசுகளுக்கு அனுப்பி அனுஷ்டானத்திற்குக் கொண்டு வரும்படி இது செய்து வருகிறது. தொழிலாளர்களின் தேக சௌக்கிய நிலைமை, வேலை நேரம், அந்நிய நாட்டுக் குடியேற்றம் முதலான பல சிக்கலான பிரச்னைகளைத் திறமையுடன் தீர்த்துத் திருப்திகரமாய் முடிவு செய்வதில் 'ஐ. எல். ஓ.' தோல்வி யடைந்திருக்கிறது.

சர்வதேச சங்கத்துடன் நெருங்கிய தொடர்புகொண்ட மற்றொரு ஸ்தாபனம், '**நிரந்தரமான சர்வதேச நியாயசபை**' யாகும். இது சங்கத்தின் ஓர் உறுப்பாக இல்லாவிடினும், பலவிதங்களில் அதன் ஆதரவை நாடியிருக்கிறது. இது சர்வதேச சங்க ஒப்பந்தத்தின் ஷரத்துப்படி 1921-ஆம் வருஷம் ஸ்தாபிக்கப் பெற்று வேலை செய்ய ஆரம்பித்தது. முதலில் பதினொரு நீதிபதிகளும் நான்கு உதவி நீதிபதிகளும் இருந்தார்கள். 1936-ஆம் வருஷம் முதல் பதினைந்து நீதிபதிகளும் இதில் இருக்கிறார்கள். அவர்களின் உத்தியோக காலம் ஒன்பது வருஷம். சிறந்த ஒழுக்கமும் திறமையும் வாய்ந்து நாட்டில் முதல்தர ஸ்தானங்களை வகிக்கத் தகுதியுள்ளவர்களும், சர்வதேசச் சட்டத்தில் திறமை பெற்றவர்களுமே நீதிபதி ஸ்தானத்திற்கு நியமிக்கப் பெறுகிறார்கள். நீதிபதி ஸ்தானத்திற்குரியவர்களின் ஜாபிதா ஒன்று 'ஹேக் சமரஸக் கோர்ட்டு' தயார் செய்து அனுப்பும். சங்கத்தின் அஸெம்ப்ளியும் கவுன்ஸிலும் தனித் தனியே கூடி அந்த ஜாபிதாவிலிருந்து நீதிபதிகளைத் தேர்ந்தெடுக்கும்.

சர்வதேச நியாய சபை: அமைப்பு

சர்வ தேச உடன்படிக்கைகள், சர்வ தேசச் சட்டம் இவைகளைப்பற்றிய வியவகாரங்கள், சர்வ தேசப் பொறுப்புகளை நிறைவேற்றுத குற்றத்திற்கு ஏற்படும் நஷ்ட ஈட்டின்

விகிதம் முதலிய சட்ட சம்பந்தமான விஷயங்களை விசாரித்துத் தீர்ப்பு அளித்தல் முதலானவை இந்த நீதிஸ்தாபனத்தின் வேலைகளாம். சர்வ தேச சங்கத்தில் சேர்ந்த அரசுகள்தாம் கட்சிக்காரர்களாக இருக்கக்கூடும். சுதந்திரம் பெற்ற குடியேற்ற நாடுகளுக்கும் இந்த உரிமையுண்டு. விசேஷ உடன்படிக்கைகள் மூலம் தீர்ப்புக்கு அனுப்பும் விஷயங்களில் சர்வதேச நீதிஸ்தாபனத்திற்குச் சுயமாகத் தீர்ப்பளிக்கும் அதிகாரம் உண்டு. இன்ன இன்ன விஷயங்கள் கட்டாயம் அந்த நீதிமன்றத்தினால்தான் விசாரிக்கப்பட வேண்டும் என்று சங்கத்தின் உடன்படிக்கையில் குறிக்கப்பட்டிருந்தால், அவைகளில் அதற்குக் கட்டாய அதிகாரம் உண்டு. இவைகளைத் தவிர, அஸெம்ப்ளி, கவுன்ஸில், 'ஐ. எல். ஓ.' அனுப்பும் வியவகார விஷயங்களில் முன்யோசனை கூறுவதும் அதன் வேலைகளில் ஒன்றாகும்.

சர்வதேச மகா சங்கம், சர்வதேச நீதிஸ்தாபனம் சர்வதேசத் தொழிற் சங்கம் என்னும் மூன்றும் அடங்கிய 'சங்க முறை'யால், காலக்கிரமத்தில் உலக அரசுகளின் சமஷ்டி ஏற்படுமா, அல்லது உலக அரசியல் உறவு வேறு முறையில் அமையப் பெறுமா என்னும் கேள்விக்குச் சரியான பதில் அளிப்பது சுலபமான காரியமன்று.

சங்க முறையும் உலகஅரசுகளின் சமஷ்டியும்

எதிர்காலத்தில் பூர்ண நம்பிக்கையுள்ள பலர், சர்வதேச நீதிஸ்தாபனத்திற்கு ஏற்பட்டிருக்கும் செல்வாக்கையும் சர்வ தேசத் தொழிற் சங்கத்தின் முயற்சிகளின் பலனாக உலகத் தொழிலாளர்களுக்குக் கிடைத்திருக்கும் நலன்களையும் சுட்டிக் காட்டி, 'சங்க முறை'தான் உலக அரசுகளின் சமஷ்டி லக்ஷியம் கைகூடுவதற்குப் பெரிதும் ஏற்றது என்று உறுதியாய்ச் சொல்லுகிறார்கள். அவர்கள் கூறுவது ஒருவிதத்தில் சரியென்று நாமும் ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். சர்வ தேச மகா சங்கமும் அநேக விஷயங்களில் உலக ஒற்றுமை ஏற்படக்கூடிய முறையில் வேலை செய்து வந்திருக்கிறது. ஆனால், சமீப காலத்தில் ஏதியோப்பியா, சீனம், ஸ்பெயின் முதலிய நாடுகளில் உண்டான கலவரங்

களில் அது யாதொன்றும் செய்ய முடியாமற் போனதால் அதனிடம் இருந்த நம்பிக்கை குறைந்துவிட்டது. 'உலக அரசு ஸ்தாபனம்' என்று கருதுவதற்குத் தக்க சக்தி அதற்கு ஏற்படவில்லை. தரைப்படை, கடற்படை, போலீஸ்படை ஒன்றும் அதற்கு இல்லை. ஆதிபத்தியத்திற்கு வேண்டிய அதிகாரமும் அதனிடம் இல்லை. இவ்விதக் குறைகளினால் சர்வ தேச சங்கம் மறைந்துவிடுமா, இப்போது நடக்கும் யுத்தத்திற்குப் பிறகு புனருத்தாரணம் பெறுமா என்பது இனித் தெரியவேண்டிய விஷயமாகும். 'எல்லோரும் ஒரு குலம்' என்ற எண்ணத்தில் நம்பிக்கையுடையவர்கள் குறுகிய தேசீயக் கொள்கைகளையும் பரஸ்பர அவநம்பிக்கைகளையும் தவிர்த்து இப்பொழுதுமுதல் கூட்டுறவு கொண்டு உழைத்தார்களானால் அடுத்த தலைமுறையிலாவது உலக சமஷ்டி தோன்றலாம்.

குறுகிய மனப்பான்மையும், குறுகிய நோக்கமும் கொண்டவன், 'இவன் என் தேசத்தான், அவன் வேறு நாட்டான்' என்று எண்ணுகிறான். ஆனால் உத்தம உள்ளம் படைத்தவன் 'உலகமே என் தேசம்' என்று கருதுகிறான்.

இந்நூலில் வந்துள்ள அரசியல் சம்பந்தமான சொற்களும் பிறவும்

I

அகிலலோக அரசு - World State.
அதிகாரப் பாகுபாட்டுக் கொள்கை - Theory of Separation of Powers.
அதிகாரம் - Authority.
அபிப்பிராயங்கூறும் தீர்ப்பு - Declaratory Judgment.
அபேட்சகர் - Candidate.
அபேதவாத அரசு - Socialist State.
அபேதவாதம் - Socialism.
அரசாங்க ஒப்பந்தம் - Governmental Compact.
அரசாங்கம் - Government.
அரசியல் - Politics.
அரசியல் அமைப்பு - Political Organisation.
அரசியல் அமைப்புக் கூட்டம் - Constitutional Convention.
அரசியல் உணர்ச்சி - Political Consciousness.
அரசியல் உரிமை - Political Right.
அரசியல் சுயேச்சை - Political Liberty.
அரசியல் திட்டம் - Political Constitution.
அரசியல் நிபுணர் - Political Expert.
அரசியல் ஸ்தாபனம் - Political Institution.
அரசியற் கட்சி - Political Party.
அரசியற் கூட்டுறவு - Political Co-operation.
அரசு - State.
அராஜகம் - Anarchy.
ஆட்சிமுறைச் சட்டம் - Administrative Law.
ஆதிபத்தியம் - Sovereignty.
ஆதி மனித ஆராய்ச்சி நூல் - Anthropology.
ஆரம்பக் கல்வி - Elementary Education.
ஆலை - Factory or Mill.
ஆலோசனைச் சபை - Advisory Board.
இஞ்சங்ஷன் - Injunction.
இரகசிய ஓட்டுச் சீட்டு முறை - Secret Voting System.
இரகசிய பாலட்டு முறை - Secret Ballot System.
இரட்டையாட்சி - Diarchy.
இரண்டாம் ஓட்டு - Second Vote.
இரண்டாவது சபை - Second Chamber.
இருகட்சி முறை - Two-Party System.
உடன்படிக்கை - Treaty.
உத்தரவாதம் - Responsibility.
உத்தியோகஸ்தர் ஆட்சி - Bureaucracy.
உதவிச் சட்ட நிரூபணம் - Delegated Legislation.
உபகாரச் சம்பளம் - Pension.
உபவிதி - Bye-Law.
உம்பளிக்கை ஆட்சி - Feudalism.
உயர்தர நீதிமன்றம் - High Court.
உரிமை - Right.
உரிமைச் சாஸனம் - Bill of Rights.
உல்லாசத் தோட்டம் - Park.
உலக அரசு ஸ்தாபனம் - World State Institution.
உலக சமஷ்டி - World Federation.
உள்காட்டுப் பிரச்னை - Internal Problem.
உறவின் முறை - Kinship.
ஊசிகுத்துதல் - Injection.
எக்குயிட்டி வழக்கு - Equity Case.
எதிர்க்கட்சி - Opposition Party.

எழுத்தறிவு பெற்றவர் - Literate.
ஏகாயக ஆட்சி - Autocratic Rule.
ஏகாதிபத்தியம் - Autocracy.
ஐக்கிய ஆட்சி - Unitary Government.
ஒரு தலைப்பட்ட சர்வாதிகாரம் - Absolute Sovereignty.
ஒழுக்க நூல் - Ethics.
ஒழுங்கு - Order.
ஒற்றைக்கட்சி முறை - One Party System.
ஒற்றைச்சபை அமைப்பு - Single Chamber Organisation.
ஒற்றைத் தொகுதி - Single Member Constituency.
கட்சி ஆட்சி - Party Government.
கட்சி உணர்ச்சி - Party Spirit.
கட்டாய ஆரம்பக் கல்வி - Compulsory Elementary Education.
கட்டாய விவாத முடிவு - Closure.
கட்டுப்பாடற்ற போட்டி - Uncontrolled Competition.
கண்காணிப்புச் சபை - Supervising Chamber.
கமிட்டி ஏற்பாடு - Committee System.
கல்வி ஸ்தாபனம் - Educational Institution.
காக்கஸ் ஆட்சி - Caucus Rule.
கிராம சய ஆட்சி - Rural Self Government.
கிளைச் சட்டம் - Bye-Law.
கீழ்ச் சபை - Lower Chamber.
குடிமக்கள் - Subjects.
குடியரசு - Republic.
குடியரசுக் கட்சி - Republican Party.
குடியாட்சி - Democracy.
குடியேற்ற நாடு - Colony.
குவியல் ஓட்டு முறை - Cumulative Vote System.
குழு - Tribe.
குறைந்த ஓட்டு - Limited Vote.
கூட்டு ஆட்சி - Coalition Government.
கூட்டுக் கட்சி - Coalition Party.
கூட்டுக் கமிட்டி - Joint Committee.
கூட்டுத் தொகுதி - Joint Electorate.
கூட்டு நிர்வாகம் - Plural Executive.
கூட்டு மந்திரி சபை - Coalition Ministry.
கூலி நிர்ணயம் - Fixing of Wages.
கொடுங்கோலாட்சி - Despotism.
கோனாட்சி - Monarchy.
சகோதரத்துவம் - Fraternity.
சங்கமுறை - League System.
சட்ட ஆட்சி முறை - Rule of Law.
சட்டசபை - Legislature.
சட்ட நிர்ப்பந்தம் - Legal Restriction.
சட்ட நிரூபணம் - Legislation.
சட்ட பூர்வமான சர்வாதிகாரம் - Legal Sovereignty.
சட்டம் - Law.
சம்பிரதாயம் - Convention.
சம உரிமை வாதி - Communist.
சமத்துவம் - Equality.
சமதர்மக் கொள்கை - Communism.
சமய ஸ்தாபனங்கள் - Religious Institutions.
சமரஸ போர்டு - Conciliation Board.
சமஷ்டி - Federation.
சமஷ்டி ஏற்பாடு - Federalism.
சமுதாயம் - Community.
சமூக ஒப்பந்தக் கொள்கை - Social Contract Theory.
சமூக சாஸ்திரம் - Sociology.
சமூக நிர்ப்பந்தம் - Social Restriction.
சமூகம் - Society.
சர்வதேசச் சட்டம் - International Law.
சர்வதேச சங்கம் - League of Nations.
சர்வதேசத் தொழிற் சங்க அமைப்பு - International Labour Organisation.
சர்வதேச நியாய சபை - International Court of Justice.
சர்வாதிகாரம் - Dictatorship.

சர்வாதிகாரம் (தனி ஆணை)- Absolute Sovereignty.
சர்வாதிகாரி - Dictator.
சரித்திரக் கொள்கை - Historical Theory.
சால்பு - Culture.
சிக்கனம் - Economy.
சில்லோராட்சி - Oligarchy.
சிறுபான்மையோர் - Minorities.
சிறுபான்மை வகுப்பினர் - Minority Community.
சிறுபான்மை ஜாதியார் - Minority Races.
சிற்சிருத்தக் கட்சி - Liberal Party.
சுகாதாரம் - Public Health.
சுங்கம் - Customs.
சுதந்திரம் - Independence.
சுயஆட்சி - Self-Government.
சுயநிர்ணய உரிமை - Right of Self-Determination.
சுயேச்சை - Freedom.
சுயேச்சை யுணர்ச்சி - Spirit of Independence.
செங்கோலாட்சி - Benevolent Monarchy.
சொத்துரிமை - Property Right.
தகுதி ஓட்டு - Weighted Vote.
தத்துவ சாஸ்திரி - Philosopher.
தந்தைவழி - Patriarchy.
தலைவரின் நிர்வாகம் - Presidential Executive.
தனி உடமைக் கொள்கை - Individualism.
தனி நிர்வாகம் - Single Executive.
தனி மனிதன் - Individual.
தாய்வழி - Matriarchy.
தார்மிக சக்தி - Moral Power.
தீவிரவாதி - Radical.
தெய்வ சிருஷ்டிக் கொள்கை - Theory of Divine Origin.
தேசாபிமானம் - Patriotism.
தேசிய அரசு - National State.
தேசிய சுயேச்சை - National Independence.
தேசியப் பிரதிநிதித்துவம் - National Representation.
தேசிய ஜாதி - Nation.
தேசிய ஜாதிப்பற்று - Nationalism.
தேர்தல் - Election.
தேர்தல் தொகுதி - Constituency.
தொழில் பிரதிநிதித்துவ முறை - Functional Representation.
தொழில் வாரித் தொகுதி - Functional Constituency.
தொழில் விவாத நீதிமன்றம் - Labour Dispute Court.
தொழிற்கட்சி - Labour Party.
தொழிற் சங்கம் - Trade Union.
தொழிற்சாலை ஒழுங்கு முறை - Factory Regulation.
நகர அரசு - City State.
நடுத்தர வாக்காளர் - Intermediate Voters.
நஷ்டஈடு - Compensation for Loss.
நாடு - Country.
நாஸி - Nazi.
நிதி நிர்வாகம் - Financial Administration.
நிபுணர் - Expert.
நிர்வாக அரசாங்கம் - Executive Government.
நிர்வாக இலாகா - Administrative Department.
நிர்வாகம் - Executive.
நிலச்சுவான்தார் - Land owner.
நிறையெண் - Quota.
நீதி இலாகா - Judicial Department.
நீதிபதி - Judge.
நீதி பரிபாலன முறை - Judicial Administrative System.
நீதி நிர்வாகக் கமிட்டி - Judicial Administrative Committee.
நீதி நிர்வாகம் - Administration of Justice.
நீதி ஸ்தாபனம் - Judiciary.
நெளிந்துகொடுக்கும் திட்டம் - Flexible Constitution.
நேர்முகமான தேர்தல் - Direct Election.

நேர்முகமான ஜனநாயக ஆட்சி - Direct Democracy.
பகிரங்கப் பரீக்ஷை - Public Examination.
பயிற்சி ஸ்தலம் - Training Ground.
பரிணமக் கொள்கை - Theory of Evolution.
பன்மை ஓட்டு - Plural Vote.
பாமர மக்கள் - Masses.
பார்லிமெண்டரி நிர்வாகம் - Parliamentary Administration.
பரம்பரைப்பட்ட ஆட்சி - Feudal Government.
பாஸிஸ்டு - Fascist.
பிரகடனச் சட்டம் - Proclamation Law.
பிரசங்க மேடை - Public Platform.
பிரதிநிதி ஆட்சி முறை - Representative Government.
பிரதிநிதித்துவ சபை - Representative Assembly.
பிரஜா உரிமை - Citizenship right.
பிரஜை - Citizen.
பிரஜைத் தன்மை - Citizenship.
பிரேரணை - Proposal.
பிற்போக்குக் கட்சியாளர் - Reactionaries.
பேரரசு - Empire.
பொது ஊழியம் - Public Service.
பொதுத் தேர்தல் தொகுதி - General Electorate.
பொது நிர்வாகம் - Public Administration.
பொது மக்களின் பொறுப்பு - Public Responsibility.
பொதுவான கல்வித் திறமை - General qualification.
பொதுவுடைமைக் கொள்கை - Communism.
பொதுஜன அபிப்பிராயம் - Public Opinion.
பொதுஜன ஊழியர் - Public Servant.
பொதுஜனச் சட்டம் இயற்றும் முறை - Initiative.
பொதுஜன வாக்குப் பெறும் முறை - Referendum.
பொருளாதார அமைப்பு - Economic Organisation.
பொருளாதார சாஸ்திரம் - Economics.
பொருளாதாரப் பொதுவுடைமை - Economic Socialism.
பொறுக்குக் கூட்டம் - Committee.
பொறுப்பாட்சி - Responsible Government.
போட்டிக் கொள்கை - Theory of Competition.
போல்ஷிவிக் - Bolshevik.
மசோதா - Bill.
மத்திய அதிகாரம் - Central Authority.
மத்திய நீதிமன்றம் - Central Court of Justice.
மத்தியஸ்த மன்றம் - Arbitration Court.
மத்திய ஸ்தாபனம் - Central Institution.
மத ஸ்தாபனங்கள் - Religious Institutions.
மந்திரி சபை - Ministry.
மறைமுகத் தேர்தல் - Indirect Election.
மாகாண சுயஆட்சி - Provincial Autonomy.
மாற்று ஒற்றை ஓட்டு - Single Transferable Vote.
மாற்று ஓட்டு - Transferable Vote.
மாறுதல் வேண்டாத கட்சி - Conservative Party.
மானியம் - Grant.
மிதவாதி - Moderate.
மிருகபலம் - Brute force.
முட்டுக்கட்டை - Deadlock.
முடியரசு - Monarchy.
முதலாளி - Capitalist.
முதற் சபை - First Chamber.
மூலப் பொருள்கள் - Raw Materials.
மூலாதார உரிமை - Fundamental Right.
மேற்சபை - Upper Chamber.

யதேச்சாதிகாரம் - Despotism.
யதேச்சாதிகாரி - Despot.
யூதர் - Jews.
ராணுவ ஊழியம் - Military Service.
ராஜிநாமா - Resignation.
ராஜிய சர்வாதிகாரம் - Political Sovereignty.
ரிட்டு - Writ.
ரீஜியனலிஸம் - Regionalism.
லிஸ்டு முறை - List System.
வகுப்புவாரித் தனித்தொகுதி - Separate Communal Electorate.
வம்சம் - Clan.
வயது அளவின் நிர்ணயம் - Fixing of Age Limit.
வரையறுக்கப்பட்ட முடியாட்சி - Limited Monarchy.
வரையறையற்ற முடியாட்சி - Absolute Monarchy.
வல்லரசு - Power State.
வலிமைக் கொள்கை - Theory of Force.
வாக்காளர் - Voters.
வாக்குச் சுதந்திரம் - Freedom of Speech.
வாக்குரிமை - Suffrage.
வாரிசுரிமை - Hereditary Right.
விகிதாசார ஒற்றை ஓட்டு மாற்று முறை - Proportional Representation by single Transferable Vote.
விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை - Proportional Representative System.
விகிதாசாரம் - Proportion.
விசாரணைக் கமிஷன் - Enquiry Commission.
வியாபாரச் சங்கம் - Trade Association.
ஜனசம்மதம் பெற்ற சர்வாதிகாரம் - Popular Sovereignty.
ஜனப் பிரதிநிதி சபை - Representative Assembly.
ஜனநாயகக் கட்சி - Democratic Party.
ஜனநாயகம் - Democracy.
ஜனநாயக முடியரசு - Constitutional Monarchy.
ஜனநாயக ஸமஸ்த வாதம் - Democratic Totalitarianism.
ஜாபிதா முறை - List System.
ஷரத்து - Provision.
ஸ்தல சுய ஆட்சி - Local self-Government.
ஸ்தலத் தொகுதிப் பிரதிநிதி முறை - Territorial Representation.
ஸ்தல ஸ்தாபன ஆட்சி - Local Self-Government.
ஸம்ரக்ஷண சங்கம் - Welfare Association.
ஸமஸ்தவாத அரசு - Totalitarian State.
ஸாம்ராஜ்யம் - Commonwealth Empire.
ஸிவில் உரிமை - Civil Right.
ஸிவில் வேலை - Civil Service.
ஸெக்ரெடரி ஜெனரல் - Secretary General.
ஹேக் சமரஸக் கோர்ட்டு - Hague International Arbitrat Court.
க்ஷேம நிதி - Welfare Fund.

GLOSSARY

II

Absolute Monarchy - வரையறை யற்ற முடியாட்சி.

Absolute Sovereignty - ஒரு தலைப் பட்ட சர்வாதிகாரம், சர்வாதிகாரம் (தனி ஆணை).

Administration of Justice - நீதி விநியோகம்.

Administrative Department - நிர்வாக இலாகா.

Administrative Law - ஆட்சி முறைச் சட்டம்.

Advisory Board - ஆலோசனைச் சபை.

Anarchy - அராஜகம்.

Anthropology - ஆதிமனித ஆராய்ச்சி நூல்.

Arbitration Court - மத்தியஸ்த மன்றம்.

Authority - அதிகாரம்.

Autocracy - ஏகாதிபத்தியம்.

Autocratic Rule - ஏகநாயக ஆட்சி.

Benevolent Monarchy - செங்கோலாட்சி.

Bill - மசோதா.

Bill of Rights - உரிமைச் சாஸனம்.

Bolshevik - போல்ஷிவிக்.

Brute Force - மிருகபலம்.

Bureaucracy - உத்தியோகஸ்தர் ஆட்சி.

Bye-Law - உபவிதி, கிளைச் சட்டம்.

Cabinet - மந்திரிசபை.

Candidate - அபேட்சகர்.

Capitalist - முதலாளி.

Caucus Rule - காக்கஸ் ஆட்சி.

Central authority - மத்திய அதிகாரம்.

Central Court of Justice - மத்திய நீதிமன்றம்.

Central Institution - மத்திய ஸ்தாபனம்.

Citizen - பிரஜை.

Citizenship - பிரஜைத் தன்மை.

Citizenship Right - பிரஜா உரிமை.

City State - நகர அரசு.

Civil Right - சிவில் உரிமை.

Civil Service - சிவில் வேலை.

Clan - வம்சம்.

Closure - கட்டாய விவாத முடிவு.

Coalition Government - கூட்டு ஆட்சி.

Coalition Ministry - கூட்டு மந்திரி சபை.

Coalition Party - கூட்டுக் கட்சி.

Colony - குடியேற்ற நாடு.

Committee - பொறுக்குக் கூட்டம்.

Committee System - கமிட்டி ஏற்பாடு.

Commonwealth - ஸாம்ராஜ்யம்.

Communism - சமதர்மக் கொள்கை, பொதுவுடமைக்கொள்கை.

Communist - சமஉரிமை வாதி.

Community - சமுதாயம்.

Compensation for loss - நஷ்டஈடு.

Compulsory Elementary Education - கட்டாய ஆரம்பக் கல்வி.

Conciliation Board - சமரஸ போர்டு.

Conservative Party - மாறுதல் வேண்டாத கட்சி.

Constituency - தேர்தல் தொகுதி.

Constitutional Convention - அரசியல் அமைப்புக் கூட்டம்.

Constitutional Monarchy - ஜனநாயக முடியரசு.

Convention - சம்பிரதாயம்.

Country - நாடு.

Culture - சால்பு.

Cumulative Vote System - குவியல் ஓட்டு முறை.

Customs - சுங்கம்.

Deadlock - முட்டுக்கட்டை.

Declaratory Judgment - அபிப்பிராயம் கூறும் தீர்ப்பு.
Delegated Legislation - உதவிச் சட்ட நிருபணம்.
Democracy - ஜனநாயகம்.
Democratic Party - ஜனநாயகக் கட்சி.
Democratic Totalitarianism-ஜனநாயக ஸமஸ்தவாதம்.
Despotism - கொடுங் கோலாட்சி, யதேச்சாதிகாரம்.
Dictator - சர்வாதிகாரி.
Dictatorship - சர்வாதிகாரம்.
Direct Democracy - நேர்முகமான ஜனநாயக ஆட்சி.
Direct Election - நேர்முகமான தேர்தல்.
Dual Government - இரட்டையாட்சி.
Economic Organisation - பொருளாதார அமைப்பு.
Economics - பொருளாதார சாஸ்திரம்.
Economic Socialism - பொருளாதாரப் பொதுவுடைமை.
Economy - சிக்கனம்.
Educational Institution - கல்வி ஸ்தாபனம்.
Election - தேர்தல்.
Elementary Education - ஆரம்பக் கல்வி.
Empire - பேரரசு, ஸாம்ராஜ்யம்.
Enquiry Commission - விசாரணை கமிஷன்.
Equality - சமத்துவம்.
Equity Case - எக்குயிட்டி வழக்கு.
Ethics - ஒழுக்க நூல்.
Evolutionary Theory - பரிணமக் கொள்கை.
Executive - நிர்வாகம்.
Executive Government - நிர்வாக அரசாங்கம்
Expert - நிபுணர்.
Factory - ஆலை.
Factory Regulation - தொழிற்சாலை ஒழுங்குமுறை.
Fascist - பாஸிஸ்டு.
Federation - சமஷ்டி.
Federalism - சமஷ்டி ஏற்பாடு.
Feudal Government - பாரம்பரியப் பட்டு ஆட்சி.
Feudalism - உம்பளிக்கை ஆட்சி முறை.
Financial Administration - நிதி நிர்வாகம்.
First Chamber - முதற் சபை.
Fixing age limit - வயது அளவின் நிர்ணயம்.
Fixing of Wages - கூலி நிர்ணயம்.
Flexible Constitution - நெளிந்து கொடுக்கும் திட்டம்.
Fraternity - சகோதரத்துவம்.
Freedom - சுயேச்சை.
Freedom of Speech - வாக்குச் சுதந்திரம்.
Functional Constituency - தொழில்வாரித் தொகுதி.
Functional Representation - தொழில் பிரதிநிதித்துவ முறை.
Fundamental Right - மூலாதார உரிமை.
General Electorate - பொதுத் தேர்தல் தொகுதி.
General Qualification - பொதுவான கல்வித் திறமை
Government - அரசாங்கம்.
Governmental Compact - அரசாங்க ஒப்பந்தம்.
Grant - மானியம்.
Hague International Arbitration Court-ஹேக் சமரஸக் கோர்ட்.
Hereditary Right - வார்சு உரிமை.
High Court - உயர்தர நீதி மன்றம்.
Historical Theory - சரித்திரக் கொள்கை.
Independence - சுதந்திரம்.
Indirect Election - மறைமுகத் தேர்தல்.
Individual - தனி மனிதன்.
Individualism - தனி உடைமைக் கொள்கை.

Initiative - பொது ஜனச் சட்டம் இயற்றும் முறை.
Injection - ஊசி குத்துதல்.
Injunction - இஞ்ஞங்ஷன்.
Intermediate Voters - நடுத்தர வாக்காளர்.
Internal Problem - உள் நாட்டுப் பிரச்னை.
International Court of Justice - சர்வதேச நியாய சபை.
International Labour Organisation - சர்வ தேசத் தொழிற் சங்க அமைப்பு.
International Law - சர்வ தேசச் சட்டம்.
Jews - யூதர்.
Joint Committee - கூட்டுக் கமிட்டி.
Joint Electorate - கூட்டுத் தொகுதி.
Judge - நீதிபதி.
Judicial Administrative Committee - நீதி விஷயமாகக் கமிட்டி.
Judicial Administrative System - நீதி பரிபாலன முறை.
Judicial Department - நீதி இலாகா.
Judiciary - நீதி ஸ்தாபனம்.
Kinship - உறவின்முறை.
Labour Dispute Court - தொழில் விவாத நீதி மன்றம்.
Labour Party - தொழிற் கட்சி.
Land owner - நிலச்சுவான்தார்.
Law - சட்டம்.
League of Nations - சர்வதேச சங்கம்.
League System - சங்க முறை.
Legal Restriction - சட்ட நிர்ப்பந்தம்.
Legal Sovereignty - சட்ட பூர்வமான சர்வாதிகாரம்.
Legislation - சட்ட நிரூபணம்.
Legislative Assembly - சட்ட சபை.
Liberal Party - சீர்திருத்தக் கட்சி.
Limited Monarchy - வரையறுக்கப்பட்ட முடியாட்சி.
Limited Vote - குறைந்த ஓட்டு.
List system - லிஸ்டு முறை, ஜாபிதா முறை.
Literate - எழுத்தறிவு பெற்றவர்.
Local Self-Government - ஸ்தல சுய ஆட்சி.
Lower Chamber - கீழ்ச்சபை.
Masses - பாமர மக்கள்.
Matriarchy - தாய்வழி.
Military Service - ராணுவ ஊழியம்
Ministry - மந்திரி சபை.
Minorities - சிறுபான்மையோர்.
Minority Community - சிறுபான்மை வகுப்பினர்.
Minority Races - சிறு பான்மை ஜாதியார்.
Moderate - மிதவாதி.
Monarchy - கோளுட்சி, முடியரசு.
Moral Power - தார்மிக சக்தி.
Nation - தேசிய ஜாதி.
National Independence - தேசிய சுயேச்சை.
Nationalism - தேசிய ஜாதிப்பற்று.
National Representation - தேசியப் பிரதிநிதித்துவம்.
National State - தேசிய அரசு.
Nazi - நாஸி.
Oligarchy - சில்லோராட்சி.
One-party System - ஒற்றைக்கட்சி முறை.
Opposition Party - எதிர்க்கட்சி.
Order - ஒழுங்கு.
Park - உல்லாசத் தோட்டம்.
Parliamentary Administration - பார்லிமெண்டரி நிர்வாகம்.
Party Government - கட்சி ஆட்சி.
Party spirit - கட்சி உணர்ச்சி.
Patriarchy - தந்தை வழி.
Patriotism - தேசாபிமானம்.
Pension - உபகாரச் சம்பளம்.
Philosopher - தத்துவ சாஸ்திரி.
Plural Executive - கூட்டு நிர்வாகம்.
Plural Vote - பன்மை ஓட்டு.
Political Consciousness - அரசியல் உணர்ச்சி.

Political Constitution - அரசியல் திட்டம்
Political Co-operation - அரசியற் கூட்டுறவு.
Political Expert - அரசியல் நிபுணர்.
Political Institution - அரசியல் ஸ்தாபனம்.
Political Liberty - அரசியல் சுயேச்சை.
Political Organisation - அரசியல் அமைப்பு.
Political Party - அரசியற் கட்சி.
Political Right - அரசியல் உரிமை.
Political Sovereignty - ராஜீய சர்வாதிகாரம்.
Popular Sovereignty - ஜன சம்மதம் பெற்ற சர்வாதிகாரம்.
Power State - வல்லரசு.
Presidential Executive - தலைவரின் நிர்வாகம்.
Proclamation Law - பிரகடனச் சட்டம்.
Property Right - சொத்துரிமை.
Proportional Representation by single Transferable Vote - விகிதாசார ஒற்றை ஓட்டு மாற்றுமுறை.
Proposal - பிரேரணை.
Provincial Autonomy - மாகாண சுய ஆட்சி.
Provision - ஏற்பாடு
Public Administration - பொது நிர்வாகம்.
Public Examination - பகிரங்கப் பரீட்சை.
Public Health - சுகாதாரம்.
Public Opinion - பொதுஜன அபிப்பிராயம்.
Public Platform - பிரசங்க மேடை.
Public Responsibility - பொதுமக்களின் பொறுப்பு.
Public Servants - பொதுஜன ஊழியர்.
Public Service - பொதுஜன ஊழியம்.
Quota - நிறையெண்.
Radical - தீவிர வாதி.
Raw Materials - மூலப் பொருள்கள்.
Reactionaries - பிற்போக்குக் கட்சியாளர்.
Referendum - பொது ஜன வாக்குப் பெறும் முறை.
Regionalism - ரீஜியனலிஸம்.
Religious Institution - சமய ஸ்தாபனம்.
Representative Assembly - பிரதிநிதித்துவ சபை, ஜனப் பிரதிநிதி சபை.
Representative Government - பிரதிநிதி ஆட்சி முறை.
Republic - குடியரசு.
Republican Party - குடியரசுக் கட்சி.
Resignation - ராஜிநாமா.
Responsibility - உத்தரவாதம்.
Responsible Government - பொறுப்பாட்சி.
Right - உரிமை.
Right of Self-Determination - சுய நிர்ணய உரிமை.
Rule of Law - சட்ட ஆட்சி முறை.
Rural Self-Government - கிராம சுய ஆட்சி.
Second Chamber - இரண்டாவது சபை,
Second Vote - இரண்டாம் ஓட்டு.
Secretary-General - செக்ரடரி ஜனரல்.
Secret Ballot System - இரகசிய பாலட்டு முறை.
Secret Voting System - இரகசிய ஓட்டுச்சீட்டு முறை.
Self-Government - சுய ஆட்சி.
Separate Communal Electorate - வகுப்புவாரித் தனித் தொகுதி.
Single Chamber Organisation - ஒற்றைச் சபை அமைப்பு.
Single Executive - தனி நிர்வாகம்.
Single Member Constituency - ஒற்றைத் தொகுதி.
Single Transferable Vote - மாற்று ஒற்றை ஓட்டு.

Social Contract Theory - சமூக ஒப்பந்தக் கொள்கை.
Socialism - அபேதவாதம்.
Socialist State - அபேதவாத அரசு.
Social Restriction - சமூக நிர்ப்பந்தம்.
Society - சமூகம்.
Sociology - சமூக சாஸ்திரம்.
Sovereignty - ஆதிபத்தியம்
Spirit of Independence - சுயேச்சை யுணர்ச்சி.
State - அரசு.
Subjects - குடிமக்கள்.
Suffrage - வாக்குரிமை.
Supervising Chamber - கண்காணிப்புச் சபை.
Territorial Representation - ஸ்தலத் தொகுதிப் பிரதிநிதி முறை.
Theory of Competition - போட்டிக் கொள்கை.
Theory of Force - வலிமைக் கொள்கை,
Theory of Divine Origin - தெய்வ சிருஷ்டிக் கொள்கை,
Theory of Separation of Powers - அதிகாரப் பாகுபாட்டுக் கொள்கை.
Totalitarian State - ஸமஸ்த வாத அரசு.
Trade Association - வியாபாரச் சங்கம்.
Trade Union - தொழிற் சங்கம்.
Training Camp - பயிற்சி ஸ்தலம்.
Transferable Vote - மாற்று ஓட்டு.
Treaty - உடன்படிக்கை.
Tribe - குழு.
Two-party System - இரு கட்சி முறை.
Uncontrolled Competition - கட்டுப்பாடற்ற போட்டி.
Unitary Government - ஐக்கிய ஆட்சி.
Upper Chamber - மேற்சபை.
Voter - வாக்காளர்.
Weighted Vote - தகுதி ஓட்டு.
Welfare Association - ஸம்ரக்ஷண சங்கம்.
Welfare Fund - க்ஷேமநிதி.
World Federation - உலக சமஷ்டி.
World State - அகில லோக அரசு.
Writ - ரிட்டு.

THE JUPITER PRESS, MADRAS